2903

# T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: XVII NO: 2

January 28 1986

D
V211, 31 'N86
N86 · 17 · 2
136446

Issued: 18-7-1986 வெளியீடு: 18-7-1986

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
### செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, ஜனவரி 28, 1986–தொகுதி XVII எண். 2**
**Tuesday the January 28, 1986,—Volume XVII No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
**Legislative Assembly, Secretariat, Fort St. George,**
Madras-6000 009

விலை ரூ 3.00 காசுகள்] [Price Rs. 3.00 Paise

128/396

13644
சென்னை-600 008.

## உள்ளடக்கம்.

**28–1–1986**


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்: | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள். | 139–168 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள். | 169–218 |
| 2. தகவல் கோரல்: | |
| (அ) அரியலூருக்குப் பக்கத்திலுள்ள தூத்தூரில், ஒரு குடும்பமே தீயினால் அழிந்துள்ளது குறித்து. | 218–222 |
| (ஆ) உள்ளாட்சிமன்றத் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வது குறித்து. | 222 |
| 3. அறிவிப்புகள்: | |
| (அ) உறுப்பினர் திரு. வை. பாலச்சந்திரன் காவலில் வைக்கப்பட்டுள்ளது குறித்து. | 222 |
| (ஆ) சென்னை குதிரைப்பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) சட்ட முன்வடிவு 1986 (மே.செ.). | 222–223 |
| (இ) சென்னை பல்கலைக் கழக ஆட்சிப் பேரவை—உறுப்பினர்கள் தேர்தல். | 223 |
| (ஈ) கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் 1985–86 (ஆ.செ.). | 228 |
| (உ) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு 1986 (ஆ.செ.). | 285 |
| (ஊ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1979–80 (ஆ.செ.). | 286 |
| (எ) நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு 1986 (ஆ.செ.). | 287 |
| 4. கவன ஈர்ப்புகள்: | |
| (அ) தேனி தொகுதியில் மழை பொய்த்ததமையால் ஏற்பட்டுள்ள வறட்சி நிலை குறித்து. | 223–226 |
| (ஆ) தென்காசி நகரின் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவது குறித்து. | 226–227 |

5. அறிக்கை அளித்தல்:

| | |
|---|---|
| பொதுக் கணக்குக் குழு. | 227–228 |
| 6. முதல் துணை நிதி நிலை அறிக்கை 1985-86 வாக்கெடுப்பு. | 228–285 |
| 7. அரசினர் சட்டமுன்வடிவுகள்: | |
| (அ) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு 1986 | 285–286 |
| (ஆ) நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன் வடிவு 1986. | 287–289 |
| (இ) மதுவிலக்கு திருத்த சட்ட முன்வடிவு 1986 (தொடர்ச்சி). | 289–319 |
| (ஈ) பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1986. | 319–328 |
| (உ) அண்ணா பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1986. | 328–334 |
| (ஊ) தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1986 | 334–337 |
| (எ) பாரதியார் பல்கலைக் கழக மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1986. | 337–338 |
| 8. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1979–80—வாக்கெடுப்பு | 286–287 |
| 9. அரசினர் தீர்மானம் விதி 32-ஐத் தளர்த்தல் | 338 |
| 10. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள் | 339–340 |


தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

1986, சனவரி 28 செவ்வாய்க்கிழமை.

தை 15, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு—2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.''

ஆக்கமும், கேடும், சொல்கின்ற சொல்லால் வருதலால் ஒருவன் தன்னுடைய சொல்லில் தவறு நேராமல் காத்துக்கொள்ள வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

தம்பம்பட்டியில் துணை மின்நிலையம்.

158—(*வினா எண். 4115) திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் தம்பம்பட்டியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம்.

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் தம்பம்பட்டியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று கூறுகிறார்கள். அந்தத் துணை மின் நிலையம் எப்போது துவங்கப்படும்? அதற்கான மதிப்பீடுகள் எவ்வளவு? அதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா? அதே போன்று புத்திரகவுண்டன்பாளையத்திலும் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பட இருக்கிறது என்று கூறுகிறார்கள். அதற்கும் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, துணை மின் நிலையம் 1.6 இலட்சம் ரூபாய் செலவில் 1987–88 ஆம் ஆண்டு முடிக்கப்படும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டதா என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. இன்னொரு துணை மின் நிலையம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி அரசு ஆய்வு செய்யும்.

## மின் கட்டண கணக்குகள்.

159—(*வினா எண். 4683) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மின்சார வாரியம் தற்பொழுது சென்னை நகரில் மாதா மாதம் மின் உபயோகத்தைக் கணக்கெடுக்காததால் பல மாதங்களுக்குச் சேர்த்து பணம் கட்டவேண்டிய நிர்பந்தம் ஏற்படுவதால் மின்சாரம் உபயோகிப்பவர்கள் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணிக்குப் புதிதாக நியமிக்கப்பட்டவர்கள் எவ்வளவு பேர்? பொதுமக்களின் நலன் கருதி, ஞாயிற்றுக்கிழமைகளில், வங்கிகள் சில மணிநேரங்கள் பணியாற்றுவது போல், மின் வாரியமும், ஞாயிற்றுக்கிழமைகளில் சில மணி நேரங்கள் பணம் வசூல் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, 100 காலி இடங்களில் 83 இடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஞாயிற்றுக்கிழமைகளில் பணம் வசூலிப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிற யோசனை நல்ல யோசனை. அதை மின் வாரியத்திற்கு அரசு பரிந்துரைக்கும்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரில் குடிசை மாற்று வாரிய வீடுகள் ஏராளமாக இருக்கின்றன. ஏழைகள் வாழுகின்ற அந்த வீடுகளில் சரியான வகையில் மின் அளவு கணக்கெடுப்பு செய்யப்படாத காரணத்தினால், அவர்கள் வீடுகளில் மின் துண்டிப்பு செய்யப்படுகிற நிலைமை இருக்கிறது. எனவே, அந்தப் பணியை மின் வாரியமே ஏற்றுக் கொண்டு, மின் அளவைக் கணக்கெடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மின் கட்டணம் கட்டவில்லை என்றால் மின் துண்டிப்பு செய்யப்படுகிறது. குறிப்பிட்ட குறைகள், ஏதேனும், எங்கேனும் இருக்குமானால், அதை மின் வாரியத்தின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். குடிசை மாற்று வாரிய வீடுகளில் மின் அளவைக் கணக்கிடும் பொறுப்பை மின் வாரியமே ஏற்றுக்கொள்வது என்பது இயலாத காரியம்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே மின் கட்டண கணக்கெடுப்பு முறையில் தற்போது வழங்கப்படுகிற கார்டுக்குப் பதிலாக, பாஸ் புத்தகம் அதற்காக கொடுத்தால் வசதியாக இருக்கும். எனவே, அதற்குரிய கட்டணத்தை வசூலித்துக் கொண்டாவது, பாஸ் புத்தகமாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

டாக்டர் கே. பமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரியம் தற்போது சென்னை நகரில் மாதாமாதம் மின் உபயோகத்தைக் கணக்கெடுக்காததால், பல மாதங்களுக்குச் சேர்த்து பணம் கட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படியானால், வசூல் செய்யாமல் ஏதேனும் தொகை உள்ளதா? எவ்வளவு நாட்களாக அப்படி இருக்கிறது? அதை வசூல் செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே' போதுமான கணக்கெடுப்பவர்கள் இல்லாத ஒருகுறை இருந்தது. அந்தச் சமயத்தில் அதைப்போல் காலதாமதம் இருந்தது. தற்போது அத்தகைய காலதாமதம் எதுவும் இல்லை. எவ்வளவு நிலுவை என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வளர்மதி அவர்கள் மூலக்கேள்வியிலே மின்சார வாரியத்திலே அவ்வப்போது கணக்குகள் எடுக்காததன் காரணமாக மின்சாரம் உபயோகிப்போர்களுக்கு ஏற்படுகிற கஷ்டத்தைப்பற்றி அரசுக்கு வந்திருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்ற ஒற்றைப் பதிலை மட்டும் சொல்லி சரியான பதிலைச் சொல்லி விட்டோம் என்று அமர்ந்திருந்தாலும் அப்படிப்பட்ட நிலைமையை மாற்றுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அவர்கள் சொன்னால்தான் பதில் முழுமையாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படித்தான் பதில் சொல்ல வேண்டுமென்று அமைச்சரை வற்புறுத்த முடியாது.

## திருமயம் கிராமிய மின் கூட்டுறவுச் சங்கம்.

160—(*வினா எண். 4739) திரு. க. பாரமலை : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் நகரிலுள்ள Rural Electric Co-operative Society எந்த ஆண்டிலிருந்து செயல்படுகிறது?

(ஆ) அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதுடெல்லியிலுள்ள Rural Electrification Corporation எவ்வாறு உதவுகிறது?

(இ) இம்மாதிரி கூட்டுறவுச் சங்கங்களை மேலும் அமைக்கும் உத்தேசம் அரசிற்கு உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) திருமயம் கிராமிய மின் கூட்டுறவுச் சங்கம் 6—3—82 முதல் செயல்படத் துவங்கியது.

(ஆ) திருமயம் கிராமிய மின் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 172.406 இலட்சத்தை திட்டக் கடனாக 5 வருடங்களில் வழங்க டெல்லி—ஊரக மின் வாரியம் இசைந்துள்ளது. மேலும் கூட்டுறவுச் சங்கத்திற்கு தமிழ்நாடு அரசின் பங்கு மூலதனமாக வழங்குவதற் கென தமிழ்நாடு அரசுக்கு ரூ. 35 இலட்சம் கடனாக அளித்துள்ளது.

(இ) வட ஆற்காடு மாவட்டத்தில் வந்தவாசியில் மூன்றாவது கிராமிய மின் கூட்டுறவு சங்கம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, கிராமிய மின் கூட்டுறவு சங்கத்தைப் பொறுத்தவரையில் அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். பொதுவாக சட்டமன்ற உறுப்பினர் தன் தொகுதிக்குப் போவது என்றால் வருத்தத்தோடு போக வேண்டியிருக்கிறது. காரணம், போனால் பொது மக்கள் பல குறைகளைச் சொல்கிறார்கள், லைட் எரியவில்லை, பம்புசெட் ஓடவில்லை என்று இப்படிக் குறைகளைச் சொல்கிறார்கள். இந்த மின் கூட்டுறவுச் சங்கங்கள் லாபத்தோடு இயங்குகின்றனவா? ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது மின்வாரியம் 160 கோடி ரூபாய் நட்டத்தில் ஓடும் என்ற கணக்கைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்த மின் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக லாபத்தோடு நடைபெறு கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம மின் கூட்டுறவுச் சங்கம் கும்பகோணத் திலே ஏற்கெனவே துவங்கப்பட்டிருக்கிறது. அது லாபத்திலே நடைபெறுவதாகத்தான் எனக்கு நினைவு. திருமயம் கிராம மின் கூட்டுறவு சங்கமும் அப்படித்தான் இயங்கும் என்று நினைக்கிறேன், என்னிடத்திலே அந்த விவரம் இப்போது இல்லை. புது டெல்லியி லுள்ள ரூரல் எலக்ட்ரிபிகேஷன் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத் திலிருந்து நாம் பணம் வாங்கி துவங்குகின்ற ஒரு அமைப்பு. மத்திய அரசிடமிருந்து நிதி வசதி கிடைப்பதால் நாம் அதைப் பயன்படுத்துகிற வகையிலே ஆங்காங்கு அமைக்கிறோம். தெரு விளக்குகள் எரியாததைப்பற்றியும் மின்சார பம்புசெட்டுகள் ஓடாததைப்பற்றியும் கேட்டார்கள். அதுபற்றிப் பல்வேறு நிலை களிலே நாம் பல்வேறு நேரங்களிலே இங்கே விவாதித்து இருக் கிறோம்.

திரு. த. புஷ்பராஜ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, திருமயம் கிராமிய மின்கூட்டுறவுச் சங்கத்திலே பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு மின்வாரியத்திலே கொடுக்கப்படுவதைப் போன்ற சம்பளம் கொடுக்கப்படவில்லை. அதிலே பாதியளவுக்குத் தான் கொடுக்கப்படுகிறது என்று சொல்கிறார்களே அது உண்மையா? இரண்டாவது கூட்டுறவுச் சங்கம் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முன்மாதிரியாக நல்ல முறையிலே செயல் படுகிற முறையிலே அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கிற



சம்பளத்தை இன்னும் சிறப்பாகக் கொடுத்தால் நல்லமுறையிலே அது செயல்படும். ஆகவே அந்த வகையிலே நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா? திருமயம் கிராமியக் கூட்டுறவுச் சங்கத்திலே விவசாயிகளுக்கு பைப்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதிலே கால தாமதம் ஏற்படுகிறது. அப்படியில்லாமல் எந்தவித சட்ட திட்டத் திற்கும் உட்படாமல் உடனடியாக அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர் களைப் பொறுத்தவரையிலே மின்சார வாரியத்திலே பணியாற்று கின்றவர்கள்தான் பெரும்பாலும் அதிலே பணியாற்றுகிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தச் சம்பளத்தைவிட சம்பளத்தைக் குறைத்துத் தருகிறார்கள் என்ற புதிய தகவலைத் தெரிவிக்கிறார்கள். அதை அரசு ஆராயும். நீரேற்றிகளுக்கு மின்சாரம் வழங்குவது தமிழகத்திலே ஒரே முறைதான் கடைப் பிடிக்கப்படுகிறது.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது டெல்லி ஊரக மின்வாரியம் 172 லட்ச ரூபாய் கடனாகவும் தமிழ்நாடு அரசின் பங்காக 35 லட்ச ரூபாயும் ஆக ஏறக்குறைய 200 லட்சம் ரூபாய் கொடுப்ப தாகச் சொன்னார்கள். இதன் முக்கியத்துவத்தைக் கருதி ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 2000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக் கிறது என்று சொன்னார்கள். ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திலும் இதைப் பரிட்சார்த்தமாக ஏற்படுத்த அரசு நடவடிக்கைஎடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசின் நிறுவனத்தின் மூலமாகத்தான் அதை ஆரம்பிக்க முடியும். நாம் கேட்கிறோம். அவர்கள் Apprais l Team of Rur l Electrici y corpor tion வந்து பார்த்து எத்தனை அனுமதிக்கின்றார்களோ அதைப் பொறுத்துதான் இருக்கிறது. வந்தவாசியிலே ஒன்றை அனுமதித்து இருக்கிறார்கள்

(முற்பகல் 9—10)

திரு வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, ரூரல் எலக்ட்ரிபிகேஷன் கார்ப்பரேஷனிலிருந்து பெறப் படும் கடன் ஒரு குறிப்பிட்ட பகுதி கிராமங்களுக்கு மின்சார வசதி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலே பெறப்படுகிறது. அப்படிப் பெறப்பட்ட கடன்கள் அந்தக் குறிப் பிட்ட பகுதிக்குச் செலவிடப்படாமல், வேறு பல காரியங்களுக்குத் தமிழ்நாடு மின்சார வாரியம் அந்தப் பணத்தைச் செலவிடுகிறதே, இது ஆர்.இ.சியைத் தமிழ்நாடு மின்சார வாரியம் ஏமாற்றுவதாக ஆகாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இரண்டும் அரசு நிறுவனங்கள்தான். ஒரு துறைக்கு ஒதுக்கப்படுகின்ற பணம் இன்னொரு துறைக்குச் செலவழிக்கப்படுகிறது என்றால் அதுவும் மக்களின் நன்மையைக் கருதித்தான். ஆகவே, ஒருவரையொருவர் ஏமாற்றுகிறார்கள் என்ற பிரச்சினை இதில் எழாது. ஆனாலும் குறிப்பிட்ட திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை அந்தத் திட்டத்திற்கே செலவழிக்கப்பட வேண்டும் என்பதுதான் நியதி. இதை இந்த அரசு வற்புறுத்தும்.

குத்தாலம் குடவாசல் பகுதிகளில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம்.

161—(*வினா எண். 4155) திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் குத்தாலம், குடவாசல் பகுதிகளில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் (I.C.D.P.) செயல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே,

(அ) தஞ்சை மாவட்டம் குத்தாலம், குடவாசல் பகுதிகளில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் (ஐ.சி.டி.பி.) செயல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இந்தத் திட்டம் என்று சொன்னால், அடுத்த ஆண்டாவது இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளும் நோக்கம் இந்த அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

திரு. மு. பாண்டுரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் குறிப்பாக எங்களது தொகுதியாகிய கலசப்பாக்கம் தொகுதியில் இந்தத் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. அடுத்த ஆண்டு எந்தெந்தப் பகுதிகளில் எடுக்க வேண்டுமென்று விவாதிக்கிறபொழுது இது கருத்திலே கொள்ளப்படும்.





வாழ்க்கைப் படிகளை உயர்த்துதல்.

162—(*வினா எண். 5200) திரு. வி. பி. சிந்தன் மற்றும் திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு வாழ்க்கைப் படிகள் வழங்குதல் சட்டத்தின் 2-ஆம் பிரிவைச் சேர்ந்த ( ) பகுதியின் (ii) உட்பகுதியின் கீழ் ஊதிய வரம்பு ரூ. 500 என்று வரையறுக்கப்பட்டுள்ளதை, மத்திய தொழிலாளர் நலச் சட்டங்கள் சிலவற்றில் உள்ளவாறு ரூ. 1,600-க்குக் குறைவாக ஊதியம் பெறும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் உயர்த்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆம். தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கும் சட்டப் பிரிவு 2(ஏ)(ii)-ல் ரூ. 500-என்று நிர்ணயித்துள்ள ஊதிய வரம்பை மாற்ற மத்திய அரசுச் சட்டங்களில் திருத்தப்பட்டுள்ளதைப் போல 1,600 ரூபாய்க்கு உயர்த்த ஏற்கனவே தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. இதன்மீது தொடர் நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்படும்.

திரு. வி. பி. சிந்தன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவலுக்கு நன்றி. ஆனால் எப்பொழுது இந்தச் சட்டத் திருத்தம் அமலாக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த சட்டமன்றக் கூட்டம் தொடங்குகின்ற பொழுது இந்த மசோதா இந்த மன்றத்திற்கு வரவிருக்கிறது. ஒன்று, அமென்ட்மெண்ட் ஆக்டின் மூலமாக ஊதிய உயர்வை உயர்த்துவது — 1600 ரூபாய்க்கு. இரண்டாவது அம்சமாக, புதிய அம்சமாக, தொழிலாளர்களின் தீர்ப்பு, ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை— அவார்ட்ஸ், காண்ட்ராக்ட், அக்ரிமெண்ட்—இவைகளின் மூலம் அதிகம் சலுகை பெற்று வருவார்களேயானால் அதைத் தொடர்ந்து பெற வகை செய்யவும் அப்படிப்பட்ட திருத்தம் இரண்டாவது அம்சமாகக் கொண்டு வரப்படும். ஊதிய உயர்வும் அவார்ட்ஸ், கான்ட்ராக்ட், அக்ரிமெண்ட் இதில் ஏதாவது பெற்றிருந்தாலும் இந்தத் திருத்தத்தில் தொழிலாளர்கள் பெற அந்த அம்சத்தைக் கொண்டு வருவோம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசு தற்போது ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இன்ஃப்ளேஷனரி ரேட்டைக் கணக்கெடுத்து தொழிலாளர்களுக்கு இப்படிப்பட்ட சட்டத்தில் தொழிலாளர்களின் ஊதியம் 1,600 ஆக உயர்த்த வேண்டுமென்ற ஒரு பொதுக் கோட்பாட்டைக் கணக்கிலெடுத்து தமிழக அரசு தொழிலாளர்கள் சம்பந்தமான எல்லாச் சட்டங்களிலேயும் தொழிலாளர்களின் ஊதிய வரம்பை 1,600 ரூபாயாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

2920

T.N.C.A. Debates

Official Report

Vol 20 No 4

4th April 1986

(C)

D
V211,31 N86
N86.20.4
136466

வெளியீடு 10–11–1986

Issued 10-11-1986

889/87.

2920

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 4, 1986-தொகுதி 20 எண். 4

Friday the April 4, 1986-Volume 20 No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009

**Legislative Assembly Secretariat, Fort St. George, Madras-600009**

விலை ரூ. 3]

[Price Rs. 3

ஆவணக்காப்பக நூலகம்
136466
சென்னை-600 008.

உள்ளடக்கம்

4—4—1936


பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள்:

உடுக்குறியிட்ட வினாக்கள் 659—690

2. தகவல் கோரல்:

(அ) மின் வெட்டு குறித்து 691—693

(ஆ) பால் விலை உயர்வு 693

(இ) வேதாரண்யம் கடற்கரைப் பகுதியில் பிணங்கள் ஒதுங்குவது. 694

3. கவன ஈர்ப்புகள்:

(அ) பின்னி பீச் பொறியியல் தொழிற்சாலை கதவடைப்பு. 694—698

(ஆ) பூலாவரி வாய்க்கால் திட்டம். தாரமங்கலம் தொகுதியில் சாலைகள் போடும் திட்டம் ஆகியவற்றிற்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நட்டயீடு அளித்தல். 698—700

4. அறிக்கைகள் அளித்தல்:

மதிப்பீட்டுக் குழு 700

5. வரவு-செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை. 700—702

(ஆ) கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும். 702—816

(இ) கோரிக்கை எண் 27—கதர் தொழில். 703—817

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் 700—702—704

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி 703—704, 790—816

திரு. டி. ஆர். வேங்கடரமணன் 704—713

திரு. த. பழனி 714—718

திரு. பொன் முத்துராமலிங்கம் 728—731

திரு. க. நரசிம்மபல்லவன் 718—728

திரு. மு. இராசாங்கம் 732—735

திரு. மு. பாண்டுரங்கன் 735—740

திரு. கு. சுப்பராயன் 740—749

திரு எம். சண்முகம் 749—753

| | |
|---|---|
| திரு. மா. சுந்தரதாஸ் | 753—758 |
| திரு. ஆ. பிரேம்குமார் | 758—762 |
| திரு. ஆர். கோவிந்தசாமி | 762—766 |
| திரு. கே. பாலாஜி | 766—773 |
| திரு. வை. பாலச்சந்திரன் | 774—779 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 779—787 |
| திரு. எஸ். என். இராமசாமி | 787—790 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 838 |


2926

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986, ஏப்ரல் 4, வெள்ளிக்கிழமை

பங்குனி 21, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு 2017

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர்''

பகைவர் உள்ள போர்க்களத்தில் அஞ்சாமல் சென்று சாகத் துணிந்தவர் உலகத்தில் பலர்; கற்றவரின் அவைக் களத்தில் அஞ்சாமல் பேசவல்லவர் சிலரே.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### பூம்புகாரில் புயல் பாதுகாப்பு இல்லம்

367—(*வினா எண் 3827) திரு என். விஜயபாலன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பூம்புகாரில் புயல் பாதுகாப்பு இல்லம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: இல்லை.

திரு என். விஜயபாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார், புதுக்குப்பம், வானகிரி ஆகிய 3 கிராமங்களிலும் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர் குடும்பங்கள் வாழ்கின்றன. புயல் மற்றும் வெள்ளக் காலங்களில் பெரிதும் பாதிக்கப்படுகின்றவர்கள் இந்த மீனவ மக்கள்தான். ஆகவே புயல் பாதுகாப்பு இல்லங்களின் அவசியத்தைக் கருதி, அந்த மக்களுடைய நலன் கருதி, இந்தக் கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஐரோப்பிய பொருளாதார சமுதாயம், தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் 85 புயல் பாதுகாப்பகங்கள் கட்ட நிதி உதவி அளிக்க முன் வந்தது. அந்த வகையில் முதல் கட்டமாக 50 புயல் காப்பகங்களும் இரண்டாவது கட்டமாக 20 புயல் காப்பகங்களும், 3-வது கட்டமாக 15 புயல் காப்பகங்களும் கட்ட நிதி உதவி அளித்தது. முதல் கட்டத்தில் கட்டப்பட வேண்டிய

50 புயல் காப்பகங்களில் இதுவரையில் 44 புயல் காப்பகங்கள்
கட்டப்பட்டு விட்டன. இரண்டாவது கட்டத்தில் கட்ட
வேண்டியவைகளில் 6 காப்பகங்கள் கட்டப்பட்டு விட்டன. மீதி
உள்ள புயல் காப்பகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மூன்றாவது
கட்டமாக கட்டவேண்டிய 15 இடங்களை கிராம மற்றும் நகர
வளர்ச்சி இயக்குநர் அவர்கள் தேர்ந்தெடுத்து உள்ளார்கள்.
அவர்களுடைய விவர அறிக்கை வந்ததற்குப் பிறகு, அதுபற்றி
ஒப்புதல் பெற்று, அதையும் கட்டுவதற்கு முயற்சிகள் மேற்
கொள்ளப்படும், இந்த 85—லே பூம்புகார் இடம் பெறவில்லை.
ஆனால் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், பூம்புகார்
அருகில் கீழையூர் என்ற இடத்தில் புயல் பாதுகாப்பு இல்லம்
அவசியம் என்று வலியுறுத்தி கடிதம் எழுதியிருக்கிறார்கள்.
வருவாய்த்துறை நிர்வாக ஆணையாளர் அவர்கள், பாரதப்
பிரதமர் அவர்கள் வெள்ள நிவாரண நிதியாக அளித்துள்ள
15 லட்சத்தில், பூம்புகாரில் புயல் காப்பகம் கட்டலாம் என்று
பரிந்துரை செய்திருக்கிறார்கள். இதுபற்றி தனியாக நகர
மற்றும் கிராம வளர்ச்சி இயக்குநர் மற்றும் தலைமைப் பொறி
யாளர் ஆகியோர் கருத்துக்கள் பற்றி பரிசீலித்து முடிவு
எடுக்கப்படும். அவர்களுடைய பரிசீலனையில் இப்போது
இருந்து வருகிறது.

திரு என். விஜயபாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புயல் பாதுகாப்பு
இல்லங்கள் கட்டுவதைப் பற்றிய விளக்கக் குறிப்பை இங்கே
தந்திருக்கிறார்கள். ஆனால் பூம்புகார் தொகுதியைப் பொறுத்த
வரையிலும், ஏறக்குறைய 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவக்
குடும்பங்கள் பல்வேறு கிராமங்களல் வாழ்ந்து வருகிறார்கள்.
புயல், மற்றும் வெள்ளம் வருகிறபோது, மற்ற மக்கள் பாதிக்கப்
படுவதை விட இந்த மீனவ மக்கள் பெரிய பாதிப்பிற்கும்,
சேதத்திற்கும் உள்ளாக்கப்படுகிறார்கள். ஆகவே ஒவ்வொரு
கிராமத்திற்கும் ஒரு புயல் பாதுகாப்பு இல்லம் என்ற அளவில்
கட்டினால்தான் அவர்களுடைய நல்வாழ்விற்கு நாம் உதவி
செய்வதாக எண்ணப்படும் என்ற அடிப்படையில், இந்தத்
திட்டத்தை மாநில அரசு ஏற்று செய்ய முடியவில்லை என்றாலும்
மத்திய அரசு உதவியோடு ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு
புயல் பாதுகாப்பு இல்லம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள்
முன்வருவார்களா? முயற்சி எடுத்துக்கொள்வார்களா? என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு புயல்
பாதுகாப்பகம் கட்டுவது என்பது இயலாத ஒன்று, தேவை
யான இடத்தில், கடற்கரை ஓரப் பகுதிகளில், முக்கியமான
பகுதிகளில் மட்டும் கட்டுகின்ற செயற் குறிப்புகளை நாம் மேற்
கொண்டு வருகிறோம். நான் முதலிலே எடுத்துக் கூறியபடி
வருவாய்த்துறை நிர்வாக ஆணையாளர் அவர்கள் பூம்புகாரிலே



இப்படி ஒரு காப்பகம் கட்டலாம், அதற்கு மாண்புமிகு பாரதப்
பிரதமர் அளித்துள்ள 15 லட்ச ரூபாயிலிருந்து இதற்குத் தேவை
யான நிதியைப் பயன்படுத்தலாம் என்று ஒரு குறிப்பை அனுப்பி
யிருக்கிறார்கள். அந்தக் குறிப்பு தலைமைப் பொறியாளர்
மற்றும் கிராம மற்றும் நகர்ப்புற வளர்ச்சி இயக்குநர் ஆகியோ
ருடைய பரிசீலனையில் இருந்து வருகிறது. அது முடிந்ததற்குப்
பிறகு, அந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு, பூம்புகாரிலே கட்டு
வதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம்.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர்
அவர்கள் பூம்புகாரிலோ அல்லது ஒரு கிராமத்திற்கோ புயல்
பாதுகாப்பு இல்லம் கட்டமுடியாது என்று அறிவித்தார்கள்.
ஆனால் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது அந்த பூம்புகாரிலே
ஒரு கலைக்கூடம் இருக்கிறது. அதற்கு கிழக்கே அண்ணா
சுற்றுலா மாளிகை இருக்கிறது. அந்த அண்ணா சுற்றுலா
மாளிகைக்கு ஒரு 50 கெஜ தூரத்திலே கடல் இருக்கிறது,
ஏற்கனவே சிலப்பதிகார கலைக்கூட திறப்புவிழா நடைபெற்ற
போது ஏறக்குறைய 100, 150 கெஜ தூரத்திலே கடல் இருந்தது.
இப்போது நெருங்கிக் கொண்டு வருகிறது. ஆகவே அந்த
இடத்தை மட்டும் அல்லாமல் பக்கத்தில் இருக்கிற மீனவ குடி
யிருப்பை பாதுகாக்க தடுப்புச் சுவராவது கட்டுவதற்கு அரசு
நடவடிக்கை எடுத்தால் பாதுகாப்பாக இருக்கும். அந்த நட
வடிக்கையின் மூலம், அந்தக் கலைக் கூடத்தையும், அண்ணா
சுற்றுலா மாளிகையையும், பக்கத்தில் மீனவக் குடியிருப்பையும்
பாதுகாக்க அரசு தடுப்புச் சுவர் கட்டுவதற்கு நடவடிக்கை
எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இதுபற்றி செயற்குறிப்புகள் எதுவும்
இல்லை. கடல் அரிப்பைத் தடுப்பதற்கும் அங்கே தடுப்புச் சுவர்
எழுப்பி இருக்கிற இடங்களைப் பாதுகாப்பதற்கும் தனி செயற்
குறிப்பு வேண்டும். இதுபற்றி தனியாகத்தான் ஆராயவேண்டும்.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் வருகின்ற
ஆண்டில் 85 இடங்களில் புயல் பாதுகாப்பு இல்லம் கட்டுவதாகச்
சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தென் ஆற்காடு மாவட்டத்
திலுள்ள கடல் அரிப்பு பகுதிகளிலே, என்னுடைய தொகுதி
குறிஞ்சிப்பாடியிலே இருக்கின்ற மக்கள் வெள்ளத்தாலும்
புயலாலும் பாதிக்கப்படுகிறார்கள். அந்தவகையில், இந்த 85
இடங்களில் தென் ஆற்காடு மாவட்டம், குறிஞ்சிப்பாடி தொகுதி
யிலே ஏதாவது அமையுமா, அமைய இருக்கிறதா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் தமிழகத்தினுடைய கடல் அரிப்பு பகுதியில் அதிகமாக புயலால் பாதிக்கப்படுகின்ற அளவுக்கும், அடிக்கடி பாதிக்கப்பட்டு அப்படி பாதிக்கப்பட்டத் தன்மையில் இருக்கின்ற கணக்குகளுடைய அடிப்படையில் இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தென் ஆற்காடு மாவட்டப் பகுதியில் எந்தெந்த இடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன என்ற புள்ளி விவரங்கள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் இதுபற்றி பரிசீலிக்கப்படும்.

நிர்வாக ஆலோசனைத் திட்டம்.

*368—(*வினா எண் 4766)* திரு ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தமிழக அரசு தொடங்கிய 'நிர்வாக ஆலோசனைத் திட்டத்தின்படி' அரசுக்கு வரப்பெற்ற ஆலோசனைகள் எவ்வளவு?

(ஆ) அவைகளில் பரிசு வழங்கப்பெற்றவை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 431 (ஆ) 3

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 431 ஆலோசனைகள் வரப்பெற்றதாகவும், அவற்றில் 3 ஆலோசனைகளுக்கு பரிசுகள் வழங்கப்படுவதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த அடிப்படையில் அந்த ஆலோசனைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புவதோடு தமிழகத்திலே $4\frac{1}{2}$ கோடி மக்களின் அத்தனைப் பிரச்சனைகளோடும் தொடர்பு கொண்ட நிர்வாகத்தின் கடிவாளத்தை தன்னகத்தே கொண்டிருக்கிற தலைமைச் செயலகத்தின் பணி நாள் வார நாள் 5லிருந்து 6 ஆக மாற்ற வேண்டுமென்று அரசுக்கு ஆலோசனை வந்திருக்கிறததா? அப்படியென்றால் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன? அடுத்து ஜனநாயகத்தின் மற்றொரு அங்கமான உயர்நீதிமன்றத்தின் கோடை விடுமுறை நாள் இப்போது 45, 50 நாட்களாக இருக்கின்றது. அதை மாற்றி 15 நாட்கள் என்று செய்வதன் மூலம் ஏழை எளிய மக்களுக்கு விரைவில் நீதி கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் அதை மாற்ற வேண்டுமென்றஆலோசனை ஏதும் அரசுக்கு வந்திருக்கிறதா என்பதையுமறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைந் தலைவர் அவர்களே, மொத்தத்திலே 431 ஆலோசனைகள் வரப்பெற்றன. அதிலே, முக்கியமாக பயன்படக்கூடிய ஆலோசனைகள் என்றும், நோக்கத்தை நிறைவேற்றக்கூடிய வகையிலே இருந்தன என்ற முறையிலும் 3 ஆலோசனைகள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவைகளுக்குரிய பரிசுத் தொகையும் வழங்கப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக ஆய்வுக்குழுவில் இரண்டாம் செயலாளர், நிதித் துறை செயலாளர், மற்றசம்பந்தப்





பட்ட துறைத் தலைவர்கள் அங்கம் வகித்து அதை முடிவு செய்கிறார்கள், ஆகவே ஆலோசனைகள் திட்டத்தில் அரசு பணியாளர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து பெறப்படும் ஆலோசனைகள் அரசின் நிர்வாகச் செலவை குறைக்கக்கூடியதாகவும், நிர்வாகத்தில் நிலைமையை பேணிகாக்கக்கூடியதாகவும் அரசுக்கு வருமானம் அளிக்கக்கூடியதாகவும் நிர்வாகத்தில் புதிய எளிய சிக்கன முறைகளைப் புகுத்துவதாகவும் இருக்க வேண்டும். ஆலோசனைகள் ஆய்வுக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு தகுதியுள்ளவர்களுக்கு பரிசுத் தொகையாகவோ அல்லது தகுதிச் சான்றிதழாகவோ வழங்கப்படலாம். நிர்வாகத்தில் ஏற்படும் அனாவசியச் செலவை குறைக்கக் கூடியதாகவும் மற்றும் சிக்கனம் ஏற்படுத்துவதற்காகவும் இருந்தால் அரசுக்கு ஏற்படும் வருமானத்தைக் கணக்கிட்டுக்கொண்டு பரிசுகள் வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்படும் பரிசுகள் 1000 ரூபாய்க்கு மேற்படாததாகவும், மொத்தத் தொகைப் பரிசு, ஆண்டொன்றுக்கு 5க்கு மேற்படாததாகவும் இருக்க வேண்டும். ஏனைய நல்ல உபயோகமுள்ள நல்ல ஆலோசனைகளுக்கும் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. அந்த வகையிலே 3 பேர் திரு. ஈ. முத்துக்கிருஷ்ணன், கணக்காயர், வனத்துறை, சில ஆலோசனைகள் குறிப்பிட்டார். அந்த ஆலோசனைகள் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. சேலம் அரசு வட்டார அச்சகத்தில் பணிபுரியும் இளநிலை இயந்திர கருவியாளர் திரு. வி. மாணிக்கம் என்பவர் சில யோசனைகளை கூறினார்கள். அது பயன்படுகிற வகையில் இருப்பதால் அதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(முற்பகல் 9-10)

அதுபோல் திருச்சி சிறைச்சாலை கட்டிடங்கள் வட்ட கண்காணிப்பாளராக பணிபுரியும் கே. ஆர் ஈஸ்வரன் என்பவர் சில யோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். அவைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் கேட்பது இதோடு சம்பந்தம் இல்லை என்றாலும் அன்றே அதற்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். 5 நாள் என்பது மீண்டும் 6 நாள் ஆக்கப்படுமா என்று கேட்டார்கள். இதை நடைமுறைப்படுத்தி இன்னும் ஒரு ஆண்டு காலம் ஆகவில்லை. பிறகு வேண்டுமானால் ஏற்படுகின்ற சாதக பாதகங்களைப் பற்றி பரிசீலனைச் செய்யலாம் என்று ஏற்கனவே நான் குறிப்பிட்டேன்.

ஆக நீதிமன்றங்களுக்கு எவ்வளவு நாட்களுக்கு விடுமுறை விட வேண்டும்? அல்லது குறைக்கவேண்டும் என்பதை பற்றி உச்ச நீதி மன்றம் தான் இதற்கு முடிவு செய்கிறது, உயர்நீதி மன்றத்தைப் பொறுத்தவரையிலும் உச்ச நீதிமன்றத்தைப் பொறுத்தவரையிலும்.

ஆகவே அதை நாம் குறைப்பதற்கு அல்லது இவ்வளவு நாட்கள் பணியாற்றவேண்டும் என்ற முடிவை செய்வதற்கும் நம்மிடம் உரிமை இல்லை.

திரு. ப. ந இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படிப்பட்ட ஆலோசனைகளுக்கு பரிசு வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். இந்த ஆலோசனைகள் வழங்குகின்ற நேரத்தில் அரசுத் துறையில் இருப்பவர்கள் மட்டும் இந்த ஆலோசனை தர முடியுமா அல்லது பொதுமக்கள் ஆலோசனைத் தர இடம் உண்டா? வெளிநாடுகளில் சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளில் தனியார் நிறுவனங்கள் Society Tayo a போன்ற நிறுவனங்களிடமிருந்து லட்சக்கணக்கான ஆலோசனைகளைப் பெறுகிறார்கள். நிறைய ஆலோசனைகளைத் தேர்வு செய்து பரிசும் வழங்கி ஊக்கம் தருகிறார்கள். அந்த வகையில் தமிழக அரசும் பிற தமிழக அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், கூட்டு நிறுவனங்கள் ஆகியவைகளிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று சிக்கனத்தையும் லாபத்தையும் அடைவதற்கு அரசு ஒரு விரிவான முறையில் திட்டம் தீட்டி செயல்படுமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியாளர்கள் அவர்கள் அனுபவத்தின் அடிப்படையில், அவர்கள் உணர்வின் அடிப்படையில் கூட சிறந்த ஆலோசனைகளை எடுத்துச் சொல்லலாம். அதைப்போன்று பொதுத் துறை, தனியார் துறை, கூட்டுறவுத் துறை, கூட்டுத்துறை, ஆகியவைகளும் ஆலோசனைச் சொல்லலாம் அது தவிர பொதுமக்கள், வியாபாரிகள் போன்றவர்கள், தொழில் அதிபர்கள் போன்றவர்களும் ஆலோசனைச் சொல்லலாம். இவர்கள் மட்டுமல்ல, சட்டமன்ற பேரவை, மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட அவர்களுக்கு சிறந்த நிர்வாக ஆலோசனைகள் தோன்றுமானால்கூட தெரிவிக்கலாம். அவைகள் பயன்படுகிற நிலைமையில் இருக்குமானால் அவை அரசுக்கு மிக நலன் பயப்பதாக அமையும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபாம்ஸ் என்ற வகையில் 1974 ஆம் ஆண்டு வர்கிஸ் தலைமையிலும் இதேபோல் 1980 ஆம் ஆண்டு அம்புரோஸ் அவர்கள் தலைமையிலும் பெரிய அளவில் அந்த சீரமைப்பு என்ற கமிஷன் அமைக்கப்பட்டது. அதற்குப் பிறகு அப்படிப்பட்ட கமிஷன் இதுவரை அமைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் சொல்லியது போல் மற்றவர்கள் வலிய வந்து இப்படி ஆலோசனைகளை சொல்லுவதை விட நிர்வாக சீரமைப்பு என்ற வகையில் அரசு ஒரு கமிஷனை நியமிக்குமானால் இப்படிப்பட்ட ஆலோசனைகளைச் சொல்லுவதற்கு கருத்துக்களை பரிமாற்றம் செய்து கொள்ளுவதற்கு நல்ல ஒரு வாய்ப்பாக அமையும். எனவே, ஏற்கனவே





அமைத்த கமிஷன் போல் தற்போது இருக்கிற கால சூழ்நிலை களுக்கு ஏற்ப நிர்வாக சீரமைப்புப் பற்றி ஆராய்வதற்கு ஒரு கமிஷன் அமைப்பதற்கு பரிசீலனைச் செய்யும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்ற யோசனை இப்போது அரசிடத்தில் இல்லை. நிர்வாகத்தை செம்மைப்படுத்த, சீர்படுத்த அதற்கான முயற்சி களை நாம் மேற்கொள்ளலாம். அதற்கு என்று தனியாக ஒரு கமிஷன் அமைக்கப்பட வேண்டுமா என்பதும், ஆராயப்பட வேண்டுமா என்பதும் அதன் கால நிலை மற்றவைகளை எல்லாம் ஆராய்ந்து அதற்கான அவசியம் ஏற்படுமானால் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

## பல்லடம் வட்டத்தைப் பிரித்தமைத்தல்

369—(* வினா எண். 4835) திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடம் வட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் வட்டம் மிகப் பெரிய வட்டம் என்கிற முறையிலேயும், அதிகமான ஜனத்தொகை உள்ள வட்டம் என்கிற முறையிலேயும், மக்களின் பிரச்சினைகளை நேரத்தில் தீர்ப்பதற்கு இடையூறாக நிர்வாகத்தில் சுமை ஏற்படுகிற காரணத்தினால், இவற்றைத் தவிர்க்கின்ற முறையில் பல்லடம் தாலுகாவை இரண்டாகப் பிரிக்கின்ற திட்டத்தை இனிமேலாவது அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வட்டங்கள், வட்டங்களின் பரப்பளவு, மக்கள் தொகை, நில வரி மற்றும் அதன் பிற்பட்ட தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பெரிய வட்டங்களாக இருப்பவை இரண்டாகப் பிரிக்கப் படுகின்றன. கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், பல்லடம் வட்டத்தைப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று, அந்தப் பல்லடம் வட்டம் மிகப் பெரிய அளவிலே இருந்து, நான் குறிப்பிடுகிற அந்த நிலைமைகள் எல்லாம் இருந்து, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அதற்கான செயற்குறிப்பு வருமேயானால், அரசு தக்க முறையில்

அதைப் பரிசீலிக்கும். அல்லது டி.டி.சி. கூட்டத்திலேயாவது இதுபற்றி எடுத்துத் தெரிவித்து, அதை ஒரு செயற்குறிப்பாக அரசுக்கு அனுப்பினால், அரசு பரிசீலித்து, அதற்கு தகுந்த சூழ்நிலைகள் இருக்குமானால் பரிசீலித்து அத்தகைய நிலைமைகளைச் செய்யும். ஆனால் இப்போது அத்தகைய செயற்குறிப்பு தன்னிடத்திலே இல்லை என்றுதான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

## கல் குவாரி மற்றும் மரங்கள் குத்தகையில் ஒன்றியங்களுக்கான பங்கு

370—(* வினா எண். 2473 மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் குவாரிகள் ஏலம் விடப்படும் தொகை, குளங்களில் உள்ள மரங்கள் ஏலம் விடப்படும் தொகை ஆகியவையில் இருந்து ஊராட்சிக்கு வரவேண்டிய பங்கு கடந்த 15 ஆண்டு காலமாக வேடசந்தூர், வடமதுரை, குஜிலியம்பாறை ஆகிய ஒன்றியங்களுக்கு வருவாய் துறையில் இருந்தும், வன இலாகாவில் இருந்தும் வரவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இத்தகைய காலதாமதத்திற்கு காரணம் என்ன?

(இ) அதை போக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (ஆ) வேடசந்தூர், வடமதுரை, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்க வேண்டிய 50% பங்கு 30-5-85 அன்று வழங்கப்பட்டது. பழனி சமூக வனக் கோட்டத்தின் பொறுப்பிலிருக்கும் சில கோட்டங்களுக்கு மட்டும் 50% பங்கு நிலுவையிலுள்ளது. குளங்கள் பரப்பு விபரம், ஆயக்கட்டு பரப்பு விபரம் போன்றவை சேகரிக்கப்படுகின்றன. கிடைத்த உடன் மேற்காணும் தொகை பழனி சமூக கோட்ட வன அலுவலரால் வழங்கப்படும். கல் குவாரி குத்தகை ஏலத் தொகையை ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்க கனிவள இயக்குநரின் அறிவுரை கேட்கப்பட்டுள்ளது.

(இ) பழனி கோட்ட வன அலுவலரால் கேட்கப்பட்ட விவரத்தை உடன் அளிக்கும்படியாக பாக்கி பங்கினை விரைவில் பெறுவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் சம்பந்தப்பட்ட ஆணையர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.



## கூனூர் பேருந்து நிலையம்

371—(* வினா எண் 4475) திரு. கே. உச்சி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூனூர் பேருந்து நிலையத்தை விரிவாக்கும் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தின் மதிப்பீடு என்ன?

(இ) அப்பணி எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(ஆ) ரூ. 47.00 இலட்சம்.

(இ) குன்னூர் நகராட்சி பேருந்து நிலையத்தை விரிவாக்கும் திட்டம் மூன்று கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு, ரூ. 5,93,827 இலட்சம் செலவில் முதற்கட்ட வேலை முடிவடைந்துள்ளது. மீதமுள்ள இரண்டுகட்ட வேலைகள் நடைபெறவுள்ளன.

திரு. கே. உச்சி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இரண்டாவது கட்டப் பணிகள் எப்போது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புவதோடு, அப்படி காலதாமதம் ஏற்படுவதால், மிகவும் நெருக்கடியான ஒரு பஸ் ஸ்டாண்டாக இருந்து, அங்கே பல இடையூறுகள் ஏற்படவும், மக்கள் மத்தியிலே மிகவும் நெரிசல் ஏற்படவும் ஆகக்கூடிய வாய்ப்பை தவிர்க்க உடனடியாக அந்தப் பணியைத் துவக்க அரசு முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இரண்டு மற்றும் மூன்றாவது கட்டப் பணிகள் மேற்கொள்வதற்கு அந்தப் பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள தீயணைப்பு நிலையம் வேறு இடத்திற்கு மாற்றவேண்டியுள்ளது. அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த நடவடிக்கை முடிந்தவுடன் வேலையைத் துவக்கலாம்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு தலைவர் அவர்களே, லெவல் கிராசிங்கை ஒட்டி உதகைப் பகுதிக்குச் செல்லக்கூடிய அந்தப் பகுதியில் புதியதாக பஸ் ஸ்டாண்டை ஏற்படுத்தக்கூடிய செயற்குறிப்பு ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இருக்கின்ற பேருந்து நிலையத்தைத் தான் பெரிதாக்கிக் கொண்டிருக்கிறோம். அந்த பக்கத்திலே இருக்கிற தீயணைப்பு நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றினால், அங்கேயே விரிவாகுவதற்கு வழி இருக்கிறது.

மேலூர் நகராட்சிப் பள்ளி.

372—(*வினா எண். 4992) திரு. க. வெ. வீரானம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூர் அழகர் கோவில் ரோட்டில் உள்ள மேலூர் நகராட்சியின்கீழ் நடைபெற்றுவந்த நகராட்சிப் பள்ளியில் தீ விபத்தால் ஏற்பட்ட பொருட்சேதம் எவ்வளவு?

(ஆ) பள்ளிக்கூடம் மறுபடியும் நடத்த அரசு எடுக்கும் நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) மேலூர் அழகர்கோவில் ரோட்டிலுள்ள மேலூர் நகராட்சிப்பள்ளி தீ விபத்தால் ஏற்பட்ட பொருட்சேதம் ரூ. 1,000.

(ஆ) தீயினால் சேதமடைந்த தென்னங்கூரைகளுக்குப் பதில் தற்போது ஆஸ்பெஸ்டாஸ் கூரை அமைக்கப்பட்டு பள்ளி நடைபெற்று வருகிறது.

நெல்லிக்குப்பத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்

373—(*வினா எண். 3773) திரு. துரை. அன்பரசன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் நகரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) & (ஆ) தென்னாற்காடு விற்பனைக்குழுவில் நெல்லிக்குப்பத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைப்பதற்கு போதிய வாய்ப்புக்கள் இல்லாததால், துணை விற்பனைக்கூடம் அமைக்குமாறு தென்னாற்காடு விற்பனைக்குழு செயலருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. துணை விற்பனைக்கூடம் நன்கு செயற்பட்டால், பின்னர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடமாக மாற்ற தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வினாவிற்கு விடை வருவதற்கு முன்னாலேயே, நெல்லிக்குப்பம் நகரத்தில் துணை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் செயல்பட வைத்து, விவசாயப் பெருமக்களின் இன்னல்களைக் குறைத்ததற்காக, நகர மக்களின் சார்பில், இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



பொன்னை மற்றும் சுற்றுவட்ட கிராமங்களுக்கு குடிநீர் வழங்கல்

374—(*வினா எண். 3918) திரு. மா. கதிர்வேலு: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜாப்பேட்டை தாலுக்கா, பொன்னை அதனைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் கூட்டுத் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) & (ஆ) வடாற்காடு மாவட்டம், வாலாஜாப்பேட்டை தாலுக்கா, பொன்னை மற்றும் அதனை சுற்றியுள்ள சில கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கான ஊற்றுக்கிணறு அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டு, பணி துவங்கப்படவுள்ளது.

ஆரணி நகராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல்.

375—(*வினா எண். 4136) திரு. மு. சின்னக்குழந்தை: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி நகராட்சிக்கு உட்பட்ட ஆரணி பாளையம், அருணகிரி சத்திரம்— ராமகிருஷ்ணாப்பேட்டை பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆமெனில், இதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) & (ஆ) ஆரணி நகராட்சி பரிந்துரையின்படி ஆரணிப்பாளையத்தில் குடிநீர் வழங்கப்படாத பகுதிகளுக்கும் மற்றும் சில வறட்சிப் பகுதிகளுக்கும் பகிர்மான குழாய்கள் அமைத்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்டப்பணிகள் முடிக்கப்பெற்று நகராட்சியிடம் பராமரிப்புக்கென ஒப்படைக்கப்பட்டுள்ளது. அருணகிரிசத்திரம் பகுதிக்கு பகிர்மான குழாய் புதலியன அமைக்க மதிப்பீடு ரூ. 6,00,000க்கு தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. இராமகிருஷ்ணாப்பேட்டை மேற்சொன்ன திட்டத்தில் தற்போது சேர்க்கப்படவில்லை.

[1986 ஏப்ரல் 4

திரு. மு.சின்னக்குழந்தை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதிகளிலுள்ள குடிநீர் பற்றாக்குறையைப் போக்க, ஆரணியிலுள்ள கண்டன் நதியிலுள்ள தண்ணீரை வையூர் வழியாக இழுத்து வந்து, இராமகிருஷ்ணாப்பேட்டையில் டாங்க் கட்டி, அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்குக் கொடுத்தால், தண்ணீர் பிரச்சினை தீரும். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

திரு டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே. 370-வது கேள்வியின்போது கேள்வி கேட்பதற்காக கையைத் தூக்கினேன், திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் இல்லை... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் போன்று சொல்வது முறையல்ல. இந்தக் கேள்வியில் விளக்கம் தேவைப்பட்டால் கேளுங்கள். அந்தக் கேள்வி பாஸ் ஆகி விட்டது. மீண்டும் அதை எடுக்காதீர்கள்.

பெரியகுளம் பை-பாஸ் சாலை

376—(*வினா எண்.4131) டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளத்தில் பை-பாஸ் ரோடு போடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் அம்மையநாயக்கனூரில் பை-பாஸ்சாலை அமைக்க திட்டம் இருப்பதாகவும், அந்தத் திட்டம் 10 ஆண்டுக் காலமாக நிறைவேற்றப்படாமல் இருப்பதாகவும், நகராட்சியில் அதற்கான குறிப்புகள் வைத்திருப்பதாகவும் நான் அறிகிறேன். அதை அரசு அறியுமா? அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ரூ. 51 இலட்சம் செலவாகும் என்று ஒரு கணக்கை மட்டும் கொடுத்திருக் கிறார்கள். ஏற்கனவே இந்தத் திட்டம் இருந்து, கைவிடப்பட்ட திட்டமாக தெரியவில்லை. எதிர்காலத்தில், அதனுடைய தேவைகளைத் தெரிந்து, நிதிநிலைமைக்கேற்ப, நடவடிக்கையை அரசு எடுக்கும்.



டாக்டர் த. முகம்மது சலீம்: தலைவர் அவர்களே, இப்போது போடுகின்ற நெடுஞ்சாலையானது, திண்டுக்கல்லை எடுத்துக் கொண்டால், வத்தலகுண்டு, பெரியகுளம், தேனி வழியாக சென்று கோட்டயம் வந்து அடைகிறது. எனவே அந்தச் சாலையை வத்தலகுண்டு, பெரியகுளம் பை—பாஸ் சாலையாக அமைத்து நேஷனல் ஹைவேஸ் சாலையாக ஆக்கினால், கேரளாவிற்குச் செல்ல உறுதுணையாக இருக்கும் என்பதால், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, முக்கியமான நகரங்களில் பை-பாஸ் சாலை அமைப்பது அத்தியாவசியமாகிறது. இப்போது போக்குவரத்து வசதிகளும் அதிகமாகி, வாகனங்களும் அதிகமாகி விட்டதால், இது தேவை என்ற நிலை இருக்குமானால், நிதிநிலைமைக்கேற்ப படிப்படியாகச் செய்கிறோம். அந்தவகையில் எப்போது முடிகிறதோ அப்போது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கூடலூர் இ. வி. வேலு: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இதுபோன்ற ஒரு கேள்வியைக் கேட்கிறபோது, நம்முடைய போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் விழுப்புரத்திலிருந்து சென்னைக்கு ஒரு வழிச்சாலை மாற்றுச் சாலை உலக வங்கி உதவியுடன் அமைக்கப்பட திட்டமிருப்பதாக சொன்னார்கள். அதற்கான பணிகள் இன்னும் துவங்கப்படவில்லை. இந்த ஆண்டிலே துவங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கும் அந்தக் கேள்விக்கும் சம்பந்தமில்லை. இருந்தாலும், பூர்வாங்க வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதைத் துவக்குகிற நேரத்தில் சரியாகத் துவக்கப்படும்.

திரு. அ. பாலுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் முதலில் எடுக்கப்பட்டு இப்போது இந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தப் பகுதி மக்களின் நலன் கருதி—வத்தலகுண்டு போன்ற நகரங்களுக்குள் பேருந்துகள் போகிற இடங்கள் குறுகலாக இருப்பதால் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்த பை-பாஸ் ரோட்டைப் போட முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னபோது இது கைவிடப்பட்ட திட்டம் என்று நான் சொல்லவில்லை. இதற்காக 55 இலட்சம் ரூபாய் செலவாகும் என்ற கணக்கை மட்டும் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டதாக எந்தக் குறிப்பும் இப்போது இல்லை. ஆனால், எதிர்காலத்தில் நிதிநிலைமைக்கேற்ப தேவையை உணர்ந்து இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தான் நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன்.

மலட்டாற்றின் குறுக்கே பாலம்

377—(* வினா. எண் 4306) திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம்—தூத்துக்குடி சாலையில் சாயல் குடிக்கு அருகே மலட்டாற்றில் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஜ. முத்துசாமி : (அ) இராமநாதபுரம்— தூத்துக்குடி சாலையில் சாயல்குடிக்கு அருகே மலட்டாற்றில் பாலம் கட்டும் பணிக்கு ஆட்சி ஒப்பளிப்பு ஏற்கனவே அரசால் அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இப் பணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. ஒப்பந்தப் புள்ளிகள் இறுதியாக்கப்பட்டபின் வேலை துவங்கப் படும்.

திரு. அ. பிரணவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு கேட்கப்பட்ட வினாக்களுக்கு இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் அங்கே ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன். நடப்பாண்டிலேயே மலட் டாற்றில் பாலம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக முயற்சி எடுத்துக் கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜ. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர் களே, அந்த ஒப்பந்தப் புள்ளிகள் கோருகிற அந்தக் காலம் மார்ச் 31-ந்தேதியோடு முடிந்திருக்கிறது. அதை நாம் இப்போது எந்த ஒப்பந்தக்காரரிடம் கொடுப்பது என்பது பற்றி முடிவு எடுத்து அந்த வேலைகளைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பதற்கு இந்தத் துறை ஏற்பாடு செய்யும்.

திரு. அ. பிரணவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்திற்கான நிதி ஒதுக்கீடு மாநில அரசு மூலம் செய்யப்படுகிறதா ? அல்லது மத்திய அரசு மூலம் நிதி ஒதுக்கப் படுகிறதா ?

மாண்புமிகு திரு. ஜ. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 44 இலட்சம் ரூபாய் நம் அரசாங்கம் ஒதுக்கி யிருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மலட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டுவது கேட்டு மகிழ்ச்சி. இந்த ரஸ்தா கிழக்குக் கடற்கரையோரத்தில் செல்கிற ரஸ்தா ஆகும். தேசத்தின் பாதுகாப்பிற்கும் அதோடு கூட ஆயிரக்



கணக்கான சுற்றுலாப் பயணிகள் ராமேஸ்வரம் சென்று வரும் யாத்திரீகர்கள் போன்றவர்கள செல்கிற ரஸ்தாவாக இது இருப்பதால் இந்தப் பால வேலையோடு அந்த ரஸ்தாவினுடைய சீரமைப்பு வேலையையும் சேர்த்து எடுத்துக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ஜ. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக எல்லா ரோடுகளையும் சீரமைக்க வேண்டும் என்றுதான் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். சிலயிடங்களில், நிதிநிலைப் பற்றாக்குறை காரணமாக உடனடி யாகச் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. ஆனால் இந்த ஆண்டு கொஞ்சம் அதிகமான நிதியை சாலைகளுக்காக ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். நாம் நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கைகள் எடுத்து சாலைகளைச் சீரமைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்யலாம்.

பேரையூர் – வத்தலக்குண்டு சாலை

378—(*வினா எண் 4397) திரு. பி. கே. எம் முத்துராமலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் பேரையூர்—வத்தலக்குண்டு நெடுஞ் சாலையை அகலப்படுத்தவும் பராமரிக்கவும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஜ. முத்துசாமி : மேற்கூறிய திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

திரு. இரா. முத்தையா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பேரையூர்-வத்தலக்குண்டு சாலையை சீர்படுத்தி பரா மரிக்கிற சிறப்பான திட்டம் எதுவும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள், ஆனால் இந்தச் சாலை பேரையூர்—வத்தலக்குண்டுக்கு இடையே உசிலம்பட்டி தாலுகா முழுமையும் இணைக்கிற ஒரு முக்கியமான சாலையாகும். மிகுந்த சீர்கேடு அடைந்திருக்கிற இந்தச் சாலையை சீர்படுத்தினால் தான் அப்பாதையில் போக்குவரத்து சீர்படுவதோடு உசிலம் பட்டிக்கு மேற்கே இருக்கிற பகுதிகளையும் இணைக்கக்கூடிய அளவில் அது பயன்படும் எனவே இப்போது பல்வேறு இடங் களில் மிகுந்த அளவில் சீர்கேடு அடைந்திருக்கிற அந்தச் சாலையை நல்ல முறையில் பராமரிக்கும் திட்டம் பற்றி மறு பரிசீலனை செய்ய அத்தகைய ஏற்பாடுகளைச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஜ. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர் களே, இந்தப் பாதையை அகலப்படுத்தி சீரமைக்கப்படுமா என்பதுதான் கேள்வி. எனவே அகலப்படுத்துகிற திட்டம் இல்லை என்று சொன்னேன். அதற்கு 96 இலட்சம் ரூபாய் செலவாகும். நிதி நிலை காரணமாக அதைத் தள்ளிப் போட வேண்டிய

கட்டாய நிலை இருக்கிறது. ஆனால் சீரமைப்பதற்கான நடவடிக்கையை எடுக்கலாம். அகலப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க முடியாது. சீரமைப்பது அரசாங்கத்தின் கடமை. அதை நிச்சயமாக நிதிநிலைமைக்கேற்பச் செய்யலாம்.

திரு. வே. இரா. ஜெயராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கூடுதலாக ஒன்றரைக் கோடி ரூபாய் அளவில் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கியிருப்பதாகத் தெரிய வருகிறது. சாலைகள் மிகவும் சீர்கேடு அடைந்து—மதுரையில் பெரும்பாலான சாலைகள் சீர்படுத்தப்படாமல் இருக்கின்றன. ஆகவே அந்த ஒன்றரைக் கோடி ரூபாயை மதுரைக்குக் கொடுத்து அந்த நிதியை அந்தச் சாலைகளைச் செப்பனிடும் வகையில் ஒதுக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, முழுமையாக எல்லாவற்றையும் அங்கே கொடுத்துவிட முடியாது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு ஒதுக்க முடியுமோ அந்த நிலைக்கேற்ப ஒதுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். பாரபட்சம் நிச்சயமாக இதில் இருக்காது.

### பெருநகர் பல்லவன் போக்குவரத்துக் கழகம்

379—(*வினா எண் 5432) திரு. சைதை சா. துரைசாமி, திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன், டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெருநகர் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் பணிகள் எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

(முற்பகல் 9-30)

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் மொத்தமுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை எவ்வளவு ? இதிலே மகளிருக்கு மாத்திரம் எத்தனை வண்டிகள் விடப்படுகின்றன ? அப்படி மகளிருக்காக செல்லுகின்ற வண்டிகளுக்கு பெண் கண்டக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா ? இல்லையென்றால், இனிமேலாவது பெண் கண்டக்டர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, 2,300 பேருந்துகள் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதிலே பெண்களுக்கு எவ்வளவு வண்டிகள் விடப்படுகின்றன என்ற எண்ணிக்கை, சரியான புள்ளி விவரம் தற்போது என்னிடம் இல்லை. ஆனால், எல்லாப் பேருந்துகளும் நாள் முழுவதும் பெண்களுக்காக ஓட்டப்படுவதில்லை. 'பீக் அவர்ஸ்' அதாவது பெண்கள் அதிகமாக எண்ணிக்கையில் வருகின்ற சமயத்தில் சில டிரிப்புகள் ஓட்டப்படுகின்றன. ஏற்கனவே, 11 பெண் கண்டக்டர்களை இந்தப் போக்குவரத்துக் கழகத்தில் எடுத்திருக்கிறார்கள். பெண்களுக்காக ஓட்டப்படுகின்ற டிரிப்புகளைத் தவிர மற்ற நேரங்களில் ஓட்டுவதில் சிரமம் இருக்கின்ற காரணத்தினால், தற்போது கைவிடப்பட்டிருக்கிறது. எதிர்காலத்திலே நிலைமைக்கேற்ப அதன்மீது முடிவு எடுக்கப்படும்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் மிக அதிகமான பேருந்துகள் இருப்பதாலும், அதைச் சரியாக நிர்வகிக்க முடியாத காரணத்தாலும், அரசு இனிமேலாவது வடசென்னைக்குத் தனியாக ஒரு போக்குவரத்துக் கழகத்தையும் தென்சென்னைக்குத் தனியாக ஒரு போக்குவரத்துக் கழகத்தையும் ஆரம்பித்து, மறைந்த அன்னை இந்திரா அவர்களின் பெயரை வைக்கின்ற நிலையை ஏற்படுத்துவதற்கு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இதை இரண்டாகப் பிரித்தால் நிர்வாகத்தில் கொஞ்சம் சிரமத்தைக் குறைத்துக்கொள்ள முடியும். ஆனால், இதிலே சிக்கல் இருக்கிறது. எந்த ஒரு வழித் தடமும், சென்னையில் பல இடங்களை ஒன்று சேர்த்து பின்னிப் பிணைத்து இயங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், இரண்டாக இந்தப் போக்குவரத்துக் கழகத்தைப் பிரிக்கின்றபோது, 'டைமிங்' போன்றதில் பலசிக்கல்கள் ஏற்படும். மேலும், ஒரு போக்குவரத்துக் கழகத்திற்கும் மற்றொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் இதனால் சிக்கல்கள் ஏற்படும். ஆகவே, இதைப் பிரிக்க வேண்டாம் என்ற நிலையை எடுத்திருக்கிறோம், பெயரைப் பொறுத்தவரையில், புதியதாக ஒரு போக்குவரத்தை அமைத்தபோது அன்னை இந்திரா காந்தி அவர்கள் பெயரை வைக்க கேட்டபோது, மத்திய அரசாங்க நிர்வாகத்தில் ஒரு துறையினர் இந்தப் பெயரை வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். மற்றொரு துறையின் சார்பாக இந்தப் பெயரை வைக்க வேண்டாம் என்று சொன்னார்கள். ஆகவே, அந்த நிலை இருக்கிறது.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் பல வழித் தடங்களில் செல்லுகின்ற பேருந்துகள் நிற்கும் இடங்களில் நிழற் குடைகள் இல்லை. இப்போது கடுமையான கோடைகாலம். எனவே,

இதைக் கருத்திற் கொண்டு, உடனடியாக நிழற்குடைகள் இல்லாத இடங்களில் அவற்றை அமைப்பதற்கு நடவடிக்கையும், தற்காலிகமாக கீற்றுப் பந்தலாவது அமைக்கும் நடவடிக்கையும் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, எங்கெங்கு நிழற் குடைகள் தேவையோ அவற்றை படிப்படியாக அமைக்க இந்த அரசாங்கம் முயற்சி எடுக்கும். ஆனால், கீற்றுக் கொட்டகை அமைத்தால் பயணிகளுக்கு ஆபத்துதான் ஏற்படும். அதைச் செய்ய இயலாது.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் சில கல்லூரிகளுக்கு உள்ளே செல்லுகின்றன. குறிப்பாக, ராணி மேரி கல்லூரியில் பேருந்துகள் உள்ளே சென்று வருகின்றன, அதேபோல், ஆண்கள் கல்லூரிகளிலும் பேருந்துகள் உள்ளே சென்று வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு ராணி மேரி கல்லூரிக்குள் அந்த பேருந்துகள் சென்று வருவதில் என்ன வருத்தமோ தெரியவில்லை. எங்கெங்கு பேருந்துகள் உள்ளே சென்று திரும்பி வரமுடியுமோ, அப்படிப்பட்ட இடங்களில் பேருந்துகள் இயக்கி வைக்கப்படும். (சிரிப்பு)

திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களைப் பிரிப்பதினால் நிறைய செலவு ஏற்படுகிறது. எனவே இதை நிறுத்தி ஆந்திரா, கர்நாடகா, கேரளா, மகாராஷ்டிரா, உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ளதுபோல் ஒரே கழகமாக அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தலைவரவர்களே, நம்முடைய நோக்கம் செலவு பற்றியது அல்ல; நம்முடைய நோக்கம் பொது மக்களுக்கு அதிக வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதுதான். எனவே, அதற்குச் சுலபமாக இருக்க வேண்டுமென்றுதான், 600 பேருந்துகளுக்கு மேல் இருந்தால் அந்தப் போக்குவரத்துக் கழகங்களை, வெளியிடங்களில்—ரூரல் ஏரியாக்களில் இரண்டாகப் பிரித்துக் கொண்டிருக்கிறோம். கேரளா, ஆந்திராவைப் போல ஒரே போக்குவரத்துக் கழகமாக வைத்துக்கொண்டிருந்தால், பேருந்துகளும் அதுபோலத்தான் இருக்கும் என்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும். எனவே, இப்படி இருந்தால் சிறப்பாக மக்களுக்கு நன்மை செய்யக் கூடியதாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வெயில் காலமாக இருப்பதால், சென்னை நகரத்தில் உள்ள மக்கள் குடும்பத்தோடு மெரினா பீச், எலியட்ஸ் பீச் ஆகிய இடங்களுக்கு வருகின்ற வாய்ப்பு தற்போது உள்ளது. ஆகவே, எல்லியட் பீச், மெரினா பீச் ஆகிய இடங்களுக்கு அதிகமாகப் பேருந்துகளை விடுவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, ஏற்கனவே நிறைய பேருந்துகள் சென்னை மாநகரத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன. இனிமேலும் பேருந்துகள் விட்டால் இடம் இருக்குமா என்ற சந்தேகம் இருக்கின்றபொழுது இப்படிப்பட்ட கேள்வி எழுப்பப்பட்டிருப்பது எனக்கு உண்மையிலேயே வியப்பாக இருக்கிறது. ஆனால் அவசியம் இருந்தால் அதிகமாக எண்ணிக்கையில் பயணிகள் சென்றால் நிச்சயமாக அந்த ஏற்பாடு செய்யப்படும்.

டாக்டர் அ. பொன்னுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே ஹ்யூமிடிட்டி அதிகமாக இருப்பதால் குளுகுளு பஸ்களை விடுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இந்த யோசனைக்கு நான் என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. ஏற்கனவே அதிகமாக பேருந்துகள் விடப்பட்டு, இடம் போதாமல் இருக்கிறது. இந்த நிலையில் குளுகுளு பேருந்துகளை விட்டால் அந்தப் பேருந்தில் இவ்வளவு பேர்கள் பயணம் செய்ய முடியாது. 40, 45 அல்லது 50 பேர்கள்தான் பயணம் செய்ய முடியும். அப்படியிருந்தால் இன்னும் இரண்டாயிரம், மூன்றாயிரம் பேருந்துகளைப் போட வேண்டிய நிலை சென்னை மாநகரத்திலே நேரிடும். ஆகவே, அந்த யோசனை அரசாங்கத்திற்கு இல்லவே இல்லை.

### பாடி பகுதியில் குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வீடுகள்

380—(*வினா எண் 5816) திரு. கு. ரமணி: மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) சென்னை பாடியில் உள்ள தொழிற்சாலைப் பகுதியில் குறைந்த வருமானமுள்ள மக்களுக்காக கட்டப்பட்டுள்ள 1,500 வீடுகள் இரண்டாண்டுகளாகியும் ஒதுக்கீடு செய்து கொடுக்கப்படாதது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதற்கு என்ன காரணம்?

(இ) எப்பொழுது அவ்வீடு ஒதுக்கீடுகள் செய்து கொடுக்கப்படும்?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** (அ) ஆம். (ஆ) மற்றும் (இ). சென்னை பாடி ஏரியில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான குடியிருப்புகள் கட்டும் திட்டம் முடியும் தருவாயில் கட்டி முடித்த குடியிருப்புகளில் சில கூடுதல் பணிகள் செயல்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இக் கூடுதல் பணிகள் நிறைவேற்றப்பட்ட பின்னர் இக்குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

**திரு. கு. ரமணி:** தலைவரவர்களே, இந்த 1,500 வீடுகள் கட்டப்பட்டு, நீண்ட நாட்களாக ஒதுக்கீடு செய்யப்படாமல் இருந்து வருகிறது என்று தெரிய வருகிறது. கட்டப்படுகின்ற வீடுகளை பல மாதங்களாக, இன்னும் சொல்லப்போனால் நீண்ட காலமாக இப்படி ஒதுக்கீடு செய்யப்படாமல் இருப்பது உண்மையிலேயே அரசுக்கும், அதில் குடியிருக்கப் போகின்ற மக்களுக்கும் நஷ்டம். கட்டி முடிக்கப்பட வேண்டிய வீடுகளைப் பொறுத்த வரையில் அதற்கு உரிய காலத்தில் எல்லா வேலைகளையும் முடிக்க வேண்டும் என்ற நிர்பந்தம் காண்ட்ராக்டர்களுக்கு இல்லாததும் ஒரு காரணம் என்று கருதலாமா? ஏன் இவ்வளவு டிலே? அதற்கு காரணம் என்ன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகப் பல்வேறு இடங்களில் கட்டப்பட்ட குடியிருப்புகளை விட இந்த பாடி பகுதியில்—மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்ட அந்தப் பகுதியில் கட்டிக்கொண்டு வரும் வீடுகளைச் சற்றுப் புது மாதிரியான வகையில், வேறு வகையாகக் கட்ட வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையில் அந்தப் பிளானில் அல்லது மாடலில் கட்டப்படுகின்ற காரணத்தால் தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. காலதாமதத்திற்கு இதுவே காரணம் ஆகும்.

**திரு. கு. ரமணி:** தலைவரவர்களே, பாடி பெரிய இன்டஸ்டிரியல் சென்டர். ஏராளமான தொழிலாளர்கள் நிறைந்த பகுதி அது. அங்கே குறைந்த வருமானமுள்ள மக்களுக்காக வீடுகள் கட்டப்படுவது நல்ல பணி. இதேமாதிரி, கோவை மாநகரம் பெரிய நகரம்., அந்தப் பெரிய நகரத்தைச் சுற்றிலும் பல்லாயிரக்கணக்கான ஏன் இலட்சக்கணக்கான என்றுகூடச் சொல்லலாம், அவ்வளவு தொழிலாளர்கள் நிரம்பியிருக்கும் அந்தப் பகுதிகளில் அந்தத் தொழிலாளர்களுக்குத் தேவைப்படும் அளவிற்கு இப்படிப்பட்ட வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசினிடத்தில் ஏதாவது திட்டம் இருக்கிறதா அல்லது இந்தப் பாடியோடு மட்டும் இந்தத் திட்டம் நிற்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையை பொறுத்தவரையில், நேற்றுகூடப் பேசுகின்றபொழுது சொன்னேன்; கோவை நகரத்திற்குப் பக்கத்தில் 350 ஏக்கர் என்று நினைக்கிறேன்—என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால்—அங்கே வீட்டு வசது வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. கோவை பெருநகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் தொழிலாளர்களுக்கு ஒன்று தனியாகக் கட்டுகின்ற அந்த எண்ணம் இல்லை; ஆனால் மற்றவகையான திட்டங்களில் தொழிலாளர்களும் கலந்து கொண்டு உரிமை பெறுவதற்கு இடம் இருக்கிறது.

(முற்பகல் 9-40)

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இங்கே குறிப்பிட்ட பாடி என்னுடைய தொகுதியைச் சேர்ந்தது. அங்கே 4,000-க்கு மேற்பட்ட பலரகமான வீடுகள் கட்டப்பட்ட போதிலும், அந்தக் குறிப்பிட்ட இடத்திலே பெரிய அக்கறை காண்பிக்கப்படாமல் இருப்பதற்குள்ள ஒரு முக்கியமான காரணம், அங்கே குடிநீர் வசதியும் ரோடு வசதியும், சாக்கடை வசதியும் இன்னும் அமையவில்லை என்பதுதான். அதை விரைவிலே முடித்துக் கொடுக்க அமைசசர் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாடி ஏரியா பகுதியில், 1,184 பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களுக்கான குடியிருப்புகளை அங்கே கட்டிக் கொண்டிருக்கிறார்கள். 400 அபிவிருத்தி மனைகள் அங்கே பிரிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு வகையான சந்தேகங்கள் எழுப்பி இருக்கிறார்கள், அரசைப் பொறுத்தவரையில், விரைவாகக் கட்டவேண்டுமென்ற எண்ணத்தோடுதான் செயல்படுகின்றது. புது வகையாகக் கட்ட வேண்டுமென்ற எண்ணத்தின் காரணமாகத்தான் காலதாமதம் ஆகிறது

**திரு. எம். அண்ணாதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரம் பாடி பகுதியில் தொழிலாளர்களுக்கு வீடு கிடைக்குமா என்று கேட்கப்பட்டதற்குப் பல வழிகளிலே தொழிலாளர்கள் பெறுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே போல, தமிழ்நாடு மையப் பகுதியாக உள்ள திருச்சிக்குப் பக்கத்தில் இருக்கிற பொன்மலைப் பகுதியில், . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாடியிலிருந்து திருச்சிக்கு எப்படிப் போக முடியும்? மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வி இது.

## ஆதி திராவிடர்களுக்கு வீட்டுவசதி

231(* வினா எண் 3944) திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூர் தொகுதி, திருவெறும்பூர் ஒன்றியத்தில் ஆதி திராவிடர்களுக்கு தாட்கோ நிதியுடன் எத்தனை குடி யிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன?

(ஆ) நடப்பு ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் எத்தனை குடியிருப்புகள் அரசு கட்டித்தர உள்ளது?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: (அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஆதி திராவிடர்களுக்கு தாட்கோ நிதி உதவியுடன் 93 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) இது அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெறும்பூர் தொகுதியில் 93 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நன்றி. இது மிகவும் பின்தங்கிய தொழிலாளர்களைக் கொண்ட தொகுதியாகும். ஆகவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நடப்பாண்டில் அதிகப்படியான குடி யிருப்புகள் கட்டித் தருவதற்கு அரசிடத்தில் ஏதாவது திட்டம் இருக்கிறதா? அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த ஆண்டு அப்படிப்பட்ட இடங்களிலே வீடு கட்டுகின்ற திட்டம் இருக்கிறது. அதிலே நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலுக்கு நன்றி. எனது தொகுதியிலே தோல் பதனிடும் தொழிலாளர்கள் நிறைய இருக்கிறார்க . அவர்கள் அத்தனை பேர்களும் தாழ்த்தப் பட்ட மக்கள் ஆவார்கள். அவர்களுக்குச் சிறப்பு அனுமதி யோடு இந்த ஆண்டு குடியிருப்புகள், தாட்கோ மூலமாவது, அல்லது அரசுத் திட்டத்தின் மூலமாவது கட்டுவதற்கும் அவர்கள் இருக்கிற இடங்களுக்குப் பட்டா வழங்குவதற்கும் அரசு ஏற்பாடு செய்யுமா? அதை மாண்புமிகு அமைச்சர் அறிவிப்பாரா?





மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் பட்டா கொடுக்கப்படவேண்டும். பட்டா கொடுக்கப்பட்ட இடத்தில்தான் வீடு கட்டிக் கொடுக்கப் பட வேண்டும். இன்னும் பட்டாவே கொடுக்கப்படவில்லை யென்று உறுப்பினருடைய கேள்வியிலிருந்து தெரிகிறது. ஆகவே, பட்டா கொடுத்த பிறகு, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். பி. துரைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ நிதியுதவியுடன் கட்டப்படும் வீடுகள் மிக மோசமாக உள்ளன என்பதை அரசு அறியுமா? அப்படி கட்டிய ஒப்பந்தக்காரர்கள் மீது அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலமாக, ஒப்பந்தக்காரர் மூலமாக விடுவதில்லை. பயன் பெறுபவர்களுக்குப் பணம் கொடுக்கப்படுகிறது, 3 தவணைகள் மூலமாக. ஆகவே, அப்படிப்பட்ட பிரச்னை எழுவதற்கு இங்கே இடம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டு வதற்கு தாட்கோ மூலம் வழங்குகின்ற நிதி எவ்வளவு? அப்படி வழங்கப்படுகின்ற நிதி வீடு கட்டுவதற்குப் போதுமானதாக இல்லையென்ற புகார்கள் அரசுக்கு வந்துள்ளனவா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, இந்த நிதி உதவியைப் பெறுபவர்கள் குறைந்தபட்சம் எவ்வளவு செண்ட் நிலத்திற்குப் பட்டா வைத்திருக்க வேண்டுமென்ற வரையறை நிர்ணயிக்கப் பட்டிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவரவர்களே, கடந்த வாரத்தில் கூட இதே கேள்வி கேட்கப்பட்டது. அப்போதே இந்த 6,000 ரூபாய் போதவில்லை என்பதால் இந்த நிதி ஆண்டிலே அதை 10,000 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பது பற்றிய செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது என்று சொன்னேன். வீடு கட்டுவதற்கு 3 சென்ட் நிலம் பட்டா கொடுக்கப்பட்டு, அதில் 201 சதுர அடி அளவில் வீடு கட்டும் திட்டம் இருக்கிறது.

திரு. கே. பாலாஜி: தலைவரவர்களே, தாட்கோ மூலம் வீடு கட்டிக்கொடுக்க பட்டா அவசியம் இருக்க வேண்டும். ஆனால் சில நேரங்களில் பட்டா கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் 20 ஆண்டு, 25 ஆண்டு குடியிருக்கிற உரிமையை வைத்து, அந்த உரிமையின் அடிப் படையில் வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 ஏப்ரல் 4

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவரவர்களே, பட்டா கொடுக்கப்பட்ட இடத்தில்தான் வீடு கட்டிக்கொடுக்கக்கூடிய திட்டம் இப்போது தாட்கோவில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, தாட்கோ மூலம் வீடு கட்டிக்கொள்ள தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற ஆதிதிராவிட மக்களுக்கு 2,400 ரூபாய், 4,000 ரூபாய் என்ற அளவுக்கு அரசு மானியமாகக் கொடுத்து அதை வைத்து வீடு கட்டினார்கள். கட்டப்பட்ட வீட்டையும் மனையையும் அரசாங்கத்திடம் அடமானம் வைத்து கட்டினார்கள். அந்த வீடுகள் முழுமையாகக் கட்டி முடிக்கப்படாமல் பாதியிலேயே நிற்கின்றன. ஆகவே, கடனை அரசு வஜா செய்து, அடமானத்தை ரத்து செய்து, மீண்டும் அந்த இடத்தில் வீடு கட்டிக்கொள்ள அரசாங்கம் உதவி செய்யுமா? அதற்கு வசதி இருக்குமா? தஞ்சை மாவட்டத்தில் அத்தனை ஆதி திராவிட காலனிகளிலும் இப்படிப்பட்ட நிலைமை இருப்பதால் அரசு அதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல அரசுக்கு எந்தவிதமான புகாரும் வரவில்லை. அப்படி புகார் வந்தால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எஸ். பி. மணவாளன்:** தலைவரவர்களே, தாட்கோ நிதி உதவியுடன் கட்டி கொடுக்கப்படுகின்ற ஒரு குடியிருப்புக்கு 6,000 ரூபாய் வீதம் கொடுக்கப்படுகிறது. அந்த 6,000 ரூபாய் நிதி உதவி முழுமையாக மாநில அரசைச் சேர்ந்ததா அல்லது மத்திய அரசு இதற்கு ஏதாவது நிதி உதவி செய்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவரவர்களே, தாட்கோ மூலம் அளிக்கப்படுகின்ற நிதி உதவி முழுவதும் மாநில அரசைச் சேர்ந்ததுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

232—(*வினா எண். 7633) **திரு. வி. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சிவகாசி தொகுதி, மீனம்பட்டி, திருத்தங்கள் ஊராட்சிகளில் தாட்கோ மூலம் வீடுகட்ட அரசு அனுமதி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டில் வீடுகட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா?



1986 ஏப்ரல் 4]

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** (அ) இல்லை.

(ஆ) இந்த ஆண்டில் வீடுகட்டும் உத்தேசம் சம்பந்தமாக செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. க. சோலைராசு:** தலைவரவர்களே, தாட்கோ மூலம் ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் அடிப்படையில் கட்டிக் கொடுக்கப்படுகின்ற வீடுகள் தீ விபத்தால் பாதிக்கப்பட்டால் அந்த வீடுகளுக்கு உடனடி நிவாரணம் கொடுப்பதற்குப் பதிலாகவீடுகளை மீண்டும் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறென்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவரவர்களே, தீ விபத்து அல்லது கலவரங்களால் அந்த வீடுகள் பாதிக்கப்பட்டால் அந்த இடத்திலே இருக்கிற மக்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டிருந்தால் அங்கே கட்டாயம் மீண்டும் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறது. அந்த அடிப்படையில் தீப்பிடித்த வீடுகளை மீண்டும் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. த. மாரிமுத்து:** தலைவரவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு ஏற்கெனவே கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகள் பழுதடைந்து குடியிருக்க முடியாமல் இருக்கின்றன. குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டத்தில் இரங்கம்மா சத்திரத்தில் நரிக் குறவர்களுக்கு கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளில் கூரையே இல்லாமல் போய், அதன் காரணமாக அவர்கள் பக்கத்திலே குடிசைகள் போட்டு வசித்துவருகிறார்கள். புதிய குடியிருப்பு களை அரசு கட்டிக் கொடுக்கும்போது, இப்படி குடியிருக்க முடியாமல் பழுதுபடாதபடி நல்லமுறையில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? அதைப்போல ஏற்கெனவே கட்டிக்கொடுத்து பழுதடைந்திருக்கிற வீடுகளையும் நல்ல முறையில் மீண்டும் கட்டிக்கொடுக்க அல்லது சீர்செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைபோல பழைய வீடுகளை மீண்டும் சீர்செய்துகொடுக்கும் நிலைமை தற்போது இல்லை. தமிழ்நாடு முழுவதும் கணக்கெடுத்துப் பார்த்தால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு 1977—லிருந்து 1985 வரையில் 2,51,476 வீடுகளைக் கட்டியிருக்கிறோம். பழுதடைந்த வீடுகளைப் புதுப்பிக்க ஆரம்பித்தால் இன்னும் மீதமிருக்கிற மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே, பழைய வீடுகளை குடியிருப்பவர்களே பழுதுபார்த்துக்கொள்ள வேண்டும்; அரசாங்கம் பழுதுபார்த்துக் கொடுக்கும் திட்டம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. பழனிமுத்து; தலைவரவர்களே, தாட்கோ மூலம் வீடு கட்ட 6,000 ரூபாய் கொடுக்கிறார்கள். இந்தப் பணத்தை எத்தனை தவணைகளில் கொடுக்கிறார்கள்? இரண்டு தவணை களில் கொடுத்தால் வீடு கட்டுவது சுலபமாக இருக்கும். தற்போது ஆறு தவணைகளில் கொடுக்கப்படுவதாகக் கேள்விப்படுகிறேன். இந்தத் தவணை முறைகளை குறைக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.50)

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது மாதிரி அரசு பரிசிலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தாட்கோ மூலமாகக் கட்டப்படுகின்ற வீடுகளைப் பொறுத்தவரையில் பெரும்பாலான வீடுகளை 6,000 ரூபாயில் கட்ட முடியாமல் பாதியில் நிற்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே அந்த வீடுகளைக் கட்டி முடிக்க ஒவ்வொரு அதிகாரியையும் அந்த வீடுகள் கட்டப்படுகின்ற இடங்களுக்கு அனுப்பி சர்வே செய்து கட்டப்படாமல் பாதியில் நிறுத்தப்பட்டிருக்கின்ற வீடுகளைக் கட்டி முடிக்கின்ற வகையில் நிதியுதவி செய்வது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: பேரவைத் தலைவர் அவர் களே, 6,000 ரூபாய் போதவில்லை என்றுதான் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும் சொல்லியிருக்கிறார்கள். அதற் காகத்தான் 10,000 ரூபாயாக உயர்த்துகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அது கூடிய விரைவில் நிறைவேறும் என்பதையும் அப்படி நிறைவேற்றப்பட்டால் அந்தப் பிரச்சினைகள் எல்லாம் தீர்க்கப்பட்டுவிடும் என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திம்மநாயக்கன்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளி பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதி.

197 (*வினா எண் 4698) திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமகிரிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள (சேலம் மாவட்டம்) திம்மநாயக்கன்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் உள்ள பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக மாணவர் விடுதி திறக்க அரசு பரிசீலனை செய்யுமா?





(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்த முன்வரும்?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சே. இரத்தினவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பிற்பட்டோர் நலத்துறையின் மூலமாக மொத்தம் எத்தனை விடுதிகள் நடத்தப்படுகின்றன? அதன்மூலமாக எத்தனை மாணவ, மாணவியர் பயனடைகிறார்கள் என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பிற்பட்டோர் மற்றும் சீர் மரபினருக் கான 543 மாணவ, மாணவியர் விடுதிகள் உள்ளன. அங்கே 31,894 மாணவ, மாணவியர் தங்கி பயின்று பயனடைந்து வருகின்றனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. ந. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத்துறையின் மூல நடத்தப்படுகிற விடுதிகள் 543 என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த 543 விடுதிகளும் சொந்தக் கட்டடத்தில் இயங்குகின்றனவா அல்லது வாடகைக் கட்டடத்தில் இயங்கு கின்றனவா என்பதைத் தெரிவிக்கவேண்டும் என்பதோடு குறிப்பாக எனது தொகுதியைப் பொறுத்தவரையில் பிற்பட்டோர் நலத் துறையால் நடத்தப்படுகிற விடுதிகள் வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன. பட்டுக்கோட்டை நகரைப் பொறுத்தவரையில் வாடகைக் கட்டிடம் கிடைப்பது என்பது பெரிய காரியமாக இருக்கிறது. நிதி நிறுவனங்களிடமிருந்து பெரிய தொகையைக் கடனாகப் பெற்று இருக்கின்ற நிலைமையில் இந்தக் கட்டிடங் களை எல்லாம் சொந்தக் கட்டிடங்களாகக் கட்டினால் வாடகை யாகக் கட்டுகின்ற பணத்தை கடனை அடைக்கின்ற வகையிலே யாவது பயன்படுத்தலாம். எனவே அதற்குரிய வகையில் அரசு விரிவான திட்டத்தைக் கொண்டுவருவது பற்றிப் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் 39 விடுதிகள் அரசின் சொந்த கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. மற்றவற்றைப் பொறுத்த வரையில் 1976–77-ம் ஆண்டுக்கு விடுதிகள் கட்டுவதற்காக 50 இலட்சம் ரூபாய் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் ஒதுக்கி யிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக மாவட்டத்திற்கு 5 என்ற வகையில் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியருக்காக விடுதிகள் கட்டலாமா என்கிற பரிசீலனையும் அரசினிடத்திலே இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் இதுவரையில் விடுதிகளுக்கு வாடகையாக மட்டும் ஆண்டுதோறும் 20 இலட்சம் ரூபாய் கொடுத்துக் கொண்

டிருக்கிறோம். வாடகையாக சில கட்டிடங்களைப் பெற்றாலும் கூட உடனடியாக அவற்றைத் திருப்பித் தரவேண்டும் என்று சொல்லி அவர்கள் கோர்ட் வரைக்கும் போய்க் கொண்டிருக் கிறார்கள். * *

இதை எல்லாம் கருத்தில் கொண்டுதான் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்திருக் கிறார்கள். அது போதாது என்பதற்காகத்தான் தேசிய கிராமப் புற ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக நாங்கள் மாவட்டத்திற்கு 5 விடுதி கட்டிடங்கள் கட்டும் திட்டத்தைப் பரிசீலித்துக்கொண்டு இருக்கிறோம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்ட மாணவர்களுக்காகக் கட்டப்பட்டிருக்கிற விடுதிகளில் ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு வழங்கப்படுகிற இலவச நிதியுதவி மிகக் குறைவு என்று சொல்கிறார்கள். அதைக் கூட்டித் தருகிற உத்தேசம் அரசிடம் இருக்கிறதா? இப்போது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள் சார் பாகப் போடப்படுகிற இலவசச் சத்துணவுத் திட்டத்தால் உயர் நிலைப்பள்ளி மாணவர்களும் பயனடைகிறார்கள். அதன் காரணத் தால் மதிய உணவை பிற்பட்டோர் நல விடுதிகளில் வழங்குவதை நிறுத்தி அந்தத் தொகையையும் கூடுதலாகத் தந்தால் காலை உணவும், இரவு உணவும் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் ரொம்ப சொஃபிஸ்டிக்கேடட் உணவாகத் தரலாம். அந்த உத்தேசம் அரசிடம் இருக்கிறதா? அதற்கான ஆய்வினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி விடுதி மாணவர்களுக்கு 60 ரூபாயும், கல்லூரி விடுதி மாணவர்களுக்கு 80 ரூபாயும் என்ற அளவிலே மானியம் கொடுத்துக் கொண்டு வருகிறோம். அது போதவில்லை. எனவேதான் அதை 150 ரூபாயாக உயர்த்தித்தரவேண்டும் என்ற ஒரு குறிப்பை நாங்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

கோம்பையாறு அணைத்திட்டம்.

*381*—(*வினா எண் 3508)—திரு. ஆர். ஈஸ்வரன், திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

வாசுதேவநல்லூர் தொகுதியில் கோம்பையார் அணைத்திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. யா. சை.மு. யூசுப்: இத்திட்டம் மேற்கொள்ள உத்தேசத்திருந்த இடத்தில் போதிய தண்ணீர் கிடைக்காது என்று தெரிந்ததால் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளத் தேவையில்லை என அரசு முடிவு செய்துள்ளது.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் வாசுதேவநல்லூர் தொகுதி யில் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து துவங்குகிற உள்ளாறு அணைக்கட்டு என்று 1984-வது ஆண்டு என்று நினைக்கிறேன், ஒரு திட்டம் அரசால் ஆய்வு நடத்த சொல்லி, நடத்தப்பட்ட ஆய்வுகளின் விவரங்கள் அத்தனையும் முறையாக அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிகிறேன். அது உண்மையா? அந்த ஆய்வுகளின் மேல் இதுவரை அரசு என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கோம்பையாறு பற்றியது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உள்ளாறு நீர்த்தேக்க திட்டத்தைப் பற்றிக் கேட்கிறார்கள். உள்ளாறு நீர்த்தேக்கத் திட்டத்தைப் பொறுத்த மட்டிலும், அந்தத் திட்டத்தின் அவசியத்தை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. அதன் மேல் நடவடிக்கை எடுப்பதற்காகத்தான் உரிய ஆய்வு அறிக்கைகள் கேட்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

பொன்னாற்றை நவீனப்படுத்தல்.

*382*—(*வினா எண். 6624)—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தா. பழூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பொன்னாற்றில் மராமத்து செய்து நவீனப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வருடா வருடம் நான் கேட்கின்ற வழக்கமான கேள்வி. வழக்கமாக நான் பெறுகிற பதிலும் கூட. இந்த ஜெயங்கொண்டம் தொகுதியிலே, கொள்ளிடத்திலேயிருந்து பிரிகிற ஒரு கிளை நதி பாய்ந்து கொண்டிருக்கிற பகுதி. அந்த நதியின் மூலம் தான் இங்கே பாசன வசதி கிடைக்கிறது.

ஒவ்வொரு வருடமும் தண்ணீர் வருகிறபோது நாற்றங்காலில் தண்ணீர் வரும். அதனால் மணல் மேடிடப்பட்டு நாற்று நடும்போது தண்ணீர் வராது. எனக்குத் தெரியும் கேள்வி பதில் மூலம் இந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டு விட முடியாது

என்று. அந்தக் குடியானவர்களுடனும், சம்பந்தப்பட்ட பொறியாளர்களுடனும் கலந்து பேசி, பல லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, பெட்-டேம் என்ற வகையில் கட்டினால்தான், தண்ணீர் அந்த இடத்திற்கு தடையில்லாமல் செல்வதற்கு முடியும். இப்போது ஒவ்வொரு ஆண்டும் இயந்திரங்களைக் கொண்டு, மணலை வாரி அப்புறப்படுத்தி வருகிறோம். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட பொறியாளர்களுடன் கலந்து பேசி இதற்கு நிரந்தர தீர்வு காண ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த முறைதான் சட்ட சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர் வருடா வருடம் கேள்வி கேட்பதாகச் சொல்வது 2-வது வருடத்தைச் சொல்லுகிறார் என்று கருதுகிறேன். எப்போதுமே ஒரு திட்டம் தேவை என்றால் அந்த திட்டத்தின் அவசியத்தைப் பற்றி எடுத்துச் சொல்வது, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் செய்ய வேண்டிய வேலை தான். அதை எந்த வகையிலும் செய்யலாம். கேள்வி கேட்கலாம் அல்லது நேரிடையாக அறிவித்தும் நிறைவேற்றிக் கொள்ளலாம். இங்கே கேள்வியின் மூலமாக பிரச்னையை தீர்க்க முடியாது என்ற தன்மையை அறிவதற்கு மாண்புமிகு உறுப்பினருக்கு ஒரு ஆண்டுகாலம் ஆகியிருக்கிறது.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் வழக்கமாக இது போன்று மணல் திட்டுக்கள் ஏற்படும் பகுதிகள் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் இருக்கின்றன. அவைகளை அவ்வப்போது தூர் வாரி இயந்திரத்தின் மூலம் அப்புறப்படுத்தி வருகிறோம். அப்படி தூர் வார வேண்டிய பணி சில இடங்களில் பன்னெடுங்காலமாக 30 ஆண்டுக்காலமாக கூட இருக்கின்றன. அவைகளையெல்லாம் ஒரேயடியாக பணியில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால் மிக அதிகமான அளவுக்கு நிதி தேவை. அந்த வகையில் நிதிநிலைமைக்கு ஏற்பவும், அந்த திட்டத்தை மேற்கொள்வதால் ஏற்படுகிற பயன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தான் அவ்வப்போது மராமத்துப் பணி நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் மராமத்துப் பணி உடனடியாக தேவையா அல்லது சற்று ஒத்திவைக்க வேண்டுமா என்று ஆய்வு செய்யச் சொல்லி அதிகாரிகள் தெரிவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.



டாக்டர் ந. மாசிலாமணி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு அதிகமான நிதி ஒதுக்கீடு தேவையென்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக்கவனம் செலுத்த வேண்டுமென்பதற்காகத்தான் குறிப்பிட்டேன். இந்த ஆறு பாசனம் தருகிற பகுதி திருச்சி மாவட்டத்தில் ஜெயங்கொண்டம் பகுதியாகும். ஆனால் இதற்கான உதவி நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் தஞ்சை மாவட்டம் குடந்தையில் இருக்கிறது. அதைப்போல நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்தில் இருக்கிறது. விவசாயிகள் அதிகாரிகளை அணுக வேண்டுமென்றால் மிகச் சிக்கலான காரியமாக இருக்கிறது. ஆகவே இந்தப் பொன்னாற்றுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உதவுகிற வகையில் உதவி நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் மற்றும் நிர்வாகப் பொறியாளர் அலுவலகங்களை முறையே திருச்சியிலும், அரியலூரிலும் நிறுவுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, தலைமைச் செயலகம் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் இருப்பதால் பெரம்பலூரில் பணிகள் நடைபெறவில்லையென்ற சூழ்நிலை தற்போது நாட்டில் இல்லை. அதேபோன்றுதான் இதுவும் ஆகும்.

தொப்பையாறு அணையிலிருந்து நீர் திறந்துவிடல்.

383—(* வினா எண். 8787)—திரு. செ. செம்மலை: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொப்பையாறு அணையில் கால்வாய்கள் வெட்டும் பணி முடிவடையாததால் அந்த அணையில் தண்ணீர் வீணாக தேக்கி வைக்கப்பட்டிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கால்வாய் வெட்டும் பணி முடிவடையும் வரை விவசாயிகள் பயனடைய அவ்வாற்றின் வழியாகவே தண்ணீரைத் திறந்து விடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) ஆம்.

(ஆ) கால்வாயின் குறுக்கே கட்டப்பட்டுவரும் இரு தேசிய நெடுஞ்சாலை பாலங்களின் பணிகள் முடிந்தவுடன் கால்வாயில் தண்ணீர் விடப்படும்.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, இந்தக் கால்வாய்கள் அமைக்கும் பணி எப்போது முடிவடையவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல இந்தப் பணி முடிந்த பிறகு இந்த இரண்டு கால்வாய்களின் மூலம் எத்தனை ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறவிருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, 3,025 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் அளவிற்கு கால்வாய் வெட்டப்பட்டும், மதகுகள் அமைக்கப்பட்டும் தயார் நிலையில் இருக்கிறது. தற்போது அந்தக் கால்வாய் இரண்டு தேசிய நெடுஞ்சாலைகளைக் கடந்துச் செல்லவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறது. அந்த இரண்டு தேசிய நெடுஞ்சாலைகளிலும் பாலங்கள் அமைக்கப்படுகிற பணி நடைபெற்று கொண்டிருக்கிறது. ஆகவே அதன் காரணமாக கால்வாயை பயன்படுத்த முடியாத நிலையிருக்கிறது. அந்தப் பாலம் கட்டும் பணி 20-4-1986-க்குள்ளாக முடிந்துவிடுமென்று அந்தத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் மூலம் பொதுப்பணித் துறைக்கு தகவல் தரப்பட்டிருக்கிறது. ஆகவே அதற்குப் பிறகு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, கால்வாய் வெட்டும் பணி முடிவடைகிற வரையில் பழையாற்றின் வழியாக தண்ணீர் விடுவதற்கான வாய்ப்பு இருக்கிறதா? அதை அரசு ஆராய்ந்து பார்த்ததா என்பதை அறிய விரும்புகிறேன். பழையாற்றின் வழியாக தண்ணீர் திறந்து விடுவதன் மூலமாக பக்கத்தில் இருக்கிற பாசனக் கிணறுகளில் நீர்மட்டம் உயர்கின்ற வாய்ப்பிருக்கிறது. ஆகவே அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில்கொண்டு பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய பழையாற்றில் தண்ணீர் விடுகிற யோசனையை இதுவரையில் அரசு பரிசீலிக்க வில்லை. தற்போது அணையில் 63 மில்லியன் கனஅடி தண்ணீர் உள்ளது. ஆகவே அதுபற்றி இந்தத் துறை பரிசீலிக்க வேண்டுமென்ற அறிவுரையை அரசு வழங்கும். அதுவரையில் தற்போது இருக்கிற பாலத்திற்கு மேல் பகுதியில் உள்ள, பாலத்தைக் கடக்க தேவையில்லாத பகுதியில் இருக்கிற 140 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கப்பட்டு வருகிறது என்ற தகவலைச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. தகவல் கோரல்

### (அ) மின்வெட்டு குறித்து.

திரு. எஸ். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்னை குறித்து உங்கள் மூலமாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். தமிழகத்தில் சில நாட்களுக்கு முன்னால் கல்பாக்கத்தில் இருக்கிற ஜெனரேட்டர் பழுதடைந்து விட்ட காரணத்தாலும், அதேபோல தூத்துக்குடியில் உள்ள அனல் மின்சார நிலையத்தில் ஏற்பட்டிருக்கிற பழுது காரணத்தாலும் மின்சார வெட்டு அதிகம் வருமோ என்ற அச்சம் மக்கள் மத்தியிலே இருந்துகொண்டு வருகிறது. மின்சார வெட்டு அதிகமாக இல்லாவிட்டாலும் கூட 'லோட் ஷெட்டிங்' என்ற முறையிலே சிலசில பகுதிகளில் சில நேரங்களில் முழுமையாக மின்சாரம் தடைபடுத்தப்படுமென்று செய்தி வந்தது. அதனால் சிறு தொழில்கள் நடத்துபவர்கள் மத்தியில் அச்சம் இருக்கிறதால் மேலும் மின்சார வெட்டு இல்லாமல் இந்த ஆண்டு கோடைக் காலத்தை தவிர்க்க முடியுமென்று அரசு கருதுகிறதா? தமிழ்நாட்டினுடைய மொத்த மின்சார தேவை எவ்வளவு? மின்சாரம் எவ்வளவு உற்பத்தியாகிறது என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணுமின் நிலையத்தைப் பொறுத்தவரையில் ஒரு மின்மாற்றி பழுதடைந்து விட்டதால் அதைக் கொண்டு வருகிற முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அது விரைவில் வந்து சேரும். தூத்துக்குடி அனல் மின் நிலையத்தைப் பொறுத்த வரையில் ஒரு இயந்திரம் அதிகமான 'வைப்ரேஷன்ஸ்' காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் விரைவில் சீர்திருந்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

அதோடு மட்டுமல்லாமல், நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையத்தின் முதல் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. அநேகமாக அதுவும் மின் உற்பத்தியைக் கூடுதலாகத் தருவதற்கான வாய்ப்பிருக்கிறது. இப்போது ஏற்பட்டு இருக்கக் கூடிய ஒரு நெருக்கடி தற்காலிக நெருக்கடி என்றுதான் அரசு கருதுகிறது. விரைவிலே இது தீர்க்கப்பட்டுவிடும். ஆகையினாலே மின் வெட்டை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் இராது என்று கருதுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, இப்போது மின் வெட்டைப் பற்றி நம்முடைய உறுப்பினர் சித்தன் அவர்கள் சொன்னார்கள். எங்களுடைய உரிமைகளை, சபையினுடைய உரிமைகளைப் பாதுகாப்பது பற்றி நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மின்வெட்டைப் பற்றிய அறிவிப்பு சபையில் இல்லை. அவைக்குறிப்பிலும் இல்லை. மின் வாரியத்தினுடைய

தலைவர் விஜயராகவன் அவர்கள் பத்திரிக்கையாளர்களுக்கு
செய்தி கொடுத்திருக்கிறார்கள். அவர் அமைச்சரா, அல்லது
பண்ருட்டி திரு. இராமச்சந்திரன் அவர்கள் அமைச்சரா இது
பிரச்சனைக்கு உரிய மிக முக்கியமான விவகாரம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏற்கனவே ஒரு தடவை
சொல்லி இருக்கிறேன், இந்த மாதிரி அதிகாரிகள் கொடுக்கக்
கூடாது என்று. இதற்கு மேல் என்ன வழி என்று சொல்லுங்கள்.
(குறுக்கீடு) இந்த மாதிரி எக்சிகியூட் பண்ணலாம் என்று 'பவர்'
கொடுங்கள். I will execute. (குறுக்கீடு) பல தடவை சொல்லி
விட்டேன். வேறு ஏதாவது வழி இருந்தால் சொல்லுங்கள்.
I strongly condem the attitude of the Chairman.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, கொள்கை அறிவிப்புகளை அறிவிப்பது
என்பது வேறு. அன்றாட நிர்வாகத்தில் ஏற்படுகின்ற நிலைமையை
விளக்குவது என்பது வேறு. அவர்கள் மின்வெட்டை அதிகப்
படுத்துவோம் என்றோ, அல்லது இருக்கின்ற மின்வெட்டு நீடிக்கும்
என்றோ பத்திரிகையாளர்களிடத்திலே சொல்லவில்லை.
திடீர் மின் நிறுத்தம் ஏற்பட்டு இருப்பதற்கு என்ன காரணம்
என்று கேட்ட போது அந்த விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள்.
அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவது பாலிசி
அன்னௌன்ஸ்மென்ட் என்பதுவேறு, டே-டு-டே பெர்பார்மன்சிலே
ஏற்படுகின்ற பிராப்ளம்ஸ் வேறு. பாலிசியை பற்றி ஏதாவது
அனௌன்ஸ் செய்தால், அதைச் செய்ய வேண்டாம் என்று
சொல்வதற்கு நமக்கு உரிமை இருக்கிறது.

இப்போது அண்மைக்காலமாக மாண்புமிகு உறுப்பினர்
ரகுமான்கான் அவர்களுக்கு யார் மந்திரிகள் என்று தெரியவில்லை.
ஆகையினாலே, இங்கே பேசுகிறபோது அவர் மந்திரியா இவர்
மந்திரியா என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால்
ரகுமான்கான் அவர்கள் மந்திரியாக ஆக முடியாது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத்தலைவர்
அவர்களே, ஏற்கனவே நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர்
அவர்கள் சொன்ன கருத்தையொட்டி நான் சொல்கிறேன்.
நேற்றைய முன் தினம் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின்
முதல் பக்கத்தில் ஒரு செய்தி வந்திருக்கிறது. இது தொடர்பாக
ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஏன் என்றால்
என்னுடைய தொகுதியிலிருந்து தகவல் வந்திருக்கிறது. அதி
காலையில் 5 மணிக்கு இப்போது மாணவர்கள் பரீட்சைக்குப்
படித்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த நேரத்தில் மின்சாரத்தை
அணைத்துவிடுகிறார்கள். காலையில் எழுந்து பரீட்சைக்கு படிக்
கின்ற மாணவர்களுக்கு மின்சாரம் இல்லாத காரணத்தால்
அவர்கள் பரீட்சைக்கு படிக்க முடியவில்லை என்று என்னுடைய
தொகுதியிலிருந்து பல கடிதங்கள் எனக்கு வந்திருக்கின்றன.
எனவே நான் தெரிந்து கொள்ள விரும்புவது இப்போது மின்
வெட்டு அமுலில் இருக்கிறதா, இல்லையா?



(முற்பகல் 10–10)

ஆகவே மாணவர்களுடைய நலனைக் கருதி காலையிலே ஏற்படுகின்ற மின்வெட்டை தளர்த்தி அதை சிறிது நேரம் கழித்து மாணவர்கள் பரீட்சைக்கு சென்ற பிறகாவது மின்சாரத்தை அணைக்கலாம். நீங்கள் அதை Load shedding என்கிறீர்கள். ஆனால், எங்களுக்கு தெரிந்த அளவிலே அது மின்வெட்டுத்தான். ஆகவே 5 மணிக்கு அணைக்கின்ற மின்சாரத்தை 8 மணி அளவில் அணைக்கவேண்டும். Load Shedding என்றாலும் மின்வெட்டு என்றாலும் ஒன்றுதான். ஆகவே மாணவர்களின் நலனைக்கருதி காலையிலே அணைக்கின்ற அந்த முறையை மாற்றி அமைப்பீர்களா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் பற்றாக்குறை பொறுத்து மின் வெட்டு அமல் செய்யப்படுகிறது. திடீரென்று மின் உற்பத்தி இயந்திரங்களில் கோளாறுகள் ஏற்படுகிறபோது மின் நிறுத்தம் தேவைப்படுகிறது. காலையில் ஏற்படுகின்ற மின் நிறுத்தத்தினால் மாணவர்களின் படிப்பில் பாதிப்பு ஏற்படுகிறது என்கிற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அதை எப்படி மாற்றி அமைப்பது அல்லது அதை எப்படி சமாளிப்பது என்பதுபற்றி நிச்சயமாக மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) பால் விலை உயர்வு

திரு அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, பால் விலை சென்னை நகரத்தில் திடீரென்று கடுமையாக உயர்த்தப்பட்டு லட்சக்கணக்கான மக்கள் தலைமேல் சுமத்தப்பட்டு இருக்கிறது. சட்டசபை கூடிக்கொண்டு இருக்கக்கூடிய நேரத்தில் அறிவிக்கப்படவேண்டிய அறிவிப்பாக இது இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து நல்ல பதிலைச் சொல்வார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொன்னதை போல ஒட்டுமொத்தமாக பால் விலை இன்றைக்கு உயர்த்தப்படவில்லை. குறிப்பாக பாலிதின் பாக்கெட்டுகளில் வினியோகிக்கின்ற அந்த முறையில் பாலிதின் விலை இன்றைக்கு உயர்ந்திருக்கிற காரணத்தால் அதன் மூலமாக கொடுக்கப்படுகின்ற அந்த பாலுக்கு மட்டும் நிர்வாக வசதி கருதி நிர்வாக காஸ்ட்டை சரி செய்வதற்காக சீரமைக்கப்பட்டு இருக்கிறது. விலையை உயர்த்தவில்லை.

(இ) வேதாரண்யம் கடற்கரைப் பகுதியில் பிணங்கள் ஒதுங்குவது

திரு மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உள்ள வேதாரண்யம் தொகுதியில் உள்ள கடற்கரைப் பகுதியில் பல பிணங்கள் ஒதுங்கியிருப்பதாக தகவல் வந்திருக்கிறது. இது பற்றி அரசுக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? அப்படி ஒதுங்கிய பிணங்களின் போட்டோ காப்பிகள் இருக்கின்றன. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலோ அல்லது தலைவர் அவர்களிடத்திலோ தருகிறேன் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்கு முன் என்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் எழுப்ப வேண்டும் என்று ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன். அப்படி பெற்று எழுப்பியிருந்தால் நல்லது. (குறுக்கீடு)

திரு மா. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, கடலிலே நிறைய பிணங்கள் மிதந்திருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அப்படி ஒதுங்கிய 4 பிணங்களின் போட்டோக்கள் என்னிடம் உள்ளன. அவைகள் துப்பாக்கிச் சூடு பட்டு கால் இல்லாமல் தலையில்லாமல் முண்டங்களாக இருக்கின்றன. காலையிலேதான் இதுபற்றி தகவல் எனக்கு தொகுதியிலிருந்து வந்திருக்கிறது. எனவேதான் இதை உடனடியாக சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த சபைக்கும் தெரிவிக்கிறேன்.

3 கவன ஈர்ப்புகள்

(அ) பின்னிபீச் பொறியியற் தொழிற்சாலை கதவடைப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் வி. பி. சிந்தன் மற்றும் ம. ஆபிரகாம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சென்னை மீனம்பாக்கத்திலுள்ள பின்னிபீச் பொறியியற் (இஞ்ஜினீயரிங்) தொழிற்சாலையை மூட அரசு அனுமதி மறுத்த பின்பும் அந்நிர்வாகம் பிப்ரவரி 24 ஆம் தேதி முதல் தொழிற்சாலையை கதவடைப்பு செய்துள்ளது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.



அறிக்கை.

சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள பின்னி லிமிடெட், என்ஜினீயரிங் டிவிஷன் மெட்ராஸ் ஓர்க்ஸ் என்ற நிறுவனத்தில் அரிசி ஆலை யந்திரங்கள், சிறிய சிமெண்ட் ஆலை, காஸ்ட் அயர்ன் காஸ்டிங்ஸ், போர்ஜின்ஸ், எலக்ட்ரிக் ஸ்மெல்டிங் பர்னர்ஸ் மற்றும் பேப்ரிகேஷன் ஆப் ஸ்டீல் ஸ்ட்ரக்சுரல்ஸ் ஆகியவை செய்யப்படுகின்றன. இந்நிறுவனத்தில் சுமார் 1,300 தொழிலாளர்கள் பணிபுரிகின்றார்கள். இவர்களை கீழ்க்காணும் தொழிற்சங்கங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

1. பின்னி பீச் இன்ஜினியரிங் ஓர்க்கர்ஸ் யூனியன்.

2. பின்னி பீச் எம்ப்ளாயீஸ் யூனியன்.

1982-ம் ஆண்டு ஏற்பட்ட சம்பள உயர்வு, பஞ்சப்படி மற்றும் கோரிக்கைகள் உள்ளடங்கிய ஒப்பந்தம் 1985-ம் ஆண்டு ஜனவரி மாதம் முடிவடைந்திருந்தது. இதனை தொடர்ந்து தொழிலாளர்களின் புதிய கோரிக்கைகளை முன்வைத்து 30-8-1985 அன்று தொழிற்தகராறு சட்டப்பிரிவு 2(கே)யின் கீழ் சங்கம் ஒரு தொழிற்தகராறு எழுப்பியது. சென்னை தொழிலாளர் தனித்துணை ஆணையர் இத்தொழிற்தகராறில் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தினார். தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி நின்றபோது, தொழிலாளர்கள் உற்பத்தியை குறைக்கிறார்கள் என்று நிர்வாகம் புகார் செய்தது. மேலும் ஆட்குறைப்பு செய்வதற்கும், சம்பளத்தை குறைக்கவும் நிர்வாகம் முன்மொழிந்தது. இதற்கிடையில் 1-3-1986 முதல் தங்கள் நிறுவனத்தை மூடிவிட தொழிற்தகராறு சட்டப்பிரிவு 25-O-ன்படி அனுமதிக்கோரி நிர்வாகம் அரசுக்கு மனு செய்தது. இந்த மனு மீது தொழிலாளர் துறை ஆணையரால் விசாரணை செய்யப்பட்டது. தொழிலாளர் துறை ஆணையர் தனது 27-1-1986 தேதியிட்ட உத்திரவின் மூலம் நிறுவனத்தை மூட அனுமதி மறுத்துவிட்டார். மேலும் உற்பத்தி செய்த பொருட்களை தங்கள் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றும்போது, தகுந்த போலீஸ் பாதுகாப்பிற்கும் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஆணை (direction) ஒன்றும் நிர்வாகத்தினர் பெற்றனர். இதன் மீது பின்னி பீச் இன்ஜினியரிங் ஒர்க்கர்ஸ் யூனியன் உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு மனு (Special Leave Petition) செய்தபோது தாங்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை திரும்ப பெறுவதாக நிர்வாகம் தெரிவித்தனர். எனவே உச்சநீதிமன்றம், சங்கம் தாக்சல் செய்த சிறப்பு விடுப்பு மனு (Special Leave Petition) மீது உத்திரவு ஏதும் தேவையில்லை எனத் தீர்ப்பளித்தது. உச்சநீதிமன்றத்தால் இந்த வழக்கில் இரு தரப்பினரையும் தொழிலாளர் ஆணையரின் உதவியோடு இணக்கமான ஒப்பந்தத்திற்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டது (Suggestion).

இதன்படி தொழிலாளர் ஆணையர் இத்தொழிற்தகராறில் பேச்சு வார்த்தை மேற்கொண்டார். இதற்கிடையில் நிர்வாகத்தினர் நிறுவனத்தில் 24-2-1986 முதல் கதவடைப்பு (Lock-out)

செய்து விட்டனர். தங்களது நியாயமான கோரிக்கைகள் நிறைவேறாமல் நிர்பந்தப்படுத்தவும், உரிய அதிகாரியாகிய தொழிலாளர் ஆணையர் தங்களது நிறுவனத்தை மூடிவிட அனுமதி தர மறுத்ததை எதிர்த்தும் இந்தக் கதவடைப்பு நடைபெறுவதாக தொழில் சங்கத்தினர் தெரிவித்தனர். தொழிலாளர்கள் மந்தமாக பணிபுரிவதாகவும் (Go-slow) ஒழுங்குமுறை மீறி நடக்கிறார்கள் என்றும் நிர்வாக தரப்பில் கூறப்பட்டது. ஊதிய குறைப்பு, ஆட்குறைப்பு, போன்ற நடவடிக்கைகள் தேவையென நிர்வாகத்தினர் தெரிவித்தனர். சுமார் 120 லட்சங்கள் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தொழிற்தகராறில் ஒரு சுமுகமான முடிவு ஏற்பட்டாலொழிய கதவடைப்பை நீக்குவது சாத்தியமில்லை என்று நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இத்தாவாவில் ஒரு உடன்பாடு ஏற்படாததால் தொழிலாளர் ஆணையர் இத்தாவா குறித்து ஒரு சமரச முறிவறிக்கை அனுப்பினார். அவ்வறிக்கை மீது அரசு கீழ்க்காணும் ஆணைகள் பிறப்பித்துள்ளது:—

(1) தொழிலாளர்களின் சம்பள உயர்வு, அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி உயர்வு, சோப்பு வழங்கல், விடுப்பு அதிகரிப்பு, கதவடைப்பு காலத்திற்கு ஊதியம் ஆகிய கோரிக்கைகள் சென்னை தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(2) விகிதாச்சாரப்படி கிரேடு, திறனுக்கேற்ப கிரேடு, பணிக் காலத்திற்கேற்ப கிரேடு உயர்வு, அதிகப்படி வேலைக்கு ஊதியம், அதிகப்படியாக டீ மற்றும் பால் வழங்கல், ஆயுத பூஜை செலவு முதலிய கோரிக்கைகளை அரசு தீர்ப்புக்கு விடமறுத்து ஆணையிடப்பட்டுள்ளது.

(3) தொழிற்தகராறு சட்டப்பிரிவு 10-பி-யின்கீழ் கீழ்க்காணும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன:—

(i) நிர்வாகம் கதவடைப்பை நீக்கி தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும்.

(ii) தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய அனைத்துத் தொகைகளையும் நிர்வாகம் வழங்கவேண்டும். கதவடைப்புக்கு முன்பிருந்த பணி நிபந்தனைகளை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.

(iii) தொழிலாளர்கள் இத்தாவா சம்பந்தமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபடலாகாது. வழக்கத்தில் உள்ள உற்பத்தி அளவை கொடுத்து வரவேண்டும்.





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

**திரு. வி. பி. சிந்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சரியான நடவடிக்கையை கோடிட்டு காட்டுகிற முறையில் அந்த அறிக்கை அமைந்ததில் எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால் அங்கு தொழிற்சங்க செயலாளர் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார். 65 பேர் சஸ்பென்ஸனில் உள்ளனர். 1,200 பேர் வேலை செய்யக்கூடிய இந்தத் தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கு ஒரு சங்கம்தான் இருக்கிறது. அந்தச் செயலாளரும், 65 தொழிலாளர்களும் சஸ்பெண்ட் செய்யப்பட்ட நிலையை அரசு கணக்கில் எடுத்துக்கொண்டு அவர்களுக்கு விரைவிலே வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய உத்தரவாதத்தை ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே அமைச்சரை வேண்டிக் கொள்கிறேன். அதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன உணர்வுகள் கவனத்தில் கொள்ளப்படும்.

**திரு. ம. ஆபிரகாம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் மீனம்பாக்கம் பக்கத்தில் பின்னி பீச் என்ஜினியரிங் தொழிற்சாலை இருக்கிறது. 1,300 தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைக்காக போராடி அவர்கள் உண்ணாவிரதமும் இருந்து வந்தார்கள். அதற்குப் பிறகு அந்தத் தொழிற்சாலை கதவடைப்பு செய்யப்பட்டு, தொழிலாளர்கள் இப்போது வெளியிலே நின்றுகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையைத்தான் இங்கே அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நாங்கள் முற்பட்டோம். அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையை நாங்கள் வரவேற்கிறோம். அதேநேரத்தில் அந்தத் தொழிலாளர்களுக்கு மீண்டும் அந்தத் தொழிற்சாலையைத் திறந்து வேலை கிடைக்கவும், வேலை நிறுத்த நாட்களில் அவர்களுக்கு ஊதியத்தோடு தொழிற்சாலையைத் திறக்கவும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புத் தரவும் ஏற்பாடு செய்யவேண்டும். அதேநேரத்திலே 65 தொழிலாளர்களை சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். அதை நீங்கள் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று கேட்டு விடை பெறுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பிய தகவல்கள் எல்லாம் இந்த அறிக்கையிலேயே இருக்கின்றன.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிக்கையிலே அந்தத் தகவல் உண்டு. ஆனால் அந்த சஸ்பெண்ட் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு சேர்ப்பதற்கும் அவர்களுக்கு மீண்டும் வேலை கொடுப்பதற்கும், அவர்கள் மீதுள்ள ஏராளமான போலீஸ் வழக்குகளை வாபஸ் பெறுவதற்கும் அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அரசு அதை கவனிக்கும்.

### (ஆ) பூலாவரி வாய்க்கால் திட்டம், தாரமங்கலம் தொகுதியில் சாலைகள் போடும் திட்டம் ஆகியவற்றிற்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நட்டயீடு அளித்தல்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பூலாவரி வாய்க்கால் திட்டத்திற்காகவும் மற்றும் தாரமங்கலம் தொகுதியில் கிராமப்புற சாலைத் திட்டத்தின் கீழ் சாலைகள் போடுவதற்காகவும் கையகப்படுத்தப்பட்ட விளை நிலங்களுக்கு இதுவரை நஷ்ட ஈடு வழங்கப்படாமையினால் பாதிக்கப் பட்டவர்கள் நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கவன ஈர்ப்பு பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள தாரமங் கலம் தொகுதியில் கிராமப்புற திட்டத்தின்கீழ் சாலைகள் அமைக்க நெடுஞ்சாலைத் துறையினர் பட்டாதார்கள் சம்மதத் தின்மீது ஏற்கனவே முன்நுழைவு செய்து பொதுமக்கள் நலன் கருதி சாலை அமைக்கப்பட்டு இருப்பதாக சேலம் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

இந்நில எடுப்பு சம்பந்தமாக நெடுஞ்சாலைத் துறையினர் அனுப்பிய மனுக்களில் பெரியேரிப்பட்டி கிராமத்தில் சில புல எண்கள் பற்றி வரைபடங்கள், ஓமலூர் ஊராட்சி ஒன்றிய நிலங் களை ஆர்ஜிதம் செய்ய அவ்வொன்றிய ஆணையாளரின் சம்மதக் கடிதம் முதலியன இல்லாமல் இருந்ததாலும், புல எண் 14/2-ல், பாசன கிணறு இருப்பதால் அவற்றை தவிர்த்தும், குறைபாடுகளை





நீக்கியும், திருத்திய கேட்பு மனு செய்யும்படி சேலம் மாவட்ட ஆட்சியாளர் நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளரை கேட்டுக் கொண்டுள்ளார். நெடுஞ்சாலைத் துறையினரிடமிருந்து இவ் விவரங்கள் வரப்பெற்றபின் 4(1) முன் மொழிவு அனுப்பி, நடவடிக்கை எடுக்கப்படும் என சேலம் மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலத்தை கையகப்படுத்தியதிலே காட்டிய அக்கறை அதற்காக நஷ்ட ஈடு கொடுப்பதில் காட்டவில்லை என்பதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிற அறிக்கை காட்டுகிறது. அந்தப் பணிகளுக்கு நிலங்களை கையகப்படுத்தி கிட்டத்தட்ட 4, 5 ஆண்டுகளுக்கு மேலாக ஆகிவிட்டது. ஆனால் இதுவரை நஷ்ட ஈடு கொடுக்கவில்லை. இந்த அறிக்கையில் கூட இன்னும் இது விஷயமாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், நெடுஞ்சாலை கோட்டப் பொறி யாளருக்கு கரஸ்பான்டன்ஸ் இருந்து கொண்டு வருகிறது என்று தான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர எப்போது நஷ்ட ஈடு கொடுக்கப்பட இருக்கிறது என்ற அந்த விவர குறிப்பு தெளிவாக இல்லை. எனவே இதை விரைவுபடுத்தி ஒரு காலத்தை நிர்ணயித்து நஷ்ட ஈடு வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்திர விடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுமக்களின் நன்மையைக் கருதித்தான் அந்த நிலச் சொந்தக்காரர்களிடத்தில் தனிப்பட்ட முறையில் நேரடியாகப் பேசி உடனடியாக இந்த பாதை அமைக்கப் பட்டு இருக்கிறது. ஆனால் சாதாரணமாக ஒரு நிலத்தை ஆர்ஜிதம் செய்யும்போது பல்வேறு முறைகள் கடைப்பிடிக்க வேண்டிய நிர்பந்தம் இருக்கிற காரணத்தால் தான் இந்த சங்கடங்கள் ஏற்படுகின்றன.

ஆனால் ஏற்கனவே அனுப்பிய மனுவில் சில குறைபாடுகள் இருந்த காரணத்தாலும், சில தகவல்கள் அதில் இல்லாத காரணத் தாலும் அந்தத் தகவல்களை சேர்த்து அனுப்பவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் நெடுஞ்சாலைத் துறையிடம் கேட்டு இருக்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறைக்கு நாங்கள் சொல்லி உடனடியாக அந்தத் தகவல்களைக் கொடுக்கவேண்டும் என்றும் எவ்வளவு விரைவாக, வேகமாக இதை செய்யவேண்டுமோ அவ்வளவு விரைவாக, வேகமாக செய்வதற்கு இந்தத் துறை நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில வட்ட ஆட்சியர் அலுவலகத்தில் லேண்டு அக்குசேஷன் தாசில்தார் இல்லாததும் அப்படி இருக்கிற இடங் களிலும் அவர்களுக்கு அதிகவேலை பளு காரணமாகத்தான் இப்படிப்பட்ட பணிகளில் கால தாமதம் ஏற்படுகிறது என்றும்

சொல்லுகிறார்கள். எனவே நான் அரசுக்கு ஒரு யோசனையாகச் சொல்லுவது இப்படிப்பட்ட பணிகளுக்கு என்று, நெடுஞ்சாலைத் துறைக்கு என்று ஒரு தாசில்தாரை ரெவின்யூ துறையிலிருந்து டெப்புடேஷன் பெற்று இந்தப் பணிகளை விரைந்து முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நடவடிக்கையை துரிதப் படுத்துவதற்கான ஏற்பாட்டை செய்வார்களா? அதைப்பற்றி பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் ஒரு பாதை அமைப்பதற்கு நாம் எடுக்கிறபோது அதற்கு என்று ஒரு தனியான தாசில்தார் அல்லது ஆர்.டி.ஓ. லெவலில் நாம் இப்போது போட்டு நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால் துறைக்கு என்று தனியாக ஒரு தாசில்தார் மற்றவர்களை நியமிக்கிறபோது அங்கு ஒன்றும், இங்கு ஒன்றுமாக திட்டம் எடுக்க வேண்டி வரும் போது, சேலம் மாவட்டத்தில் ஒரு இடத் திலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு இடத்திலும் எடுக்க வேண்டி இருந்தால் அதனால் அந்த அதிகாரி அங்கேயும் இங்கேயும் போய்க்கொண்டு இருந்தால் அது சரியான நடை முறையாக இருக்காது. எனவே எங்கே பெரிய வேலையாக எடுத்துக்கொள்கிறோமோ அதற்கு தனியாக ஒரு டீமை அமைத்துக் கொடுக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட காரியத்தை ஏற்கனவே இருக்கின்ற அமைப்பை வைத்துக் கொண்டே இன்னும் கொஞ்சம் விரைவுபடுத்தி செய்வதற்கான நடவடிக்கையை எதிர்காலத்தில் எடுக்கலாம்.

4. அறிக்கைகள் அளித்தல்.

மதிப்பீட்டுக் குழு.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மதிப்பீட்டுக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) பாசனத் துறை குறித்த மேற்படி குழுவின் முதலாவது (எட்டாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை.

(ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை குறித்த மேற்படி குழுவின் இரண்டாவது (எட்டாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கை.

5. வரவு செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:



"மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,26,43,000-க்கு மேற் படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

"மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,26,43,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,26,43,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் தொகுதியில் திருவிடைமருதூர், திருபுவனம், திருநாகேஸ்வரம், ஆடுதுறை ஆகிய பகுதிகளில் கடைவீதியில் உள்ள சாராயக் கடைகளை அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,26,43,000-இல் ரூ 100 குறைக்கவேண்டும்"

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி நகரில் ஜிஞ்சர்பரீஸ் எனும் போதைப் பொருள் தாராளமாக மெடிக்கல்ஸ் என பெயர் போட்டு விற்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

"மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,26,43,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

(முற்பகல் 10-20)

(ஆ) கோரிக்கை எண் 26 கைத்தறியும் நெசவுத்தொழிலும்

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 19,36,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,36,45,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் இலவசமாக வைத்திய வசதி செய்து தர வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 19,36,45,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

THIRU. M. SUNDARADOSS: To discuss about the need to promote the handloom industry in Kanyakumari District, I move

'That the allotment of Rs.19,36.45,000 under Demand No. 26, Handlooms and Textiles be reduced by Rs.100/-'

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி விற்பனையை ஊக்குவிக்க நிரந்தரமாக ரூபாய்க்கு 20 பைசா தள்ளுபடி அளிக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 19,36,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".



(இ) கோரிக்கை எண் 27—கதர்த் தொழில்.

மாண்புமிகு திருமதி. விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,30,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. ஆதி திராவிட பழங்குடியினர்கள் வசிக்கும் குடியிருப்புகளில் அவர்களுக்கு நிதி வசதி ஏற்பட கதர்த் தொழிலில் ஈடுபட்டு நூல் உற்பத்தி செய்ய வேண்டிய நடவடிக்கை எடுப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,30,71,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

திரு. டி ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராம நூற்பு நிலையத்தில் உள்ள மேற்பார்வையாளர் என்ற பணியாளரை நீக்கி அவருடைய மாதச் சம்பளத்தை நூற்கும் பெண்களுக்கு பகிர்ந்தளிப்பதின் மூலமாக அவர்களது வருமானத்தை பெருக்கும் வழிமுறை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,30,71,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர்த் துணிகளுக்கு ஆண்டு முழுவதும் ரூபாய்க்கு 25 காசு தள்ளுபடி அளிக்கவேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன்:

மானியக் கோரிக்கை எண் 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,30.71,000—ல் ரூ 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் நெசவாலை 1986-87 கொள்கையும் திட்டங்களும் என்ற குறிப்பு ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பில் பக்கம் 6-ல் பாரா 13-ல் 'கேடயங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்' என்று இருக்கிறது. அதை 'கௌரவிக்கப்படுவார்கள்' என்று வாசிக்க வேண்டும். அதைபோல் பக்கம் 11-ல் பளுதூக்கி (NOSELOADS), உயரும் போர்க் (HIGH LEVEL PORK) என்று போடப்பட்டிருக்கிறது. அது தவறாக இருக்கிறது. அது பளுதூக்கி (NOSE LOADERS), உயரும் போர்க் (HIGH LEVEL FORK) என்று போடப்பட வேண்டும்.

அதேபோல் பக்கம் 24-ல் பாரா 54-ல் கீழ்க்கண்ட ஆலைகளுக்கும் மாநில அரசு உத்தரவாத உதவி அளித்துள்ளது என்பதில் 'ஸ்ரீ மீனாக்ஷி மில்ஸ்' மதுரை' என்று இருக்கிறது. அதை எடுத்துவிட வேண்டும். ஏற்கனவே அது விலக்கப்பட்டிருக்கிறது.

இந்த மூன்று அச்சுப் பிழைகளையும் பொறுத்தருளுமாறு கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்த பின் என்னுடைய பதிலை அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவையின் முன் வைக்கப் பெற்றுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் படித்ததாகக் குறிப்பேட்டில் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர்த்துறையைச் சார்ந்த கொள்கைகளும், திட்டங்களும் என்ற தலைப்பில் குறிப்பு அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப் பட்டிருக்கிறது. அவற்றை நான் இந்த அவையில் பேசியதாகக் கொண்டு, நடவடிக்கைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியபின், நான் என்னுடைய பதிலை அளிக்கிறேன்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்திலே பலமுறை மதுவிலக்கு தளர்த்தப்பட்ட போதிலும் மீண்டும் அமுல் செய்யப் பட்டபோதிலும், அரசினுடைய பணம், அல்லது அரசினுடைய வருமானம் தான் முக்கிய நோக்கமாகச் சொல்லப்பட்டு வந்தது. இது தொடர்பாக இந்த அவையில் பேசியபோதெல்லாம் நான் ஒரு குறளை ஆரம்பித்துப் பேசி வந்தேன். இந்த மதுவிலக்குக்கும் பணத்திற்கும் உள்ள சம்பந்தம் பற்றி வள்ளுவர் ஏதாவது

( ) 162 முதல் 238 வரையுள்ள பக்கங்களில் இணைப்புகள் I,II,III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



சொல்லியிருக்கிறாரா என்று மீண்டும் மீண்டும் திருக்குறளை புரட்டிப் பார்த்தேன். அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. வள்ளுவன் சொல்லாமல் இருந்துவிட்ட ஒரு குறளாக இருக்கக் கூடாது என்பதற்காக அவர் சார்பாக ஒரு குறளைக் கூற விரும்புகிறேன். ''சர்க்காரின் வருமானம் குறைவாயின் என்கொலோ சாராய வருமானம் இங்கே காண்'' என்கின்ற ஒரு குறளைச் சொல்லி.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு அமைச்சர்களைச் சார்ந்திருக்கின்ற மானியக் கோரிக்கைகள் மீது விவாதத்தை எடுத்துக்கொள்வதால் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது இரண்டையும் சேர்த்தே பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** துணைத் தலைவர் அவர்களே, நண்பர்களுடைய வேண்டுகோளுக்காக மீண்டும் என்னுடைய குறளைச் சொல்கிறேன். ''சர்க்காரின் வருமானம் குறையும் என்கொலோ, சாராய வருமானம் இங்கே காண்'' என்கிற ஒரு மொழியாக இங்கே தெரிவிக்கிறேன். (குறுக்கீடு) இதற்கு பொருள் சொல்லவேண்டாம். மாண்புமிகு அமைச்சர் சொல்வார் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய குறள் இயற்றித் தருவதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் அது நல்ல தமிழில் இருந்தால் நல்லது. திருவள்ளுவர் 'சர்க்கார்' என்று ஆரம்பிக்க மாட்டார்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் காலத்திலே தொல்காப்பியத்திலேயே வடமொழிச் சொல் என்றும், திசைச் சொல் என்றும் இருந்துள்ளது. வள்ளுவருக்கு தெரிந்திருந்த காரணத்தால்தான் பல வடமொழிச் சொற்களை உபயோகித்து இருக்கிறார் என்பதை நான் இங்கே அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்....

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, உங்கள் வழிக்கு வள்ளுவரைத் திருப்பாதீர்கள். வள்ளுவர் வழிக்கு நீங்கள் போவது தான் நல்லது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** துணைத் தலைவர் அவர்களே, இது இருபதாம் நூற்றாண்டின் வள்ளுவர் என்று நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, நாடு ஏற்றுக்கொள்ளாது.

[1986 ஏப்ரல் 4

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : துணைத் தலைவர் அவர்களே, 1984 இல் இந்த சாராய விலக்கு அமலுக்கு, வந்தபோது எல்லாம் நம்முடைய பற்றாக்குறை பட்ஜெட்டைத் தான் அதற்குக் காரணம் காட்டிக் கொண்டிருக்கிறோம். ஆனால் கடந்த பட்ஜெட்டிலே கிட்டத்தட்ட 280 கோடி ரூபாய் வரைக்கும் துண்டு விழும் பட்ஜெட் என்றுசொல்லிவிட்டு, கடைசியிலே 7 கோடி ரூபாயாக அது குறைந்து இருப்பதற்குக் காரணம், மத்திய அரசிலிருந்து அதிகமான நிதி உதவி கிடைத்ததன் காரணமாக இன்றைக்கு இந்த பட்ஜெட்டிலே துண்டு விழுவது குறைந்திருக்கிறது.

மீண்டும் தமிழகத்தில் மதுவிலக்கு அமலுக்கு வந்தால் இன்றைக்கு அதற்கு கிட்டத்தட்ட 50 சதவீதம் மானியம் அரசுக்கு, மத்திய அரசிலிருந்து கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதனாலே, இந்த மதுவிலக்கு தமிழகத்திலே மீண்டும் கொண்டு வரப்படுவதற்கு இந்த அரசு செய்திருக்கிற முடிவை நான் மனமார வரவேற்று இங்கே பாராட்டுகிறேன்.

இந்த 'பாலிசி ஸ்டேட்மெண்டிலே' இன்றைக்கு பார்க்கிற போது, வருமானங்கள் கள்ளிலே இருந்து 27 கோடி ரூபாய், சாராயத்திலிருந்து 85 கோடி ரூபாய் ஆகவும் வருமானம் குறைந்திருக்கிறது என்று சொல்கிறீர்கள். ஒரு பக்கம் சாராயத்திலே இருந்து வருமானம் கூடிக்கொண்டு வருகிறது என்று சொல்கிறார்கள். இதிலே எது சரியான விளக்கம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்கு இங்கே வந்தாலும், இன்றைக்கு தமிழகத்திலே குறிப்பாக இளைஞர்களிடத்திலேயும், பள்ளி மாணவர்களிடத்திலேயும் கஞ்சாவும் அபினியும், மரிஜோனா போன்ற போதைப் பொருள்களும் ஏக அளவில் அதிகப்படியாக விற்கப்படுகின்றன. இன்றைக்குக் கூட பத்திரிகையிலே வந்திருக்கின்றது— கோயம்புத்தூரிலே ஐஸ்கிரீமில் போதைப் பொருளைக் கலந்து மாணவர்களுக்கு விற்று இருக்கிறார்கள் என்று சமுதாயத்தைத் திடுக்கிட வைக்கக்கூடிய, ஒரு சில சுயநலவாதிகள் செய்கின்ற அந்தப் பயங்கரமான கொடுமைகள் எல்லாம் பத்திரிகைகளிலே இன்றைக்கு பக்கம், பக்கமாக வந்து கொண்டிருக்கும் துர்பாக்கியமான சூழ்நிலையிலே தமிழகம் இருந்து கொண்டிருக்கிறது.

நாம் சாராயக்கடையையும், மதுக் கடையையும் மூடி விட்டால் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடாது. உடனடியாக அரசு விரைவாகச் செயல்பட்டு, இதுபோன்ற போதைப் பொருள்களை—இன்றைக்குச் சொல்கிறார்கள், நாகர்கோயிலில் பஸ் ஸ்டாண்டிலேயே போதைப் பொருள்களைப் பொட்டலம் போட்டு விற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று ஜூனியர் விகடன் பத்திரிகையிலே பக்கம் பக்கமாக எழுதினார்கள்.



1986 ஏப்ரல் 4] (திரு. டி. ஆர். வேங்கடரமணன்)

சென்னை நகரில் எந்த பீடா விற்பனை நிலையத்தில் போய்க் கேட்டாலும், ஜர்தா பீடாவை வாங்கிச் சுவைக்கலாம். அவ்வாறு வாங்கிச் சுவைத்ததன் காரணமாகத் தான் ஒரு ** வாழ்க்கையிலேயே ஒரு ஆட்டம் கண்ட நிலைமைகளை எல்லாம்..............

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, ஒரு ** ஒருவரைப் பற்றி தனிப்பட்ட முறையிலே குறிக்கக்கூடிய வாக்கியமாக அது இருக்கிறது. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவது நல்லது. (குறுக்கீடு)

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : துணைத் தலைவர் அவர்களே, அதற்கு நான் விளக்கம் சொல்கிறேன். அதனால் பாதிக்கப் பட்ட அவர் திரும்பவும் நலம் பெற்றார் என்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். அதனால் ஏற்படுகிற பலன்கள்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தனிப்பட்ட ஒருவருடைய பெயரைச் சொல்லியிருந்தால் நீக்கிவிடலாம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பெயர் சொல்லாவிட்டாலும், அவர் குறிப்பிடுகிற அந்த ** யார் என்பது மக்களுக்குத் தெரியும். தனிப்பட்ட அவருடைய வாழ்க்கையைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது முறை அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : துணைத் தலைவர் அவர்களே, ஆகவே, உடனடியாக அந்த போதைப் பொருள்களை ஒழிக்க தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். தூத்துக்குடி நகரத்திலே ஏற்கனவே சாராய விற்பனைகள் எல்லாம் நடந்தபோதும் கூட, அங்கே 'அரிஸ்டம்' என்றும், ஜிஞ்சர் பீர் என்றும் கள்ளச்சாராயம் தெருவிலே வெள்ளம் போல் ஓடிக்கொண்டிருக்கிற சூழ்நிலை இன்றைக்கும் நடந்துகொண்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இன்றைக்கு வருமானம் 200 கோடி ரூபாய் இதில் வருகிறது என்று சொன்னால், அந்த வருமானம் எந்த அளவுக்கு வந்தது என்று நம்முடைய 'கம்ப்ட்ரோலர்' ரிப்போர்ட்டை எடுத்துப் பார்த்தால், 1983-84-இலே 479 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, அதிலே இந்த அரசுக்கு 239 இலட்சம் ரூபாய் வருமான இழப்பு ஏற்பட்டிருக்கிறது. மொலாஸஸ் சம்பந்தமாக சர்க்கரை ஆலை

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

(முற்பகல் 10-30)

களிலே பரிசீலனை செய்து அரசினுடைய ஆடிட்டர்கள், அரசுத் தரப்பிலிருந்து சில குறைகளைக் கண்டுபிடித்து, இது தொடர்பான ஆவணங்களை நீங்கள் எங்களுக்குத் தர வேண்டும் என்று அரசுக்கு ஆணையிட்டபோது, அப்பொழுது இந்த அரசு அதில் தவறு இருந்ததால் அந்த ஆவணங்களைத் தருவதற்கு மறுத்துவிட்டது என்று, Report of the Comptroller and Auditor General of India for the year 1983-84 பக்கம் 54-இலே குறிப்பிடுவதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவது சாலத பொருத்தம் என்று நான் கருதுகிறேன். The records required to be maintained under the Molasses Control Order 1961 were examined in a few sugar factories in the State in February and March 1982. The connected records in the office of the Commissioner of Prohibition and Excise and the Molasses Controller were asked for in Audit in March 1982. But the Department refused to produce the records to Audit. என்பதுதான். எல்லாமே கொடுத்திருந்தால் என்னவாகியிருக்கும் என்று தெரியவில்லை. ஏன், எதற்காக, அரசிலேயிருந்து அரசு தணிக்கை விதிகளுக்கு உட்பட்டு தணிக்கையாளர்களுக்குத் தர வேண்டிய சில உரிமைகளைத் தருவதற்கு மறுத்தது என்றால் இது எங்கே போனது? இப்படிப்பட்ட பணம் எங்கே போனது, என்ன நடந்தது என்று அறிய விரும்புகிறேன்.

பாட்டிலில் சாராயத்தை அடைக்கின்றபொழுது அதிலே சிந்துவது, உடைவது ஆகியவற்றிற்காக ஒரு சதவீதம் என்று Blending and Bottling Unit ஏற்படுத்தியிருக்கிறார்கள். நான்கு பிளெண்டிங் அன்ட் பாட்டிலிங் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில் கிட்டத்தட்ட 98,610 லிட்டர் சாராயம் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகக் கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. இதனாலே அரசுக்கு 3,94,412 ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக ஆடிட்டர் ரிப்போர்ட்டிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். 1 பர்சென்ட் இழப்பு ஏற்படலாம் என்று இருக்க, இங்கே கிட்டத்தட்ட 10 பர்சென்ட் இழப்பு ஏற்பட்டது என்றால், மீதி 9 பர்சென்ட் எங்கே போனது, இலாபம் அடைந்தது யார், இதிலே பலன் பெற்றது யார் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சாராயத்தை விற்கும் ஆலைகளிலேயிருந்து அரசு கிட்டத்தட்ட 4 இலட்சம் ரூபாய் வரையில் திரும்பப் பெற வேண்டியதாக இருக்கிறது. எப்படி அந்தப் பணத்தைத் திரும்பப் பெறப்போகிறார்கள்? அந்தப் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. இது 1983–84 ஆம் ஆண்டு கணக்குபடி உள்ள நிலைமை. இன்னும் 1984–85, 1985–86 ஆம் ஆண்டுகளுக்கு



வர வேண்டிய பாக்கி எவ்வளவு இருக்குமென்று தெரியவில்லை. நீங்கள் சாராயக் கடைகளை மூடிவிடுகின்றபொழுது, இது போன்ற கோடிக்கணக்கான ரூபாய்கள் நிலுவையாக இருக்குமே, இந்த விற்பனை முடிந்துவிட்டால் இந்தப்பணத்தை யாரிடத்திலேயிருந்து வசூலிப்பீர்கள், எப்படி வசூலிப்பீர்கள் என்பதை உங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இதோடு டிமாண்ட் நம்பர் இரண்டை முடித்துக்கொண்டு, அடுத்தபடியாக டிமாண்ட் நம்பர் 26— கைத்தறி பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

1986–87 ஆம் ஆண்டு declared as the year of the modernisation of the handlooms. என்று சொல்லி, இன்றைக்கு ஹேண்ட்லூமிலிருந்து மாற்ற 7,500 ரூபாய் வரைக்கும் பணம் கொடுப்பதாக மத்திய அரசிலேயிருந்து அறிவித்து, மாநில அரசிலேயிருந்து நல்ல காரியங்கள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. இந்த பவர்லூம் சம்பந்தமாக ஒரு நல்ல கருத்தை நான் சொல்ல விழைகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் இதைக் குறித்துக் கொண்டு, துறை அதிகாரிகளின் மூலமாக நடவடிக்கை எடுத்தால் இந்த நாட்டிலே இந்தச் சபையின் மூலமாக ஒரு சமுதாயத்திற்கு நல்ல காரியம் செய்ததாக இருக்கும்; நானும்கூட மகிழ்ச்சி அடையக் கூடிய வாய்ப்பாகவும் அது இருக்கும்.

தமிழ்நாட்டில், 18 கூட்டுறவு மில்கள் நூலை உற்பத்தி செய்கின்றன. தமிழ்நாட்டிலே உள்ள இந்த 18 மில்களும் அரசாங்க வங்கியிலே நிதி 18 சதவீத வட்டி என்ற கணக்கிலே கடனைப் பெற்று, அவர்கள் நூலை வாங்கி வியாபாரம் செய்கிறார்கள். ஆனால் உற்பத்தியாகும் நூலின் விலையைப் பார்த்தால், 50 சதவீதம் வரையில் அந்த நூலுக்காக வாங்கிய கடனுக்கான வட்டி விகிதமாகப் போய்விடுகிறது என்று நான் அறிகிறேன். ஆகவே, இந்த நிலைமையை மாற்றுவதற்கு கடந்த ஆண்டில் 17 கோடி ரூபாய்—கிட்டத்தட்ட 40 சதவீதம் வரையில் பணத்தைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். இந்த ஆண்டில் அது 20 கோடியாக ஆகலாம், எதிர்வரும் ஆண்டுகளில் 25 கோடி ரூபாயாக ஆகலாம். ஆகவே, இது சம்பந்தமான என்னுடைய ஒரு யோசனையைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவு மில்கள் வங்கியிலிருந்து கடன்கள் வாங்கியிருக்கின்றபொழுது, அந்தப் பணத்தை அரசாங்கமே வேஸ் அன்ட் மீன்ஸ் என்ற வகையில் 20 கோடி ரூபாய் அளவிற்கு அந்தக் கூட்டுறவு ஸ்பின்னிங் மில்களுக்குக் கொடுக்க வேண்டும். அந்தப் பணத்தை அந்தக் கூட்டுறவு மில்கள் வங்கியிலிருந்து வாங்கிய கடனுக்காகத் திரும்பச் செலுத்தி விட்டு, அரசாங்கம் கொடுத்த பணத்திற்கு வட்டியில்லாமல் கொடுக்க வசதி செய்யலாம். இதன் காரணமாக நூலின் விலை குறையும். அப்படி நூலின் விலை குறைந்தால் அதன் காரணமாகத் துணியின் விலையும் குறையும். இப்படி விலை குறைவதன் மூலம் மார்க்கெட்டில், மில் துணிகளுக்கும், இந்தத் துணிகளுக்கும் உள்ள

விலை வித்தியாசம் குறைவதற்கான வாய்ப்பிருக்கிறது. எனவே, வேஸ் அண்ட் மீன்ஸ் என்ற தலைப்பில் கோவாப்பரேட்டிவ் ஸ்பின்னிங் மில்களுக்கு அரசாங்கம் பணத்தைக் கொடுத்தால் கோவாப்பரேட்டிவ் துறையின் வளர்ச்சிக்கு சிறந்த எடுத்துக் காட்டாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கோரிக்கை 27-லே ஒருசில கருத்துக்களைக் கூறி, நேரத்தின் அருமை கருதி, அமைய விரும்புகிறேன். இன்றைக்கு, காதி என்பது, நம்முடைய நாட்டினுடைய தேசத்தினுடைய விடுதலையிலேயிருந்து தொடர்புகொண்டிருக்கிற காரணத்தாலேதான் அது என்னவோ தெரியவில்லை, பழமையினுடைய ஒரு சின்னமாக ஆக்கப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு காதி எல்லாம் பழமை என்றும் காதி என்று சொல்லிவிட்டாலே முரட்டுத் துணி என்றும்தான் கருத்து இருக்கிறதே தவிர, காதியினுடைய உற்பத்தி அளவுகள், காதியிலே செய்யப்படுகின்ற பொருள்கள் தரமான நிலை, காதியிலே செய்யப்படுகின்ற பொருள்களின் உபயோகங்கள் எல்லாம் இன்றைக்கு நாட்டு மக்களுக்கு முறையாக, தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லையென்று நான் கருதுகிறேன்.

பளபளக்கின்ற விளம்பரங்களுக்கிடையே, திரைப்படங்களுக் கிடையே துண்டுப் படங்களுக்கிடையே, காதியினுடைய நல்ல பொருள்களுடைய விளம்பரங்கள் எடுபடாத காரணத்தால், பல கோடி ரூபாய் பொருள்கள் விற்கப்பட்டாலும், சமுதாயத்திலே அதற்குக் கிடைக்கவேண்டிய சரியான அந்தஸ்து கிடைக்காத காரணத்தினால், காதி உற்பத்திப் பொருள்களைப் பற்றிய சரியான புள்ளி விவரங்கள் மக்களுக்குத் தெரியவில்லை.

ஏற்கனவே, இந்த அவையில் ஒரு கேள்விக்குப் பதில்சொல்லும் போது, குறிஞ்சி சோப்பு குறைந்த விலையிலே மார்க்கட்டிலே விற்கப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். அதேபோல், கோபுரம் மார்க் சோப்பு, இத்துறையிலே செய்யப்பட்டு, குறைந்த விலையில் விற்கப்பட்டாலும், கொள்ளை நுரை என்று தனியார்கள் விளம்பரம் செய்து கொள்ளை அடிக்கின்ற நிலைமையிருக்கிறது. வருகின்ற நுரைக்கும், வெளுக்கின்ற தன்மைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் கூட, பொங்கும் நுரை என்று விளம்பரத்தைக் காட்டி, தனியார்கள் மக்களை ஏமாற்றுகின்ற காரணத்தாலே, நல்ல பொருள்களை காதித் துறை உற்பத்தி செய்தாலும் கூட, அந்தப் பொருளினுடைய சிறப்பு நல்ல முறையில் மக்களுக்கு எடுத்துக் காட்டப்படாத காரணத்தாலே, காதியினுடைய முக்கியத்துவம் மக்களுக்குத் தெரியாமல் போய் விட்டது என்று நான் அச்சப்படுகிறேன். ஆகவே, காதியில் தயாரிக்கின்ற பொருள்களைப் பற்றி மக்களுக்குத் தெரிவிப் பதற்காக, சிறப்பான முறையிலே விளம்பர யுக்திகளைக் கையாண்டு, இன்றைக்கு அதன் பொருள்கள் மக்களுக்குத் தெரியும் வகையில், துறை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், காதி என்று





சொன்னாலே அது சுரண்டலுக்கு எதிரி என்றும் நேரிடையாக, நேர்மையான கூலி மக்களுக்குத் தருகின்ற துறை என்றும் சிறந்த தரம் என்றும் காந்தி அடிகளின் மூலமாக நாம கற்றுக் கொண்டுள்ளோம். நேர்மையான கூலி என்று சொல்லும்போது, நான் ஒன்றைக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

கிராமப்புற நூற்பு மையங்கள் என்று பல இடங்களிலே இருக்கின்றன. அங்கே ஏழைப் பெண்களெல்லாம் தினசரி ரூ. 4, ரூ. 5 பெற்றுக் கொண்டு, நூற்றுக்கொண்டு இருக்கிறார்கள். இங்கே இருக்கிற சர்க்கா உடைகிற பொழுது, அவற்றைச் சரி செய்யவும் அங்கே கணக்குகளை ஒழுங்காக வைக்க வேண்டு மென்றும் சூப்பர்வைசர் ஒருவர் ரூ. 800-க்கு வேலை பார்க்கிறார். எனக்குத் தெரிந்து ஏற்கனவே அந்தத் துறை அதிகாரிகளிடத்தில் இந்தப் பிரச்னையைப் பற்றி எடுத்துச் சொல்லி அது தீர்க்கப் பட்டாலும்கூட அந்த விவரத்தை இந்த அவையில் தெரிவிப்பது சாலச்சிறந்தது என்று கருதுகிறேன். செங்கோட்டை நகரத்திலே நூற்பு நிலையத்திலே ஒரு சூப்பர்வைசர் ரூ. 800-க்கு வேலை பார்த்துக்கொண்டு இருக்கிறார். அவர் அந்த நூற்பாலைக்கு வராமல், அங்கேயிருக்கிற பெண்களே நூற்பு நூற்றுக்கொண்டு, கணக்குகளையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஏழைப் பெண்கள் 30 பேர்களுக்கு தலா ரூ. 150 கிடைக்கும்போது, இந்த சூப்பர்வைசருக்கு இந்த அரசு மாதம் ரூ 800 சம்பளம் கொடுத்துக் கொண்டிருந்தது. அவர்தான் உடைந்த அம்பர் சர்க்காக்களை ரிப்பேர் செய்ய வேண்டும். அவருக்கு ரிப்பேர் செய்யத் தெரியாது என்பதை நான் விசாரித்துத் தெரிந்து கொண்டிருக்கிறேன். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அங்கே வேலை பார்க்கிறவர் களுக்கு சம்பளம் இல்லை. சூப்பர்வைசர் என்று சொல்லி, ஒரு அட்மினிஸ்ட்ரேடிவ் போஸ்ட் கிரியேட் பண்ணி, அவருக்கு நாம் ரூ. 800 சம்பளம் கொடுக்கிறோம். தயவுசெய்து இதுபோன்ற வேறுபாடுகளைக் களைந்து உண்மையாக உழைப்பவர்களுக்கு, ஏழைப் பெண்களுக்கு, படிப்பில்லாதவர்களுக்கு வேறு தொழில் தெரியாதவர்களுக்கு, காலையிலிருந்து மாலை வரை நூற்றுக் கொண்டிருக்கிற அந்தப் பெண்களுக்கு சம்பளத்தை வழங்கும் வகையில் வழி செய்ய வேண்டும். ஏற்கனவே, சிறப்பான மாற்றுத் திட்டத்தை நான் அதிகாரிகளிடத்திலே பேசி விவாதித்திருக் கிறேன். அதை, தயவுசெய்து, கருத்திலே கொண்டு, அந்தப் பலன் ஏழைகளைச் சென்றடைவதற்காக மாற்றுத் திட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்று அடுத்த உறுப்பினர் அழைக்கப்பெற்றார்) நான் 10 நிமிடம்தான் பேசினேன், இன்னும் 5 நிமிடம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : 18 பேர்கள் பேச வேண்டும் (குறுக்கீடுகள்). இந்த அவையைப் பொறுத்தவரைக்கும் எல்லா உறுப்பினர்களும் விவரமாகப் பேசுபவர்கள்தான். ஒவ்வொரு உறுப்பினரும் படித்துவிட்டு வந்து பேசுபவர்தான். நான் எல்லா தரப்பினரையும் பார்க்க வேண்டும் (குறுக்கீடுகள்).

(முற்பகல் 10–40)

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு இரண்டு அமைச்சர்களுடைய மானியக் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. ஏறத்தாழ 18 உறுப்பினர்கள் பேசுவதற்கு பெயர் கொடுத்திருப்பதாகவும் சொல்கிறீர்கள். முக்கியமான மானியக் கோரிக்கைகளாக இருப்பதால் ஏன் மாலையிலும் வைத்துக்கொள்ளக்கூடாது? மாலையிலும் வைத்துக்கொண்டால் நிறைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதுபற்றி நான் முடிவு செய்ய முடியாது. எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து முடிவு செய்ய வேண்டும். அலுவல் ஆய்வுக் குழுவில் எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். அங்கே எடுக்கின்ற முடிவுப்படி நான் அவையை நடத்திச் செல்ல வேண்டும்.

திரு. எஸ். வேணுகோபால் : துணைத் தலைவர் அவர்களே, மக்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்காகத்தான் நாங்கள் இங்கே வருகிறோம்; அதற்கு வாய்ப்பு இல்லை என்றால் என்ன செய்வது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு குறிப்பிட்ட உறுப்பினருக்கு மட்டும்தான் அந்த கடமை என்று இல்லை; எல்லா உறுப்பினர்களுக்கும் அந்தக் கடமை இருக்கிறது. இருக்கின்ற நேரத்திற்கு ஏற்ப வாய்ப்பளிக்கப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவர் அவர்களே தயவுசெய்து இரண்டு நிமிடங்கள் அனுமதி கொடுங்கள், அதற்குள் முடுத்துவிடுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒவ்வொரு உறுப்பினருக்கும் இப்படிக் கேட்டால் குறிப்பிட்ட நேரத்திற்குள் நிகழ்ச்சிகளை முடிக்க முடியாது. எனவே நேரத்தை நீட்டிக் கொடுப்பது இதுவே இறுதியாக இருக்க வேண்டும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : துணைத் தலைவரவர்களே, எனக்குக் கொடுத்த நேரத்திற்குள் முடிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு பலவற்றை விட்டுவிட்டு, சுருக்கமாக பேசி வருகிறேன். இன்னும் இரண்டு நிமிடங்களுக்குள் முடித்து, விடுகிறேன்.

இன்றைக்கு காதித்துறை சிறப்பாகச் செயல்பட முடியாமல் இருப்பதற்குக் காரணம் அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளும் காரணமாக இருக்கின்றன. அதனால்தான் காதித்துறை முடங்கிக் கிடக்கிறது. ஜி.ஓ. எண் 923-ன் மூலமாக அரசுத் துறைகளுக்கு வாங்குகின்ற பொருள்களை காதித் துறை





யிலிருந்து வாங்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருந் தாலும் அந்த ஆணையை அரசுத் துறைகளே மதிக்காமல் இருக்கின்ற காரணத்தால் காதி பொருள்கள் விற்காமல் தேங்கிக் கிடக்கின்றன. எனவே அந்த ஆணையைச் சரியாகச் செயல்படுத்த வேண்டும்.

இன்னொரு நல்ல கருத்தையும் இங்கே தெரிவிக்க விரும்பு கிறேன். இன்றைக்கு சத்துணவுத் திட்டம் என்று சொல்லி, சிறப்பான ஒரு திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்தி வருவதால்தான் மூன்றாவது முறையாக மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கிறோம் என்று பெருமையோடு சொல்கிறீர்கள். அதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் சத்துணவு என்று சொல்லு கின்ற இந்த சத்தான உணவுக்கு நீங்கள் காதித் துறையில் தயாரிக் கின்ற கைக் குத்தல் அரிசியை வாங்கிப் பயன்படுத்தினால் இன்னும் சிறப்பாக இருக்கும். காதித் துறையில் கைக் குத்தல் அரிசியை விற்பனை செய்கிறார்கள். அதை நீங்கள் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் வாங்கி, சத்துணவுத் திட்டத்திற்கு வழங்கினால் குழந்தைகளுக்கு நல்ல சத்தாக இருக்கும்; காதித் துறையும் வளரும் என்கிற வாய்ப்பு இருப்பதால் இதை நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 'பாலிவஸ்திரா' என்று ஒரு ரகத்தைத் தயாரித்து, விற்பனைக்கு வந்திருக்கிறது. இந்த உடையிலே பல புதுமைகளைச் செய்து, தனியார் துறையுடன் போட்டிப் போடுகின்ற வகையில் அது விளங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல காதித்துறை மூலம் வழங்கப்படுகின்ற பொருள் களுக்கும் கடனும் மானியமும் வழங்க அரசு முன்வர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சனை இருக்கிறது. காதித் துறையிலிருந்து செக்குகள் வாங்க 26,000 ரூபாய் கடன் வழங்கப் படுகிறது. அதனுடைய டிசைனிலே இருக்கின்ற சில குறை பாடுகள் காரணமாக சரியாக அவை இயங்காமல் இருக்கின்றன. அதை சீர்செய்ய வேண்டும். மேலும் இப்போது 26,000 ரூபாய் கடனாக வழங்கப்படுவதை 5 ஆண்டு காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். தற்போது மின்சாரம் போன்ற வற்றிற்கு கட்டணத்தை உயர்த்தியிருப்பதால் பலரும் இந்தச் செக்குகளை இயக்குவதில் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, 5 ஆண்டு காலத்தை 10 ஆண்டு காலமாக உயர்த்தி கடனை வசூல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல விவசாயத்திற்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்படுவதைப் போல செக்குக்கும் இலவசமாகத் தாருங்கள் என்று கேட்கவில்லை; ஏற்கனவே கொடுக்கத் தொகைக்கு மின்சாரத்தைத் தாருங்கள் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. த. பழனி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்
களே, ஆயத்தீர்வை, கைத்தறி, காதி ஆகிய துறைகள் சம்பந்தப்
பட்ட மானியக் கோரிக்கைகள் மீது பேசுகின்ற வாய்ப்பினை
அளித்ததற்காக முதற்கண் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி
தெரிவித்துக் கொள்கிறேன்.

காதித்துறையிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்
தலைவர் அவர்கள் பல்வேறு நல்ல அரிய திட்டங்களைக்
கொண்டுவந்து, பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை எளியவர்களும், கை
வினைஞர்களும் வாழ்க்கையிலே முன்னுக்கு வருவதற்காக
ஆங்காங்கே இருக்கிற மூலப்பொருட்களைக் கொண்டு பல்வேறு
தொழில்களைச் செய்கின்ற வகையில் கதர் வாரியத்தின் மூலமாக
இந்த அரசு நல்ல வகையிலே தேவையான உதவிகளைச் செய்து
வருகிறது என்பதை நான் சுட்டிக்காட்டியாக வேண்டும். கிராமப்
புறங்களில் குறிப்பாக சோப்பு செய்தல், பாய்முடைதல் போன்ற
பல்வேறு திட்டங்களுக்கு உதவுவது போன்று கிராமப்புறங்களில்
இருக்கின்ற தொழிலாளர்கள் செங்கல் உற்பத்தி செய்கிறார்கள்.
தினந்தோறும் பயன்படுத்திக் கொண்டிருக்கிற அதாவது கட்டிடங்
களுக்குத் தேவையான இந்த செங்கற்களை உற்பத்தி செய்கின்ற
கிராமத் தொழிலாளர்களுக்கு உதவுகின்ற வகையில் கதர்
வாரியத்தின் மூலமாக செங்கல் சூளைகளுக்குத் தேவையான
ஒத்துழைப்பை அரசு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போன்று கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை எளியவர்
கள் அவரவர்கள் வசிக்கின்ற இடங்களில் கிடைக்கின்ற மூலப்
பொருட்களைக் கொண்டு பாய் முடைதல், கூடை முடைதல்
போன்ற தொழில்களைச் செய்கிறார்கள். அவர்கள் ஒட்டுமொத்த
மகப் பணியாற்றுகின்ற வகையில் அவர்களுக்காகக் கூட்டுறவுச்
சங்கங்களை அமைப்பதன் மூலம் அந்தச் சங்கங்களுக்கு நிதி
யாதாரங்களை உருவாக்கித் தருவதன் மூலம் அந்தப் பகுதியிலே
இருப்பவர்கள் தேவையான தொழில்களைச் செய்வதற்கு உதவி
யாக இருக்கும். அந்த வகையில் கதர் வாரியத்தின் மூலமாக
ஒரு உத்தரவாதம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

அதேபோன்று கிராமப்புறங்களில் கைக்குத்தல் அரிசி
போன்றவற்றைத் தயாரிக்கிறார்கள். அவற்றை ஏழை எளிய
வர்கள் பயன்படுத்துகிறார்கள். இப்படி கைக்குத்தல் அரிசி
தயாரிப்பவர்கள், செக்குகளை வைத்து பயன்படுத்திக் கொண்
டிருப்பவர்கள் நியாயமான வகையில் மின்சாரக் கட்டணச்
சலுகைகளை ஆண்டு முழுவதும் அனுபவித்து வந்தாலும். கடன்
தீர்ந்ததற்குப் பிறகும் அவர்கள் மின்கட்டணச் சலுகைகளை
அனுபவிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். ஆங்காங்கே



கதர் வாரியத்தின் மூலமாகக் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்
பதன் மூலம் பல நூற்றுக்கணக்கான ஏழை எளியவர்கள் பயன்
படுவதற்கான வாய்ப்பை நாம் ஏற்படுத்த முடியும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறித் துறையிலே பல்வேறு பட்ட சங்கங்களை தினந்
தோறும் ஏற்படுத்திக்கொண்டு அதிலே தங்களை ஆட்படுத்திக்
கொண்டிருக்கிற பல இலட்சக்கணக்கான கைத்தறித் தொழி
லாளர்கள் 25 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள்.
அந்தத்தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பான ஊதியம் கிடைக்கிற
வகையில் ஏற்பாடு செய்து, அவர்களுக்குத் தேவையான நூல்,
சாயம் போன்றவற்றை பெறுவதில் இருந்த பல்வேறு குறை
பாடுகளை நீக்கி, பிறகு அவர்களுக்கு தக்க பாதுகாப்புகளை
உருவாக்கித் தந்திருக்கிறது மாண்புமிகு டாக்டர் புரட்சித்
தலைவர் அவர்களின் அரசு என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்
படுகிறேன்.

மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர்
அவர்கள் கடந்த ஆண்டு ஒரு அறிவிப்பின் மூலமாக ஒன்றாவது
முதல் எட்டாவது வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களுக்குச்
சீருடை வழங்க வேண்டும் என்று ஏற்பாடு செய்தார்கள். ஏழை
எளிய கைத்தறித் தொழிலாளர்கள் உற்பத்தி செய்த ஆடைகள்
ஏறக்குறைய 12 கோடி ரூபாய் மதிப்பில் தேக்க நிலையில்
இருந்தன. அந்த ஆடைகளை அரசு பெற்று ஏழை, எளிய
மாணவர்களுக்குச் சீருடை அளிப்பதற்கான வகையில் ஏற்பாடு
செய்து அந்த மாணவர்கள் பயன் பெறுகிற வகையிலேயும்,
தேங்கிக் கிடக்கிற ஆடைகளை விற்றுத்தருகிற வகையிலேயும்
மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள்
நல்லதொரு ஏற்பாட்டைச் செய்தார்கள். அந்த வகையிலே
ஆணையைப் பிறப்பித்தார்கள். அதேபோன்று வெள்ளம், புயல்
போன்ற காலங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்காக புரட்சித்
தலைவர் அவர்கள் பல்வேறு நல்ல திட்டங்களை, தேவையான
திட்டங்களை ஏற்படுத்துகின்ற வகையில் கதர் ஆடைகளையும்,
கைத்தறி ஆடைகளையும் அவர்கள் பயன்படுத்திக் கொள்கிற
வகையிலும், ஏழை எளியவர்களுக்கு நிவாரணம் தருகின்ற வகை
யிலும் ஏற்பாடு செய்து தந்திருக்கிறார்கள்.

(முற்பகல் 10–50)

அப்படி 1983–84-லே 1154.78 இலட்சமும், 1984-85-லே
250.44 இலட்சமும், 1985-86-லே 244.97 இலட்சமும்
நிவாரணம் வழங்கியிருக்கிறார்கள். அதேபோல் ஏழை எளிய
நெசவாளர்களுக்கு வருடம் தோறும் அவர்கள் நெய்கிற
ஆடையோடு மதிப்பிட்டு 1983–84-ல் 73.39 இலட்சமும்,
1984–85-ல் 98.30 லட்சமும், 1985–86-ல் 108.98 இலட்சமும்
வழங்கியிருக்கிறார்கள்.

அதேபோல தாய்மை உள்ளத்தோடு இருக்கிற புரட்சித் தலைவர் அவர்கள், நெசவாளர்களுக்கு ஆண்டுக்காண்டு உழைத்து, அவர்கள் 58 வயதானதற்கு பிறகு, ஓய்வு ஊதியம் பெறுகின்ற வகையிலே மாதம் 10 ரூபாய் செலுத்தினால் 58 வயதிற்கு பிறகு 33,300 ரூபாய் கொடுக்கின்ற வகையிலே ஒரு திட்டத்தினை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

அதேபோல புரட்சித் தலைவர் அவர்களுடைய தாய் உள்ளம் நெசவாளர்கள் பணி செய்கிறபோது இறந்து விட்டால், அவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் வழங்குகிற திட்டத்தினை உருவாக்கித் தந்திருக்கிறது. அதேபோல நூல் விலை மிகக் கூடுதலாக உயர்ந்திருக்கிற காரணத்தால் அதைக் குறைக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு 5 நூல் ஆலைகளை இந்த மாநிலத்திலே ஏற்படுத்தி, நூலின் விலையைக் கட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறது.

அதேபோல இந்தியாவிலேயே இருக்கிற பல்வேறு மாநிலங்களிலேயும் இல்லாத அளவுக்கு மிக அதிகமான சம்பளத்தைப் பெறுகிற தொழிலாளர்கள் இங்கேதான், தமிழகத்தில்தான் இருக்கிறார்கள், கைத்தறித்துறையிலே என்பதை நான் எடுத்துச் சொல்லியாக வேண்டும்.

அதேபோல பல்வேறுபட்ட விதங்களில் விசைத்தறிகளைப் பயன்படுத்திக் கொண்டிருப்பவர்கள், அந்த விசைத்தறிகளின் மூலமாக நாளுக்குநாள் கைத்தறித்துறையை நசித்துக் கொண்டிருக்கிறார்களோ என்ற அச்ச உணர்வு, பீதி உணர்வு தமிழகத்திலே இருக்கிற கைத்தறித் தொழிலாளர்கள் மத்தியிலே. பொது மக்கள் மத்தியிலே, வளர்ந்து வருவதற்குக் காரணம், ஒரு காலத்திலே, கைத்தறியே இல்லாத நிலை ஏற்படுமோ என்ற அச்சநிலை கைத்தறியாளர்களின் மத்தியிலே வளர்ந்து வருவதற்கு காரணம், விசைத்தறிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே, தொடர்ந்து உருவாகிக் கொண்டே இருப்பதுதான். ஆகவே இதில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் உடனடியாக தலையிட்டு, கைத்தறிகளுக்கு பாதுகாப்பினை உருவாக்கித் தந்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு தமிழகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிற கைத்தறித் தொழிலாளர்களுக்கு, கைத்தறி ஒன்றையே ஆதாரமாகக் கொண்டு, அதன் மூலமாகவே வாழ்ந்து கொண்டிருக்கிற கைத்தறித் தொழிலாளர்களுக்கு, 60 நாட்களுக்கு ரிபேட் தந்து கொண்டிருந்த மத்திய அரசு, அண்மைக் காலங்களில் அதை 30 நாட்களாக குறைத்திருக்கிறார்கள். அதை உடனடியாக மாற்றி 60 நாட்களும் ரிபேட் தந்திட வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கித் தந்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அதேபோல ரிபேட்டில் 50 சதவீதம் தொகையை இதுநாள் வரை மத்திய அரசு தந்துக் கொண்டிருந்தது. இப்போது அதை 25 சதவீதமாக குறைத்து, 25 சதவீதத்தை மாநில அரசும், 25 சதவீதத்தை மத்திய அரசும் கொடுத்திட வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசு அறிவித்திருப்பதாக நான் அறிகிறேன். இதனால் நம்முடைய மாநிலத்திலே இருக்கிற 25 லட்சத்திற்கும் மேற்பட்ட கைத்தறியாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையிலே......(மணியடிக்கப் பெற்றது)

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல கருத்துக்களை மிக அழுத்தமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே வைக்கப்பட்டிருக்கிற ஒலிபெருக்கியில் சப்தம் சற்று அதிகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருப்பதால், அவர் சற்று குறைவான சப்தத்தில் பேசினால் கேட்பதற்கு நலமாக இருக்கும் .....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒலிபெருக்கியில் ஒன்றும் இல்லை. மாண்புமிகு உறுப்பினருடைய சவுண்டே அப்படித்தான். பழனி நீங்கள் தொடருங்கள்.

திரு. த. பழனி; துணைத் தலைவர் அவர்களே, மைய அரசு 60 நாட்களுக்குத் தர வேண்டிய அந்த ரிபேட் தொகையை 30 நாட்களுக்கு என்று குறைத்ததற்குக் காரணம் தமிழகத்தினுடைய நெசவாளப் பெருமக்கள் அதிகமாக ஊதியம் பெறுகிறார்கள் என்ற நோக்கத்திலே இருக்குமோ என்று ஐய உணர்வு தமிழக மக்கள் மத்தியிலே குறிப்பாக நெசவாளப் பெருமக்களுடைய மத்தியிலே இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டியாகவேண்டும். ஆகவே 60 நாட்களுக்கு ரிபேட் என்ற அதே அடிப்படையில் ரிபேட் வழங்கப்பட மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும், அந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அன்புணர்வோடு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த மன்றத்தின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்,

25 சதவீதம்தான் கொடுக்கப்படுமென்ற மத்திய அரசின் மாற்றாந்தாய் போக்கு மாற்றப்பட வேண்டும். இங்கேயிருக்கிற மாநில உரிமைகள் காப்பாற்றப்படுகிற வகையில், மா நிலத்தில் ஏழை எளியவர்களாக இருக்கிற அந்தக் கைத்தறியாளர்களுடைய வாழ்வு வளம்பெறச் செய்யவேண்டுமென்று என்னுடைய கோரிக்கையை வலியுறுத்தி, கடந்த ஆண்டிலே பெற்றதைப்போல 50 சதவீதத்தைப் பெற்றாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு நலிந்த நிலையில் இருக்கிற அந்தக் கைத்தறியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களில் கடந்த 1982-83, 1983-84, 1984-85 ஆகிய ஆண்டுகளில் கைத்தறி உற்பத்தியின் அளவு அதிகமாக இருந்தாலும் விற்பனை குறைவாகவே

இருந்திருக்கிறது. ஆயிரக்கணக்கான சங்கங்களில் கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. அந்தத் துணிகளை வாங்குவதற்கான வாய்ப்புகளை மத்திய அரசும் மாநில அரசும் ஏற்படுத்தி அதற்கான உத்தரவுகளை விரைவில் பிறப்பிக்க ண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல பட்டு நூலுக்கு சாயம் போடுவதற்கு வானவில் நிலையத்தில் மிக அதிகமாக கட்டணம் விதிக்கப்படுகிறது. இப்படி அதிகமாக இருக்கிற அந்தக் கட்டணத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறைப்பதற்கு உத்தரவிட வேண்டும். அப்படி குறைத்து அந்த ஏழை எளிய மக்களின் வாழ்வினை வளம் பெறச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல நூலுக்கு வைத்திருக்கிற 3 சதவீத வரியையும் துணிக்குப் போட்டிருக்கிற 3 சதவீத வரியையும் நீக்கவேண்டும். ஆந்திர மாநிலத்தில் இந்த நூலின் மீதான 3 சதவீத வரியையும், துணியின் மீதான 3 சதவீத வரியையும் நீக்கியிருக்கிறார்கள். தமிழகத்திலும் உடனடியாக இந்த வரிகளை நீக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் அண்டை மாநிலத்திற்குச் சென்று பயன் பெறுபவர்கள், அங்கே சென்று தறி நெய்பவர்கள், மற்றும் இந்தப் பணியில் ஈடுபடுபவர்கள் இங்கே நீடிக்க முடியுமென்பதைச் சுட்டிக்காட்டி, மாண்புமிகு அமைச்சர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளை வரவேற்று, வழங்கிய வாய்ப்பிற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மூன்று மானியக் கோரிக்கைகள் ஒன்றாக இணைத்துக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இந்த மன்றத்தில் எங்களுடைய கருத்துக்களை இந்த மூன்று கோரிக்கைகளில் சொல்வதற்கு கால அவகாசம் இடம் தராது என்றுதான் கருதுகிறேன். உரிய கால அவகாசம் கொடுத்தால் தான் எங்களுடைய கடமைகளை ஒழுங்காகச் செய்வதற்கும், மன்றம் என்ன எதிர்ப்பார்க்கிறதோ, மக்கள் என்ன எதிர்பார்க்கின்றார்களோ, அவற்றை ஒழுங்காக நிறைவேற்ற முடியுமென்ற என்னுடைய கருத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேலாவது உரிய நேரத்தை உறுப்பினர்களுக்கு வழங்கி நல்ல பல கருத்துக்களை அரசு கேட்டு, ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்துக்களை ஏற்று, நிராகரிக்கக்கூடிய கருத்துக்களை நியாயத்தின் அடிப்படையில் நிராகரித்து அரசு செவ்வனே செயல்படுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

கைத்தறி பொறுத்தவரையில் நாம் ஆண்டு தோறும் பேசிக் கொண்டிருக்கிறோம். இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கத்தின்படி 5.56 லட்சம் தறிகள் இருக்கின்றன. இதிலே 3.82 லட்சம் தறிகள் 1,600 சங்கங்களின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இந்தச் சங்கங்கள் ஏறத்தாழ 170 கோடி ரூபாயிக்கான கைத்தறிப் பொருட்களை உற்பத்தி செய்கின்றன.



5.6 லட்சம் கைத்தறிகளை நிர்வகிப்பதன் மூலமாக 170 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறிப் பொருட்களை ஒழுங்காக விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனைச் செய்வதால் ஏறத்தாழ 30–லிருந்து 35 லட்சம் கைத்தறி நெசவாளர்களை நாம் காப்பாற்றுகிறோம். அதற்காகத்தான் இந்த விவாதம் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதிலே முக்கியமான அம்சம் என்னவென்றால் இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்ததைப்போல கொள்கைக் குறிப்பில் 14-வது பக்கத்தில் தள்ளுபடி என்ற அம்சம் இருக்கிறது.

(முற்பகல் 11–00)

தள்ளுபடிதான் இந்தக் கைத்தறிக்கு பாதுகாப்பு கொடுத்துக் கொண்டு இருக்கிற ஒரு அம்சமாகும். கைத்தறி நெசவுத் தொழிலைப் பொறுத்தமட்டில் அருங்கலைப் பொருட்களைப் போல காப்பாற்றினால் இது காலத்தின் சுழற்சியால், கால வெள்ளத்தால், நவீன கண்டுபிடிப்புகளால், ஆலைகளுடைய ஆக்கிரமிப்பால், தொழில் புரட்சியினுடைய தாக்குதலால், இது தாக்குப் பிடிக்க முடியும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், எனவே அந்த வகையிலே இதைக் காப்பாற்று வதற்கு, தள்ளுபடி என்பது மிக முக்கியமானதாகும். ஆனால் இன்றைக்கு மத்திய அரசு கொடுத்திருக்கிற அபாயக் குரல் என்பது, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பின்னாலே, இந்த தள்ளுபடி என்பது இருக்காது என்று தெரிவித்திருக் கிறார்கள் அப்படி இல்லாமல் போகுமேயானால் நம்முடைய கைத்தறி நெசவுத் தொழில் என்பது அழிந்தே போகும்.

அத்தோடு 1984–85-ஆம் ஆண்டுக்கு 60 தள்ளுபடி நாட் களை மத்திய அரசு அனுமதித்து இருந்தது, அதற்குப் பின் னால், 1985–86-க்கு அது 45 நாட்களாக குறைச்சுப்பட்டது. இப்போது 1986–87-க்கு அது 30 நாட்களாக குறைக்கப்பட்டு இருக்கிறது என்றால், எந்த அளவிற்கு மத்திய அரசு இந்தக் கைத்தறி மீது அளவு இல்லாத அக்கறை கொண்டு இருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே உள்ளவர்கள் உணர்ந்தாக வேண்டும். எனவே இந்த தள்ளுபடியைப் பொறுத்தவரையில் மாநில அரசு மத்திய அரசைக் கட்டாயப்படுத்தி, எப்படி யாவது 60 தள்ளுபடி நாட்களை நாம் பெற்றாக வேண்டும் என்கிற முயற்சியிலே ஈடுபட்டாக வேண்டும்,

அத்தோடு மத்திய அரசு சமீபத்தில் டெக்ஸ்டைல் பாலிசி என்கிற தேசிய ஜவுளிக் கொள்கையை அறிவித்திருக்கிறது. இந்தக் கொள்கையால் கைத்தறி நெசவுக்கு என்ன லாபம் என்று ஆய்ந்து நீங்கள் பார்த்தால், அங்கே இந்தக் கைத்தறியை அழிக்கக்கூடிய அம்சங்கள்தான் அதிகமாக இருக்கின்றன. இந்த கைத்தறி நெசவுத் தொழிலுக்கு எதிரிகளாக கருதப்படுபவை கள், ஆலைகளின் வளர்ச்சி, விசைத்தறிகளுடைய வளர்ச்சி யாகும். இந்த புதிய கொள்கையின்படி, ஏறக்குறைய ஒரு

லட்சம் விசைத் தறிகள் அனுமதி பெற்றிருக்கிறது என்றால், லட்சத்திற்கு மேலாக அனுமதி பெறாமல் உள்ள விசைத்தறிகள் நாட்டிலே இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. இந்தப் புதிய ஜவுளிக் கொள்கை என்ன சொல்கிறது என்றால் அனுமதி பெறாத ஒரு லட்சம் விசைத் தறிகளும் அனுமதி பெற்ற தாக கருதுவதோடு மேலும் விசைத் தறிகளை ஆரம்பிக்க வேண்டும் என்றால், எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல் ஆரம்பிக்கலாம் என்ற புதிய துணிக் கொள்கை சொல்கிறது. எனவே கைத்தறி நெசவுத் தொழிலுக்கு எதிரிகளாக உள்ள இந்த விசைத்தறி ஆலைகளுக்கு இந்த ஜவுளிக் கொள்கை பயன் படுகிறதே அல்லாமல், கைத்தறியை வளர்ப்பதற்கு, பாதுகாப் பதற்கு அது பயன்படவில்லை.

நான் இன்னொன்றையும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன் இந்த டெக்ஸ்டைல் பாலிசி என்கிற இந்த துணிக் கொள்கை கம்போசிட் (Composit) மில் என்று சொல்லப்படுகிற, நூற்பு, நெசவு, ஆகியவைகளை உள்ளடக்கிய ஆலைகளுக்குத்தான் அதிக மாக பயன்படுமே அல்லாமல் நூற்பை மட்டும் செய்து கொண்டு இருக்கிற ஆலைகளுக்கு அதிகமாகப் பயன்படவில்லை. அந்த வகையில், நாம் ஒரு கணம் ஆழ்ந்து பார்ப்போமானால், நூற்பாலைகள் இங்கே அதிகமாக இல்லாமல், அதாவது நூற் பையும், நெய்தலையும் ஒன்றாக உள்ளடக்கிய காம்போசிட் மில் என்கிற அந்த ஆலைகள் இங்கே அதிகமாக இல்லை. ஆனால் இந்த ஆலைகள் எங்கே இருக்கிறது என்றால், இந்தி யாவிலே குஜராத் மாநிலத்திலேயும் மகாராஷ்டிரா மாநிலத்தி லேயும் தான் கம்போசிட் மில் என்று சொல்லப்படுகிற இந்த ஆலைகள் அதிகமாக இருக்கின்றன. எனவே தேசிய அளவிலே ஒரு கொள்கையை மத்திய அரசு அறிவிக்கின்ற நேரத்தில், கன்னியாகுமரியிலிருந்து, காஷ்மீரத்தின் முகடு முடிய நீண்டு பரந்து கிடக்கிற பல்வேறு மக்களுக்கும் நியாயம் வழங்குகின்ற ஒரு கொள்கையாக அறிவிக்கவேண்டும். ஆனால் அப்படி மத்திய அரசு அறிவித்திருக்கிறதா என்றால், நிச்சயமாக இல்லை. எனவே தான் தேசிய அளவிலே அறிவிக்கப்பட்ட டெக்ஸ்டைல் பாலிசி என்கிற துணிக் கொள்கையானாலும், அதுபோன்று தேசிய அளவிலே அறிவிக்கப்பட்ட நேசனல் எஜுகேசனல் பாலிசி யானாலும், அதுபோன்ற தேசிய அளவிலே அறிவிக்கப்பட்ட பிஸ்கல் பாலிசி (fiscal policy) என்ற வரி விதிப்புக் கொள்கை யானாலும் தமிழ் நாட்டை, அரசியல் ரீதியாக, பொருளாதார ரீதியாக கலாச்சார ரீதியாக ஆக்கிரமிப்பு செய்வதற்காக போடப்பட்ட பாலங்களாகும். மத்திய அரசால் உருவாக்கப்பட்ட பாலங்களைப்போல் பயன்படுகின்றன.

அதேபோல் இன்றைக்கு இந்த கூட்டுறவு நெசவாளர்களைப் பொறுத்தவரையில் பணிப் பாதுகாப்பு என்பது மிக முக்கியமான ஒன்றாகும். அந்தப் பணிப் பாதுகாப்பிற்காக 1981-ஆம் ஆண்டு ஒரு சட்டத்தை உருவாக்கினார்கள். அந்தச் சட்டம் 1982-ஆம்



ஆண்டு அமலுக்கு வரும் என்று தெரிவித்தார்கள். இது நீதி மன்றத்திற்குச் சென்ற பின்னாலே 1984 ஆம் ஆண்டு அது அமுலுக்கு வர இருக்கிறது என்று சொல்கிறார்களே அல்லாமல் இன்னும் இதுவரையிலும், இந்தச் சட்டம் அமுலுக்கு வந்ததாகத் தெரியவில்லை. அதற்குப் பின்னால், குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்யவேண்டும் என்ற அடிப்படையில் 1983 ஆம் ஆண்டு அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. இதை எதிர்த்து சிலர் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். சென்னை உயர் நீதி மன்றத்தில் இந்த வழக்கு இப்போது என்ன நிலையில் இருக் கிறது. இதை அரசு துரிதப்படுத்தி, முடித்து நெசவாளர் களுக்கு குறைந்தபட்சக் கூலியை நிர்ணயித்துக் கொடுக்க வேண்டும் என்ற அக்கறையை இந்த அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு இந்த கைத்தறி, கைநெசவைப் பொறுத்தமட்டில் மார்க்கெட்டிங் விநியோகம் மிக முக்கியமான ஒன்றாகும். புதிய புதிதாக ரகங்களைக் கண்டுபிடிப்பதற்கு மத்திய அரசு அமைத்திருப்பதைப் போல 'Weavers Service centres' என் பதைப்போல புதிய ரகங்களை உருவாக்கி வெளிநாட்டவர்கள் வாங்குகிற அளவில் புதிய ரகங்களை விநியோகம் செய்வது என் பது இந்தக் கைத்தறி விற்பனையை அதிகப்படுத்துவதற்குரிய ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும் அதேபோன்று சென்ற ஆண்டு கூட தெரிவித்தேன், குஜராத்திலுள்ளதைப்போல கைத்தறி களுக்கு என்று ஒரு பெரிய நிறுவனத்தை உருவாக்கி வெளி நாட்டவர்களையெல்லாம் அழைத்து கைத்தறி விற்பனையை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

அதே போன்று பல்வேறு பிரச்சனைகள். ஆண்டுதோறும் துணி தேக்கம் என்பது நிரந்தரமாக இருக்கிறது. இந்த ஆண்டுகூட குடியாத்தத்தில் 18 சங்கங்கள் சொல்ல முடியாத அளவிற்கு துயரப்பட்டு லட்சக்கணக்கான ரூபாய் கோ-ஆப்டெக்ஸிலிருந்து வரவேண்டி இருக்கின்ற காரணத்தினாலே அவர்களெல்லாம் ஏறத்தாழ 12 ஆயிரம் பேர் வேலையிழந்து அநாதைகளாக குடி யாத்தம் பகுதியில் இருந்து வெளியேறக்கூடிய சூழ்நிலை இருக் கிறது. அதைக் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அமைச்சர் என்ன செய்ய இருக்கிறார் என்றுதான் கேள்வி. ஆண்டுதோறும் கைத்தறி பிரச்சனைபற்றி பேசுகிறோம். தேக்கத்தைப்பற்றி பேசுகிறோம். அவர்களுடைய பணி ஒழுங்குபடுத்தப்பட வேண்டுமென்பதைப்பற்றி பேசுகிறோம். ஆண்டுதோறும் பேசிக் கொண்டிருக்கிறோமேயல்லாமல், என்ன நடைபெறுகிறது என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். இன்னொன்றை யும் தெரிவித்துக்கொள்ள வேண்டியது என்னுடைய கடமை யாகும். ரிபேட் என்கின்ற இந்த தள்ளுபடிக்கு கடந்த ஆண்டு உதாரணமாக ஒரு 19 கோடி ரூபாய் தேவைப்படுகிறதென்றால்

இந்த ஆண்டு நிதிநிலை ஒதுக்கீட்டில் 19 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்படவேண்டும். ஆனால் ஆண்டுதோறும் தமிழக அரசு என்ன செய்கிறது என்றால் கடந்த ஆண்டு 19 கோடி ரூபாய் தேவைப்படுகிறது என்றால், இந்த ஆண்டு 19 கோடி ரூபாய் ஒதுக்காமல் 10 கோடி ஒதுக்குகிறது. அதனாலே சாதாரண நெசவாளர்களுக்குச் செல்ல வேண்டிய பணம் என்பது நிலுவையிலேயே இருக்கிறது என்பதல்லாமல் ஆண்டுதோறும் ஒட்டுமொத்தமாக சென்றடையவேண்டிய அந்த முழுத் தொகையும் சென்றடைவதில்லை. இன்னொன்றும் மிக முக்கியமானது என்று கருதுகிறேன். தொடக்க நிலையிலே உள்ள சங்கங்களுக்கெல்லாம் தேர்ந்தெடுக்கப்படாத அமைப்புகள் இருக்கின்ற காரணத்தாலே அரசியல் செல்வாக்கு பெற்றவர்கள் நிர்வாகிகளாக வருகிறார்கள். அப்படி நிர்வாகிகளாக மாறுகின்ற காரணத்தாலே தங்களுடைய அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, முறையாக அந்தச் சங்கத்தை நடத்தாமல், நூலை விலைக்கு வாங்கி விற்றுவிடுவது துணி தேவையென்றால் கோ-ஆப்டெக்ஸ்-ல் மீண்டும் வாங்கிக்கொண்டு வந்து விற்பனைக்காக அந்தத் துணியைச் சங்கத்திலே வைப்பது, இப்படிப்பட்ட எண்ணற்ற குறைபாடுகள். போகஸ், தவறாக உறுப்பினர்களைச் சேர்ப்ப ; உறவினர்களை உறுப்பினர்களாகச் சேர்ப்பது; இப்படிப்பட்ட முறைகேடுகளெல்லாம் சங்கத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அரசும் ஆழ்ந்து கவனித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே ஆயத் தீர்வை என்கின்ற மானியத்திலே நான் சில ல கருத்துக்க ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் ஆயத்தீர்வை கொள்கைக் குறிப்பில் முதன்முதலாக தெரிவித்திருக்கிறார்கள். இந்த ஆயத் தீர்வை குறிப்பைப் பொறுத்தமட்டில் 1937 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திலே மாற்றங்களை உருவாக்குவதன் மூலமாக இந்த மதுவிலக்குக் கொள்கையை நேர் செய்கிறார்கள், சரி செய்து கொள்கிறார்கள். அந்த வகையில் இந்த மது விலக்கு சட்டத்தில் மாற்றத்தைச் செய்து இந்தச் சட்டத்தின் மூலமாக சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு குடிக்கலாம் என்று அந்தக் கொள்கைக் குறிப்பிலே தெரிவித்திருக்கிறார்கள். என்ன அந்த நிபந்தனை? அந்த நிபந்தனை, 1983ஆம் ஆண்டு பர்சனல் பர்மிட் (Personal permit) என்கின்ற அடிப்படையில் ஒரு நிபந்தனையை வைத்திருக்கிறார்கள். அந்த நிபந்தனையின் அடிப்படையில் 25 வயதை எட்டியவர்கள் உரிய உரிமத்தைப் பெற்று குடிக்கலாம் என்று அனுமதி வழங்கி இருக்கிறார்கள். அப்படி 25 வயது எட்டியவர்கள் குடிக்கலாம் என்கிற அனுமதி பெற்ற பின்னாலே 2 லிட்டர் கள் அல்லது 750 மில்லி உள்ள சாராய பாட்டில் ஒன்று. இரண்டு லிட்டர் கள் வைத்துக்கொள்ளலாம் அல்லது ஒரு சாராய பாட்டிலை வைத்துக் கொள்ளலாமென்ற பர்சனல் பெர்மிட் முறை உரிமம் வழங்கு



கின்ற முறையில் குடிக்கலாம் என்ற அளவிற்கு மதுவிலக்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்தின் வாயிலாக இந்த அரசை கேட்க விரும்புகிறேன், கோடிக்கணக்கான பாட்டில்கள் இன்றையதினம் விற்பனை ஆகிக்கொண்டிருக்கின்றன. சாராய பாட்டில்கள் கோடிக்கணக்கான அளவிலே விற்பனை ஆகிறது. ஆண்டுதோறும் பல கோடிக்கணக்கான லிட்டர்கள் விற்பனை ஆகிறது. எவ்வளவு உரிமங்கள் நீங்கள் வழங்கி இருக்கிறீர்கள்? குடிப்பவர்கள் எல்லாம் இந்த பர்சனல் பர்மிட் என்கிற அந்த தனிநபர் உரிமங்களைப் பெற்றுத்தான் குடிக்கிறார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆனால் நடைமுறையிலே என்ன செய்கிறார்கள். 500 பெர்மிட் அல்லது 100 பெர்மிட் என்று தங்களுடைய சக்திக்கு ஏற்ப உரிமங்களை வைத்துக்கொண்டு யார் குடித்தாலும், அந்த உரிமக்காரர்கள் தான் குடித்தார்கள் என்கிற பொய் கணக்கை எழுதுவதற்கு இந்த அரசே வழிவகுக்கலாமா என்பதுதான் இந்த மன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக்கொள்கின்ற கேள்வியாகும்.

(DAM/2.1)

(முற்பகல் 11-10.)

இன்று இந்த மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில் இரண்டு நோக்கங்களை அரசு தெரிவித்து இருக்கிறது. முதல் நோக்கம் என்ன என்றால் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், கள்ளச் சாராயம் விற்பனை செய்பவர்கள் பிடியிலிருந்து குடிப்பழக்கம் உள்ள மக்களைக் காப்பாற்றுவது என்பது முதல் நோக்கம். நான் தெரிவிக்க விரும்புகிறேன், கள்ளச் சாராயம் என்பதிலும், நல்ல சாராயம் என்பதிலும் வார்த்தை வேறுபாடு தான் இருக்கிறதே தவிர சாராயம் என்பது ஒன்று தான். அதனுடைய பயன் ஒன்று தான். கள்ளச் சாராயம் என்பதில் உள்ள கள்ள என்ற வார்த்தையை எடுத்துவிட்டால் அது கொடுக்கக்கூடிய பலனும் நல்லச் சாராயம் கொடுக்கக்கூடிய பலனும் இரண்டும் ஒன்று தான். ஒரு காலக் கட்டத்தில் இந்த சமூக விரோதிகளான கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், கள்ளச் சாராயம் விற்பவர்கள் கையில் மக்கள் சிக்கித் தவித்தார்கள். இன்னொரு காலக் கட்டத்தில் அரசின் கொள்கையால் இந்த அரசாங்கத்திடம் குடி பழக்கத்திற்கு ஆளாகி மக்கள் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தான் அந்த நோக்கம் தெரிவிக்கிறதே தவிர வேறு அல்ல.

இன்னொரு நோக்கத்தைச் சொன்னார்கள். என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் சமூக விரோதிகளிடம் செல்லுகின்ற பணத்தைத் தடுத்து நிறுத்தி சமூக நலப் பணிகளுக்கு செலவிட்டிருக்கிறோம் என்று தெரிவித்து இருக்கிறார்கள். நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், இன்றைக்கு 9 கலவை ஆலைகள் தமிழ்நாட்டில் உங்களால் உரிமம் பெற்று நடத்தப்பட்டு வருகின்றன. எங்கள் அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மேலவையில் தெரிவித்தபடி ஏறத்தாழ ஆண்டுதோறும் 30 கோடி ரூபாயிலிருந்து 40 கோடி ரூபாய் வரை அந்த தனி

நபர்களுக்குச் செல்லுகிறது. ஆனால் உங்கள் நோக்கம் என்ன என்றால் இடையில் இருப்பவர்கள் சமூக விரோதிகளுக்குச் செல்லு கின்ற பணத்தைத் தடுத்து நிறுத்தி மக்களுக்கு நல்வாழ்வு பணி களுக்கு செலவிட இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த 9 கலவை ஆலைக்கு செல்லுகின்ற 30 கோடி ரூபாயி லிருந்து 40 கோடி ரூபாய் என்ன இலக்கணத்தின் அடிப்படையில் அந்தத் தனி நபர்களுக்குச் செல்லுகிறது என்று நாங்கள் கேட்க மாட்டோமா என்பது தான் என்னுடைய கேள்வி.

அடுத்து நீங்கள் 1985 ஆம் ஆண்டு கொண்டு வந்த அந்த திருத்தச் சட்ட சரத்தின்படி முகவர்களை சாராயக் கடைகளில் நியமித்து இருக்கிறீர்கள். இந்த முகவர்கள் யார்? இந்த முகவர்கள் எல்லாம் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கும் (டாஸ்மாக்) (TASMAC) மக்களுக்கும் இடையில் இருக்கக்கூடிய இடைத்தரகர்கள் தான். இந்த இடைத் தரகர்கள் எவ்வளவு கோடி ரூபாயை ஆண்டு தோறும் அள்ளிச் செல்லுகிறார்கள். இந்தப் பணத்தை அரசு எப்படி தடுக்க இருக்கிறது? எப்படி மக்கள் நல்வாழ்வுப் பணி களுக்கு இதை செலவிட இருக்கிறது என்று நான் கேட்க விரும்பு கிறேன். எனவே நீங்கள் புனிதமான நோக்கங்களுக்காக இந்த மது விலக்கு கொள்கையைத் தளர்த்தி இருக்கிறோம் என்று சொல்லுவது beating around the bush சுற்றி வளைத்து என்று தலையைச் சுற்றிக் கொண்டு வருகிறீர்கள் என்பதை நான் உங்களுக்கு இந்தமன்றத்தின் வாயிலாக பட்டவர்த்தனமாக தெரிவிக்க விரும்புகிறேன். மது விலக்குக் கொள்கையை தளர்த்தியதற்கு புனிதமான நோக்கம் இருக்கவே முடியாது. புனிதமான நோக்கமாக நிச்சயமாக இருக்க முடியாது. ஆனால் என்ன நோக்கம் அரசின் நோக்கமாக இருக்கவேண்டும் என்றால் பணம் பற்றாக்குறை. நிதிநிலை அறிக்கையில் குறைபாடு ஏற்படு கிறது. அதை நிவர்த்தி செய்வதற்காக நாங்கள் மது விலக்குக் கொள்கையைத் தளர்த்துகிறோம் என்று சொல்லுவதில் என்ன தவறு இருக்கிறது, ஏன் சொல்ல தயங்குகிறீர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் அன்றையதினம் மக்களுக்குத் தெளிவாகச் சொல்லியது என்ன என்றால் பணம் பற்றாக் குறையாக இருப்பதால் மது விலக்குக் கொள்கையைத் தளர்த்து கிறோம் என்று அன்றையதினம் அரசு சொல்லியது. ஆனால் இந்த அரசு ஏதோ ஒரு புனித நோக்கத்தை, புனிதமான நோக்கத்தை பின்னணியாக வைத்துதான் மது விலக்குக் கொள்கையை தளர்த்துகிறோம் என்ற அடிப்படையில் ஏதோ தேவையில்லாத கருத்துக்களை இன்றைக்குச் சொல்லியிருக் கிறார்கள். இந்த ஆட்சியினுடைய கொள்கையைப் பற்றி நான் விமர்சிக்கிறபோது குழப்பங்களே இந்த ஆட்சியினுடைய கொள்கையாக இருந்து கொண்டு இருக்கிறது. குதர்க்கங்களே இந்த ஆட்சியின்....



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் குறிப்பிடும்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தின் போது மது விலக்கைத் தளர்த்தியதற்கு நிதி பற்றாக்குறை காரணம் என்று சொல்லப் பட்டது என்று அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். மறுபடியும் மது விலக்கைக் கொண்டு வந்ததற்கு என்ன காரணம்?

திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆரம்பத்திலேயே மது விலக்கை ஒத்தி வைக்கிறேன் என்று தான் சொன்னார்கள். ஆனால் அதற்குப் பின்னால் சமுதாயக் கேடுகளை உணர்ந்து பின்னால் ஒத்தி வைப்பது கூட தவறு என்று கருதி, அதனால் நமக்கு 'எக்சக்கர்' க்கு பண இழப்பு இருந்தாலும்கூட அதை ஏற்றுக்கொண்டு மக்களுக்கு செய்கின்ற கெடுதலை தடுத்து ஆக வேண்டும் என்ற அடிப்படையில் ஒத்தி வைத்ததை ரத்து செய்தார்கள் என்கின்ற விளக்கத்தை இந்த மன்றத்திற்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, 1985 ஆம் ஆண்டு நம்முடைய இந்தச் சட்டத்திலே ஒரு மாறுதலைக் கொண்டு வந்தார்கள். என்ன மாறுதல்? ஏற்கனவே 1983 ஆம் ஆண்டில் மது வியாபாரத்தை, தமிழ்நாடு வாணிபக் கழகம், 'டாஸ்மாக்' ஏற்றுக்கொண்டது. அதற்குப் பிறகு 1985 ஆம் ஆண்டில் சாராயத்தில் சில்லறை வியாபாரத்தை நாங்களே ஏற்று நடத்துகிறோம் என்ற அடிப்படையில் சட்டம் மாற்றி அமைக்கப்பட்டது. அப்படி மாற்றப்படுகின்ற நேரத்தில்; நாங்கள் கேட்டபோது என்ன விளக்கம் சொல்லப்பட்டது இந்த மன்றத்தில்? டாஸ்மாக் அதனுடைய சொந்த ஆட்கள் மூலமாக; இந்தச் சில்லறை வியாபாரம் நடத்தப்படும் அல்லது முகவர்கள், ஏஜெண்ட்கள் மூலமாக இந்தச் சில்லறை வியாபாரம் நடத்தப் படும் என்று மன்றத்தில் சென்ற ஆண்டு சொல்லப்பட்டது. நாங்கள் அதற்கு முகவர்கள் என்பவர்கள் யார்? அவர்கள் எப்படி நியமிக்கப்படுவார்கள், அதற்கெல்லாம் என்ன நார்ம்ஸ் (Norms) கடைப்பிடிக்கப்படுகிறது என்று கேட்டு எங்கள் அச்சத்தை தெரிவித்தோம். * *

மாண்புமுகு டாக்டர் கா. காளிமுத்து: * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஸ்வீப்பிங்காக குறிப் பிட்டிருப்பது நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: துணைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத்திலும், டில்லியில் உச்ச நீதிமன்றத்திலும் இந்த உரிமங்கள் வழங்கப்படுவதில் என்னென்ன நார்ம்ஸ் கடைப்பிடிக்கப்படுகிறது என்றும், அது சரிதானா என்றும் சொல்லப்பட்டு, அது விவாதத்திலே இருக்கிறது. இரண்டு கோர்ட்டுகளிலும் வழக்கு இருக்கிறது. அதைப்பற்றி பேசுவது நியாயம் தானா?

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் ஏற்கனவே நீக்கி விடச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) It is sub-judice. The allegation is sweeping in nature.

திரு. அ. ரஹ்மான்கான்: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் நீதிமன்றத்தில் இது சம்பந்தமாக வழக்கு இருக்கிறது என்று சொன்னார். (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேஸ் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார். அமைச்சர் சொல்வதைத் தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

THE HON. THIRU V. V. SWAMINATHAN: The subject matter is directly an issue for decision before two Courts—one before the Madras High Court and the other before the Supreme Court.

திரு. பொன். முத்துராமலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே அமைச்சரவர்கள் இது சப்ஜுடிஸ் என்று சொன்னார்கள். நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருக்கும்போது மன்றத்திலே அது பற்றி விமர்சிக்கக் கூடாது என்பதுதான் சப்ஜுடிஸ். ஆனால் மன்றத்திலே அரசு என்ன நார்ம்ஸ் கடைப்பிடிக்கிறது என்று கேட்பது சப்ஜுடிஸ் ஆகாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பிரச்சினைக்குள் போக வேண்டியதில்லை. குற்றச்சாட்டு ஒட்டு மொத்தமானது, அது நீக்கப்பட்டுவிட்டது.

(குறிப்பேடு 17-26)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, பரவலாகப் பேசித் தெரிந்ததைப் பரப்புவதை எல்லாம் நாம் அவையிலே பேசமுடியாது. ** ஆதாரம் இல்லாமல் பேசுவது சரியில்லை.

திரு. பொன். முத்துராமலிங்கம்: ** * *

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: ** *

திரு. பொன். முத்துராமலிங்கம்: ஆதாரம் இருக்கிறது என்று ** **

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, உண்மைக்கு மாறான பல செய்திகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள் அவை முழுமையான ஆதாரத்தோடு சொல்லப்படவேண்டிய கருத்துக்களே தவிர, ஒட்டுமொத்தமாக குற்றச்சாட்டு சொல்லக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: * * எனவே, அந்தப் பகுதிகளை நீக்க உத்தரவிடுகிறேன். டைம் ஆகிவிட்டது. சீக்கிரம் பேசி முடியுங்கள்,

திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எனவே அந்த அடிப்படையிலே உரிமங்கள் வழங்கப் பட்ட காரணத்தினாலே, நடந்து விட்ட நிகழ்ச்சிகளை எல்லாம் நான் அதிகமாக விவரிக்க விரும்பவில்லை. கடைகள் எண்ணிக்கை அதிகமாகக் கொடுத்த காரணத்தினாலே எங்கு பார்த்தாலும் இந்த சாராயக் கடைகள் நிர்மாணிக்கப்பட்டதும், அதன்மூலமாக ஆட்சேபணைக்குரிய இடமான மசூதிகள், சர்ச்சுகள், பள்ளிக்கூடங்கள் இவைகளுக்குப் பக்கத்திலே ஆளுங்கட்சி செல்வாக்கு இருக்கிற காரணத்தினால், ஆரம்பித்தகாரணத்தினால் ஏற்பட்ட தகராறுகளை எல்லாம் இந்த மன்றத்திலே நான் விளக்க விரும்பவில்லை.

இவைகள் எல்லாம் பல்முறை பத்திரிகைச் செய்திகளாக இங்கே வந்திருக்கின்றன. எனவே, இந்த அடிப்படையில் உரிமங்கள் வழங்கப்பட்டு இருப்பதையும் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அடுத்து இன்னொன்றையும் உங்களுக்கு இறுதியாக தெரிவிப்பது என்னுடைய கடமை ஆகும்.

சாராயக் கடைக்கு முன்னால் நீங்கள் ஒரு விளம்பர அட்டையை போட்டு இருக்கிறீர்கள். 'குடி குடியைக் கெடுக்கும்' என்று போட்டிருக்கிறீர்கள். இந்த ஆட்சிக்கு முன்னாலேயும், 'அண்ணா நாமம் வாழ்க' என்று ஒரு அட்டை மாட்டி இருக்கிறீர்கள். குடி குடியைக் கெடுக்கும் என்பதைப் பார்த்து விட்டுச் செல்கின்றவர்கள் குடியைக் குறைத்ததாகத் தெரியவில்லை. உங்களுடைய புள்ளி விவரங்களே சொல்கிறது—அதிகமாக சாராயம் விற்பனை ஆகியிருக்கிறது என்று தெரிவிக்கிறது. அதைப்போன்று 'அண்ணா நாமம் வாழ்க' என்று இன்றையதினம் கோஷத்தை எழுப்பிக் கொண்டு ஆட்சி செய்து கொண்டிருப்பவர்களுடைய ஆட்சி, அரசு, தவறுகளைக் குறைத்ததாகத் தெரியவில்லை.

எனவே, இந்த சாராயக் கடைகளுக்கு முன்னாலே மாட்டி இருக்கக்கூடிய 'குடி குடியைக் கெடுக்கும்' என்ற விளம்பரத்திற்கும் உங்கள் ஆட்சிக்கு முன்னாலே மாட்டி இருக்கக்கூடிய 'அண்ணா நாமம் வாழ்க' என்கின்ற வார்த்தைக்கும் மாறுபாடு இல்லை,

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்கின்ற காரணத்தினாலேதான் உள்ளாட்சித் தேர்தலில் மக்கள் உரிய தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள் என்று தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்தை மட்டும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். வேறு ஒன்றும் தவறாகக் குறுக்கிடவில்லை. ஏனென்றால் அவர்கள் கடைசியாக முடிக்கின்றபோது உள்ளாட்சி தேர்தலைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நாடே உங்களிடத்தில் என்று பேசப்படுகிறது. ஆகவேதான் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன். மதுவிலக்கைப் பொறுத்தவரையிலும், முழு மதுவிலக்கு தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்று நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பொன் முத்துராமலிங்கம்: முழு மதுவிலக்குக் கொள்கை.

திரு. அ. ரகுமான்கான்; துணைத் தலைவர் அவர்களே, 'லைவ்லி' யாக ஒரு விஷயத்தைக் கேட்கவிரும்புகிறேன். முழு மதுவிலக்கு என்றால், நான் அமைச்சரைக் கேட்க விரும்புகிறேன். ஹாஃப், குவாட்டர் என்று பாலிசி வைத்து இருக்கிறீர்களா என்பது தான் என்னுடைய கேள்வி. நம் சமாசாரம் எப்படி என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர் களே, எனக்கு அந்த அனுபவம் இல்லை. (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதத்தையொட்டிப் பேசுவது நல்லது.

திரு. க. நரசிம்மபல்லவன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில ஆயத் தீர்வைத் துறை மற்றும் கைத்தறித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறி என்றாலே காஞ்சி மன்னன், கருத்துக் கருவூலம், தமிழகத்தின் அன்புப் பெட்டகம், தொய்வில்லா அறிவு உழவன், வங்கக் கடலோரம் தூங்காமலே தூங்கிக் கொண்டுள்ள தென்னாட்டு காந்தி என்று தமிழக மக்களால் அழைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள், தான் ஆட்சியிலில்லாதபோதே கைத்தறி நெசவாளர்களின் துயர் துடைக்க துணிகளைத் தானும் தோளில் சுமந்து, தன் தம்பிமார்களையும் தோளிலே சுமக்கச் செய்து விற்று, அன்றையதினம் இந்தக் கைத்தறி நெசவாளர் களின் துயர் துடைத்து, ஆக்கமும் ஊக்கமும் அளித்திருக்கிறார்கள். அந்த வழியில், பேரறிஞர் அண்ணா அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, எதையும் தாங்கும் இதயத்தோடு, இன்று இதயக் கனியாய், எவரும் ஏற்றுக் கொள்ளும் நல்லாட்சி நடத்திவரும் பூமணத்தான் புரட்சித் தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் மழலையின் நாமணக்க சத்துணவு அளித்துக் காப்பதோடு சீருடையும் அளித்துச் சிறக்கச் செய்திருக்கிறார். அதற்காக அவர்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



மேலும் இன்றைக்குக் கரைபோட்ட வேட்டியையும், சேலையையும் கைத்தறிக்கே ஒதுக்க வேண்டும் என்று தமிழக அரசு வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு மத்திய அரசு அனுமதி அளித்ததற்காக நன்றியைக் கூறிக்கொண்டு புரட்சித் தலைவரவர்கள் எடுத்த முயற்சிக்கும், நடவடிக்கைக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் சமுதாயத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெற பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயலாக்கி வரும் புரட்சித் தலைவர் அரசு, உடுக்க உடை ஒரு மனிதனுக்கு எவ்வளவு முக்கியம் என்பதையும், அந்த அடிப்படைத் தேவையையும் உணர்ந்து, அந்த ஆடையை உற்பத்தி செய்யும் நெசவாளர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்த ஆடைகளை உற்பத்தி செய்வதற்கான கூலிதனை 20 சதவீத அளவிற்கு உயர்த்திச் செய்திருப்பதை மிகவும் பாராட்டி, நன்றியறிதலோடு அதனை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வறட்சி வந்த போதும், மழை வெள்ளம் வந்துற்றபோதும், அல்லது காற்றடித்துச் சேதம் ஏற்பட்ட போதும் மக்களின் துயர் துடைக்க அந்தத் துறையின் மூலம் வேட்டி, சேலைகளைக் கொடுத்து உதவி செய்தும், நெசவுத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளித்தும் வந்துள்ள இந்த அரசைப் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயத் தொழில் செய்யும் கூலி விவசாயியைப் போல, நெசவுத் தொழில் செய்யும் கூலி நெசவாளர்களின் உழைப்புக்கு ஈடாக ஊதியம் கிடைக்க வேண்டி ஆங்காங்கே தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலம் நெசவு வேலை கொடுத்து நெசவாளர்களைப் பாதுகாக்கும் புரட்சித் தலைவரவர் களின் அரசைப் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஓராண்டுக்கும் மேலாக கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் ஓரளவிற்கு சுணக்கமான சூழ்நிலையில் உள்ளன. காரணம், இன்றைய தினம் கூலி உயர்வு நியாயமான காரணமாக இருந்தாலும் நூல் விலை கூட்டுறவு நூற்பாலைகளில் விலை உயர்வாக வாங்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. கூட்டுறவு நூற்பாலைகளில் விற்கப்படும் நூல் ஒரு கட்டு 146 ரூபாய் என விற்கப்படுமேயானால், அதே ஒரு கட்டு வெளி மார்க்கெட்டிலே விற்கப்படும்பொழுது 141 ரூபாய் என்று கிடைக்கிறது. அந்த அளவிற்கு வெளி மார்க்கட்டிலே கிடைக்கின்ற அந்தத் தரமான நூலைக்கொண்டு தனியார்கள் துணிகளை உற்பத்தி செய்து நல்ல பலனைப் பெறுகிறார்கள். ஆனால் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக கிடைக்கின்ற விலை உயர்வு உள்ள, அதே நேரத்தில் தரம் குறைந்த அந்த நூலைக் கொண்டு துணிகளை உற்பத்தி செய்கின்றபொழுது சங்கத்திலே உள்ளவர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகின்ற சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11.30)

ஆகவே நூலின் விலையைக் கட்டுப்படுத்துகின்ற அளவுக்கு நூலின் விலையை ஓரளவுக்குச் சமன் செய்கின்ற அளவுக்கு, வெளி மார்க்கட்டிலே இருக்கிற அளவை வைத்து, கூட்டுறவு நூற்பாலைகளின் மூலமாகக் கிடைக்கின்ற நூல் ஓரளவுக்குக் குறைந்த விலையில் கிடைக்கின்ற அளவுக்கு நமது அமைச்சர் பெருமக்கள் ஏற்பாடு செய்து, கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அதே போன்று, நெசவுத் தொழிலுக்குத் தேவைப்படுகின்ற சாயத்தினுடைய ரேட்டையும் ஓரளவுக்குக் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய நாட்டிலேயே, தமிழகத்தில்தான் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாகச் செயல்பட்டு அதிக அளவு கைத்தறி துணி உற்பத்தி ஆகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. மாநில அரசு, மத்திய அரசு சேர்ந்து தருகின்ற, கைத்தறி துணிக்கான ரிபேட்டைக் குறைத்தும், மாதங்களைக் குறைத்தும் கொடுப்பதாக அறிகிறேன். ரிபேட் முறையினால்தான் இன்றைய தினம் கைத்தறி துறை நசிந்து விடாத அளவுக்கு ஓரளவு சிறப்பாகவும் இருக்கும் வகையில், அதில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களும் நெசவாளர் பெருமக்களும் பாதுகாக்கப்பட்டு வருகிறார்கள். ஆகவே, அந்தரிபேட் முறை, தள்ளுபடி முறை ஏற்கனவே 20% ஆக இருப்பதை, 30% 40% என்று உயர்த்தி, கைத்தறித் துறையைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் புரட்சித் தலைவர் மூலமாக மத்திய அரசை வலியுறுத்தி, பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம்முடைய தமிழக அரசைப் பொறுத்த அளவுக்கு, ரிபேட் முறையில் நல்ல ஒழுங்கைக் கடைபிடித்து வந்திருக்கிறது. அந்த ரிபேட் முறையில் எந்தவித ஊழலும் இல்லாத அளவுக்கு 'செக்' மூலமாக, பணம் கொடுத்து, செக் மூலமாக செய்கின்ற வாய்ப்பினை அளித்து, நல்ல முறையில் பயன்படுத்தி வருகிறோம். ஆனால் உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் ரூ. 100 கோடிக்கு மேல் ரிபேட்டில் ஊழல் நடந்திருக்கிறது. இதையெல்லாம் நினைத்துதானோ, என்னவோ, மைய அரசு ரிபேட்டைக் குறைக்கப் பார்க்கிறார்கள். தயவுசெய்து, தமிழகத்தினுடைய புனிதத் தன்மையையும் தமிழகத்து மக்களுக்காக ஆட்சி செய்கின்ற புரட்சித் தலைவர் செயல்பாட்டுத் திறனையும் எண்ணி பழைய முறையிலே ரிபேட்டை உயர்த்தித் தருமாறு இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



கைத்தறியில் நல்ல மாற்றத்தைக் கண்டு பிடித்து, வெளிநாட்டினர் விரும்பி வாங்குகின்ற அளவுக்கு உற்பத்தி செய்து அதன்மூலம் நெசவாளர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கதர்த் தொழிலைப் பொறுத்த அளவுக்கு இன்றைக்கு வளர்ந்து வரும் இந்தச் சமுதாயத்தில் கதர் மூலம் கிராமங்களில் வேலை வாய்ப்புகள் கிடைக்கும் நல்ல சூழ்நிலை இருந்து வருகிறது. ஆகவே சிறு சிறு தொழில்களை, அதிக அளவில், கிராமங்களில் ஏற்படுத்தி, நல்ல உள்ளம் படைத்த இளைஞர்களுக்கும் வேலை செய்ய ஆர்வம் உள்ளவர்களுக்கும் வேலை வாய்ப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செங்கல் சூளை போடுகின்ற தொழிலை ஒவ்வொரு கிராமத்திலும் பொதுமக்கள் விரும்பிக் கேட்கின்றார்கள். ஆகவே, செங்கல் சூளை போடுவதற்கு எங்கெங்கே, அதிகமான அளவிற்கு வாய்ப்புகள் இருக்கின்றனவோ, அங்கேயெல்லாம் நிதி உதவியினையும் மற்ற உதவிகளையும் கொடுக்க அரசு முன்வரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என்து தொகுதியில் பனைமரத் தொழிற்சாலையை மாணாம்பதி, கனியான்குடி போன்ற பகுதிகளில் அமைக்க அனைத்து வாய்ப்புகளும் உள்ளன. அந்த இடங்களில் பனை வெல்லத் தொழிற்சாலை அமைத்து தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்கு ஆயத் தீர்வையைப் பொறுத்தவரையில். இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தவர் எடுத்துச் சொன்னார், தங்களுடைய கழகத்தில் யாரும் எடுக்கவில்லையென்று. என்னுடைய தொகுதியில், உத்திரமேரூர் கிராமத்திலே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் கடையை எடுத்திருக்கிறார் . . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை): அந்த விவரத்திற்குள் போக வேண்டாம். அமைச்சரே சொல்லிவிட்டார், கைட்லைன்ஸ் பிக்ஸ் செய்யப்பட்டு இருக்கிறது என்று கோர்ட்டிலே கேஸ் இருக்கிறது என்று.

திரு. க. நரசிம்மபல்லவன் : மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே இந்தச் சமுதாயத்திற்கு மதுவைக் காண்பித்தவர் கருணாநிதி தான் என்று சொல்லி, இங்கே பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

*திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, ஆயத்தீர்வை, கைத்தறி நெசவுத் தொழில், கதர்த் தொழில் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பல இலட்சக்கணக்கான மக்கள் நம்பி வாழ்கின்ற தொழில் நெசவுத் தொழில். கைத்தறித் தொழில் பழமையும் தொன்மையும் வாய்ந்த ஒரு தொழில். இது பஞ்சாலைகளுக்கும் விசைத்தறியாளர்களுக்கும் இடையே வளர முடியாமல் பல இடர்ப்பாடுகளையும் இன்னல்களையும் சந்திக்கின்ற · நிலைமையில் இருக்கிறது. கையால் தயாரிக்கப்பட்ட கைத்தறி ஆடைகளை மேலை நாடுகளிலுள்ளவர்கள் விரும்பி வாங்குகின்ற அளவுக்கு, தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்கின்ற வகையில் இந்த கைத்தறித் தொழில் இருந்து கொண்டிருக்கிறது. இருப்பினும் கைத்தறியிலே பல்வேறு புதிய ரகங்களையும் மக்கள் விரும்புகின்ற வகையிலே புதிய டிசைன்களையும் தேர்ந்தெடுத்து அமைப்பதன் மூலமும் கைத்தறித் தொழிலை ஊக்குவிக்கின்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்தால் இந்தத்துறை வளர்ச்சியடைய முடியும். அதற்கு தமிழக அரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் இருக்கிற மக்கள் கைத்தறித் தொழிலை அதிகமாக நம்பி வாழ்கின்றார்கள். இருப்பினும் நிதி நிலைமை காரணமாக கிராமப்புற மக்கள் மாஸ்டர் வீவர்களிடம் சிக்கி, அவர்களிடத்திலே நெசவாளர்கள் கொத்தடிமைகளாக இருப்பதால் அவர்கள் நியாயமான கூலி பெறமுடியாமலும், கூட்டுறவுச் சங்கங்களில் அங்கம் வகிக்க முடியாமலும் இருக்கிறார்கள். தனிப்பட்ட மாஸ்டர் வீவர்களிடம் நெசவாளர்கள் சிக்கிக்கொண்டிருக்கின்ற நிலையிலிருந்து விடுபட்டு, கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தாலும் அந்த மாஸ்டர் வீவர்களுடைய செல்வாக்கினாலும் அரசியல் செல்வாக்கினாலும் அவர்களால் அமைக்கப்படுகின்ற கூட்டுறவுச் சங்கங்கள், வளரமுடியாமல் நலிந்துவிடுகின்றன. ஆகவே, அந்த நெசவாளர்கள் மாஸ்டர் வீவர்களை விட்டு வெளியேற அஞ்சி வாழ்கின்ற நிலைமை இருக்கிறது. இருப்பினும் தமிழக அரசு கடந்த 1985 ஆம் ஆண்டு முடிய 1,600 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்திருப்பதும், வரவிருக்கிற காலத்திலே 20,000 கைத்தறி நெசவாளர்களை கூட்டுறவுத் துறையில் கொண்டுவரக் கூடிய திட்டத்தை அமைத்திருப்பது வரவேற்கத்தக்கது.

இப்படிப்பட்ட காரியங்களைச் செய்தாலும், கூட்டுறவுச் சங்கங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற 30 இலட்சம் ரூபாய் போதுமானது அல்ல. இந்தத் தொகையை இன்னும் அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.



கைத்தறி கூட்டுறவு நெசவாளர் சங்கம் வளராததற்குக் காரணம்—முதல் காரணம் மாஸ்டர் வீவர்கள்; இரண்டாவது காரணம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்தாதது; மூன்றாவது காரணம் அரசியல் செல்வாக்கு. அரசு நியமிக்கிற பிரதிநிதிகள் இந்தத் தொழிலைப்பற்றித் தெரியாமல் இருக்கிறார்கள்; அவர்களுக்கும் இந்தத் தொழிலுக்கும் சம்பந்தமே இல்லை. அப்படிப்பட்டவர்களை கூட்டுறவுச் சங்கங்களின் பொறுப்பாளர்களாக நியமிக்கின்ற காரணத்தால் பல கூட்டுறவுச் சங்கங்கள் வளராமல் நசித்து, நலிந்து போயிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசு 1986-87 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கத் தறிகளை நவீனப்படுத்துவதற்கு, கூட்டுறவுச் சங்கத் தறிகளை நவீனப்படுத்தும் ஆண்டாக இந்த ஆண்டை அறிவித்து, நவீனப் படுத்த 7,500 ரூபாய் நிதி உதவி அளிக்க முன்வந்திருப்பது பாராட்டத்தக்க ஒன்று என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, கோவாப்டெக்ஸ் நிறுவனம் நிதிப் பற்றாக்குறை காரணமாக அது கொள்முதல் செய்கின்ற ஜவுளிக்கு உடனடியாக தொகை கொடுக்க முடியாமல் இருக்கிறது. அதன் காரணமாக பல நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி பாதிக்கப் பட்டு, நிர்வாகம் செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, கோவாப்டெக்ஸ் நிறுவனம் மூலமாக சொள்முதல் செய்யப் படுகின்ற துணிகளுக்கு உடனடியாக தொகையைக் கொடுத்து, அந்தச் சங்கங்களுடைய உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே 570 கோவாப்டெக்ஸ் கிளை நிறுவனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. எங்களுடைய திருப்பனந்தாள் நாச்சியார் கோவிலில் ஒரு விற்பனை கிளை நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தள்ளுபடியைப் பொறுத்தவரையில் 1984-85 ஆம் ஆண்டில் 60 நாட்களும், 1985-86 ஆம் ஆண்டில் 45 நாட்களும் 1986-87 ஆம் ஆண்டில் 30 நாட்களும் தள்ளுபடி என்று வைத்திருந்து, மத்திய அரசு இந்த தள்ளுபடியை நீக்குகின்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது என்று இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. தமிழக அரசு மத்திய அரசோடு கலந்து இந்தத் தள்ளுபடித் திட்டத்தை 60 நாட்களாக ஆக்கித் தருவதற்

கான முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டும். தள்ளுபடி இல்லாவிட்டால் கைத்தறித் துறை வளர முடியாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

சேமிப்புத் திட்டத்தைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயனடைகிறவர்கள், தான் சம்பாதிக்கும் பணத்தில் ஒரு ரூபாய்க்கு 6 காசு செலுத்தி, அவர்கள் இறந்து விட்டால், 3,000 ரூபாய் அளிப்பதாகத் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் சம்பாதிக்கிற பணத்தில் ஒரு ரூபாய்க்கு கட்டக்கூடிய அந்த சந்தாத் தொகையை அதிகமாக ஆக்கி, அவர்கள் இறக்க நேரிட்டால் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலமாக அவர் களுக்குப் பத்தாயிரம் ரூபாய் அளிக்கின்ற வகையில் அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்றும் அதற்குரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனைய தொழிலாளர்கள் பணியிலே இருக்கும்போது இறக்க நேரிட்டால் அவர்களுக்கு அளிக்கப்படுகிற தொகை ரூ. 10,000 என்பதுபோல் கூட்டுறவுச் சங்கத்தின் நெசவாளர்களும் பணியில் இருக்கும்போது இறக்க நேரிட்டால் அவர்களுக்கும் இந்த 10,000 ரூபாய் அளிக்க அரசு ஆணை பிறப்பிக்கவேண்டும்.

நெசவாளர்கள் வீடு கட்டுவதற்காக இப்போது அளிக்கப் படுகிற 12,000 ரூபாய் என்பது இப்போது இருக்கிற விலைவாசி ஏற்றத்தில் போதுமானதாக இல்லை. அதை 20,000 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பதோடு மாநில அரசு கொடுக்கக்கூடிய மானியத் தொகையையும் நான்கில் ஒரு பங்காக உயர்த்தித் தர வேண்டும் என்று நெசவாளர்களின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அதிகமாக உள்ள திருப்புவனம் பகுதியில் உள்ள நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு உரிய ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். சென்ற ஆண்டு கும்பகோணம் பகுதியைப் பொறுத்த வரையில் கேட்டுக்கொள்ளப்பட்ட தற்கிணங்க ஜரிகை ஆலை அமைக்க இந்த அரசு ஆணை பிறப்பித்ததற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். திருப்புவனம் பகுதியிலும் அதிக மான பட்டு நெசவாளர்கள் வாழ்கிற காரணத்தால் நவீன முறையில் தொழில்நுட்ப ரீதியில் டிசைன்களைத் தயாரிக்கும் அலுவலகத்தையும், சாயச் சாலையையும், பட்டு முறுக்காலை யையும் ஆரம்பிக்க வேண்டும் என்று நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.



கதர்த் தொழிலைப் பொறுத்தவரையில் ஒரு சிலவற்றை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூற விரும்புகிறேன். கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் கிராம நூற்பு நிலையங்களில் மேற்பார்வை யாளர்களாகப் பல ஆண்டுகள் பணிபுரிந்தால் அவர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுக்கப்படவேண்டும். ஆனால் புதியவர்களை வேலைக்கு அமர்த்துகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையை மாற்றி அங்கே பல ஆண்டுகள் பணியாற்றிய அந்த அமைப்பாளர்களையும், பொறுப்பாளர்களையும் பணிபுரியச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பனை அதிகமாக உள்ள திருப்பனந்தாள் பகுதியில் பனையில் இருந்து கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களைப் பயன் படுத்தித் தொழில் துவங்க வேண்டும். பாய் முடைதல் போன்ற குடிசைத்தொழில்கள் அதிகமாக உள்ள பந்தநல்லூர், திருவிடை மருதூர் போன்ற பகுதியில் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிக்க வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் துவங்கப்பட இருக்கின்ற கதர் பாலியஸ்டர் நூற்பாலையை என்னுடைய தொகுதியில் நெச வாளர்கள் அதிகமாக உள்ள திருநாகேஸ்வரம் பகுதியில் துவங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆயத் தீர்வை என்பதைப் பொறுத்தவரையில் ஒரு சிலவற்றை நான் கூறி விடைபெற விரும்புகிறேன். அந்தத் துறையினைப் பொறுத்தவரையில் இதற்கு முன்னால் நடந்த திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியும், இப்போது நடைபெறுகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும் இன்றைய தலைமுறையினருக்குக் கற்றுக் கொடுத்த பாடமே மது தான். எனவே என்னதான் மதுவினை நீங்கள் ரத்து செய்தாலும் கூட வர இருக்கிற தலைமுறையினர் இந்த இரண்டு கழகத்தையும் மறக்கவும் மாட்டார்கள், மன்னிக்கவும் மாட்டார்கள் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. பாண்டுரங்கன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகள் 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும், 27 கதர்த்தொழில், 2 மாநில ஆயத் தீர்வைத் துறை ஆகியவற்றைப் பற்றி இங்கே நான் பேச விழைகிறேன்.

முதலாவதாக மானியக்கோரிக்கை 27 பற்றி சில வார்த்தை களைச் சொல்லி பிறகு மற்ற மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய வாதத்தைச் சுருக்கமாக எடுத்து வைக்க விழைகிறேன்.

செய்யும் தொழில் அனைத்தையும் சீர் தூக்கிப் பார்க்குங்கால் நெய்யும் தொழிலுக்கு நிகர் இல்லை என்பது பழைய வரிகளில் ஒன்றாகும். அந்த வரிகள் நெய்யும் தொழிலுக்கு எவ்வளவு சிறப்பைக் கொடுத்திருக்கிறது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. கதர் கிராமத் தொழில்கள் வாரியம் மக்கள் அன்றாடம் பயன்படுத்துகின்ற பொருள்களை உற்பத்தி செய்வதில் முக்கிய பங்கேற்று செயலாற்றி, கிராம மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கி தருவதோடு அந்தத் துறையில் நிபுணர் களையும் உருவாக்கித் தருகிறது. வாரியம் அதன் பொறுப்பில் உள்ள பிரிவுகள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றின் மூலம் கிராமப் புறங்களில் உள்ள நலிந்த பிரிவினர்களுக்கு, அந்தந்த கிராமங்களில் கிடைக்கின்ற கச்சாப் பொருள்களைக் கொண்டு, சிறிய மூலதன முதலீட்டுடன் வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது என்பதை அறியும்போது யார் தான் இந்த அரசை பாராட்டாமல் இருப்பார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் கேட்க விழைகிறேன்.

மேலும் கைத்தறி மற்றும் விசைத்தறிகளின் சம்பந்தமாக நான் பேசவிழையும்போது, அவர்களுக்காக இந்த அரசு செய்துள்ள நல்ல செயல்களையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கூட்டுறவு அமைப்பின் கீழ் கைத்தறிகளை அதிக அளவுக்கு கொண்டு வந்திருப்பதும், கைத்தறி நெசவாளர்களுக்கு கடன் பிடியிலிருந்து விடுவிக்கும் திட்டத்தை வகுத்து இருப்பதும், கைத்தறித் துணி களுக்கு விற்பனை வசதி அளித்திருப்பதும், கடன் பெறுகின்ற திட்டத்தைக் கொண்டு வந்து ஊக்குவித்திருப்பதும், கோவாப் டெக்ஸ் மூலம் துணிகளை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்பாடு செய்திருப்பதும், கைத்தறித் துணிகளின் விற்பனையை பெருக்க தனிப்பட்ட சலுகை அளித்திருப்பதும், மூப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம், ஒய்வு காப்பீடு திட்டம், நெசவாளர்களுக்கான விபத்து நிவாரணத் திட்டம், நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் என்று பல பல திட்டங்களை இந்த அரசு வகுத்திருக்கிறது பாராட்டக் கூடிய ஒன்றாகும். அதற்காக தமிழக மக்கள் இந்த அரசை நிச்சயமாக நெஞ்சார பாராட்டாமல் இருக்க மாட்டார்கள். இதற்கெல்லாம் ஆகும் செலவில் பாதியை யவுசெய்து மத்திய சர்க்கார் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு விண்ணப்பிக்க வேண்டும், கோரிக்கை விடுக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தில் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கைத்தறி மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை மானியக் கோரிக்கை எண் 2 இன் கீழ் சில கருத்துக்களைச் சொல்லி விடைபெற விழைகிறேன்.



கொள்கை விளக்கக் குறிப்பில் கள்ளச் சாராயம் தயாரிப்போர் விற்பனை செய்வோர் ஆகியோர் பிடியில் குடிப்பழக்கம் உள்ளோர் சிக்கித் தவிக்காமல் இருக்கவும், மேலும் சமூக விரோத சக்திகளிடம் செல்லும் பணத்தை மக்களுக்கு நலம் பயக்கும் திட்டங்களுக்காக பயன்படுத்தவும் மாநிலத்தில் கள்ளச் சாராயத்தை அடியோடு ஒழிப்பதான அந்த நோக்கத்தை இந்த அரசு வகுத்துக் கொண்டுள்ளது. அந்த நோக்கம் நல்ல நோக்கம் அல்லவா? அந்த நோக்கத்தை நிறைவேற்றினால் மக்கள் பாராட்ட மாட்டார்களா என்று இந்த மாமன்றத்தின் மூலம் கேட்க விரும்புகிறேன்.

1984—85ன் பாதியில் ஒப்பந்தப்புள்ளி முறையில் சாராய சில்லரை விற்பனை உரிமை வழங்கப்பட்டது. ஆனால் ஒப்பந்தப் புள்ளி கோருபவர்கள் தவறான முறையிலே தங்களுக்குள் கூடி பேசிக் கொண்டு, மிகவும் குறைவான தொகையில் கேட்டு எடுத்து வந்தக் காரணத்தால் வருவாயில் பெரும் இழப்பு அரசுக்கு ஏற்பட்ட காரணத்தால், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மூலமாக முகவர்களை போட்டு அவர்கள் மூலமாக 1985—86லிருந்து சாராய சில்லரைக் கடைகள் நடத்தப்படுகிறது என்பதையும் அதனால் அரசுக்கு நல்ல வருவாய் கிடைத்துள்ளது என்பதையும் அறியும்போது, தமிழக மக்களுக்கு, தமிழக அரசின் மீது அக்கறை உள்ள மக்களுக்கு பெரு மகிழ்ச்சி ஏற்படாமல் இருக்க நியாயம் இல்லை.

அதேநேரத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் 1—1—87 முதல் பூரண மதுவிலக்கை கொண்டு வருவேன் என்று சொல்லியுள்ளது தமிழக மக்களின் நெஞ்சில் பாலை ஊற்றியதற்கு ஒப்பாக இருக்கிறது.

(முற்பகல் 11-50)

நான் என்னுடைய தொகுதியில் சில நாட்களுக்கு முன்பாக சென்றிருந்தபோது ஒரு தாய் தன்னுடைய கிழிந்த ஜாக்கெட்டை காட்டி என்னுடைய கணவர் குடித்துவிட்டு வந்து என்னை அடித்து விட்டார். என்னைப்போல் பல தாய்மார்கள் இப்படி கஷ்டத்திற் குள்ளாகிறார்கள். கணவன்மார்கள் குடித்துவிட்டு வந்து அடிக் கிறார்கள். ஆகவே தயவுசெய்து புரட்சித் தலைவர் அவர்களிடம் சொல்லுங்கள். மேற்கொண்டு மதுவிலக்கை அமல் படுத்த வேண்டும் என்று சொல்லுங்கள் என்று சொன்னார். அதை எப்படியோ புரட்சித் தலைவர் அவர்கள் தெரிந்து வைத்துக் கொண்டு, நான் 1-1-87 முதல் பூரண மதுவிலக்கை கொண்டு வரப் போகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கேயோ இருக்கிற தாய்மார்கள் முறையிட்டது புரட்சித் தலைவர் அவர்களின்

காதுக்கு எட்டி அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்
கிறார் என்றால், இதுபோன்ற ஒரு நல்ல தலைவர், ஒரு நல்ல
முதலமைச்சர் இந்த தமிழ்நாட்டிற்கு வேறு யார், எங்கிருந்து
கிடைப்பார்கள் என்பதை தயவுசெய்து அனைவரும் எண்ணிப்
பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சாராயம்
நாட்டிற்கு வேண்டாம் என்று புரட்சித் தலைவர் அவர்கள்
சொல்லியிருக்கிறார்கள். 1-1-87 முதல் இது அமலுக்கு வர
விருக்கிறது. இது மக்களின் அரசு என்று புரட்சித் தலைவர்
அவர்கள் அண்மையில் நடந்த பொதுக்கூட்டத்தில் கூட சொல்லி
யிருக்கிறார்கள். T mil N du P ohibition Amendment Act, 1979,
Tamil N du Act 10 of 1979—என்பது மது விவகாரங்களில் ஈடுபடு
பவர்கள் அதிக தண்டனை பெறவேண்டுமென்ற கொள்கையோடு
அதாவது by providing for detement punishment என்ற கொள்கை
யோடு கொண்டு வரப்பட்டது. அதிக தண்டனை விதித்தால்
மக்கள் பயந்து கொண்டு திருந்தி விடுவார்கள், குடிக்க
மாட்டார்கள், சாராயம் காய்ச்ச மாட்டார்கள், விற்க
மாட்டார்கள் என்றெல்லாம் கருதி இதுபோன்ற சட்டதிட்டங்கள்
கொண்டு வரப்பட்டன. அதுவும் புரட்சித் தலைவர் அவர்கள்
நல்ல எண்ணத்தோடு, தமிழக மக்கள் திருத்தும் எண்ணத்தோடு
தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தக்
குற்றங்கள் அதிக அளவில் ஆகும்போது, மக்கள் எல்லாம்
தண்டனை அடையும்போது அவர்களைச் சார்ந்திருக்கும்
அவர்களின் குடும்பங்கள் அல்லலுறுவதைக் கண்டோம்.
அப்போதும் குடிப்பழக்கத்தை மக்கள் விடவில்லை. நாட்டு
மக்கள் கள்ளச்சாராயத்தை குடித்து, உடல் நலத்தைக் கெடுத்துக்
கொள்ளக்கூடாது என்றும் வரும் வருவாய் நல்ல திட்டங்களுக்கு
போய்ச் சேரவேண்டுமென்றும் தான் 1981-ஆம் ஆண்டில் Tamil
N du Prohibition Amendment Act, 1981, Act 23 of 1981 அதாவது
ஆக்ட் 23/81 என்ற சட்டத்தைப் போட்டு மதுவிலக்கு சற்று
தளர்த்தப்பட்டது. அதே நேரத்தில் ஆக்ட் 10/79 அமலில்
உள்ளது. தமிழக மக்கள் கேட்டுக்கொள்வதெல்லாம் மக்களுக்காக
தான் சட்டமே தவிர, சட்டத்திற்காக மக்கள் அல்ல என்பது.
புரட்சித் தலைவர் அவர்கள் அதை மதித்து, மக்கள் என்ன
நினைக்கிறார்களோ அதை மதித்து சட்டம் மக்களுக்காகத்தான்
என்று நினைத்து 1979 ஆம் ஆண்டில் ஆக்ட் 10/79 அமலாக்கப்
பட்டுள்ள டிடரண்ட் பனிஷ்மெண்ட் என்பதை ரத்துச் செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு முன்னால் 1937-ம் ஆண்டில் ஆக்ட் 10/37-ல்
ஏற்பட்டுள்ள சட்டப்படி சாராயம் குடித்திருந்தாலும் அல்லது
வைத்திருந்தாலும் அல்லது காய்ச்சியிருந்தாலும் அதற்குரிய
பனிஷ்மெண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தண்டனைப்
பிரகாரம் பார்த்தால் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு
களுக்கு தான் வழக்கு வருகிறது. 1979-ம் ஆண்டின் ஆக்ட்



10/79-ன்படி பார்த்தால் தண்டனை அதிகமாக்கப்பட்டு
விட்டதால் அந்தச் சாராய வழக்குகள் எல்லாம் முதல் வகுப்பு
கோர்ட்டுகளுக்கு S.J.M. and A.S.M. கோர்ட்டுகளுக்குச் செல்ல
வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஏற்கனவே அங்கே பணிகள்
அதிகமாக இருக்கின்றன. அவர்கள் மேலும் இந்தச் சாராய
வழக்குகளை எடுத்து நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருக்
கிறது. அதேநேரத்தில் Judici l Second Class Magistrate Court-ல்
எந்தவிதமான வேலையும் இல்லாமல் அவர்கள் ஓய்வாக
இருக்கிறார்கள். ஆகவே இந்த நேரத்தில ஒரு கருத்தைச் சொல்ல
விரும்புகிறேன். மறுபடியும் நம்முடைய புரட்சித்தலைவர்அவர்கள்
இந்தச் சட்டத்தை மதுவிலக்குச் சட்டத்தை அமலாக்கும்போது
நிச்சயமாக பூரண மதுவிலக்குச்சட்டம் இருக்கும். இந்த நேரத்தில்
மாண்புமிகு உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம் அவர்கள்
பேசுகிறபோது ஏதோ பொய்க் கணக்கை எழுதி சாராயம் குடிக்க
அனுமதிக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது சரியில்லை
யென்று சொல்ல விரும்புகிறேன். காரணம் டாக்டர் கலைஞர்
அவர்கள் கூட T mil N du Prohibition (Suspension of Operation)
Act, 1971, சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அண்ணா
அவர்களின் கருத்து அவர்களுக்குத் தெரியாமல் இருந்திருக்க
நியாயமில்லை. அண்ணா அவர்கள் கருத்து பூரண மதுவிலக்கு
என்று அவர்களுக்குத் தெரிந்திருந்தும் எரிகிற நெருப்பு
வளையத்தின் நடுவில் எரியாத கற்பூரமாக எவ்வளவு நாட்களுக்கு
தமிழகம் இருக்க முடியுமென்று சொல்லி சாராயக் கடைகளை
எல்லாம் திறந்தார்கள். பின்னால் அவர்களே Tamil Nadu
Prohibition (Revival of Operation and Amendment) Act, 1974,
ஆக்ட் 34/74-ஐக் கொண்டு வந்து....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை): சீக்கிரம்
முடித்து விடுங்கள்.

திரு. மு. பாண்டுரங்கன்: முதலிலே ஏதோ முள் தைத்து
விட்டது என்று சொல்கிறார்கள். முதலிலே கொண்டு வந்தபோது
இந்த முள் எப்படி தைக்காமல் விட்டது என்று தெரியவில்லை.
1971-ஆம் ஆண்டிலே இந்த முள் எவ்வாறு தைக்காமல் விட்டது?
ஏன் அதை அனுமதித்தார்கள்? பிறகு 1974-ல் எப்படி முள்
தைத்துவிட்டது என்று கூறுகிறார்கள் என்பதை சற்று சிந்திக்க
வேண்டியிருக்கிறது. ,'இப்போது மதுவிலக்கை ஒத்தி வைப்பது
தவறு, என்றாலும், வேறு வழியில்லை என்பதை மிகுந்த
வேதனையோடு தெரிவித்துக் கொண்டேன், பிறகும் நான் அன்று
பேசிய பேச்சை அவைக்குறிப்பிலே இருந்து எடுத்துப் பார்த்தால்,
எதிர்க் கட்சி, தோழமைக் கட்சிகளினுடைய யோசனைக்கு மதிப்பு
அளித்து அதேநேரத்தில் அவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பு
அளிக்கிறோம் என்ற வார்த்தையை தெரிவித்து, மதுவிலக்கை
ஒத்திவைத்தது முதல் இந்நாள் வரையில் மாவட்ட ஆட்சித்
தலைவர்கள் கூட்டத்தில் தெரிவித்ததைப் போல், துணை

மானியக் கோரிக்கையில் எடுத்துச் சொன்னது போல், அண்ணல் காந்தி நெறி நின்று, அண்ணா வழி அமைந்த அரசு, ஏதோ ஒரு முள் தன்னுடைய நெஞ்சிலே குத்தியது போன்ற உணர்வோடுதான் இந்த மதுவிலக்கை இப்போது ஒத்தி வைக்க வேண்டியிருந்தது என்பதைச் சுட்டிக்காட்டினேன்'' என்று கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 1971–ஆம் ஆண்டில் தெரியாமல் போனதற்கு என்ன நியாயம் இருக்கிறது என்று நான் கேட்கிறேன். இதைத் தெரிந்து கொண்டுதான், வேண்டுமென்றே ஏதோ இந்த மது விலக்குக் கொள்கையில் சரியான பிடிப்பு இல்லாத காரணத்தால் தான், அவர்கள் மேலும் மேலும் இரட்டை வேடம் தரித்து, இப்படி ஒரு புறம், சொல்வது அப்படி ஒரு புறம் சொல்வது என்ற காரணங்களை எல்லாம் காட்டிக் கொண்டு, தவறு என்று சொல்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி சொல்லி, முடிக்கிறேன்

**திரு. பொன் முத்துராமலிங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் இந்த மதுவிலக்கை ஒத்தி வைத்து ரத்து செய்கிற நேரத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் என்ன பேசினார்கள் என்பதை மீண்டும் ஞாபகத்திற்குக் கொண்டு வந்ததற்காக நன்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே மாநில அரசால் முன் வைக்கப்பட்டு இருக்கிற கைத்தறி நெசவாலை மற்றும் கதர்த்துறை மானியக் கோரிக்கைகளின் மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். துவக்கத்திலே மாநில் அரசு மத்திய அரசு அறிவித்திருக்கிற புதிய ஜவுளிக் கொள்கையை காலததில் கண்டித்ததற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு தொடர்ந்து மத்திய அரசு பல்வேறு பழைய காலத்திற்கு தேவைற்ற கருத்துக்களைப் புதிய கொள்கை என்ற பெயரால் தொடர்ந்து பல்வேறு துறைகளில் புகுத்தி வருகிறது. இந்த அம்சங்களை தொடர்ந்து எதிர்க்க இந்த மாநில அரசு முன்வரவேண்டும் என்பதைக் குறிப்பாகத் தெரிவிக்க விருமபுகிறேன்.

இங்கே கைத்தறியைப் பற்றி பல அங்கத்தினர்கள் மிக வருத்தத்தோடும், வேதனையோடும் குறிப்பிட்டார்கள். இந்த கைத்தறியினுடைய நிலைமை அநேகமாக கடைசி மூச்சு வாங்குகின்ற நோயாளியினுடைய நிலைமையில் இந்த கைத்தறித் துறை இருந்து கொண்டு இருக்கிறது. இந்த நிலையில் இருந்து கொண்டிருக்கிற இந்தக் கைத்தறித் துறையை அதனுடைய சுவாசத்தை முழுக்க நிறுத்துகிற முறையிலேதான் மத்திய அரசு அறிவித்து இருக்கிற புதிய ஜவுளிக் கொள்கை இருக்கிறது என்பதை கைத்தறியின் நன்மையைக் கருதி' நாம் பலமாக கண்டிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. எளவே நான் துவக்கத்திலேயே அமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது மத்திய அரசு அறிவித்



திருக்கிற புதிய ஜவுளிக் கொள்கையை இந்தப் பேரவை முன் வைத்து, விவாதித்து, அதன் மீது இந்த மாநிலத்தின் பொதுவான எதிர்ப்பு உணர்ச்சியை கருத்து பூர்வமான முறையிலே, அரசியல் ரீதியாக வலியுறுத்துகிற முறையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும் என்பதையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏதோ மத்திய அரசாங்கத்தின் மீது இருக்கிற தனிப்பட்ட ஆத்திர உணர்ச்சிகளால் நான் இந்த எதிர்ப்பை வெளிப்படுத்தவில்லை. ஒரு மத்திய அரசு ஒரு கொள்கையை அறிவிக்கிறபோது, தமிழ் மாநிலம் மைய அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட ஒரு மாநிலம் என்ற முறையில் இந்தமாநிலத்தில் ஏற்படக்கூடிய தீய விளைவுகளை, பிரதிபலிக்கிற பொறுப்பு ஒவ்வொரு அங்கத்தினருக்கும் உண்டு. எனவே புதிதாக அறிவிக்கப்பட்டு இருக்கிற இந்த ஜவுளிக் கொள்கை அநேகமாக முதலாளிகளை முழுக்க முழுக்க பாதுகாக்கக்கூடிய முதலாளித்துவ கொள்கைதான், ஒடுக்கப்பட்டு இருக்கிற, கைத்தறித் துறைத் தொழிலாளர்களுக்கு கிஞ்சிற்றும் இது உதவவில்லை. எப்படி என்று பார்க்கிறபோது, நலிந்து கொண்டிருக்கக்கூடிய ஆலைகளை அவர்கள் நினைத்தால் மூடிக் கொள்ளலாம். ஏன் என்று கேட்பதற்கு கேள்வி கிடையாது. அவைகளை நவீனப்படுத்துவது, தொழிற்சாலைகளை நவீனப் படுத்துவது என்ற பெயரால், மத்திய அரசாங்கம் நிறைய நிதியை அவர்களுக்குக் கொடுக்கும். அது யாருடைய நிதி? கோடிக்கணக்கான மக்களின் வரிப்பணத்திலே தனிப்பட்ட ஒரு முதலாளியின் பேக்டரியை நவீனப்படுத்திக்கொள்வதற்குப் பணம் கொடுக்கவேண்டுமா? மக்களின் வரிப்பணம் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பயன்படுத்துவதற்கு பதிலாக மக்களுக்கு துயரத்தை ஏற்படுத்தக்கூடிய இந்த முதலாளிகளின் மேம்பாட்டுக்கு உழைக்க, உதவுகிற கொள்கை மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கை. எனவே இந்த மாநில அரசு இன்னும் கூர்மையாக கண்டிக்கவேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

அதோடு என்ன அறிவித்திருக்கிறார்கள், மலிவுத் துணி முழுவதும் கைத்தறிக்கு–கைத்தறி துறைக்கு ஒதுக்கப்படுகிறதாம். மலிவு துணி முழுவதும் கைத்தறி துறைக்கு, ஜனதா துணி முழுவதும் கைத்தறி துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது, ஆனால் ஆலைகளுக்கு என்ன? ஜவுளித் துறைக்கு லாபகரமான அம்சங்கள் முழுவதும் ஜவுளித் துறைக்கு, ஜவுளி முதலாளிகளுக்கு. மிக மோசமான அம்சங்கள் முழுவதும் கைத்தறி துறைக்கு. இது என்ன நியாயம்? மத்திய அரசு அறிவித்துள்ள இந்த ஜவுளிக் கொள்கை, முதலாளிகளுக்கு வெண்ணெயும் கைத்தறி துறைக்கு சுண்ணாம்பும் தடவுவதற்காகவா?

திரு. என். எஸ்.வி. சித்தன்; மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையிலே கலந்துகொண்டு பேசுகின்ற நேரத்திலே மத்திய அரசாங்கத்தினுடைய ஜவுளிக் கொள்கையைப்பற்றி அடுக்கடுக் காக பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள், மத்திய அரசாங்கத்தினுடைய ஜவுளிக் கொள்கையை விமர்சிப்பதற்கு நமக்கு உரிமைகள் இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் முழுக்க முழுக்க மத்திய அரசாங்கத்தை கடுமையாக விமர்சனம் செய்து பல்வேறு குற்றச் சாட்டுகளை அவர் இங்கே சொல்வார்களேயானால் மந்திய அரசி னுடைய சார்பிலே இங்கு பதில் சொல்வதற்கு அவர்களுடைய பிரதிநிதிகள் இல்லை, மேலும் நான் எண்ணிப்பார்க்கிறேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே திறமை வாய்ந்த சுப்பராயன் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் நாடாளுமன்றத்திலே இருக்கிறார்கள். இந்தப் பிரச்சனையை அங்கே எழுப்பினால் உரிய நேரத்திலே பதில் கிடைக்கும். ஆனால் அந்தப் பிரதிநிதிகள் இல்லாத இந்தச் சபையிலே அடுக்கடுக்காக குற்றச்சாட்டுகளை சொல்லிக்கொண்டு போவது முறையாகுமா என்ற ஒரு தீர்ப்பினை உங்கள் மூலமாக நான் எதிர்ப்பார்க்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன்: மாற்றுத் தலைவர் அவர்களே, புதிய டெக்ஸ்டைல் பாலிசி மூலம் பாதிக்கப்படுகிறோம் என்ற ஒரு கருத்தைத்தான் அவர்கள் வலியுறுத்தி சொல்கிறார்கள். கைத் தறித் துறைக்குள்ள பாதிப்பு மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கையினால் எப்படி ஏற்படுகிறது என்று பேசுவதிலெல்லாம் எந்த ஆட்சேபணையும் இருக்க முடியாது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விமர்சனம் செய்வதிலே எந்தவிதமான கருத்து வேறு பாடுகளும் கிடையாது. ஆனால் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் பெரிய ஆலைகளின் சார்பிலே, மத்திய அரசாங்கம் அவர்களுக்கு சாதகமாக இருந்து கொண்டிருக்கிறது, நலிந்த ஆலையின் பெயராலே அவர்கள் அதிகமாக பணம் முதலீடு செய்கிறார்கள் என்று குற்றம் சாட்டப்படுகிறபோது அதற்கு பதில் சொல்வதற்கு ஆளில்லையே. குற்றச்சாட்டுகள் சொல்கிறபோது அதற்கு பதில் அளிப்பதற்கு யார் இருக்கப் போகிறார்கள்,

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தயவு செய்து என்னுடைய நேரம் பறிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதை நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(குறுக்கீடு)



மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை): மத்திய அரசினுடைய ஜவுளிக் கொள்கையை விமர்சனம் செய்வதற்கு அவருக்கு உரிமை உண்டு. அப்படி ஏதாவது குற்றச்சாட்டு சொல்லியிருப்பாரேயானால், அதைப் படித்துப் பார்த்து சபைத் தலைவருடைய.....

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் என். எஸ். வி. சித்தன் குறிப்பிட்டிருக்கிற அந்த விஷயத்தில் நான் தொடர்ந்து அடுக்கடுக்காக குற்றம் சாட்டுவதாக குறிப் பிட்டார்கள். நான், தொடர்ந்து அடுக்கடுக்காக தவறுகள் செய்கிற அரசை விமர்சிக்க வேண்டிய தவிர்க்க முடியாத அவசியம் இருக்கிறது என்ற காரணத்தாலேயும் நம்முடைய மாநிலம் என்பது இந்தியாவிலே இருக்கக்கூடிய ஒரு பகுதி....

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே அவர்களுடைய உறுப்பினர்கள் பாராளு மன்றத்திலே இருக்கிறார்கள். அவர்களை அங்கே பேசச் சொல்லலாமே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பாலிசியைப் பற்றி விமர்சனம் செய்யலாம் விமர்சனம் செய்ய உரிமை உண்டு.

திரு என். எஸ். வி. சித்தன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தினுடைய ஜவுளிக் கொள்கையை விமர்சனம் செய்வதற்கு நமக்கு பரிபூரண உரிமை இருக்கிறது. மறுக்கவில்லை. அடுக்கடுக்கான தவறுகள் செய்கிறார்கள் என்பது; யார் தவறை நிர்ணயம் செய்வது, அது தவறுதான் என்று. அடுக்கடுக்காக தவறுகளை சுட்டிக்காட்ட வேண்டிய மன்றமே வேறு. பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுங்கள்; கைத்தறித் துறைக்கு அதிக நிதி ஒதுக்குங்கள் என்று சொல்லுங்கள், நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் மத்திய அரசை குற்றம் சாட்டுவது சரியல்ல,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குற்றச்சாட்டை சொல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்; கொள்கையைப்பற்றி விமர்சிக்கலாம்.

திரு. கு. ரமணி: துணைத்தலைவர் அவர்களே, நாங்களெல்லாம் இந்த சட்டமன்றத்திலே பேசவேண்டியதிருக்கிறது. இந்த நாட்டினுடைய ஒட்டுமொத்த பொருளாதாரக் கொள்கை மத்திய சர்க்காருடைய பொருளாதாரக் கொள்கை, எப்படி தமிழ்நாட்டை பாதிக்கிறது என்பதை நமது மாண்புமிகு நிதி

அமைச்சர் அவர்கள் விரிவுரையிலே சொல்லியிருக்கிறார். அதுதான் என்று அவ்வளவு சுலபமாக ஜூசொலேட் பண்ண முடியாது. ஆனால் மத்திய சர்க்கார் என்னென்ன குற்றம் செய்திருக்கிறது என்று விமர்சனமாக கொண்டு வந்தால் அப்போது நீங்கள் தலை யிட்டு தடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஜவுளிக் கொள்கையைப் பற்றி அது சரியில்லை என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அவ்வளவுதான்,

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரிய முதலாளிகளுச்கு இந்த அரசும் மத்திய அரசும் துணை செய்கிறார்கள், நலிந்த மில்களை விஸ்தரிப்பதற்கு பல கோடி ரூபாய் கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.

திரு. கு. ரமணி: துணைத் தலைவர் அவர்களே, எங்கள் உரிமையை எல்லாம் அவர் எடுத்துக்கொள்கிறார். இது எல்லாம் குற்றச்சாட்டு, இது எல்லாம் விமர்சனம் என்று ஏதாவது வரை யறையை வைத்து இருக்கிறாரா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் பாலிசியைப் பற்றி பேசிக்கொண்டு இருக்கிறார். குற்றச்சாட்டு மாதிரி ஒரு பத்திரிகைச் செய்தியையோ அல்லது மத்திய அரசின் ஸ்டாடிஸ்டிக் புக்கையோ வைத்து சொன்னால் நாம் பார்க்கலாம்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசுகள் மத்திய அரசின் நிதி தொப்புள் கொடியோடு இணைக்கப்பட்டு இருப்பதால் அதனு டைய ஒவ்வொரு விளைவுகளாலும் இந்த மாநில அரசு பாதிக் கிறது என்பதாலும் இந்த மாநில சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவற்றின் தீய விளைவுகளை பற்றி விமர்சிக்கின்ற உரிமையை யாரும் பறித்து விட முடியாது என்பதை அழுத்தமாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக மத்திய அரசின் ஜவுளிக் கொள்கையை குறிப்பிட்டுச் சொல்லுவதில் ஜவுளி ஆலைகளை நவீனப்படுத்துவதற்காக மத்திய அரசு நிதி உதவி கொடுக்கும் என்பதுதான் ஜவுளிக் கொள்கையின் உள்ளடக்கம். அப்படி கொடுத்தது தவறு, அது நிர்வாகிகளை மேலும் பலப்படுத்தும் என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். அப்படி குற்றம் சாட்டுவதற்கு உரிமை உண்டு என்பதால் தான் நான் இங்கே அப்படி குறிப்பிட்டேன்.

அடுத்து, மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, என்னுடைய நேரம் இடையிடையே குறுக்கீட்டினால் போய் இருக்கிறது என்பதையும் தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். தனியார் பஞ்சாலைகளைப் பொறுத்தவரையிலும் நாம் மிகத் தெளிவாகப் பார்க்கலாம் இந்த மாநில



நோட்டில் குறிப்பிட்டு இருக்கிறார்கள் ஜனதா துணி கைத்தறிக்கு மட்டும் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஏன் ஜவுளி ஆலைகளுக்கு ஒதுக்கப்படவில்லை. நட்டம் வரக்கூடிய அதாவது லாபம் அற்ற ஒரு பொருளை அதாவது ஜனதா ரகத்தை இந்த கைத்தறிக்கு ஒதுக்கியிருக்கிறார்களே தவிர லாபகரமான ஏற்றுமதி ரகங்களை முழுவதையும் ஜவுளி ஆலைகளுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள், என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். இதுசரி அல்ல என்பதைத் தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மலிவு துணிகளை குறிப்பிட்ட விழுக்காட்டை இந்த ஜவுளி ஆலைகள் செய்ய வேண்டும் என்று விதிக்க வேண்டும். அதற் குரிய நடைமுறையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாநில அரசின் நிலையைப் பொறுத்த வரையில் இங்கே இருக்கக்கூடிய நஷ்டத்தில் ஓடிக்கொண்டு இருக்கக்கூடிய அந்த மில்களைப் பொறுத்தவரையில்.. — ..

திரு ஆர். கோவிந்தசாமி: துணைத் தலைவர் அவர்களே, ஜனதா ரகங்களையும் ஜவுளி ஆலைகளுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுபற்றி பிறகு உங்கள் கட்சியின் சார்பில் பேசுபவர்களிடம் சொல்லி விளக்கம் சொல்லச் சொல்லுங்கள்.

திரு கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாநில அரசு தன்னுடைய பாலிசி நோட்டில் குறிப்பிட்டு இருக்கக்கூடிய விஷயத்தில் ஒரு நழுவல் தெரிகிறது. அதாவது செயல் திறன் திருப்திகரமான உடன் உத்திரவாதங்கள் வாபஸ் பெறுவது அரசின் கொள்கை என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதாவது நலிந்த ஆலைகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளுவது என்பது பிரச்சினைக்கு பரிகாரம் காணுவதற்கு பதில் பிரச்சினையிலிருந்து தப்பித்துக்கொள்ளுகிற ஒரு போக்காக தெரிகிறது. ஆகவே மாநில அரசைப் பொறுத்த வரையில் நலிந்து இருக்கக்கூடிய ஆலைகளை அரசே ஏற்று நடத்தவேண்டும், மாநில அரசே ஏற்று நடத்தவேண்டும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டு வலியுறுத்துகிறேன்.

அடுத்து திருப்பூரில் இருக்கக்கூடிய விஷயம் பூற்றி குறிப்பிடப் பட்டு இருக்கிறது. திருப்பூரில் பனியன் உற்பத்தி நடந்து கொண்டு இருக்கிறது. திருப்பூரில் பனியனை தயாரித்து பஞ்சாப் மாநிலத் திலிருந்து ஏற்றுமதி செய்கிறார்கள். பஞ்சாப் மாநிலம் ஆர்டர் பெற்றுக்கொள்கிறது. நேரடியாகஏற்றுமதிக்கானவாய்ப்பு பஞ்சாப் மாநிலத்திற்கு சென்றுவிடுகிறது. அவர்கள் ஆர்டர்கள் பெற்றுக் கொண்டு திருப்பூரில் ஆர்டர் கொடுத்து ஜாப் ஓர்க் கொடுத்து

தயார் செய்து பஞ்சாபுக்கு அனுப்பிக் கொண்டு இருப்பதை நம்முடைய மாநில அரசை பாதிக்கிற விஷயம். ஆகவே இந்த மாநில அரசு நேரடியாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு உண்டான வாய்ப்பை சிந்திக்க வேண்டும் என்று இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஏதோ ஒரு பழமொழியைச் சொல்லுவார்கள், இஞ்சி மஞ்சள் ஆகி, மஞ்சள் ஒல்லி ஆகி, ஒல்லி உள்ளே போய் ஒளிந்து கொண்டது என்று. அதேபோல் இன்றைக்கு தள்ளுபடி திட்டம் என்பது கைத்தறித் துறையைப் பொறுத்தவரையில் 60 நாட்களாக இருந்தது, 45 நாட்கள் ஆகி, இப்போது 30 நாட்கள் ஆகியிருக்கிறது. கால போக்கில் இது முற்றாக கைவிடப்படும் என்பது தான் மத்திய அரசின் நிலை என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே இது கைத்தறித் துறையை முழுமையாக அவர்கள் சுவாசத்தை அடக்கிக் கொள்ளுகிற ஒரு திருப்பணி என்பதை தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியாது. ஆகவே 4 மாத காலம் கைத்தறிக்கு தள்ளுபடி காலம் ஒதுக்கவேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்த மாநில அரசும் சரி, மத்திய அரசும் சரி, கைத்தறித் துறையை 2 பக்கமும்2 கயிறை கழுத்தில் போட்டு இறுக்கிக் கொண்டுஇருக்கிறார்கள்.ஆகவே தள்ளுபடியை சுருக்குவது என்பது கழுத்தில் கயிற்றைப் போட்டு இறுக்குவதற்கு சமம் ஆகும். அதை உணர்ந்து அதற்குரிய மாற்று நடவடிக்கையை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஆனால் தொடர்ந்து அவற்றை சொல்லிக் கொண்டிருப்பதற்கு. கதர்த்துறையைப் பொறுத்தவரையில் ஒரு சில விஷயங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

கதர்த்துறை என்பது காந்தியார் அவர்களால் ''பாதர் ஆப் தி நேஷன்' என்று கௌரவிக்கப்பட்ட ஒரு துறையாகும். அந்தத் துறை சமீபத்தில் ஆடம்பரமாக ஒரு வெள்ளி விழா நடத்தியது. அது அவசியம் தானா என்று தெரியவில்லை. இதற்காக எவ்வளவு செலவழிக்கப்பட்டது? அப்படிப்பட்ட விழா நடத்துவதற்கு யார் காரணம்? செலவழிக்க சம்மதம் கொடுத்தவர்கள் யார் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். மேலும் சமீபத்தில் ஒரு சில மாற்றங்கள் கதர்த் துறையில், கதர்த்துறை வாரியத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. டெபுடி டைரக்டர்ஸ், ஜாயிண்ட் டைரக்டர்ஸ் பதவிகளை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். அதிகாரிகள் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ஃபீல்டு ஒர்க்கர்ஸ்' அதாவது ஊழியர்கள் அதிகப்படுத்தப்படவில்லை. அது ஏன்? அது சரியான நடைமுறையா? என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை. இது டான்சி போன்று காலப்போக்கில் அதிகாரிகளின்



சம்பளத்திலேயே கதர் வாரியம் அழிந்து போகக் கூடிய நிலைமையை ஏற்படுத்தும். ஆகவே அதிகாரிகளை அதிகப்படுத்தி, ஊழியர்களைக் குறைப்பது என்ற நிலையை தயவு செய்து மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நிறைய குறுக்கீடுகள் வந்ததால், சப்ஜெக்டிக்குள்ளே வரமுடியவில்லை. கதரோடு முடித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறையின் பாலிசியிலே சொல்லப்பட்டிருப்பது, உள்ளூரில் கிடைக்கும் வளங்களையும், மனித சக்தியையும் பயன்படுத்தி வருமான வழிகளைப் பெருகச் செய்து, சுய வேலை வாய்ப்பை அளிப்பது வாரியத்தின் தலையாய குறிக்கோளாகும் என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உள்ளூரிலே கிடைக்கின்ற வளங்களைக் கொண்டு வேலைவாய்ப்பை உள்ளடக்கிய நோக்கம். ஆனால் கதர் வாரியத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? பெட்ஷீட் தயாரிப்பதற்காக உத்தரப்பிரதேசத்திலிருந்து கோரா வாங்கப்பட்டு, அங்கேயே பிரிண்ட் செய்யப்பட்டு ஏன் இங்கே கொண்டுவரவேண்டும்? திருப்பூரிலே ப்ரிண்ட் செய்யும் மெஷன் வந்து அப்படியே வேலையில்லாமல் கிடக்கிறது. உள்ளூர் வேலைக்கு அதைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டாமா? தன்னாட்சி நடத்திக்கொண்டிருக்கிற அதிகாரிகள் தான் வெளிமாநிலங்களிலிருந்து பர்சேஸ் செய்கிறார்களா என்பதை அமைச்சரவர்கள் கவனத்தில் கொண்டு, அதை மாற்றவேண்டும்.

அதேபோன்று பஞ்சை உடைத்து பட்டை போட 87 இயந்திரங்கள் இயங்கிவருவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இயங்காத இயந்திரங்கள் எத்தனை என்பது குறிப்பிடவில்லை. அந்த விவரங்களை அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும். இந்த இயந்திரங்களையெல்லாம் குறிப்பாக திண்டுக்கல்லில் வாங்குவதாகச் சொல்கிறார்கள். குறிப்பிட்ட கதர் வாரியத்தில் பணியாற்றிய ஒருவரால் அந்த மெஷின் வாங்கப்பட்டதால், காலப் போக்கில் விரைவிலேயே அது செயலிழந்து விட்டதாகச் சொல்லப்படுகிறதே, அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் ஒரு விசாரணை நடத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

2,966 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. செயல்படுகின்ற சங்கங்களில் வசூலிக்கப்படுகின்ற கடன் தொகை எவ்வளவு வெளிமாநிலங்களிலிருந்து கொண்டுவரப்பட்டு செய்யப்படுகிறது. நான் ஒரு ஆலோசனை என்ற முறையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வன இலாக்காவிலிருந்து வேப்ப வித்துக்களைப் பெற்று இங்கேயே அவற்றைத் தயாரிக்கவேண்டும்.

அதுபோல் இலவம்பஞ்சு. வன இலாக்காவின் மூலம் இலவங்காய்களைப் பெற்று, இங்கேயே தயாரிக்கவேண்டுமென்று என்னுடைய ஆலோசனையாக தெரிவித்துக்கொள்கிறேன்.

கதர் வாரியத்திலுள்ள ஊழியர்களைப் பொறுத்தவரையில் கதர் உடைபோட வேண்டுமென்று சொல்லப்படுகிறதே தவிர, அவர்களுக்குக் கதர் அலவன்ஸ் கொடுக்கப்படுவதில்லை. அந்த அலவன்ஸ் கொடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக சில முறைகேடான விவரங்களைப் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த வாரியத்தில் அப்பாய்ண்ட்மெண்ட் கமிட்டி இருக்கிறது. வாரியத்தின் சேர்மன் இருக்கிறார்கள். நான்-அபீஷியல் மெம்பர்கள் இருக்கிறார்கள். இவர்கள் அப்பாயிண்ட்மெண்டில் என்ன வரைமுறை இருக்கிறதென்று தெரியவில்லை. டெக்னிகல் பர்சன்ஸ் யாருமே கிடையாது. அபாயிண்மெண்ட் கமிட்டி எப்படி செயல்படுகிறது என்பதற்காக ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன், சேர்மனின் சொந்தத் தம்பிக்கு ஒரு அபாய்ண்ட்மெண்ட் திருச்சியில், தொட்டியத்தில் மகேந்திரமண்டலத்தில் போடப்பட்டிருக்கின்றது. ஒரு முறை தவறு செய்தால் மேலும் தொடர்ந்து நிர்பந்தம் வருகின்றபோது, தவறு செய்கின்ற நிர்பந்தம் ஏற்பட்டு விடுகின்றது. மேலும்-5 பேருக்குப் போடப்பட்டிருக்கிறது. கண்காணிப்பாளர்கள் போஸ்ட். அந்த கண்காணிப்பாளர்களுக்குரிய கல்வித் தகுதியோ, அனுபவமோ, படிப்போ அற்றவர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். வாரிய அதிகாரிகள் எப்படி அதற்கு உடன்பட்டார்கள்? அந்த அப்பாயிண்ட்மெண்ட் கமிட்டி திருத்தியமைக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட அபாய்ன்ட்மென்ட் கமிட்டி இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் அதேபோல் சோப் யூனிட்டைப் பொறுத்தவரையில் தகுதியற்றவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இந்த வாரியத்தைப் பொறுத்தவரையிலும், இங்கே தொடங்கப்பட்ட பல கடைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஆனால் இதிலே 65 விற்பனை மையங்கள் இருக்கக்கூடிய சர்வோதய சங்கம் நல்லமுறையில் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன. அவை தன்னாட்சி அமைப்புக்கள். அவை சுயேச்சையாக இயங்குவதால் நல்லமுறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் அரசு நிலையிலே இருக்கக்கூடிய இந்த அமைப்புக்கள் மிகச் சரியான கண்காணிப்பு இல்லாத காரணத்தினாலேயும் அவர்களை கேட்க ஆளில்லை என்ற காரணத்தினாலேயும் கேரளாவிலே இருந்து வந்த ஆர்டர்கள் கேன்சல் செய்யப்பட்டு இருக்கின்றன. அதே போல் 3 கோடி ரூபாய் சோப்புக்கள் ஸ்டாக் இருக்கின்றன. அதே போல், கிட்டங்கள் 3 கோடி ரூபாய் அளவுக்கு ஸ்டாக் இருக்கின்றன. என்ன காரணம்? இவற்றுக்கு யார் பொறுப்பு?

ஆகவே, இந்த வாரியத்தினுடைய முழுமையான செயல்பாட்டைப் பற்றி ஒரு விசாரணையே நடத்தவேண்டும், என்று தெரிவித்துக் கொள்வதோடு, இறுதியாக ஒரே ஒரு விஷயத்தை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.



அதாவது, சேலத்திலே கொல்லிமலை அடிவாரத்திலே இருக்கின்ற ஆற்றங்கரையிலே இருக்கக்கூடிய வீரகனூரில் ஒரு பேப்பர் மில் அமைப்பது என்ற செயற்குறிப்பு இருந்து, பின்னர் அது அங்கே அமைக்கப்படவில்லை. அந்த பேப்பர் மில் அமைப் பதற்கு மிகப் பொருத்தமான இடமாக ஆற்றங்கரை ஓரமாக உள்ளது அந்த இடம். அந்த ஊரில் இருக்கக்கூடிய பெரும்பகுதி பிற்பட்ட மக்களின் தொழில் விறகு வெட்டுவது தான். அந்தத் தொழிலாளிகளின் மத்தியில் சுதந்திரத்திற்காக போராடிய 10 தியாகிகள் இருக்கிறார்கள்.

அது ஆற்றங்கரை ஓரத்திலே அமைந்திருக்கக்கூடிய ஊர். அந்த ஊரில் பேப்பர் மில் அமைப்பதற்குரிய லட்சணங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த இடத்தை, தேர்வு செய்யப்பட்ட இடத்தை புறக்கணித்துவிட்டு, இப்போது அது வீரபாண்டிக்கு மாற்றப்பட்டது என்று அறிகிறேன். அந்த மாற்றத்திற்கு என்ன காரணம் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இதோடு முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

திரு. இ. ராமன்; *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷனே இல்லை. அதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். எனவே, அவை அனைத்தையும் நீக்கிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. என். சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு அடுத்தப்படியாக தமிழகத்திலே கைத்தறி நெசவாளர்களைத் தான் தமிழகமே நம்பி இருக்கின்ற காரணத்தினாலும், நம்முடைய வாழ்வும் அதைச் சேர்ந்து இருக்கின்ற காரணத்தினாலும் இந்த மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், பண்டிகைக் காலங்களிலும் விசேஷ காலங்களிலும் தான் கைத்தறித் துணி விலை போகின்ற நிலை இருக்கின்றது. அதே போல, ரிபேட் கொடுக்கப்படுகிற காலத்தில் மட்டும் தான் அந்தக் கைத்தறித் துணிகள் எல்லாம் சிறப்பாக விற்பனை ஆகிக்கொண்டிருக்கின்றன.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. என். சண்முகம்] [1981 ஏப்ரல் 4

அந்தக் காரணத்தினால், அந்த ரிபேட்டுகள் அதிக பட்ச மாக கொடுப்பதற்குப் பதிலாக, மத்திய அரசு அதனுடைய காலக்கெடுவை குறைத்துக் கொண்டு வருகிற காரணத்தினால், கைத்தறித் தொழிலுக்கு மத்திய அரசின் கொள்கை ஒரு சவாலாக போய்விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும், ரிபேட் கொடுக்கின்ற காலம் குறைக்கப்படக்கூடாது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பின் கைத்தறித் துணி களுக்கு ரிபேட் அளிக்கப்படமாட்டாது என்று அரசு கூறி இருப் பதை, மத்திய அரசினுடைய கருத்தை தமிழக அரசு கடுமை யாக எதிர்க்க வேண்டும். ஏழாவது ஐந்தாண்டு காலத்திற்குப் பின்னால் தமிழகத்திலே உள்ள மக்கள், இந்தியாவிலே இருக்கின்ற நிலை எந்த அளவிற்கு உயர்ந்திருக்கும் என்று தெரியாத நிலையிலே, அதற்குப் பிறகு என்ன முடிவு எடுக்கப் போகிறோம் என்ற முடிவை எடுத்திருப்பது நியாயமாக்ப்படவில்லை. ஆகவே, தமிழக அரசு ஆணித்தரமாக, நியாயத்தின் அடிப்படையிலே, வாதாட வேண்டும், பெருவாரியான ரிபேட்டை நாமே பெற்று விடுகிறோம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்த ரிபேட் மறுக்கப்படுகிறதோ என்ற அச்ச உணர்வு இருக்கிறது. ஏனென் றால் ரிபேட்டின் பெருவாரியான அளவை, கிட்டத்தட்ட 75 சத வீதத்தைத் தமிழகம் தான்—நாம் தான் பெற்றுக் கொண்டிருக் கிறோம். ஆகவே, இதிலே கவனமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–20)

விவசாயத்தை அடுத்தபடியாக மக்கள் நெசவுத் தொழிலை நம்பிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், அரசு தருகின்ற சலுகைகளைக் கணக்கிட்டுப் பார்க்கின்றபொழுது, விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளை விட கைத்தறித் துறைக்குக் கொடுக்கின்ற சலுகை மிகக்குறைவு. கிட்டத்தட்ட அரசு விவசாயிகளுக்கு 100 கோடி ரூபாய் களைத் தள்ளுபடி செய்தும், மானியமாகவும் கொடுக்கின்ற நேரத்தில், கைத்தறிக்கு 16 கோடி ரூபாய் கொடுக்கிறது, இது மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை கொள்கை விளக்கப் புத்தகமே ஒப்புக் கொள்வதால் மாண்புமிகு முதல்வரவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டு சென்று, இந்த ரிபேட்டின் தொகையை உயர்த்திக் கொடுக்கவும், மானியத்தை அதிகமாகக் கொடுக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 4] [திரு. என். சண்முகம்]

தமிழகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகளின் எண்ணிக்கை மத்தியிலே குறைந்து வருவதால் பொதுவாகத் தமிழகத்தின் வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்படுவது வாடிக்கையான நிகழ்ச்சி யாக இருப்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே, கைத்தறி நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த, உயர் அதிகாரிகளுக்கு வசதி வாய்ப்புகளை நாமே ஏற்படுத்தித் தருவோம் என்று அரசு கூறியிருப்பதை நான் முழுமையாகப் பாராட்டுகிறேன். இப்படி கைத்தறி நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுமாகிய அனைத்துப் பிரிவையும் சேர்ந்த உயர் அதிகாரிகள் சென்றால், இந்தத் தொழிலின் நிலையையும், இந்தக் குடும்பங்களின் நிலையையும் உணர்ந்து, அது சம்பந்தமான உத்தரவுகளை இடுகின்ற நேரத்தில் அனுதாப உணர்வோடு இருப்பார்கள் என்பதைக் கருதி, இந்த அரசின் முடிவை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப் பயிற்சிக்காகச் செல்லும் வாய்ப்பு கிடைக்கின்றவர்கள் கணிசமாக மத்தியிலேயும்"மாநிலத்திலேயும், இருப்பதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித் துறை சிறப்பாக நடைபெற வேண்டுமென்பதற் காக வடார்க்காடு மாவட்டத்திற்குத் தனியாக உதவி இயக்கு நர் கொடுத்தமைக்காக மாண்புமிகு முதல்வரவர்களுக்கும், கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

1985—86-ல் இன்டர்நேஷனல் மூலமாக இரண்டு கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டதை வரவேற்கின்ற அதே நேரத்தில், இது மிகக் குறைந்த தொகை என்பதையும் தெரி வித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு இன்னும் அதிகமாக நிச்சயமாக ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கச்சாப்பட்டுக்கு மத்திய அரசு கலால் வரியிலிருந்து விலக்கு அளித்தமைக்காக மத்திய அரசைப் பாராட்டுகிறேன். கச்சாப் பட்டு உற்பத்தி செய்வதில் நாம் தன்னிறைவு அடையாத நிலை உண்மையிலேயே வருந்தத்தக்கது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயத் துறை மானியக் கோரிக்கையின் பொழுது மாண்புமிகு அமைச்சரவர்கள், ஆயிரக்கணக்கான ஏக்கர் கரும்பு பண்ணைகளில் பயிரிடப்படாமல் தரிசாக இருப்பதாகச் சொன் னார்கள். இப்படிப்பட்ட நிலங்களையெல்லாம் கைப்பற்றி பட்டு உற்பத்தி செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்

கொள்கிறேன். கிட்டத்தட்ட 100 டன் அளவிற்கு நாம்
இறக்குமதி செய்யும் நிலைமையிருக்கின்றபொழுது இப்படி
நிலத்தை வீணாகப் போட்டிருப்பது நியாயமாகப்படவில்லை.
இங்கே ஏராளமான ஆட்பலம் இருக்கிறது, தரிசு நிலங்களும்
இருக்கின்றன, அப்படியிருந்தும் பட்டைக் கூட உற்பத்தி செய்ய
முடியவில்லை என்றால், பட்டைக்கூட இறக்குமதி செய்ய
வேண்டுமென்றால், இங்கேயுள்ள தரிசு நிலங்களையும், ஆட்பலத்
தையும் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பது தான் ஆணித்
தரமாகத் தெரிகிறது. வேலை வாய்ப்பு குறைந்திருக்கிற இந்த
நாட்டில் இதையெல்லாம் ஊக்குவித்து வேலை வாய்ப்பை உரு
வாக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது உருவாக்கியிருக்கின்ற ஜவுளிக் கொள்கையை
நான் முழுவதும் ஆதரிக்கிறேன். கிட்டத்தட்ட ஒரு இலட்சம்
விசைத்தறிகள் அனுமதியோடு இயங்குகின்ற நேரத்தில், கிட்டத்
தட்ட ஒரு இலட்சம் விசைத்தறிகள் அனுமதி இல்லாமலும்
இயங்குகின்றன. இந்த நிலைமை மாறி எல்லா விசைத்தறி
களும் அனுமதியோடு இயங்குகின்ற நேரத்தில், அவைகள் அரசின்
கட்டுப்பாட்டிற்குள் வருவதால், அவைகளைக் கட்டுப்படுத்து
கின்ற உரிமை நமக்கு வருவதால், நான் இந்தக் கொள்கையை
முழுவதுமாக ஆதரிக்கிறேன்.

ஐந்து நூற்பாலைகளை ஆரம்பிக்கின்ற நேரத்தில், ஒட்டு
மொத்தமாக அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு வாய்ப்
பில்லாமல் இருப்பதால், அரிசனங்களுக்கு அதிகபட்ச வாய்ப்பு
கொடுத்து, இந்த நூற்பாலைகளிலே அவர்களுக்கு முழுநேர
வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

சோளிங்கர் தொகுதியில் அதிக நெசவுத் தொழிலாளர்கள்
இருப்பதைக் கருத்திற்கொண்டு அந்தப் பகுதியில் நெசவுத்
தொழில் ஏற்பட கூட்டுறவு பவர்லூம் ஏற்பட அனுமதி கொடுத்
ததற்கும், அந்தக் கட்டிடம் கட்டப்பட்டு முடிக்கின்ற நிலையில்
இருப்பதற்கும் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன். நெசவுத் தொழிலாளர்களுக்கு,
காப்பீட்டுக் கழகம் மூலமாக, கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு
ரூ. 10 ஒவ்வொரு மாதமும் கட்டினால், இறுதியில் ரூ. 33,500
கிடைக்கக் கூடிய சிறப்பான திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.
அதோடு நில்லாமல் அவர்கள் நடுவிலே இறந்தாலும், ரூ. 33,500
கொடுக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.
தொகை ஒன்றும் செலவாகி விடாது. அதில் பெரும்
வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த, நிச்சயமில்லா
ஆட்சிக்குப் பின், நிலையான வாழ்வு வாழ்ந்து பேரறிஞர் அண்ணா
அவர்களுக்கு இதனால் நிம்மதியான வாழ்க்கை கொண்டிருக்கும்
தெரிவித்துக் கொள்கிறேன். அமையும் என்று



நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை நான் முழுமை
யாக ஆதரித்து, அதிகபட்சமான நெசவுத் தொழிலாளர்கள்
வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய காவேரிப்பாக்கம், சோலிங்கர்
பகுதிகளுக்கு அதனை ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கதர் வாரியத்திலே, செங்கல் சூளைக்கு அதிகபட்சமான
கூட்டுறவுச் சங்கங்களை அனுமதித்து, ஏற்பாடு செய்ய வேண்டும்.
10 இலட்சம் வீடுகள் கட்ட இருக்கிற நிலையிலே செங்கல்
தேவை அதிகமாக இருக்கும் என்ற காரணத்தாலே, அந்தக்
கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகபட்சமான பணத்தை ஒதுக்கி, அதற்
கென மானியங்களை ஒதுக்கித்தந்து அந்தத் திட்டங்களை
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடைமுறைப்படுத்த வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியின் சார்பாக, முதல்
முதலாக, கோரிக்கை எண் 27-லே ஒருசில கருத்துக்களைச்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், கொள்கைக்
குறிப்பிலே பனை ஏறும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில்
எதுவும் சொல்லப்படவில்லை. தேசிய மரம் என்று சொல்லப்
படுகின்ற கற்பகம் என்று சொல்லப்படுகின்ற பனை மரத்தைப்
பொறுத்தவரையில், கொள்கைக் குறிப்பிலே எதுவும் சொல்லப்
படவில்லை. இந்தியாவில் இருக்கிற மொத்த பனைமரங்களில்
75% பனைமரங்கள் தமிழகத்திலே இருக்கின்றன; அதிலே 75%
பனை மரங்கள் குமரி மாவட்டத்திலே இருக்கின்றன. ஆகவே,
75% பனை ஏறும் தொழிலாளர்கள் குமரி மாவட்டத்தில்
இருக்கிறார்கள். அவர்களுடைய நிலை மிகவும் மோசமாக
இருக்கிறது, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்து
வதற்கும் எந்தவித திட்டமும் கொள்கைக் குறிப்பில் சுட்டிக்
காட்டப்படவில்லை. இங்கே 5 கோடி பனைமரங்கள் இருக்கின்
றன. அதில் ஏறக்குறைய 5 இலட்சம் தொழிலாளர்கள் இருக்
கிறார்கள். அந்த 5 இலட்சம் தொழிலாளர்களுக்கு அடிப்படை
வசதிகள் செய்து கொடுப்பதற்காக எந்த ஒரு கொள்கையையும்
இந்த அரசு வகுக்கவில்லை. குமரி மாவட்டத்தில் 2 இலட்சம்
தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இந்த 2 இலட்சம் தொழிலா
ளர்களுக்காக 126 சொசைட்டிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.
அந்த 126 சொசைட்டிகள் டார்மன்ட் ஸ்டேஜில் இருக்கின்றன.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1,200 சொசைட்டிகள்
இருக்கின்றன. அவையும் இயங்குவதாக இல்லை. காரணம்
என்ன? பனைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற பனை ஏறும்
தொழிலாளர்கள், அரிசன மக்களைவிட மிகப் பின்தங்கிய
நிலையில் இருக்கிறார்கள்; கல்வித் தரத்திலே பின்தங்கியிருக்
கிறார்கள். அவர்களுக்கு எந்த ஒரு அமைப்பும் இல்லாத
காரணத்தாலே, அரசினுடைய கவனத்திற்கு வராத காரணத்
தாலே, இத்தகைய நிலையிருக்கிறது. குறிப்பாகச் சொன்னால்,
தமிழகத்தைப் பொறுத்தமட்டில், கற்பகம் என்று சொல்லக்

கூடிய மரத்திலிருந்து, கருப்பட்டி, பனை ஓலை பொருட்கள் சர்க்கரை போன்ற பல்வேறு பொருட்களை செய்கிறார்கள். ஆனால், அவை சரியான முறையிலே உபயோகிக்கப்படவில்லை, அதற்குக் காரணம், அங்கே இருக்கக்கூடிய சங்கங்கள், கூலியை நிர்ணயித்துக் கொடுக்கவில்லை. மற்ற தொழிலாளர்களுக்குப் பலவித கோரிக்கைகளைச் சொல்ல சங்கங்கள் இருக்கின்றன. ஆனால், இந்தத் தொழிலாளர்களுக்கு எந்தச் சங்கமும் இல்லாத. காரணத்தினால் எந்த நன்மையும் இல்லை.

குமரி மாவட்டங்களில் 126 சங்கங்களிலே 50 சங்கங்கள் கூட இயங்கவில்லை. மொத்த சங்கங்களையும் நீங்கள் அமால்கமேட் செய்து, ஒரு கிராமத்துக்கு ஒரு சங்கம் அமைக்கவேண்டும். அங்கே ஒருபெய்ட் செக்ரட்டரியாக அரசாங்க அதிகாரியை நியமிக்க வேண்டும். அவருடைய சம்பளத்தை அரசாங்கமே கொடுக்கவேண்டும். ஒரு கிராமத்திற்கு ஒரு சங்கம் அமைத்தால், நிச்சயமாக அந்தச் சங்கங்கள் வளம் பெறும். ஆகவே, அத்தகைய நிலைமையை இந்த அரசு உருவாக்கவேண்டும்.

மேலும், அவர்களுக்கு 6 மாதம்தான் வேலையிருக்கும். ஒரு ஆள் காலையிலும் வேலை செய்யவேண்டும், மாலையிலும் வேலை செய்யவேண்டும். ஆனால், அவர்களுக்குக் கிடைக்கும் கூலி ரூ. 5, ரூ. 6 தான். எல்லா சமுதாயத்தினருக்கும் எல்லா தொழிலாளர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது. ஆனால், இவர்களுக்கு இல்லை. எனவே, மாண்புமிகு முதல்வருடைய 30 இலட்சம் வீடுகள் திட்டத்திலாவது பனை ஏறும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்,

(பிற்பகல் 12-30)

மேலும் அவர்களுக்கு ஜனதா இன்ஷூரன்ஸ் திட்டம் கிடையாது. அவர்கள் இறந்துவிட்டால் எந்த நன்மையும் கிடைப்பதில்லை.

ஒருவர் இறந்துவிட்டால் 10,000 ரூபாய் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு சட்டமன்றக் கூட்டத்திலேயே நான் இதுபற்றிக் குறிப்பிட்டேன். 1979 ஆம் ஆண்டில் இறந்தவர்கள் குடும்பத்திற்குக்கூட இன்னும் இந்த உதவித்தொகை வழங்கப்படவில்லை. பனை ஏறும் ஏழை தொழிலாளி 1979-ல் இறந்துவிட்டதாக சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டும் இன்னும் 10,000 ரூபாய் கொடுக்கப்படவில்லை என்றால் இந்தத் திட்டத்தின் பயனை அவர்கள் எப்படி அடையமுடியும்? ஆகவே, உடனடியாக இந்தத் திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்த வேண்டும். ஏற்கெனவே வழங்கப்படாமல் இருக்கிறவர்களுக்கும் இந்த 'அரியர்ஸை' கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



மேலும் பனை ஏறும் தொழிலாளர்களுக்கு வருடத்தில் 6 மாதம்தான் தொழில் இருக்கிறது; 6 மாதம் தொழில் இல்லை, அதனால் அவர்களுக்கு கோழிப்பண்ணை போன்றவை வைத்து, தொழில் நடத்த கடன் கொடுக்கவேண்டும். கோழி வளர்த்தல், ஆடு வளர்த்தல் போன்ற தொழில்களை உருவாக்கி, அவர்களுக்கு நிரந்தரமான தொழில் வசதியை ஏற்படுத்தி, வருவாய் கிடைக்க உதவி செய்யவேண்டும்.

இந்த ஏழைத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபாய் லோன் கொடுத்தால், தொழில் பாதிப்பினால் உரிய நேரத்தில் கட்ட முடியவில்லை என்றால் 'பீனல் இன்டரஸ்' எல்லாம் போடுகிறார்கள். ஒரு விவசாயி கட்ட முடியவில்லை என்றால் வட்டி, அபராத வட்டியை தள்ளுபடி செய்கிறார்கள். கடன் வசூலையும் தள்ளி வைக்கிறார்கள். ஆனால் இந்த பனை ஏறும் தொழிலாளியால் கட்டமுடியவில்லை என்றால் வட்டியும், அபராத வட்டியும் போடுகிறார்கள். இது நியாயமல்ல, அநியாயம். விவசாயிகளுக்கு சலுகை அளிப்பதைப்போல இவர்களுக்கும் சலுகை அளிக்க வேண்டும். வட்டி, அபராத வட்டிகளை தள்ளுபடி செய்ய வெண்டும்; மேலும் வட்டியில்லா கடன் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் 20,000 பனை ஏறும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். கடந்த ஆண்டில் அவர்களில் 400 பேர்களுச்குத்தான் கடன் கொடுத்திருக்கிறார்கள். குறைந்த பட்சம் 5,000 பேர்களுக்காவது கடன் கொடுத்தால்தானே அவர்களுடைய வாழ்க்கைத்தரம் ஓரளவுக்கு உயரும். ஆகவே, அதிகமான பேர்களுக்கு கடன் வழங்க தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று டிஃபங்க்ட் சொசைட்டிகளை அமால்கமேட் செய்யும்போது அந்த பனை ஏற்றுத் தொழிலாளர்களின் மக்களையே அதில் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே 50 வயதுக்குமேல் அவர்களால் பனை ஏற முடியாது. அப்படிப்பட்டவர்களுக்கு பென்ஷன் கொடுக்க வேண்டும். இப்போது அவர்களுக்கு பென்ஷன் இல்லை. அக்ரிகல்சரிஸ்ட்ஸ்க்கு பென்ஷன் இருக்கிறது. அதைப்போன்று 50 வயதான பனை ஏறும் தொழிலாளர்களுக்கு பென்ஷன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் எங்கள் மாவட்டத்தில் விளவங்கோட்டில் 'பாம் காம்பிளக்ஸ்' ஒன்று தொடங்கி, அதிலே 500 பேர்களுக்கு வேலை கொடுப்பதாகச் சொன்னார்கள். இன்னும் அந்த காம்பிளக்ஸ் தொடங்கப்படவில்லை. விரைவிலே அதைத் தொடங்குவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசிய ஒரு சிலர் மத்திய அரசின் கொள்கைகளைப் பற்றி குறைசொன்னார்கள். மத்திய அரசின் கொள்கை என்பது 'நேஷனல் பாலிசி'. நாடு முழுவதற்கும் ஒரு கொள்கையை வகுத்து செயல்படுத்தும் போது ஒரு சிலவற்றில் தமிழ்நாட்டுக்கு அது பாதிப்பை ஏற்படுத்தலாம். நேஷனல் டெக்ஸ்டைல் பாலிசியைக் கொண்டுவருகிறபோது அதனால் சில பிரச்னைகள் வரலாம். அதுபற்றி டெல்லியிலே இருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் பேச வேண்டும். கம்யூனிஸ்ட்டு கட்சி உறுப்பினர்களும் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் அங்கே பாதிப்பைப் பற்றி எடுத்துச்சொல்லி, ஏற்ற பரிகாரத்தைக் காணலாம். மாநிலத்திற்கு மாநிலம் பல பிரச்னைகள் இருக்கின்றன. தமிழ்நாட்டுக்கு என்று அவர்கள் ஒரு கொள்கையை வகுப்பதில்லை. நான் இதைச் சொல்வதினால் மத்திய அரசுக்கு வக்காலத்து வாங்குகிறேன் என்று நினைக்க வேண்டாம். மத்திய அரசின் நடவடிக்கைகள் சரியில்லை என்றால் அதை கண்டிக்க அங்கே எம்.பி.-க்கள் இருக்கிறார்கள். பாராளுமன்றத்திலே அவர்கள் பேசினால் அதற்கு அங்கே பொறுப்பிலிருக்கிற அமைச்சர்கள் பதில் சொல்வார்கள். அதை விட்டு விட்டு, சம்பந்தப்படாமல் இங்கே குறை சொல்வதில் பயனில்லை.

நெசவுத் தொழிலாளர்களுக்கு 7 ரூபாய், 8 ரூபாய்தான் கூலி கிடைக்கிறது. அவர்களுக்கு அதிக கூலி கிடைக்க வேண்டும் என்பதற்காக கைத்தறிகளை விட்டு பவ்வர் லூம்ஸுக்கு மாற்ற அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்பது மத்திய அரசின் கொள்கை. அதை தவறு என்று எப்படி சொல்லமுடியும்? அது தொழிலாளர்களை பழி வாங்குகிற கொள்கை, அவர்களுடைய மூச்சைப்பிடித்து கொலை செய்கிற கொள்கை என்று இங்கே சொன்னார்கள். நாடு முழுவதற்கும் ஒரு கொள்கையைச் செயல்படுத்துகிறபோது சில பிரச்சனைகள் ஏற்படலாம். அதை உரிய இடத்திலே சொல்லி, அதற்கு தீர்வுகாண வேண்டும். ஏதோ தமிழ்நாட்டிற்கென்றே இந்தக்கொள்கையைக் கொண்டுவந்தது போலவும், தமிழ்நாட்டில் இருக்கிற நெசவாளர்களை எல்லாம் மத்திய அரசு கொலை செய்வதற்காக கொண்டுவந்த கொள்கையைப் போலவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அவர்கள் நினைப்பதுபோல அல்ல. இது ஆல் இந்தியா பாலிஸி. அதிலே சில பாதிப்பு வரலாம். அதுபற்றி டெல்லியிலே பேச வேண்டும். அங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் இருக்கிறார்கள்; இடது கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக அங்கே பேசாமல் இங்கே பேசி, அரசியல் இலாபம் தேடலாமா என்று பார்க்கிறார்கள்.

திரு. கு. சுப்பராயன்: துணைத் தலைவரவர்களே, நான் சார்ந்திருக்கின்ற கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மாதிரி இங்கே ஒரு கட்சி தடையாது. வலது கம்யூனிஸ்ட் கட்சி என்று சொன்னார்கள். அது தவறு. இருக்கின்ற பெயரை முறையாகக் குறிப்பிட வேண்டும்.



நான் குறிப்பிட்டது, பவர் லூம்களை அதிகமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறது மத்திய அரசு. அது மத்திய அரசின் கொள்கை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இந்த பவர் லூம்களினால் தமிழ்நாட்டில் போட்டி ஏற்பட்டு ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தறிகளில் வேலை செய்கின்ற நெசவாளர்களின் நலன் கெடும், கைத்தறித் துறை அழிந்து போகும் என்பதால்தான் இதை ஆட்சேபிக்கிறோம்.

திரு. மா. சுந்தரதாஸ்: துணைத் தலைவர் அவர்களே, எங்கள் ஊரில் வலது கம்யூனிஸ்ட் கட்சி என்று சொல்வார்கள், அதனால்தான் அப்படிக் குறிப்பிட்டேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, பவர் லூம்களில் இதே நெசவாளர்கள் வரவேண்டும் என்பது தான் மத்திய அரசின் கொள்கை. அதற்கு மானியம் கொடுக்கவும் மத்திய அரசு தயாராக இருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் பாதிப்பு இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அதை நிவர்த்தி செய்கிற பொறுப்பு மத்திய அரசுக்கு உண்டு. ஆனால் எடுத்த எடுப்பிலே தமிழ்நாட்டு நெசவாளர்களை மூச்சை அடக்கி கொன்று விடுகிறார்கள் என்று சொல்வதுதான் தவறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி அந்தக் கட்சியினர் ஏதேனும் சொல்லவேண்டும் என்றால் அதனை பாராளுமன்றத்தில் சொல்லி அங்கே அமைச்சரிடத்திலே பதிலை வாங்கியிருக்கலாம். எனவே மத்திய அரசின் கொள்கை சரியான கொள்கை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரிபேட்டைப் பொறுத்தவரையில் எங்களுடைய மாவட்டத்தில் ஹேன்ட்லூம் துணிகளுக்கு ரிபேட் கொடுக்கப்படவில்லை என்ற உணர்வு இருக்கிறது. எங்கள் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப் பட்ட துணிகள் எல்லாம் தேங்கிக் கிடக்கின்றன. அந்தத் துணி களுக்கு உடனடியாக எக்ஸ்போர்ட் பண்ணுகின்ற வாய்ப்பு அல்லது அவற்றை விற்பதற்குரிய வகையில் பிஸினஸ் பிடித்துக் கொடுக்கவேண்டும் என்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

எக்ஸைஸ் பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். சாராயக் கடைகள் திறக்கப்பட்டு இருக்கின்றன. சாராயக் கடைகளுக்கு லைசன்ஸ் கொடுப்பது பற்றி நீங்கள் எங்களுக்குப் பிரச்னையில்லை. ஆனால் அதில் இன்று நடந்து கொண்டிருக்கிற முறை என்ன என்பதைப் பார்க்கவேண்டும். எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சாராயக் கடைகள் ஏராளமாக இருக்கின்றன. prohibition is still there. இருந்தாலும் சாராயக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒரு கடை இருந்தால் பரவாயில்லை. தெருவுக்குத் தெரு சாராயக் கடைகளாக இருக்கின்றன. இப்படி பல இடங்

களில் இருப்பது பற்றி அதிகாரிகளிடத்தில் சொன்னால் ஆவன செய்வதாகச் சொல்கிறார்கள். ஆனால் ஒன்றும் செய்வதில்லை. ஏ.டி.—யைப் பார்க்கவேண்டும் என்று சொல்கிறார்கள். ஏ.டி.யிடம் கேட்டால் அஸிஸ்டென்ட் கமிஷனரிடம் கேட்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி மோசமான நிலைமை இருக்கிறது. குழித்துறையிலே ஒரு ஆறு வருகிறது. அந்த ஆற்றின் கரையில் வரிசையாக சாராயக் கடைகள் இருக்கின்றன. அவற்றை யார் வைத்திருக்கிறார்கள் என்பதே தெரியவில்லை. கேட்டால் ரவுடிகளை வைத்துத் தாக்குவதாகச் சொல்கிறார்கள். மக்கள் எங்களிடத்திலே முறையிடுகிறார்கள். நாங்கள் ரவுடிகளை வைத்துத் தாக்க முடியுமா? எனவே இதில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அடுத்த வருஷம் நீங்கள் பிரகிபிஷன் கொண்டு வரலாம். ஆனால் இப்போது இருக்கின்ற நிலைமையில் ஒரு கடை என்று கொடுத்தால் பரவாயில்லை. பல பிரான்சஸ் ஓப்பன் பண்ணிக்கொள்கிறார்கள். அது என்ன கணக்கு என்றே தெரியவில்லை. அதற்கு உரிய ரெக்கார்டே இல்லை. எங்கே பார்த்தாலும் நிறைய கடைகளை ஓப்பன் பண்ணியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருந்தால் அரசின் நல்லெண்ணத்தைக் கெடுத்துவிடும். எனவே உடனடியாக உத்தரவிட்டு ஒரு கடை என்று வைப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள். கிராமங்கள் முழுவதும் கடைகளை வைத்தால் அரசினுடைய பெயர் கெடும்; மக்களும் அவதிப்படுகிறார்கள் என்பதை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவந்து என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் வருட கைத்தறித் துறை மானியத்தை வரவேற்றுப் பேசி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய பார்வையில் எந்தத் துறையும் சிறப்பாகத்தான் இருக்கும் என்பதற்குக் கைத்தறித் துறையும் விதிவிலக்கு அல்ல. அறிவை வளர்ப்பது நூல்; மானத்தைக் காப்பது நூல் என்று சொல்வார்கள். அந்த நூலாலான ஆடைகளை ஏற்படுத்தி ஏழைகள் பயன்படுத்தக்கூடிய வண்ணம் இதிலே அரசுக்கு நஷ்டம் வந்தாலும்கூட அதைப் பற்றிக் கவலைப்படவில்லை என்ற நிலைமையில் ஜனதா ஆடைகளை ஊக்குவித்து விற்பனை செய்வது என்பது பாராட்டுக்குரிய நல்லதொரு திட்டமாகும் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நெசவாளர்கள் நல்வாழ்வு பெறுகின்ற வகையில் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் என்ற வகையில் 1,12,000 நெசவாளர்களை இந்தத் திட்டத்தின் அடிப்படையில் கொண்டு வந்து அதன்படி இறந்து போனால் ரூபாய் 5,000 வழங்குவது என்பது வாழ்த்துவதற்கும் பாராட்டுதலுக்கும் உரிய ஒன்றாகும். மத்திய அரசானது 1986-87 ஆம் ஆண்டை கைத்தறியை நவீனப்படுத்தும் ஆண்டாக அறிவித்துள்ளது மகிழ்ச்சியைத் தருகிறது. தமிழ்நாட்டில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 1,200



உள்ளன. இவை அனைத்துமே இலாபகரமாகச் செயல்படுகிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அந்த அளவுக்கு வாட்டத்தில்தான் அவை சென்றுகொண்டு இருக்கின்றன. அவ்வாறு நஷ்டத்தில் செல்வதற்கு என்ன காரணம் என்பதை அலசிப் பார்ப்போமேயானால் நன்றாகத் தெரிகிறது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் சங்கத்திலே இருந்து துணிகளை எடுத்துக்கொள்கிறது அப்படி துணிகளை எடுத்துக் கொண்டபின் அதற்கான பணத்தைப் பட்டுவாடா செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. உதாரணமாக ஒன்றைச் சொல்கிறேன். ஒரு சங்கத்திலிருந்து ஒரு இலட்சம் ருபாய்க்குக் கொள் முதல் செய்கிறார்கள் என்றால் அந்தப் பணத்தைத் திரும்பப் பட்டுவாடா செய்வதற்கு ஏறத்தாழ 6 மாதம் முதல் ஒரு வருடம் வரையில் காலம் ஆகிறது. இதன் காரணத்தால் 6 மாதம் முதல் ஒரு வருட காலத்திற்குரிய அந்த வட்டியை சங்கமே ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது. இப்படிப் பார்ப்போமேயானால் அந்த சங்கமானது அந்த வகையிலே அந்த வட்டியின் மூலமாக நஷ்டத்தை அடையக்கூடிய ஒன்றாகத்தான் இருக்கிறது. அதுமட்டுமல்ல அந்த சங்கத்திற்கு தேவையான நூல்களை கொள்முதல் செய்வதற்கு, கடனாக கொடுப்பதற்கு எந்த ஏற்பாடும் இதுவரையில் செய்யப்படவில்லை. ஆகவே தமிழக அரசு கோவாப்டெக்ஸின் மூலமாக கூட்டுறவுநூற்பாலைகளை அணுகி, கடனாக அவர்களுக்கு நூல் கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-40.)

அடுத்தபடியாக தள்ளுபடி தொகை. அதுவும் இந்தத் துறையில் நஷ்டம் ஏற்படுவதற்கான காரணங்களில் ஒன்று. துணிகளின் தேக்கத்திலே ஏற்படக்கூடிய நஷ்டத்தை அரசு ஏற்றுக் கொள்கிறது. ஆனால் அந்த நஷ்டஈடு பணம் உடனடியாக தரப்படுகிறதா என்று கேட்டால் நிச்சயமாக உடனடியாக பெறுவதற்கு வாய்ப்புகள் இல்லை. ஏறக்குறைய 2 வருட காலங்களுக்கு மேலாகக்கூடிய நிலையில்தான் இருக்கிறது. அதுவரையில் ஆகக்கூடிய வட்டி நட்டத்தை அந்தச் சங்கமே ஏற்கக்கூடிய அவல நிலைதான் இருக்கிறது. ஆகவேதான் இப்படிப்பட்ட அந்தக் கூட்டுறவு சங்கங்களில் ஏற்படுகிற நஷ்டத்திற்கு, இதுவும் ஒரு காரணம் என்று சொல்கிறேன்.

கைத்தறித் துணிகள் அதிகமாக விற்பனையாவதற்கு தள்ளுபடி வழங்குவது மிகமிக முக்கியமான ஒன்றாகும். 1984-85-ல் 60 நாட்களுக்கு வைத்திருந்தார்கள். 1985-86-ல் 45 நாட்களுக்கு என்று ஆக்கினார்கள். 1986-87-ல் 30 நாட்களுக்கு மட்டும் என்று அதை குறைத்து மத்திய அரசு அறிவித்திருக்கிறார்கள். மேலும் மொத்த விற்பனையின் மீதான தள்ளுபடி தொகையை—சலுகையை அறவே நீக்கியது அதிக விற்பனையை பாதிப்பதாகத்தான் உள்ளது என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே அரசு அதனை மாற்றி முன்பு எவ்வாறு இருந்ததோ, அதேபோல

மொத்த விற்பனையின் மீதான தள்ளுபடி தொகை 15 விழுக்காட்டுகளை திரும்ப கொண்டு வர நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதன் மூலமாக நிச்சயமாக விற்பனை இன்னும் கூடுவதற்கு ஏதுவாகும் என்பதையும் இந்த நேரத்திலே கூற விரும்புகிறேன்.

மத்திய அரசு, இந்த தள்ளுபடி திட்டம் 7-வது ஐந்தாண்டுக் காலத்திற்கு பின்பு அமலில் இருக்காது என்று கூறியிருப்பது உண்மையிலேயே வருந்தத் தக்கது என்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்கிறேன். தற்போதுள்ள சங்கங்களின் நிலையைப் பற்றிச் சொல்லவேண்டுமானால் சுமார் 200-க்கும் அதிகமான சங்கங்கள் தற்போதுள்ள சூழ்நிலையில் செயல்பட முடியாமல் தான் இருக்கின்றன என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் 800-க்கும் மேற்பட்ட சங்கங்கள் நட்டத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று சொன்னால், அது நிச்சயமான உண்மை. அப்படிப்பட்ட நிலைமையிலே நல்ல லாபகரமாக நடக்கக்கூடிய சங்கங்கள் 400-க்கும் உள்ளாகத்தான் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே நட்டத்தில் ஓடக்கூடிய சங்கங்களுக்கும், இயங்காமல் இருக்கக்கூடிய சங்கங்களுக்கும் தேர்தல் நடத்தி, அதிலே சரியான தலைவர்களைத் தேர்ந்தெடுத்து அது நல்ல முறையில் செயல்படும் வண்ணம் ஆவன செய்யவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றி சொல்ல வேண்டுமானால், அதை ஆரம்பித்த ஆண்டு 1975 ஆகும். முதலிலே ரூ. 500 என்று ஆரம்பித்தார்கள். புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஆராய்ந்து, நெசவாளர்களுக்காக ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தது. நெசவாளர்கள் இறந்தால் காப்புத் தொகையாக ரூபாய் மூவாயிரத்தையும், கோவாப் டெக்ஸ்ஸுடைய பங்காக இரண்டாயிரத்தையும் தருகிறார்கள். ஆனால் அந்த இரண்டுத் தொகையுமே சேர்த்துக் கொடுக்கப்படுகிறதா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. ஒன்றை முதலிலே தருகிறார்கள், அடுத்ததாக பிறிதொன்றைத் தருகிறார்கள். இரண்டையும் தனித்தனி தொகையாகத்தான் கொடுக்கிறார்கள். முழுமையான தொகையாக அது கிடைக்கின்ற போதுதான் அது உண்மையாக அம்மக்களுக்கு பயன் தரக்கூடிய ஒன்றாக இருக்கும். அத்தோடு இரண்டையும் பெறுவதற்கான கால வேறுபாடு ஓராண்டு என்றுகூட சில நேரங்களில் ஆகிறது. ஆகவே இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து 5 ஆயிரமாக தருவதற்கு அரசு ஆவன செய்யவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அத்தோடு இந்த திட்டத்திற்கு 55 வயதை வயது வரம்பாக வேறு வைத்திருக்கிறார்கள். 55 வயதிற்குள் இறந்தால் தான் அந்த திட்டத்தினுடைய பயன் கிடைக்கும் என்று சொல்



கிறார்கள். ஆனால் நெசவாளர்கள், அவர்கள் நல்ல பலம் உடையவர்களாக இருந்தால், அவர்களுடைய ஃபிசிக் என்று சொல்லுவார்களே, அப்படி உடல்கட்டோடு அவர்கள் நன்றாக இருப்பார்களேயானால், 70 வயது வரைகூட அவர்கள் அந்த நெசவுத் தொழிலைச் செய்வார்கள். ஆகவே அவற்றை எல்லாம் ஆராய்ந்து அறிந்த பிறகு, அவர்களுக்கு நிர்ணயித்திருக்கக் கூடிய வயது வரம்பை தளர்த்தவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு நல்ல நெசவாளி, நல்ல திடகாத்திரமான நெசவாளி அந்த நெசவுத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார் என்றால், அவர்களுக்கு தள்ளாமை என்று வரக்கூடிய சமயத்திலே, அவர்களே அந்த சங்கத்தினுடைய உறுப்பினராக இருப்பதிலிருந்து நீங்கக் கூடிய நல்ல நிலைமையிலே இருக்கத்தான் அவர்கள் விரும்புவார்கள். ஆகவே அவசியம் இந்த வயது வரம்பை நீக்க ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். வீடு கட்டும் திட்டத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், ஒரு குறிப்பிட்ட சங்கம் மட்டும் தான் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் அனைத்துச் சங்கங்களுமே அந்த முறையில் செயல்பட்டால்தான் நெசவாளிகள் நல்ல முறையில் பயன்பெற முடியும். ஆகவே, எவ்வாறு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி செய்துக் கொடுப்பதற்காக தனியாக ஒரு வாரியம் அமைத்திருக்கிறதோ அதைப் போல நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கும் ஒரு வாரியத்தை தனியாக அமைத்திட வேண்டும் என்று கோரிக் கொள்ள விரும்புகிறேன். கைத்தறி நெசவாளர் வளர்ச்சி அறக்கட்டளையானது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் பெயரால் ஏற்படவிருக்கிறது. அது மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. அந்தச் சங்க உறுப்பினர்களுக்கு குழந்தைகள் படிக்க தொகை வழங்குதல் போன்றவற்றைப் பார்க்கிறபோது சிறப்பான திட்டமாக இருக்கிறது. ஆனால் 19-வது பக்கம் 7-வது பாராவில் கைத்தறித் துறைக்கு சிறந்த சேவை செய்த தலைவர்களை கௌரவிக்கும் பொருட்டு சிலைகள் நிறுவப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். இது தேவைதானா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மகாத்மா காந்தி, பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், காமராசர் போன்ற பெரியவர்களுக்கு சிலைகளை வைத்திருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் இந்தப் பாராவில் சொல்லப்பட்டிருக்கும் இப்படிப்பட்டவர்களுக்கு சிலைகள் அவசியம் தானா? அதற்கு எவ்வளவு செலவு ஆகிறது? அவை உண்மையிலே பயன்படுமா? என்பதைப் பார்க்க வேண்டும். இப்போது உயிரோடு இருப்பவர்களுக்கும் சிலைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இப்படி சிலைகளை அமைப்பதைத் தவிர்த்து அதற்குரிய தொகையை அந்தச் சங்கங்களுக்கும் அந்தத் தலைவர்களின் குடும்பங்களுக்கும் அளித்து அவர்கள் பயனடையச் செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல இப்போது அரசு ஊழியர்களுக்கு பண்டிகை காலங்களில் தான் கதர், கைத்தறித் துணிகளை வாங்க கடன் கொடுக்கிறார்கள். அப்படியில்லாமல் எல்லா நேரத்திலும் அவர்களுக்கு துணிகளை கடனில் வழங்கி அவர்களின் சம்பளத் திலிருந்து பிடித்துக் கொள்ளும் ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அந்த முறையில் செய்து கைத்தறித் துணிகளின் விற்பனையில் நல்ல நிலைமைகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா மாவட்டமாக இருக்கிற திண்டுக்கல் பகுதியில் நூற்பாலைகள் அமைப்பதற்கு தட்ப வெப்ப நிலை மிகவும் பிரமாதமாக இருக்கிறது. அங்கே ஏறத்தாழ 10 ஆயிரம் தறிகளுக்கு மேலாக தனியார் தறிகள் இருக்கின்றன. ஆனால் ஐந்து கூட்டுறவுச் சங்கங்கள் தான் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலையில் அங்கே இன்னும் அதிக மான கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே பேரறிஞர் அண்ணா அவர் களின் பெயரால் பேரறிஞர் அண்ணா கூட்டுறவு நூற்பாலை நிறுவ ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விற்பனை வரியைப் பொறுத்தவரையில் இந்த பட்ஜெட்டில் 3 சதவீதம் என்று சீரமைத்து இருக்கிறார்கள். ஆனால் விசைத்தறிக்கு 4 சதவீதமாக இருந்தது 3 சதவீதமாக ஆகியிருக்கிறது. இது ஏதோ விசைத்தறிக்கு ஆதரவு கொடுப்பதைப் போல ஒரு கருத்து இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு விவசாயிகளுக்கு 500 கோடி அளவிற்கு எப்படி தள்ளுபடி செய்தார்களோ அதைப் போல இந்த விற்பனை வரியை முழுவதுமாக தள்ளுபடி செய்து நெசவாளர்களுக்கு நல்ல பல நன்மைகளைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப் பெற்றது.)

திரு. ஆர். கோவிந்தசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாநில ஆயத்தீர்வை, கைத்தறியும் நெசவுத் தொழிலும், கதர்த் தொழில் மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருபத்தெட்டு 12 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். இரண்டு நாட்களாக அவர்கள் [illegible] மூன்று நாட்களாக [illegible] அவர்கள் வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள் [illegible] அவர்களுக்கு கைத்தறியிலே மாஸ்டர் வீவர்கள் [illegible] வேலை இல்லை. அதேபோல சொசைட்டிகளிலும் வேலை இல்லை [illegible] இந்த மாநிலத்தில் [illegible] கைத்தறியாளர்கள் இருக்கிறார்கள் [illegible] இருப்பவர்களின் எண்ணிக்கை [illegible] இருக்குமென்று நான் கருதுகிறேன் [illegible] இன்றைக்கு மோசமாக இருக்கிறது.





பாரதியார் அவர்கள் பாடுகிறபோது, ‘தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்’ என்று பாடினார். ஆனால் இன்றைக்கு ஒரு கோடி மக்களுக்கு மேல் வீதியில் வருகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தனியார்களிடத்தில் பல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள துணிகள் தேங்கியிருக்கிறது. அதேபோல சொசைட்டிகளில் பல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணி தேங்கியிருக்கிறது. இப்படி ஒரு இருண்டச் சூழ்நிலை இந்த துறையில் ஏற்பட்டிருக்கிறது. மாஸ்டர் வீவர்களிடத்தில் எடுத்துச் சொன்னால் அவர்களுக்கு கூலி இல்லையென்று சொல்கிறார்கள். இரண்டு நாளைக்கு ஒருமுறை, மூன்று நாளைக்கு ஒரு முறை 10 ரூபாய் கொடுக்கிறார்கள். சொசைட்டில் சென்று பார்த்தால் நிலைமை அதைவிட மோசமாக இருக்கிறது. அவர்கள் கூலியே தர முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலை ஏன் ஏற்பட்டது என்று சிந்திக்க வேண்டாமா? இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலை இந்தத் துறையில் முன்காலத்தில் ஏற்பட்ட போது மதிப்பிற்குரிய காமராசர் அவர்களும், இன்னும் சொல்லப் போனால் பேரறிஞர் அண்ணா அவர்களும் கூட வீதி களில் துணிகளை விற்றிருக்கிறார்கள். யாரும் இல்லையென்று மறுக்க முடியாது. இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலை ஏன் வந்தது என்பதைப் பார்க்க வேண்டும். இங்கே நம்முடைய மாநிலத்தில் கைத்தறித் துணிகளை யாரும் அதிகமாக அணி வதில்லை. கைலி என்று எடுத்துக் கொண்டால் மேற்கு வங்கத்தில் அதிகமாக அணிகிறார்கள்.

(பிற்பகல் 12.50)

அதேபோன்று, மேலை நாடுகளுக்கு, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அமெரிக்க டிசைன் என்று உருவாக்கி நல்லமுறையில் அனுப்பிவைத்தார்கள். அங்கே பல கோடிக்கணக்கான மீட்டரை விற்றார்கள். ஏன் இப்போது அங்கே அனுப்ப முடியவில்லை. அதற்கு அரசு ஏன் நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை? அப்படி மேற்கொண்டு இருந்தாலும் ஏன் சரியான அமைப்பின் மூலமாக நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. நம்முடைய அம்பாசிடர் மூலமாக அவர்களிடத்திலே பேசி, நல்ல உறவை ஏற்படுத்தி, நம்முடைய கைத்தறித் துணிகளை ஏன் மேலை நாடுகளுக்கு அனுப்பக்கூடாது.

சென்ற காலங்களில் நம்முடைய கைத்தறித் துணிகளை மேலை நாடுகளுக்கு, அதுவும் மில்லே இல்லாத காலத்தில் கூட, அனுப்பி சீரும் சிறப்பும் பெற்ற இந்தக் கைத்தொழில் இன்றைக்கு மிகவும் பின்தங்கியிருக்கிறது. அந்த ஏழைத் தொழிலாளர்கள் மிகக் குறைந்த கூலியைச் சம்பாதிக்கிற நிலைமையைப் பார்த்துத் தான் மதிப்பிற்குரிய ராஜீவ் காந்தி அவர்கள் என்ன செய்திருக் கிறார்கள் என்றால், டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தைக் கூட்டி, கைத்தறிக்கு என்று 20 ரகங்களை ஒதுக்கியிருக்கிறார்கள். அதை எப்படி ஒதுக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு மில்லிலே

இப்படிப்பட்ட டிசைன்களை உருவாக்கக்கூடாது; விசைத்தறிகளில் உருவாக்கக் கூடாது என்று சொல்லி, அதற்காக திட்டமிட்டு, அதிகாரிகளை நியமித்து இருக்கிறார்கள். அப்படி அவர்கள் மீறி ஓட்டுவார்களேயானால், அது மில்லாக இருந்தாலும் சரி, அல்லது விசைத்தறியாக இருந்தாலும் சரி, அவர்கள் ஓட்டுவதினாலே, இந்தக் கைத்தறித் தொழில் நசிந்துவிடும் என்ற நிலைமை வருமானால், அவர்கள் மீது தக்க நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்று அதற்கான அதிகாரிகளை நியமித்து நடவடிக்கை மேற்கொள்வதற்காக இந்த நாட்டினுடைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் டெவலப்மெண்ட் கவுன்சிலைக் கூட்டி திட்டமிட்டு இருக்கிறார்கள்.

மேலும் நம்முடைய தமிழக அரசின் சார்பிலே வெளிநாடுகளுக்கு ஒரு டெபுடேசன்போல் சென்று நம்முடைய கைத்தறியின் தரத்தை உயர்த்த ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது? மேலும் நம்முடைய துணிகள் எல்லாம் வழக்கமாக பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்குத்தான் சென்று அங்கே வியாபாரம் நடப்பது வழக்கம். இப்போது நாம் பார்ப்பது என்ன வென்றால்' அங்கே அனுப்பாததால், இங்கே துணிகள் தேக்கமாக இருக்கின்றன.

அதுமட்டுமல்ல, துணிகளின் தரம் மிகவும் குறைவாக இருக்கிறது. மில்களில் தனியார்களுடைய மில்லிலே, ஜப்பான் முறைப்படி ஒரு தறியிலே 4 பேர்கள் நூலைத் தயாரிக்கிறார்கள். ஆனால் நம்முடைய கூட்டுறவு சொசைட்டிகளில் 16 பேர்கள் தேவைப்படுகிறது. அதனுடைய சம்பளம் 13,400 ரூபாய். ஆனால் அவர்கள் தயாரிக்கக்கூடிய மில்லிலே ஒரு தறிக்கு 4 பேர் ள் இருந்தால் போதும். கிட்டத்தட்ட 3,600 ரூபாய் சம்பளத்திலே அவர்கள் வேலை வாங்குகிறார்கள். அதுமட்டுமல்லாமல் தரமான நூலைத் தயாரிக்கிறார்கள். மக்களும் அதை விரும்பி வாங்குகிறார்கள். தனியார்கள் நல்லமுறையில் துணிகளைத் தயாரித்து, அதை மார்க்கெட்டிலே கொண்டு வந்து போட்டியிடுகிறார்கள். ஆனால் நம்முடைய நூலின் விலையும் அதிகம், ஆனால் தரமோ குறைவு. அதே நேரத்தில் சாயத்தின் விலையும் அதிகமாக இருக்கிறது. மேலும் கமிஷன் பேசிஸ் அதிகமாக உள்ளன. ஆகையினாலேதான் நம்முடைய தைத்தறித் தொழில் அந்த அளவிற்கு பின்தங்கிவிட்டது என்பதை இந்த நேர்த்தில் நான் உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு ஒரு கைலி கோ-ஆப்பரேட்டிவ்விலே வாங்கினால், அண்ணனுக்கு வாங்கினால், அதை தம்பிதான் கட்டவேண்டியிருக்கிறது. அந்த அளவிற்கு அதனுடைய அளவுகளும் தரங்களும் இருக்கின்றன. 8 முழம் வேஷ்டியை சொசைட்டியிலே வாங்கினால்,—முன்னால் அதற்கு மதிப்பும் மரியாதையும் உண்டு,—டோபிக்குச் சென்று வரும்போது, 5½ அல்லது 6 முழமாகத்தான் வருகிறது. இப்படி தரம் இருந்தால் எப்படி இந்தக் கைத்தறிக்கு உத்தரவாதம் வரும். எப்படி மக்கள்



விரும்புவார்கள், என்பதை இந்த நேரத்தில் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இப்போது சொசைட்டிகளைப் பார்க்கும் போது, அங்கே என்ன நடக்கிறது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். அதிகாரிகளுடைய ஆட்சி நடக்கிறது. சொசைட்டித் தலைவர்களுடைய ஆட்சி நடக்கிறது. என்ன நடக்கிறது சொசைட்டிகளிலே, 5 பேர்களை உறுப்பினர்களாகப் போடுகிறார்கள். அந்த சொசைட்டி உறுப்பினர்கள் என்ன செய்கிறார்கள். அவர்களுக்கு சம்பந்தப்பட்ட, அரசாங்கம் கொடுக்கும் அந்த ரிபெட் சம்பந்தப்பட்ட பணங்களை முன்கூட்டியே மொத்த வியாபாரிகளுக்கு கொடுத்துவிட்டு, பின்னால் பணத்தை தனியாக 10 ரூபாய் ஒரு பீசுக்கு என்று வாங்கிவிடுகிறார்கள். இப்படி நடக்கிறதா? இல்லையா? இதற்கு ஆதாரம் வேண்டுமென்றால் என்னால் காட்ட முடியும்.

அதுமட்டுமல்லாமல் என்னுடைய தொகுதியில் உள்ள சொசைட்டியில் சண்டை பெரிதாக இருக்கிறது, அவர்கள் பங்குச் சண்டை பெரிதாக இருக்கிறது. இதையெல்லாம் மாற்ற வேண்டும். பல சொசைட்டிகளில் இப்படி இருக்கின்றன. எனவே இந்தச் சொசைட்டிகளை எல்லாம் நல்லமுறையில் ஒழுக்கமான முறையில் இயங்கச் செய்யவேண்டும்.

மேலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மத்திய அரசு இன்றைக்கு கைத்தறிக்கு, ஜனதா போன்ற ரகங்களைத்தான் ஒதுக்கியிருக்கிறது என்று சொல்கிறார்கள். நான் அவர்களைப் பார்த்துச் சொல்லவிரும்புகிறேன். தயவு செய்து பிரச்சனையை திசை திருப்பாதீர்கள். திசை திருப்புவது நல்லதல்ல. இன்றைக்கு சீட்டி, காடா, மற்ற சட்டைகள் 8 முழ வேஷ்டிகள் எல்லாம் அந்த மில்லிலே அவர்கள் தயாரிக்கவில்லையா? மில் முதலாளிகள் எல்லாம் உயருகிறார்கள் என்றால், இந்த நாட்டினுடைய பணம் இங்கேதான் இருக்கிறது, வெளியே போவதில்லை. அது இந்த நாட்டிலே இருக்கக்கூடிய செல்வம். ஆகவே பிரச்னையை திசை திருப்பி மக்களை வேறு எண்ணத்திற்குக் கொண்டு போகாதீர்கள்.

இங்கே 67லே வந்த Mr. Khrushchev என்ன சொன்னார்கள்? இந்த நாட்டிலுள்ள கம்யூனிஸ்டுகள் ஆக்க வேலைகள் செய்வதை விட அழிவு வேலை செய்கிறார்கள் என்று. நான் சொல்லவில்லை. Russian Leader சொன்னார்கள்: அப்படி திசைத் திருப்பாதீர்கள். மத்திய அரசு நிச்சயமாக கைத்தறித் துறைக்கு முதலிடம் கொடுத்து மக்களுக்கு வேண்டிய நன்மைகளையெல்லாம் செய்து கொண்டிருக்கிறது, பசியால் வாடிக் கொண்டிருக்கக் கூடிய, இன்றைக்கு என்னுடைய தொகுதியிலே உண்ணாவிரதம் இருக்கக்கூடிய 12 ஆயிரம் கைத்தறி தொழிலாளர்களையும், இந்தத் தமிழகத்திலே இருக்கக்கூடிய

35 லட்சம் கைத்தறி தொழிலாளர்களையும் காப்பாற்ற வேண்டியது இந்த அரசினுடைய கடமை, மத்திய அரசினுடைய கடமை நம்முடைய கடமை என்று சொல்லி எனக்குச் சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது மேற்கு வங்கத்திலே கைத்தறி அழிந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள் கைத்தறி இந்தியாவிலேயே அழிந்து கொண்டு வருகிறது என்று அவர் ஒத்துக்கொள்கிறாரா அல்லது மேற்கு வங்கத்தில் மட்டும்தானா? உத்திரப்பிரதேசத்தில் கைத்தறித் தொழில் பெருமளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த வடமாநிலத்திலேதான் அழிந்துள்ளதே தவிர, மேற்கு வங்கத்திலே மெஜாரிட்டியாக அழிந்தது என்று இங்கிருந்து சென்று கல்கத்தாவை சென்டராக வைத்து விநியோகம் செய்பவர்களின் கருத்து.

திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அழிவது என்று சொல்வது—விற்பனை என்பதைத்தான் அவர் அப்படி குறிப்பிடுகிறார்.

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாலை மற்றும் கதர்த் துறை, மது விலக்கு, ஆயத்தீர்வை மானிய கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய ஒரு சில கருத்துக்களை இங்கே எடுத்து வைக்கிறேன்.

புதிய கூட்டுறவுச் சட்டத்தை அமல் படுத்தி சுமார் 3 ஆண்டுகளுக்கு மேலாக அமல் படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ள புதிய கூட்டுறவு சட்டத்தை வெகு விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவர நம்முடைய அரசு இருக்கிறது. 1961 ஆம் வருஷத்திய கூட்டுறவுச் சட்டமே இப்போது நடைமுறையில் இருப்பதால் பலவகையிலும் பல்கிப் பெருகியுள்ள கூட்டுறவுச் சங்கங்களை, பழைய சட்டத்தில் போதுமான அளவுக்கு நிர்வகிக்க இயலவில்லை. கூட்டுறவு சங்கங்களுக்கு துணை விதி, இப்போது புதிய சங்கங்களுக்கு 8 ஆண்டுகள் வரை சங்க நிர்வாகிகளை நியமனம் செய்கின்றது. இந்த நியமனங்களுக்கு 1961 ஆம் வருஷத்திய கூட்டுறவு சட்டத்திலோ அல்லது விதியிலோ எதுவும் குறிப்பிடப்படாமையால் இம்மாதிரியான நியமனங்களில் அடிக்கடி சட்ட சிக்கல்கள் ஏற்பட்டு நிர்வாக உத்தரவுகளின் மூலமாக செய்யப்படும் நிர்வாகப் பொறுப்புக்கான நியமனங்கள் கோர்ட்டிலே வெகு எளிதில் தடை உத்தரவு பெறப்படுகின்றன. இதனால் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகத்தில் தேக்க நிலை ஏற்படுவதோடு மட்டுமல்லாமல் அரசாங்கத்திற்கும் அநாவசியமாக களங்கம் கற்பிக்கப்படுகிறது.



இந்நிலையை தவிர்க்கவும், கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் தங்குதடையின்றி நடைபெறவும், எல்லா கூட்டுறவுச் சங்கங்களும் ஆரம்பித்த 10 ஆண்டுகள் வரை நிர்வாகக் குழு உறுப்பினர்களை நியமனம் செய்ய அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கி கூட்டுறவு சட்டத்திலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போதுள்ள கூட்டுறவு சட்டத்தில் வழக்குகள் ஜப்தி செய்தல் போன்ற நடவடிக்கைகளை இன்ஸ்பெக்டர் அளவில் இருப்பதை மாற்றி கூட்டுறவு சார்பதிவாளருக்கும் அதற்கு மேற்பட்ட நிலையிலுள்ள அலுவலக அதிகாரிகளுக்கும் அதிகாரம் வழங்கினால் அப்பணிகள் இன்னும் செம்மையாகவும், திறமையாகவும் நடைபெற வழிவகை ஏற்படும். தற்போது தமிழ்நாட்டில் செய்யப்பட்டுவரும் மிகப் பெரிய நெசவாளர் நூற் கூட்டுறவுச் சங்கங்களிலும், பட்டு கூட்டுறவுச் சங்கங்களிலும் அரசு உதவியுடன் நெசவாள அங்கத்தினர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் சிறிய கூட்டுறவு சங்கங்களிலும் நலிந்த கூட்டுறவு சங்கங்களிலும் அங்கத்தினர்களாக உள்ள நெசவாளப் பெருமக்களுக்கு வீடு கிடைக்க வழி இல்லை, எனவே, ஆசிரியர்கள், காவலர்கள் ஆகியோருக்கு உள்ளதுபோல நெசவாளர்களுக்கு என்றே தனியாக வீடு கட்டும் வாரியம் ஒன்று அமைக்கப்பட்டால் அதன் மூலம் துரிதமாகவும் எல்லா நெசவாளர்களுக்கும் சொந்தத்தில் வீடு கிடைக்க வழி ஏற்படும்.

(பிற்பகல் 1-00)

அதிலும் குறிப்பாக சமீப ஆண்டு காலமாக செயல்பட்டு வரும் தொழில் இயல் நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் சங்கம் குறிப்பிடும் ஒரு இடத்திற்கு வந்து நெய்து கொடுத்து விட்டு மாலையில் தொலை தூரத்தில் உள்ள அவரவர்கள் வீட்டுக்கு திரும்பிச் செல்லுவது மிகவும் சிரமமும் சிக்கலும் நிறைந்த ஒன்றாக இருப்பதால் தொழில் இயல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அருகாமையிலேயே அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தால் அவர்களின் சிரமம் நீங்குவதோடு அரசாங்கம் பெரும் அளவில் முதலீடு செய்துள்ள தொழில் இயல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் இயங்க வழி ஏற்படும். நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தினர்களாக உள்ள நெசவாளர்களுக்கு மட்டும் அல்லாமல் தனியாரிடம் தறி நெய்யும் நெசவாளர்களுக்கும் இந்த வசதியை செய்து தரவேண்டும்.

"நெசவாளர் சேமிப்பு வசதி மற்றும் பாதுகாப்புத் திட்டம்" இந்தத் திட்டத்தின் கீழ் தற்போது கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தினர்களாக உள்ள நெசவாளர்கள் மட்டும் தான் பயன் பெறுகிறார்கள். [illegible] தனியாக தறியில் நெய்யும் நெசவாளர்கள் பயன்பெற [illegible] இந்தப் [illegible] விரிவாக்கம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கான

சந்தாவை தனிப்பட்ட முதலாளிகளைச் செலுத்தச் சொல்லலாம். ஏனெனில் கூட்டுறவுச் சங்கங்களில் வழங்கப்படும் கூலியை விட குறைவான கூலியைத் தான் தனியார்கள் நெசவாளர்களுக்கு வழங்குகிறார்கள். இந்தத் திட்டத்தின் கீழ் 55 வயதுக்குள் மரணம் அடையும் நெசவாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் ரூபாய் 5 ஆயிரத்திற்கு பதிலாக 10 ஆயிரம் ரூபாய் வழங்கப் படலாம். மேலும் 55 வயதுக்கு மேல் நெசவாளர்கள் இந்த திட்டத்திலிருந்து விலகும்போது அவர்கள் செலுத்துகின்ற சந்தாத் தொகை, அதற்கான வட்டி, அரசு மானியம் அதற்கான வட்டி ஆகியவைகளை கணக்கில் கொள்ளாமல் மொத்தமாக ரூபாய் 20 ஆயிரம் வழங்கினால் அவர்கள் வயது மூப்பு அடைந்த தால் தொடர்ந்து நெய்ய முடியாத வயோதிக நெசவாளர்களுக்கு இந்தத் தொகை ஒரு நல்ல ஊன்றுகோல் ஆக பயன்படும்.

நெசவாளர்களுக்கு வைத்திய வசதி மற்றும் குடும்ப நலன். நெசவாளர்கள் பருத்தி நூல் மற்றும் பட்டு இழை ஆகியவை மூலம் நாள் முழுவதும் உழைக்கவேண்டியிருப்பதால் அவர்கள் எளிதில் காசநோய் போன்ற கடும் வியாதிகளுக்கு இலகுவில் இலக்கு ஆகி துன்பப்படுகிறார்கள். இதுபோன்ற வியாதியஸ்தர் களை குணப்படுத்த அவர்கள் சொந்தமாக வைத்தியம் செய்து கொள்ளுவது என்பது முடியாத காரியம் ஆகும். அரசு மருத்துவ மனைகளில் அரசு ஊழியர்களுக்கு இருப்பது போல் நெசவாளர் களுக்கு தனியாக ஒன்று அல்லது இரண்டு வார்டுகளை ஏற்படுத்தி நெசவாளர்கள் அதில் தங்கி பிணிகளை சுலபமாக சிக்கனமாக தீர்த்துக் கொள்ள வழி ஏற்படும். இந்த முயற்சியில் பயன் பெறும் நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உள்ள பொது நல நிதியை இதற்காக பயன்படுத்திக்கொள்ளலாம். நோய் வந்த பின்பு மருத்துவம் செய்வதை விட வரும் முன் காப்பது என்பதற்கு ஒப்ப நெசவாளர் பெருமக்களுக்கு ஆண்டுக்கு குறைந்தது 4 முறை மருத்துவ பரிசோதனை செய்து அவர்களுக்கு நோய் ஏதேனும் தென்பட்டால் அதை ஆரம்ப நிலையிலேயே தடுத்து நிறுத்துவதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

பெண் நெசவாளர்களுக்கு பேறு காலத்தில் ரூபாய் 500 வரை வட்டியில்லா முன் பணம் கொடுத்து அதை சுலப தவணை களில் வசூலிக்க கண்டிப்பான உத்தரவை பிறப்பிக்கவேண்டும். அது மட்டும் அல்லாமல் குடும்பக் கட்டுப்பாட்டை ஊக்குவிக்கின்ற முறையில் அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் பெண் அல்லது ஆண் நெசவாளர்களுக்கு ரூபாய் 500 வரை சங்க நிதியிலிருந்து மானியமாக வழங்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்களில் பெரும் பான்மையோர் வசித்து வரும் என் காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதியில் அதிலும் குறிப்பாக பேரறிஞர் அண்ணா அவர்களின்





சொந்த ஊரான காஞ்சிமா நகரில் நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை முதன் முதலாக பெரும் அளவில் ஆரம்பித்து செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

காஞ்சிபுரம் பட்டு சேலைகள் உலகப் புகழ் பெற்றவை. கலை நுணுக்கத்துடனும் கண் கவரும் வகையிலும் பட்டு சேலை களை நெய்யக்கூடிய நெசவாளப் பெருமக்களை கொண்டதாகும் என் தொகுதி. இப்படிப்பட்ட நேர்த்தியான கைவினைஞர்களை ஊக்கம் கொடுத்து முன்னேற்றத்திற்கு கொண்டு வரவேண்டியது நம் கடமையாக இருக்கும் போது அவர்கள் சம்பாதித்த கூலி மற்றும் போனஸ் தொகைக்கு முதன் முறையாக இந்த ஆண்டு வருமான வரி விதிக்கப்பட்டுள்ளது என்பதை மிகவும் வருத்தத் துடன் குறிப்பிடுகிறேன். ஒரு பட்டு சேலையை ஒரு நெசவாளி தானே நெய்து விட முடியாது அந்த நெசவாளியின் குடும்ப அங்கத்தினர்கள் அனைவரையும் அவ்வேலையில் ஈடுபடுத்துவது அல்லாது அவ்வப்போது கூலிக்கும் ஆள் வைத்தால் தான் அந்த நெசவாளி தன் பணியை செவ்வனே செய்ய முடியும். ஆக ஒரு நெசவாளியின் கூலி மற்றும் போனஸ் தொகையில் அவரின் குடும்ப உழைப்பும் சேர்ந்துள்ளதாகும். எனவே நெசவாளர் களுக்கு வருமான வரி விதிக்கப்படுவதிலிருந்து முற்றிலுமாக விலக்களிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மின்விசைத் தடையினால் அவையிலுள்ள மின்சார சாதனங்கள் செயலிழந்தன. (கூச்சல்—குழப்பம்)

திரு. சு. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே இதுபோல் மின்சாரத் தடை ஏற்பட்டதில்லை. இதை முன் உதாரணமாக வைத்து அவைக்கு தனியே ஜெனரேட்டர் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்போது மின்சாரம் வரும் என்று தெரியாததால், மாலை 4.00 மணிக்கு திரும்ப அவை கூடும். அவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப் பெறுகின்றன. பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.06 க்கு ஒத்திவைக்கப்பெற்றது.

மாலை 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

வரவு—செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

கோரிக்கை எண். 2 — மாநில ஆயத் தீர்வைத் துறை
கோரிக்கை எண். 26 — கைத்தறியும் நெசவுத் தொழிலும் } (தொடர்ச்சி)
கோரிக்கை எண். 27 — கதர்த் தொழில்

**திரு. சு. பாலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலையில் ஏற்பட்ட பவர் கட்டுக்கு என்ன காரணம்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செகரட்டரி, பி. டபிள்யூ. டி. அவர்களிடம் எழுதிக் கேட்டு பதில் வந்து விட்டது. ஸிட்டி பூராவும் பவர் ஃபெய்லியர்.

**திரு. கே. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காஞ்சீபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுவரும் தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை இணையத்திலிருந்தே பட்டுச் சங்கங்கள் அனைத்தும் தங்களது கச்சாப் பட்டு (கோராவை) தேவைகளை வாங்கவேண்டும் என்ற கட்டாயம் உள்ளது. வியாபாரம் என்று சொன்னால் போட்டி இருக்கவேண்டும். தமிழகத்திலே உற்பத்தி செய்யப்படுகிற கோராவை நாம் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும். என்றாலும் நம்முடைய தேவையை பூர்த்தி செய்கிற அளவிற்கு, அதே நேரத்தில் நமக்குத் தேவையான தரமான கோராக்கள் கிடைப்பதில்லை. ஆகவே நாம் ஒன்றிரண்டு இடங்களில்தான் வாங்கவேண்டுமென்று உத்தர விட்டிருக்கிறோம். கர்நாடகா சில்க் போர்ட், தமிழ்நாடு பெடரேஷன் என்ற இந்த இரண்டு இடங்களிலிருந்துதான் கோராக்களை வாங்கவேண்டுமென்று நாம் சொல்லியிருக்கிறோம். அவ்விடங்களிலிருந்து நாம் கோராவை வாங்குவோமானால் குறைந்த விலையில் தரமான பொருளாக வாங்குகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். வியாபாரத்தில் போட்டியிருந்தால்தான் அந்நிலையை நாம் ஏற்படுத்த முடியும். அதுமட்டுமல்ல. இன்றையதினம் நமது அண்டை மாநிலமான கர்நாடகாவில் வறட்சி நிலை இருப்பதன் காரணமாக அங்கே கோரா உற்பத்தி குறைந்திருக்கிறது. ஆகவே அதை சீனாவிலிருந்து வாங்குகிற ஒரு நிலைமையை உருவாக்க வேண்டுமென்று நம்முடைய மானியக் கோரிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அது தேவையான ஒன்றுதான். அந்தக் கோராவை நாம் இறக்குமதி செய்வோமானால் உள்நாட்டிலே உற்பத்தியாகிற அந்தக் கச்சாப்பொருளின் விலை குறைகிற ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கமுடியும். காஞ்சீபுரத்தில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து நட்டத்தில் வேலை செய்யும் பல கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அந்தக் கூட்டுறவுச் சங்கங்களை



இணைத்து அந்த வியாபாரத்தை இலாபகரமாக நடத்துவதற்கு ஆவன செய்யவேண்டும். இப்போது நட்டத்தில் இயங்கும் சங்கங்களில் உள்ள உறுப்பினர்கள் வெறும் கையோடு செல்ல வேண்டியுள்ளது. ஆகவே அவைகளை எல்லாம் ஒன்றாக இணைக்கவேண்டும் அல்லது இரண்டு சங்கங்களாகவாவது ஆக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஒன்று அல்லது இரண்டு சங்கங்களாக ஆக்கி அவை இலாபத்தில் இயங்க ஆவன செய்யலாம்.

பட்டு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள் இருப்பது போல் விற்பனையை மட்டும் செய்யும் மார்க்கட்டிங் சங்கங்கள் நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன. அதேபோல் நூல் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்களைப் போல் நூலுக்கு மார்க்கெட்டிங் சங்கங்களையும் ஏற்படுத்தலாம். அவ்வாறு செய்தால் தற்போது தனி முதலாளிகளிடம் எவ்வித சலுகையும் இல்லாமல் வேலை செய்து வரும் நெசவாளர்கள் கூட்டுறவின் பயனைப் பெறவும், உற்பத்தியாகும் பொருள்களை உடனுக்குடன் விற்பனை செய்யவும் வழி ஏற்படும். மேலும் நூல் சங்கங்கள் தங்கள் உற்பத்திப் பொருளை விற்க கோ-ஆப்டெக்ஸை மட்டுமே நம்பியிருக்க வேண்டிய நிலையும் மாறும்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நெசவாளர் சங்கங்களுக்கும் தாய்போல் உள்ள கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தன் கொள் முதலையும் பணப்பட்டுவாடாவையும் இன்னும் திறமையாகச் செய்ய வழிவகை காண்பது அவசியமாகும். ஏனெனில் தற்போது தீபாவளி, அகில இந்திய கைத்தறி வார விழா மற்றும் பொங்கல் சமயங்களில் மட்டும் அவசர அவசரமாகக் கொள்முதல் செய்யப் பட்டு விற்பனை செய்யப்படுகிறது. எனவே கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் துணிகளின் தரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்பட முடிவதில்லை. துணிகளை உற்பத்தி செய்யும் பிரதம சங்கங்களும் அதன் உற்பத்தியின் தரத்தைக் கவனிக்க முடிவதில்லை. எனவே கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தன் தேவைகளை முன்கூட்டியே நிர்ணயித்து பிரதம சங்கங்களிடம் ஆர்டர் கொடுத்து வருடம் பூராவும் சீரான கொள்முதலுக்கு வகை செய்யவேண்டும். கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தன் கொள்முதலை சீராகச் செய்யாததால் பிரதம சங்கங்களுக்கு பணப்பட்டுவாடாவும் சீராக நடைபெறுவதில்லை. துணிகளை சப்ளை செய்துவிட்டு கோ-ஆப்டெக்ஸிலிருந்து பணத்திற்காக சுமார் மூன்று மாதங்கள் முதல் ஆறு மாதங்கள்வரை காத்திருக்க வேண்டிய தற்போதைய நிலையை மாற்றுவதற்கு ஆவன செய்யக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி 6 மாத காலத்திற்குப் பின்னாலும் வழங்கப்படாமல் இருப்பதற்கு, வட்டியையும் நாங்கள் பெற முடியவில்லை. ஆனால் நாங்கள் வாங்குகின்ற அந்த கச்சாப் பொருள்களுக்கு வட்டியைக் கொடுக்கின்ற ஒரு சூழ்நிலையை நாம் பார்க்கிறோம்.

அது மட்டுமல்ல. காஞ்சீபுரத்திலே சரிகை உற்பத்தி ஆலை இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்த ஆலையை காஞ்சீபுரத்திலே உருவாக்குவதற்காக முழு முயற்சி எடுத்துக் கொண்டு, அந்த சரிகை ஆலை அங்கே உருவாக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு அங்குள்ள நிலைமையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எந்த நோக்கத்தோடு பேரறிஞர் அண்ணா அவர்களால், அன்றையதினம் துவக்கப்பட்டதோ அது நிறைவேற வில்லை. அங்கு தேவை 70 ஆயிரம் மார்க் என்று சொன்னால், இன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் வருஷத்திற்கு ஒரு இலட்சம் மார்க் தேவைப்படுகிறது. ஆனால், காஞ்சீபுரத்திலே இருக்கின்ற இந்த சரிகை உற்பத்தி தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுகின்ற சரிகை வருஷத்திற்கு 10 ஆயிரம் மார்க் என்று கணக்கு கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, அங்கே முழுமையாக உற்பத்தி செய்கிறார்களா என்று சொன்னால், இல்லை. சூரத்திலிருந்து வெள்ளி நூல் இழைகளைப் பெற்று வந்து, அதற்கு தங்க மூலாம் பூசுகிறார்கள். ஆனால், அந்தத் தொழிற் சாலையின் உண்மை நோக்கம், வெள்ளியை நாம் வாங்கி வந்து, அந்த வெள்ளியைக் கம்பியாக இழுத்து, பட்டு நூலோடு சேர்த்து, தங்க முலாமைப் பூசி ஒரு இலட்சம் மார்க் அளவுக்கு உற்பத்தி செய்ய வேண்டுமென்பது. ஆனால், இன்றைக்கு சூரத்திலிருந்து இந்த வெள்ளிக் கம்பியை இழுக்கின்ற நவீன இயந்திரங்களை யெல்லாம் பெற்று, நாம் எதிர்காலத்திலே நல்லமுறையில் செயல்பட இருப்பதாக நான் அறிந்த வகையிலே தகவல் தெரிந்திருக்கிறது. ஆனால், இரண்டு இடங்களிலே அதாவது ஆரணியிலும், கும்பகோணத்திலும் சரிகை தொழிற்சாலை துவக்க இருப்பதாக மானிய கோரிக்கையிலே தகவல் கொடுத்திருக் கிறார்கள். காஞ்சீபுரத்திலே சரிகை உற்பத்தியைப் பெருக்கு வதற்கு வசதி செய்திருந்தால், அது நியாயமாக இருக்கும். அதே நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எண்ணத்தை நாம் நிறைவு செய்ததாகவும் இருக்கும்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா நினைவாக ஏற்கனவே அங்குள்ள சரிகைத் தொழிற்சாலை லாபத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. ஆரணியிலும், கும்பகோணத்திலும் உள்ளவர்களுக்கு வசதியாக, காஞ்சீபுரம் சென்று, பயணப்படி இல்லாமல், சுலபத்தில் தரமான சரிகை பெற வசதி செய்யப் படுகிறதே தவிர, காஞ்சீபுரத்தில் உள்ள சரிகைத் தொழிற் சாலையை மூடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**திரு. கே. பாலாஜி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொன்ன கருத்தைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அங்கே இருக்கின்ற சரிகை தொழிற் சாலை நட்டத்தில் இயங்குகின்றது என்று நான் சொல்லவில்லை. அதே நேரத்தில், கும்பகோணத்திலும், ஆரணியிலும் துவக்கு வதற்கு, அங்கே இருப்பவர்களுக்கு குறைந்த விலையில், போக்கு





வரத்து செலவு இல்லாமல் பெறமுடியும் என்ற எண்ணத்தோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள் என்றாலும், இன்றைக்கு சூரத்திலிருந்து நாம் சரிகையை நம் முடைய தேவையில் 90 சதவீதத்திற்கும் அதிகமாக பெறுகிறோம். அந்த 90 சதவீதம் சரிகையை நாம் காஞ்சீபுரத்தில் உற்பத்திசெய்ய முடியும். அந்த அளவிற்கு கட்டிட வசதியும், இட வசதியும், தேவையும் இருக்கிறது. ஆகவே, இதைப் பரிசீலனை செய்ய வேண்டும், இதை மனதிலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நினைவு படுத்துவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு சாராயத்தை, கள்ளை எடுத்துக் கொண்டால், 1-1-87 முதல் நாம் மதுவிலக்கை அமுல் செய்ய இருக்கிறோம். அதே நேரத்திலே கள்ளச் சாராயம் பெருகிவிடாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். இன்றைக்குக் கூட கள்ளச்சாராயம் இருப்பதாக பரவலாகச் சொல்லுகிறார்கள். அது ஓரளவுக்கு உண்மை. அந்த கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுபவர்களை நேரடியாகப் பிடிக்கின்ற நேரத்தில், தவறு நடக்கின்ற நேரத்தில், அதை கண்டுகொள்ளாமல் இருக்கின்ற கலால் துறை அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன். காஞ்சீபுரம் அருகில் ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்திலே கள், சாராயக் கடைகளை மூடிவிட்ட பிறகும், அங்கே கள்ளச் சாராயம் விற்கப்படுகின்றது என்றால், அது கலால் துறை அதிகாரிகளுக்குத் தெரியாமல் இருக்காது. அப்படி விற்கப்படுகின்ற நேரத்திலே தனிப்படை வந்து கள்ளச்சாராய வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள். அதைக் கண்டும் காணாமலும் இருந்த அந்தக் காவலர்கள் மீதும் நாம் நடவடிக்கை எடுத்தால்தான், நாம் எந்த நோக்கத்திற்காக இந்த மதுவிலக்கைக் கொண்டு வருகிறோமோ, அந்த நோக்கம் நிறைவுபெறும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(மாலை 4.10)

கதர்த் துறையில், இன்றைக்கு பல காரியங்களை, பல சலுகைகளை நாம் செய்கின்றோம் என்றாலும், மாவட்டத்திலே இருக்கின்ற அந்தத் தலைமை மையங்களில் கடனை ஏழை, எளிய மக்களுக்கு, குறிப்பாக அருந்ததிய மக்களுக்கு, செருப்புத் தைக்கின்ற தொழிலாளர்களுக்கு உடனுக்குடன் கிடைப்பதற்கு, அந்தப் பொருள்களை வியாபாரம் செய்வதற்கு, மத்தியிலே இருக்கின்ற மார்க்கெட்டுகளிலே அவர்களுக்கு பங்கை வைத்து பொருளை அளிப்பதற்கும் மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2–ஆம் எண் மானியக் கோரிக்கை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை பற்றிய 26–ஆம் எண் மானியக் கோரிக்கை, கதர்த் தொழில் பற்றிய 27-ஆம் எண் மானியக் கோரிக்கை ஆகியவற்றின் மீது நான் சார்ந்திருக்கின்ற இந்து முன்னணி இயக்கத்தின் சார்பாக ஒரு சில கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு வாய்ப்பு தரப்பட்டு, உங்கள் முன்னாலே நின்று கொண்டிருக்கிறேன்.

வேளாண்மைக்கு அடுத்தபடியாக இன்றைக்கு நாட்டில் அதிகம் பேர் ஈடுபட்டிருக்கும் ஒரு தொன்மையான தொழில் கைத்தறித் தொழிலாகும், என்பதை நம்முடைய அரசாங்கம் உணர்ந்து இருக்கிறது.

இத்தொழிலால் அதிகம் பேர் வேலைவாய்ப்பு பெறுகின்றனர். அதிகம் பேருக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கிற ஒரு தொழிலாக இந்தத் தொழில் இருக்கிறது என்பதையும், பெருகி வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமையை ஓரளவுக்குக் குறைப்பதாகவும் இந்தத் தொழில் இருந்து கொண்டிருக்கிறது, என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அது இந்தத் தொழிலின் சிறப்பை இன்றைக்கு சுட்டிக்காட்டுவதாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இந்தத் தொழிலை பெருக்குவதற்கும், பாதுகாப்பதற்கும் அரசு பெருமுயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்பது நம்முடைய காலத்தின் கட்டாயமாக இருக்கிறது.

ஆனால் இன்றைக்கு இத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் நம்பிக்கை இழந்து, நலிந்து கொண்டு வருகிற ஒரு சூழ்நிலை நாளுக்கு நாள் பெருகி வருவதை நம்முடைய அரசாங்கம் கவனிக்காமல் இருக்கமுடியாது. எந்தத் தொழிலாக இருந்தாலும் அது போட்டியின் சவாலைச் சந்தித்தே ஆகவேண்டும். போட்டியின் சவாலைச் சந்திக்கமுடியாத எந்தத் தொழிலாக இருந்தாலும், அது தலைநிமிர்ந்து நிற்கமுடியாது. அப்படிப்பட்ட தொழில்கள் நலிந்து போனால், நாட்டிலுள்ள பொருளாதாரம் நலிந்து போகும் என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அரசின் பாதுகாப்பு பல தொழில்களுக்கு தேவைப்படுகிறது. அந்த வகையில் கைத்தறித் தொழில் அரசின் பாதுகாப்பை மட்டுமே நம்பி இருக்கின்ற ஒரு தொழிலாக இன்றைக்கு மாறி இருக்கிறது. இப்படி அரசாங்கத்தின் பாதுகாப்பை நம்பி இருக்கிற அந்தத் தொழிலை அரசாங்கம் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பாதுகாக்காமல் இருக்குமேயானால், அந்தத் தொழில் அழிந்து, ஒழிந்து போகிற ஒரு சூழ்நிலை உருவாகி விடும். அதை உணர்ந்துகொண்டு, அரசு பல வகைகளில்





பாதுகாப்புக் கொடுக்கத்தான் செய்கிறது என்றாலும், அரசாங்கம் வழங்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் போதுமானதாக இல்லை என்பது அனுபவம் நமக்குத் தெரிவிக்கும் செய்தியாகும்.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் பல பிரச்சினைகளுக்கு இன்றைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்குச் சங்கங்கள் ஏற்படுத்தப்படவேண்டும் என்றும், அப்படி ஏற்படுத்தப்படும் சங்கங்கள் மூலம் நியாய விலையில் நூல்கள் உட்பட பல்வேறு கச்சாப் பொருள்கள் வழங்குவது போல நல்ல பல உதவிகள் அரசால் செய்யப்படும் என்ற நிலைமை இருக்கிறது.

ஆனால் இப்போதும் கூட ஏராளமான கைத்தறித் தொழிலாளர்கள், கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாகக் கடன் சுமைக்கு ஆளாகி இருப்பதால் சங்கங்கள் அமைப்பது கூட பல இடங்களில் ஒரு சவாலாக இருக்கிறது. எங்கெங்கே கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக வைக்கப்பட்டு வேலை வாங்கப்படுகிறார்கள் என்பதை மிகத் தீவிரமாக அரசு கண்காணித்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

மேலும் சங்கங்கள் அமைப்பதற்கு என்னென்ன இடையூறுகள் இருக்கின்றன என்பதை ஆய்ந்து அறிந்து, அந்த இடையூறுகள் இந்த அரசினால் அப்புறப்படுத்தப்படவேண்டும், அவைகள் அகற்றப்படவேண்டும். அதுபோல் அமைக்கப்பட்டுள்ள சங்கங்கள் முறையான கண்காணிப்புக்குட்பட்டதாக இருந்தாலும் கூட, பெரும்பாலான சங்கங்கள் ஒரு சில தனி நபர்களின் செல்வாக்கிற்குட்பட்டு செயல்பட்டு வருவதையும் அதன் காரணமாக, சாதாரணமான நெசவாளர்கள் பெரும்பாலோர் சங்கங்களின் மூலம் பெறும் உதவிகளைப் பெறமுடியாமல் இருக்கின்றனர் என்பதும் மறுக்கமுடியாத உண்மையாக இருக்கிறது.

நியாய விலையில் நூல் மற்றும் கச்சாப்பொருள்கள் வழங்குவது பாராட்டுக்குரிய பணிதான். ஆனாலும், தொழில் தேவைக்கேற்ப அவை வழங்கப்படவில்லை என்பது குறைபாடாக இருக்கிறது. பல விதிகள் இன்றைக்கு நம்மாலே வகுக்கப்பட்டு, அந்த விதிகள் நெசவுத் தொழிலாளர்களின் விதியோடு விளையாடிக்கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டு இருக்கிறோம். முழு சக்தியையும் பயன்படுத்தும் அளவுக்கு நெசவுத் தொழிலாளர்களுக்கு நூல் வழங்கப்படவில்லை. கைத்தறி நெசவுத் தொழில் படும் சங்கடங்களில் ஒன்று, தயாரிக்கப்பட்ட பொருள்கள் விற்பனையில் ஏற்படும் சிரமமாகும்.

கைத்தறி நெசவுத் துணிகளை விற்பதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்றாலும்கூட, அவைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வெளிநாட்டுச் சந்தையில் நல்ல மதிப்பை ஏற்படுத்தும் வகையில் விளம்பரப்

படுத்துவது உட்பட நம்முடைய அரசு தீவிரமாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதன் மூலம்தான்—வேலையில்லாத் திண்டாட் டத்தில் சிக்கியிருப்பவர்களில் பெரும்பகுதியினரைக் காப்பாற்ற முடியும் என்ற நிலைமை உருவாகியிருக்கிறது—அவர்களைக் காப்பாற்றவும் முடியும்.

நெசவுத் தொழிலைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசாங்கம் நடவடிக்கைகளை நேரத்திற்கு ஏற்ப, சந்தர்ப்பத் திற்கு ஏற்ப எடுக்கின்ற நிலைமைகள் இருந்தாலும் அது போதாது என்பதுதான் காலத்தின் கசப்பான செய்தியாக இருக்கிறது. ஆகவே, இந்தக் கால கட்டம் சிரமமானதாக இருந்தாலும், நிதிநிலைமை மிகவும் மோசமாக இருந்தாலும் இந்தத் தொழிலின் முக்கியத்துவத்தை மனத்திற்கொண்டு, இதனால் நமது இந்தியப் பொருளாதாரம் அடைகின்ற பயனை உணர்ந்து, இதற்கு முக்கியத்துவத்தைக் கொடுத்து இந்தத் தொழிலை எப்படியாவது பாதுகாக்க வேண்டுமென்ற வேண்டு கோளை வைக்க நான் விரும்புகிறேன்.

தமிழ்நாடு கதர்–கிராமத் தொழில் வாரியத்தைப் பொறுத்த வரையில், 1960–ஆம் ஆண்டு இந்தத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஆரம்பிக்கப்பட்டது. அந்த வாரியம்தான் தமிழ்நாட்டிலே இருக்கின்ற பனை பொருட்களைக் ' கொண்டு செய்யப்படுகின்ற பொருட்கள், அதன் உற்பத்தி போன்றவை களைக் கவனித்து வருகிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில், பனையில் இருந்து கிடைக்கின்ற பொருட்களைப் பயன்படுத்துவது முழுமையாக இல்லை என்ற பெருங்குறை இருந்து கொண்டிருக்கிறது. பனையில் உள்ள அத்தனை பொருட்களும் பயன்படுகின்றன. பனை வேர் கூட பல்வேறு பொருட்களைச் செய்வதற்குப் பயன்படுகின்றது என்பது அனுபவபூர்வமாக நாம் அறிந்த உண்மையாகும். ஆகவே, பனையில் இருந்து கிடைக்கின்ற பொருட்களைக் கொண்டு பல்வேறு பொருட்களைச் செய்வதற்கு அவைகளை எப்படி எப்படியெல்லாம் பயன்படுத்தலாமோ அதைப்பற்றி ஆய்ந்து அறிவதற்காக தமிழ்நாடு கதர்–கிராமத் தொழில் வாரியத்தி லிருந்து பனை பொருட்களைத் தனியாகப் பிரித்து பனைத் தொழில் வாரியம் என்ற ஒரு வாரியத்தை அமைக்க முன் வந்தால் பொருளாதாரம் சிறப்பான பலனை அடையும். அதன் மூலமாகப் பனை ஏறும் தொழிலைச் செய்கின்ற தொழிலாளர்களும், பனை பொருட்களைக் கொண்டு பொருட் களைத் தயாரிக்கின்ற தொழிலாளர்களும் சிறப்பாகப் பயன் அடைந்து, நாட்டின் பொருளாதாரத்திற்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்து, தங்களுடைய பொருளாதாரத்திலும் ஒரு முன்னேற்றம் காண்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, நாட்டின் பொருளா தாரத்தை மேம்பாடு அடையச் செய்வதற்காக பனை



பொருட்களைக் கொண்டு செய்யப்படும் தொழில்களை ஊக்கு விக்க நம்முடைய அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும், பனை மரம் இல்லாத மாவட்டமே இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு நிலைமை இருக்கிறது. ஆகவே, அதைக் கருத்திற்கொண்டு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பல்வேறு மாவட்டங்களில் நம்முடைய அரசாங்கம் பனைபொருள் மையங்கள் ஏற்படுத்துவது பற்றி செய்தி கூறுகிறது. கன்னியா குமரி மாவட்டம் பனைமரங்கள் நிறைந்த பகுதி; பனையேறும் தொழிலாளர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கன்னியா குமரி மாவட்டத்தில் இந்த பனைப்பொருள் மையம் ஏற்படுத்து வது பற்றிய செய்தி, செய்திக் குறிப்பில் விடப்பட்டிருக்கிறது. தவறாக, ஒருக்கால் எழுதும்பொழுது ஏற்பட்ட விடுபடல் குற்றம் என்று தான் இதை நான் கருதுகிறேன். எனவே, என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்தையும் அதிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநில ஆயத் தீர்வையைப் பொறுத்தவரையில் அதை எடுத்துக் கொண்டால், 1—1—1987இலேயிருந்து நம்முடைய தமிழகம், கள், சாராயம் இல்லாத தமிழகமாக இருக்கும் என்ற அறிவிப்பு சொல்லப்பட்டிருக்கிறது. சமுதாயத்தைச் சீரழிக்கின்ற மது; அது எதுவாக இருந்தாலும் அது தமிழ் நாட்டில் இருக்கக்கூடாது; அது விற்பனை செய்யப் படக்கூடாது என்பதில் இந்து முன்னணியைப் பொறுத்த வரைக்கும் மிகவும் தீவிரமாக இருக்கிறது. ஆனால், ஏதோ காரணங்களினால், கள், சாராயக் கடைகளாவது இப்பொழுது மூடப்படும் என்ற செய்தி சொல்லப்பட்டிருக்கிறதே என்று அந்த அளவுக்காக இந்து முன்னணி தன்னுடைய நன்றியை இந்த அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறது.

(மாலை 4–20)

ஆனால், 1—1—1987-க்குப் பிறகு அமல் செய்யப்படும் என்றால், 1—1—1987-லிருந்து இந்தப் பூரண மதுவிலக்கு என்று சொல்லப்பட்டு, முன்பிருந்த நிலைமைகளுக்கு நாம் திரும்பிச் செல்கிறோம். 1972-லேயிருந்து தமிழகம் பல்வேறு காலகட்டங்களில், மதுவிலக்குக் கொள்கையில் சில நேரங்களில் தடுமாற்றமும், சில நேரங்களில் திக்குமுக்காடும் சூழ்நிலைக்கும் தன்னை ஆளாக்கிக் கொண்டிருக்கிறது. இதற்கு முன்னால், பல சட்டத் திருத்தங்கள் நம்முடைய தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்திலே கொண்டு வரப்பட்டிருக்கின்றன. முன்னாலிருந்த சட்டத்தின்படி ஒருவன் குடித்தால், அவன்மீது 4(1) ஜே வழக்குப் பதிவு செய்தால், அவன் மீது வழக்குப் போட்டு அவனை இரண் டாவது குற்றவியல் நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்து, அவனை

ஜாமீனில் கொண்டு வரலாம் என்று சூழ்நிலையிருந்தது. அல்லது,
ரூ. 40, ரூ. 50 அவனுக்கு அபராதம் விதிக்கும் சூழ்நிலை
யிருந்தது. ஆனால், அவர்களால் நாட்டில் கேடு விளைகிறது
என்று கருதிய காரணத்தாலோ, என்னவோ, அதற்குப் பிறகு
4 (1) ஜே செக்ஷனையும், 4 (1) ஏ செக்ஷனையும் ஜாமீனில்
விடக் கூடாத குற்றங்களாக, நான் பெய்லபில் அஃபென்சாக
மாற்றி, சாராயமோ, கள்ளோ வைத்திருந்த குற்றத்தில் ஒருவன்
கைது செய்யப்பட்டால், அல்லது, தடை செய்யப்பட்ட மது
வகைகளைக் குடித்து ஒருவன் கைது செய்யப்பட்டால், அவனை
முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்து,
அதற்குப் பிறகு, ஜாமீனில் விடக் கூடாத, நான் பெயிலபில்
குற்றமாகக் கருதி, அதற்கான சடங்குகள் செய்யப்பட்டு, அதற்குப்
பிறகு அவன் ஜாமீனில் வரக்கூடிய நிலைமை இப்பொழுது
இருந்து கொண்டிருக்கிறது.

1—1—1987-க்குப் பிறகு, நாம் மீண்டும் பழைய நிலைமைக்கு
வருகிறபொழுது, 4 (1) ஜே மறறும் 4 (1) ஏ செக்ஷன்களின்படி
இப்போதிருக்கும் நிலைப்படி செயல்பட போகிறோமா, அல்லது
அதற்கு முன்னாலே இருந்த நிலமைப்படி, அரசு செயல்பட
இருக்கிறதா என்பதை விளக்க வேண்டும். இப்படி சின்ன சின்ன
குற்றங்களை, தனக்குத் தானே இழைத்துக் கொள்கிற குற்றங்
களைக் கூட பூதாகாரமாக்கி, வேறு திருட்டு வழக்குகளுக்கு
இருக்கிற அதே நடைமுறையை, அதே அளவுகோலை, இந்தக்
குற்றங்களுக்கும் பயன்படுத்துவோமானால், சமுதாயத்தில்
அப்படிப்பட்ட குற்றங்களை நாம் மாற்றவே முடியாது.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த, சின்ன, சின்ன
குற்றங்கள், சின்ன, சின்ன குற்றங்களாகவே கருதப்படும்.
சர்க்கார் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. வை. பாலச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே,
அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்
கொள்கிறேன். ஆனால், இப்பொழுது அந்தக் குற்றங்களை,
சிறு குற்றங்களாக அரசாங்கம் கருதுவதாகத் தெரியவில்லை.
அவர்களை அப்படிக் கருத வேண்டும். தனக்குத் தானே
இழைக்கிற குற்றங்களை, பெரிய சமுதாயக் குற்றமான பெருங்
குற்றங்களை, கொலைக் குற்றவாளியை, திருட்டுக் குற்றவாளியை
வைத்துள்ள இடங்களில், அவனோடு சிறைச் சாலைகளில்
அடைக்கிற நிலைமை வருகிறபொழுது, ஒன்றைத் தகவலுக்காகச்
சொல்கிறேன்—எவன் ஒருவன் முதல் தடவை காவல் நிலையத்
திற்கு வருகிறானோ, அவன் அதற்குப் பிறகு காவல்நிலையத்தைக்
கண்டு அஞ்சுவது இல்லை. எவன் ஒருவன் முதல் முறையாக
சிறைச் சாலைக்குச் செல்கிறானோ, அவன், அதற்குப் பிறகு
சிறைச் சாலையைக் கண்டு அஞ்சுவதில்லை. ஒருவன் முதல்
முறையாக உயர்நீதிமன்றத்திலே அபராதம் கட்டி விட்டால்,



அடுத்த முறை அவன் அபராதம் கட்டுவதற்கு அஞ்சுவதில்லை.
எவன் ஒருவன் முதல் முறையாக நீதிமன்றத்தினுடைய படிக்
கட்டை ஏறி விட்டானோ, அதற்குப் பிறகு, அவன் நீதிமன்றப்
படிக்கட்டுகளை ஏறுவதை வெட்கக்கேடாகக் கருதுவதில்லை.
ஆகவே, குடிக்கிற குற்றத்திற்காக, அவன் குடித்து விட்டு
வீட்டிலே படுத்திருந்தால்கூட, நம்முடைய காவல் துறையைச்
சேர்ந்தவர்கள் வேண்டாதவனைக் கைது செய்து சிறைச்
சாலைக்கு அழைத்துக் கொண்டு வருகின்ற சூழ்நிலை இருக்கிறது.
அவன் மேல் 4 (1) ஜே வழக்குகளைப் போட்டு விட்டு, அவனைச்
சிறைச் சாலைக்குக் கொண்டு வந்து, காவல் நிலையத்தில் 24
மணி நேரம் அவனை வைத்துவிட்டு, அதற்குப் பிறகு ரிமாண்டுக்
காக அவனை நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்து, நீதிமன்றத்திலே
தரையிலே அமர வைத்து, அதற்குப் பிறகு, சிறைச்சாலைக்குக்
கொண்டு சென்று, அதற்குப் பிறகு, அவனுடைய மனைவியி
னுடைய நகைகளை அடகு வைத்து, அவனை ஜாமீனிலே
கொண்டு வந்து, இத்தனையையும் செய்யும்போது, அவனுக்குச்
சட்டத்தின் மீதும், அரசாங்கத்தின் மீதும், நாட்டின் மீதும், நாட்டு
நடவடிக்கை மீதும் வெறுப்பு ஏற்பட்டுவிடும். அவன் விசாரணைக்
கைதியாக இருந்தால்கூட, ஜாமீனில் வருவதற்கு ஓரிரு நாட்க
ளாகும். அந்த நிலையில், அவன் ஜாமீனில் விடப்பட, காவல்
துறைக்கு நோட்டீஸ் வழங்கி, அதற்கான பதில் வர ஓரிரு நாட்க
ளாகும் என்ற நிலையில் விசாரணைக் கைதியாக இருந்தால்கூட,
அந்த நேரத்தில், விசாரணைக் கைதியாக வைக்கும் திருட்டுக்
குற்றத்திற்குட்பட்ட குற்றவாளிகளோடு அடைக்கப்படுகிறான்.
ஜுவனைல் குற்றவாளிகள் தவிர, மீதி அத்தனை பேரும், பெரும்
பகுதி கேடிகளோடு, ஹாபிச்சுவல் அபென்டர்களோடு அடைக்கப்
படுகிற சூழ்நிலை உருவாகிறது. அப்படி இல்லாமல், புது புது
சமுதாயக் குற்றவாளிகளை உருவாக்குகின்ற வழிவகையில்,
நம்முடைய புதிய சட்டம் இல்லாமல், மனிதன் தன்னைத் தானே
திருத்திக் கொள்கிற ஒரு தன்மையை, உருவாக்குகிற ஒரு
சட்டத்தை நம்முடைய அரசாங்கம் உருவாக்கித் தர வேண்டு
மென்ற வேண்டுகோளை தங்கள் மூலமாக அமைச்சருக்குத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுவிலக்குச் சட்டம் என்பது நம்முடைய அரசாங்கத்தி
னுடைய தடுமாற்றத்தை இதுவரையில் சுட்டிக் காட்டி வந்தது.
இனிமேல் வருகிற சட்டம் நம்முடைய அரசாங்கம் மதுவிலக்கைப்
பொறுத்தவரையில் தடுமாறவில்லை, தடுமாறாத அரசாங்கமாக
இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டும் வகையில் அமைய
வேண்டுமென்று நான் தங்கள் மூலம் அமைச்சர் அவர்களைக்
கேட்டு, இந்த 3 மானியக் கோரிக்கைகளையும் நான் இந்து
முன்னணி இயக்கத்தின் சார்பாக வரவேற்று, அமர்கிறேன்.

**திரு ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, கைத்தறி தொழில் என்பது ஒரு ட்ரெடி
ஷனல் தொழிலாக, ஒரு பரம்பரைத் தொழிலாக இருந்து
வருகிற — அதிகமான தொழிலாளர்கள் இந்தத் தொ...

ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே
ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்கு அதிகமான தொழிலாளர்கள்
தமிழ்நாட்டில் இன்றைக்கு கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்
கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தியா முழுவது
மாகப் பார்த்தால் 75 இலட்சத்திற்கு மேல் இந்தத் தொழிலை
நம்பி வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட
ஒரு முக்கியமான தொழில் இன்றைக்கு மிகப்பெரிய ஒரு நெருக்
கடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது என்பதிலே மாற்றுக் கருத்
திற்கு இடமில்லை என்று நான் கருதுகிறேன்.

தமிழக அரசு இந்தத் தொழிலைப் பாதுகாப்பதற்காக பல
நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது: அதுபற்றிய சில
விஷயங்களை அறிவித்திருக்கிறது. மத்திய அரசு கூட இந்தத்
தொழிலைப் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு 22
தரத் துணிகளை இந்த கைத்தறி அரங்கத்திலே உற்பத்தி செய்ய
ஒதுக்கியிருக்கிறது. ஆனால் பிரச்சனை என்னவென்றால் மத்திய
அரசினுடைய புதிய ஜவுளிக்கொள்கை காரணமாக 22 தர
துணிகள் ஒதுக்கப்பட்டிருந்தாலும், இந்தத் தொழிலில் ஈடுபட்
டிருக்கக் கூடியவர்களுக்கு எந்த நியாயமான அல்லது உண்மை
யான நன்மை ஏற்படவேண்டுமோ அந்த நன்மை ஏற்படு
வதற்கு வழிவகை இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்
புகிறேன்.

நான் மட்டும் இதைச் சொல்லவில்லை. இன்றைக்கு
ஐ.என்.டி.யு.சி.யின் தமிழ்நாட்டு கிளையும் இதைச் சுட்டிக்
காட்டி, இந்த டெக்ஸ்டைல்ஸ் அரங்கத்தை தேசியமயமாக்க
வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது, எனக்கு
கிடைத்துள்ள தகவல் சரியாக இருந்தால், ஐ.என்.டி.யு.சி. ஒட்டு
மொத்தமாக, அகில இந்திய ரீதியில் இந்த ஏற்பாட்டை ஆதரிக்க
செய்து கொண்டிருக்கிறது. இந்த புதிய ஜவுளிக்கொள்கை காரண
மாக கைத்தறி அரங்கம் மட்டுமல்ல; ஒட்டுமொத்தமாக இந்த
ஜவுளி அரங்கம் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை
நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற இந்த பாலிஸி நோட்டில்
"நியு டெக்ஸ்டைல்ஸ் பாலிஸி" என்று 78-வது பாராவில்
துரதிருஷ்டவசமாக என்ன கூறப்பட்டிருக்கிறது என்றால் "The
new Textile Policy recently announced by the Government of India
does not provide active adequate support to the Hand-loom Sector."
என்று இருக்கிறது. நான் கேட்டுக்கொள்ள விரும்புவது என்ன
வென்றால் இது மட்டும் இன்று சொன்னால் போதுமா இந்த
கொள்கை சம்பந்தமாக? மத்திய அரசு இந்தத் துறையைப்
பாதுகாப்பதற்காக எடுக்க வேண்டிய தகுந்த சில நடவடிக்கை
களை, கருத்துக்களை சொல்லவில்லை என்ற அளவோடு இந்தப்
பிரச்சனை முடிந்துவிடவில்லை.





இந்த நாட்டினுடைய ஜவுளி உற்பத்தியில் ஏறத்தாழ 10
சதவிகிதம் அந்த கைத்தறி அரங்கத்தில் இருந்து உற்பத்தி செய்
யப்படுகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இப்படி
10 சதவிகிதம் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிற கைத்தறி உள்ளிட்ட
ஜவுளி அரங்கு 1985 ஜூன் 6ந்தேதி மத்திய அரசு வெளியிட்ட
ஜவுளிக் கொள்கையின் காரணமாக தளர்ந்து, சுக்கு நூறாக
மாறிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது,

நான் இதைச் சொல்லும்போது இந்த அரங்கத்தைப் பாது
காக்க எடுத்த நடவடிக்கைகளை மறுக்கவில்லை. ரிபேட் கொடுக்
கப்பட்டிருக்கிறது. கைத்தறித் தொழிலாளர் நலனுக்கு என்று
இந்த ரிபேட் கொடுக்கப்படுகிறது. ஆனால் உண்மை என்ன?
இந்த ரிபேட் அந்தத் தொழிலாளர்களுக்கு போகிறதா என்று
பார்த்தால் நமக்குக் கிடைக்கக்கூடிய தகவல்படி 'ஹாண்ட்லூம்'
தொழிலாளர்களுக்கு சரியாகப் போய்ச் சேரவில்லை. அவர்
களுக்குப் போய்ச் சேருவதிலே ஏகப்பட்ட காலதாமதம் இருக்
கிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர்களிலே யாரோ கூட
பேசினார்கள். குறிப்பாக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூல
மாகக் கொடுக்கப்படுகின்ற ரிபேட் கிடைப்பதில் காலதாமதம்
ஏற்படுகிறது. மதுரை, திருச்சியிலுள்ள தொழிலாளர்களிட
மிருந்து இப்படிப்பட்ட தகவல்கள் வந்திருக்கின்றன.

(மாலை 4.30)

இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்ன
வென்றால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டதற்கு இன்றைய
தினம் காரணமாக இருப்பது என்ன என்பதை யோசிக்க
வேண்டும். நீங்கள் இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே
சொல்லிவிட்டால் மட்டும் காணாது என்பதுதான் என்னுடைய
கருத்து. இந்தக் கொள்கையை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை
எடுக்கவில்லை என்றால் மொத்தமாக கைத்தறி அரங்கத்தில்
வேலை செய்யக் கூடியவர்கள் மட்டுமல்ல அனைவரும் பாதிக்
கப்படுவார்கள். பவர்லூம் பொறுத்தவரையில் உள்ள நிலைமை
என்ன? பவர்லூமிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள்
12 மணி நேரம் வேலை செய்கிறார்கள். அரங்கத்தில் வேலை
செய்யக்கூடிய தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இன்று
அவர்களுக்குப் போதுமான அளவுக்கு ஊதியம் கிடைக்கவில்லை.

பவர்லூமைப் பொறுத்தவரையில் நெருக்கடி ஏற்பட்டு
அந்தத் தொழிலும் நின்று இருக்கிறது. ஜவுளிக் கொள்கை
யைப் பார்க்கிறபோது வேலைவாய்ப்பு பெருகுவது பற்றிச்
சொல்லப்பட்டிருக்கிறது. துணியின் விலை குறையாமல் இருப்
பதற்கு வேண்டி உள்ள ஏற்பாடு பற்றிக் குறிப்பிடப்பட்டு இருக்
கிறது. மில்களைப் பொறுத்தவரையில் இஷ்டப்படி எக்ஸ்பான்ட்
பண்ணுவதற்கும், மாடர்னைஸ் பண்ணுவதற்கும் உரிமை
கொடுக்கப்படுகிறது. பவர் லூமைப் பொறுத்தவரையில் அதை

விஸ்தரிப்பதற்கு சுதந்திரம் இன்று கொடுக்கப்படுகிறது. அதே போல் ஹேண்ட்லூம் துறையும் பாதுகாக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பருத்தி உற்பத்தி செய்யக்கூடியவர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு ரெம்யுனரேட்டிவ் ப்ரைஸ் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சிந்தித்துப் பார்க்கக் கூடிய நேரத்தில் இதை எல்லாம் துரிதப்படுத்திக்கொண்டு போக முடியுமா? அந்தக் கொள்கையைப் பார்க்கிறபோது ஒட்டுமொத்தமாக இந்தத் துறையிலே இன்று ஈடுபட்டிருக்கக் கூடியவர்களை ஏமாற்றக்கூடிய முறையில் அமைந்து இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் இது இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில் யாரைப் பாதுகாக்கிறது என்றால் பெரிய மில் மேக்னட்களைப் பாதுகாக்கிறது. குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால் It is the virlu l accept nce of all the dem nds being mace by the mill owners for incrsa ing their profits. அதுதான் இந்தக் கொள்கையின் ஒட்டுமொத்தமான அம்சம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய அனைத்து தொழிலாளர்களும் அதாவது ஹேண்ட்லூம் தொழிலாளர்களும், பவர்லூம் தொழிலாளர்களும் இன்று கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல ஆலைகள் இன்று மூடப்பட்டு இருக்கின்றன. 75 இலட்சத்திற்கும் அதிகமான ஹேண்ட்லூம் சென்டரிலே உள்ள தொழிலாளர்கள் தெருவிலே நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மட்டுமல்ல; ஆலைகளில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களும் கூட தெருவில் நிற்கிறார்கள். இந்த அவையிலே கூட, 8 ஆலைகளைத் திறக்க வேண்டும் என்பதற்கான அந்தப் பிரச்சனைகள் எல்லாம் கிளப்பப்பட்டன. இப்படிப்பட்ட ஒரு நிலைமை இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதற்கு என்ன காரணம்? மத்திய அரசு மில் (சன்டரை பூஸ்ட் பண்ணுவதற்காக எடுக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த நடவடிக்கைதான் காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் விளைவாக இன்று ஹேண்ட்லூம் சென்டரிலே பாதுகாப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் கூட அந்தத் தொழிலில் ஈடுபட்டு இருக்கக்கூடியவர்களுக்கு யார்ன் அதாவது நூல் கிடைப்பதைப் பொறுத்த வரையில் என்ன உத்தரவாதம் இருக்கிறது. இன்று அவர்கள் அதிகமான விலை கொடுத்துத்தான் நூல் வாங்கி தொழில் நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு இருக்கிறது. சாயம், மற்றும் ராமெட்டீரியல்ஸ் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் மத்திய அரசினுடைய டாக்சேஷன் கொள்கை காரணமாக இன்று விலை உயர்வு ஏற்பட்டு இருக்கிறது. ஹேண்ட்லூம் சென்டரிலே இருக்கக்கூடிய சேல்ஸ் டாக்ஸ் கூட கடுமையாக பாதிக்கப்படக் கூடிய அளவுக்கு வந்திருக்கிறது. இந்தத் தொழிலைப் பொறுத்த



வரையில் பாதுகாப்பு நடவடிக்கைகளோ அல்லது வளர வைப்பதற்கான நடவடிக்கைகளோ நாம் எடுத்துக்கொண்டால் கூட போதுமான அளவுக்கு விஷயங்களை அமைத்துக் கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் என்ன?

பவர் லூம் சென்டரைப் பொறுத்தவரையில் 4பவர்லூம் வைத்திருக்கக் கூடியவர்களுக்கு எக்சைஸ் டியூட்டியிலே இருந்து விதிவிலக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்த விதிவிலக்கின் உள்ளே மில் முதலாளிகள் நுழைந்து கொண்டு அவர்கள் அதைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்ற காரணத்தால் இன்று இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதேபோன்று கண்ட்ரோல் கிளாத். அந்தத் துணிகளை யாருக்குக் கொடுக்கிறார்கள்.

அது ஹேண்ட்லூமுக்கு பவர்லூமுக்கு போய்விடுகிறது. ஹேண்ட்லூமுக்கு தள்ளப்படக்கூடிய நேரத்தில் சிந்தடிக் அண்டு பிளண்டிங் ஃபேப்ரிக் யாருக்கு விடப்படுகிறது? லாட் என்று சொல்லக்கூடிய முறையில் பெரிய முதலாளிகளுக்கு விடப்படுகிறது. அந்தப் பெரிய முதலாளிகள் அந்த சிந்தடிக் அண்டு பிளண்டிங் பேப்ஃரிக்சை வைத்துக் கொண்டு இன்று விளையாடுகிறார்கள். கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். இந்த நேரத்தில் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1971 ஆம் வருடத்திலேயிருந்து 1985-வது வருடம் வரையில், இந்தத் துறையின் மூலம் அந்த முதலாளிகள் ஈட்டி இருக்கக்கூடிய லாபத்தை, பத்து வருடங்களாக சம்பாதித்து இருக்கக்கூடிய லாபத்தை பார்ப்போமேயானால் 228 கோடி என்று இருந்தது இன்றைக்கு 2260 கோடியாக, அந்த லாபத்தை, அந்த முதலாளிகளின் சொசைட்டி ஏற்படுத்தியிருக்கிறது. இது நான் சொல்லக் கூடிய கணக்கு அல்ல. ரிசர்வ் வங்கியினுடைய கணக்கு. அப்படி இன்றைக்கு சிந்தடிக் அண்டு பிளண்டிங் ஃபேப்ரிக்ஸ் மில் விலைக்கு அவர்களிடம் ஒப்படைப்பதன் காரணமாக அவர்களுக்கு அதிகமான வருவாய் ஏற்படுவதற்கு காரணமாகிறது.

அது மட்டும் அல்ல, இன்னொரு விஷயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதன் காரணமாக இன்னொரு நிலை நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய டொமஸ்டிக் மார்க்கெட், சராசரி மக்கள் வாங்கும் மார்கெட்டை பொறுத்தவரையில் 10 ஆண்டுக் காலத்திற்கு முன்பு இந்த நாட்டிலே உள்ள ஏழை எளிய மக்கள் வாங்கி பயன்படுத்திய விலையை விட 4 மடங்காக உயர்ந்திருக்கிறது. அதன் காரணமாக இன்றைக்கு உள்நாட்டிலே அதன் விலையை சரிகட்ட வேண்டிய தனிப்பட்ட சிரமம் ஏற்பட்டிருக்கிறது.

கணக்கில் என்ன சொல்லப்படுகிறது என்றால் பெர்கேப்பிட்டா கன்சம்ப்சன் 13.65 மீட்டராக இருந்தது இன்றைக்கு 9.40 மீட்டராக குறைந்திருக்கிறது. அதே நேரத்திலே இன்று ஓவர் ஆல் புரொடக்ஷனை—ஐப் பொறுத்தவரையில் பார்க்கக்கூடிய

நேரத்தில் 474 கோடி மீட்டராக இருந்தது 778.8 கோடி மீட்டராக உயர்ந்திருக்கிறது. ஆனால் மில்லினுடைய புரொடக்ஷனைப் பார்க்கிற நேரத்தில் 372.7 கோடி மீட்டராக இருந்தது 234.7 கோடி மீட்டராக குறைந்திருக்கிறது. ஓவர் ஆல் புரொடக்ஷன் கூடி இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் ஹேண்ட் லூமினுடைய புரொடக்ஷனும், பவர்லூமினுடைய புரொடக்ஷனும் சேர்ந்து போட்டிருப்பதுதான். இப்படிப்பட்ட நிலைமை இருப்பதன் காரணமாகத்தான் இன்று அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்களுக்கு (மணியடிக்கப்பெற்றது)—இரண்டு நிமிடங்கள் தாருங்கள். அதற்குள் முடித்துவிடுகிறேன்—கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஹேண்ட்லூம்சைப் பொறுத்தவரையில் அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லி சில ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன், தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் என்று அவைகளுக்குப் பெயர். இந்த நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கக்கூடிய மிஸ் மேனேஜ்மெண்ட் காரணமாக அந்த நிறுவனமே 'சிக்' நிறுவனமாக ஆகிவிடுமோ என்ற ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷனுக்கும் அந்த நிலைமை இருக்கிறது. அவர்கள் நெய்து அனுப்பும் துணிகளை நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் வாங்குவதற்கு பதிலாக, நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷனின் தேவைகளுக்கேற்ப உற்பத்தி செய்ய வேண்டும் என்று மத்திய அரசு கோருகிறது. இப்படிப்பட்ட கொள்கையின் காரணமாக அந்த தொழிலையே இன்றைக்கு மூடக்கூடிய நிலைமை நாட்டில் ஏற்பட்டிருக்கிறது.

இன்னொரு விஷயத்தையும் பார்க்க வேண்டும். காட்டன் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா என்ற ஸ்தாபனத்தைப் பொறுத்தவரையில், அதை உருவாக்கும்போது என்ன சொன்னார்கள் என்றால், பருத்தி உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு நியாயமான விலை கிடைக்க அதன்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். அதற்கு ஏதாவது திட்டங்கள் இருக்கிறதா? என்ன நிலைமை என்று பார்த்தால், அந்தப் பருத்தி உற்பத்தி செய்யக் கூடியவர்களுக்கு இன்று வரையில் நியாயமான விலை கிடைக்க வாய்ப்பு இல்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம், இந்த மத்திய சர்க்காரின் கொள்கைகள் காரணமாக ஏற்படக்கூடிய நேரத்தில், இந்த நாட்டினுடைய நிலைமை எப்படிப் போகிறது? இதை சீர் செய்ய என்ன செய்ய வேண்டும் என்று சிந்திக்க வேண்டுமா? வேண்டாமா? அதனால் தமிழ்நாட்டில் உள்ள 1 லட்சத்திற்கு மேற்பட்ட கைத்தறி தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். அப்படி நடவடிக்கை எடுக்கக்கூடிய நேரத்திலேதான் நான் என்ன சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் என்றால், மத்திய அரசின் அந்த ஜவுளிக் கொள்கைக்கு எதிராக இந்த அரசு என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை



எடுக்காவிட்டாலும் கூட, இப்படிப்பட்ட தேவையான ஆலோசனைகளை அவர்களுக்குச் சொல்லவேண்டும். இதை வெறுமனே குறிப்பேட்டில எழுதிக் கொள்வதனால் மட்டும் பல்லாயிரக்கணக்கான சம்பந்தப்பட்ட, நெசவாளர்களுக்கு பாதுகாப்பு ஏற்பட்டுவிடாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாலை 4-40)

இது சம்பந்தமாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் பொறுத்தவரையில் சிக் மில்களை எடுத்து நடத்துவதற்கு உருவாக்கப்பட்ட ஒரு ஸ்தாபனம் ஆகும். அதனுடைய பெர்பார்மென்ஸ் சரியாக இல்லையென்று 1983–84ஆம் ஆண்டிற்கு கொடுக்கப்பட்ட காம்ப்ட்ரோலர் அண்ட் ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டில் 52 ஆம் பக்கத்திலிருந்து 63 ஆம் பக்கம் வரையில் சில விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். காவேரி ஸ்பின்னிங் மில்ஸ் எடுத்து நடத்தப்பட்டு இன்றைக்கு அது எங்கே சென்று இருக்கிறதென்ற விவரங்கள் எல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நேரம் அதிகம் இல்லாததால் நான் இதற்குள் போக விரும்பவில்லை.

அடுத்து இந்தத் துறையில் வேலை செய்கிற தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் எந்த அளவிற்கு அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டுமோ அது கொடுக்கப்படவில்லை. இதுகுறித்து கொள்கைக் குறிப்பில் 24-ம் பக்கத்தில் சில விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

The proposals for sanction of staff to enforce the said Act and Rules are being examined by the Government and the said Act and Rules will be enforced shortly. இந்தச் சட்டம் வந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டது. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் இதனை லேபர் டிபார்ட்மெண்ட் இம்ப்ளிமெண்ட் பண்ணுகிற அளவில் செய்யவேண்டும். டைரக்டர் ஆப் ஹேண்ட்லூம்ஸ் இதனை இம்ப்ளிமெண்ட் பண்ணுகிற அதிகாரியாக இருப்பது சரியில்லை. இதனை லேபர் டிபார்ட்மெண்டிற்கே விட்டு விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு விஷயம். சமீபத்தில் பி அண்டு சி மில்லிற்கு நான்கு கோடி ரூபாய் பாலியஸ்டர் துணிக்கு சோவியத் யூனியனிலிருந்து ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஆர்டர்கள் நம்முடைய ஹேண்ட்லூம்ஸ் பாலியஸ்டருக்கு கிடைக்கிற வகையில் இப்படிப்பட்ட நாடுகளோடு நெகோஷியேட் பண்ணி இந்தத் துறையில் இருப்பவர்களுக்கு உதவுகின்ற முறையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பவர்லூம்சைப் பொறுத்தவரையில் இன்றைக்கு அன்ஆத்தரைஸ்ட் பவர்லூம்ஸ் என்பது ஆத்தரைஸ்ட் பவர்லூம்சை விட இரட்டிப்பு அளவு இருக்கிறதென்று இந்தக் குறிப்பிலே

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1986 ஏப்ரல் 4

சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட பவர்லூம்ஸ்களை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த மில்களில் வேலை செய்து வேலையிழந்தவர்கள் அதிகமான அளவில் இன்றைக்கு இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு தகுந்த அளவிலே மேலும் அதிகமாக மில்களை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் அங்கே யிருக்கிற கன்னியாகுமரி கூட்டுறவு நூற்பாலையின் இன்னொரு ஆலையை ஏற்படுத்துவதற்கு திட்டம் போடப்பட்டது. ஆனால் என்ன காரணத்தாலோ அந்தத் திட்டம் அமல் நடத்தப்பட வில்லை. அந்த கிளை மில்லைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து புரகிபிஷன் சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது இன்றைக்கு கள்ளச் சாராயம் அதிகமாக விற்கப்படுகிறது. கடைகளுக்கு எல்லாம் இன்றைக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லப்பட்டிருக் கிறது. பல ஊர்களில் போய் பார்த்தால் நாம் என்ன பார்க்கிறோம் என்றால் அன்-லைசென்ஸ்ட் ஷாப்ஸ் நிறைய இருக்கின்றன. அந்தக் கடைகள் பல இடங்களில் இருக்கின்றன. அவர்களால் தொந்தரவு, தகராறு போன்றவை வருகின்றன. காவல்துறைக்குச் சென்று புகார் செய்தால் காவல்துறையினைச் சார்ந்தவர்களின் கொல்லூஷனில் தான் இந்தக் கடைகள் வைக்கப் பட்டிருக்கின்றனவா என்ற நியாயமான சந்தேகம் ஏற்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அசிஸ்டென்ட் எக்சைஸ் கமிஷனரிடத்தில் பல தடவை நானே புகார்களைச் சொல்லியிருக் கிறேன். குறிப்பாக விளவன்கோடு தாலுகாவில் திக்குறிச்சி என்ற இடத்தில் இப்படி அன்லைசென்ஸ்ட் ஷாப் ஒன்று வைக்கப் பட்டிருந்தது. நான் கம்ப்ளெயின்ட் பண்ணியதால் அசிஸ்டென்ட் எக்சைஸ் கமிஷனர் போய் அந்தக் கடையை மாற்றினார்கள். ஆனால் அடுத்த நாளே அந்த ஆள் அந்த இடத்தில் கடையை வைத்திருக்கிறார். இது சம்பந்தப்பட்ட துறையினர், காவல் துறை உதவியில்லாமல் நடக்காது. இப்படிப்பட்ட அன்லை சென்ஸ்ட் ஷாப்ஸ் இருக்கின்றன. கேட்டால் என்ன சொல் கிறார்கள் என்றால் ஏதோ ஒரு கடையின் பிரான்ச் என்று சொல் கிறார்கள். ஒரு லைசென்ஸ்டு கடைக்கு எத்தனை பிரான்ச்களை அமைக்க இப்போது சட்டம் இடம் கொடுக்கிறது? ஒரு லைசென்ஸ்டு கடையை வைத்துக்கொண்டு 7, 8 கடைகளை பிரான்ச்கடைகளாக வைக்கக்கூடிய நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இதிலே என்ன விபரீதமான ஆபத்து என்றால், இந்த அரசு வினியோகம் செய்யக்கூடிய அந்தப் பொருட்களில் போதுமான அளவிற்கு வீரியம் இல்லை என்று சொல்லி, அந்தக் கடைக்காரர்களே, கள்ளச் சாராயத்தை வாங்கி, அவர்களே அந்தக் கடைகளில் விற்கிறார்கள். இன்னும் சில கடைகளில்



1986 ஏப்ரல் 4] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

இந்த இரண்டையும் மிக்ஸ் பண்ணி விற்கிறார்கள். இதை சம்பந்தப்பட்ட துறையினர் கவனிக்கிறார்களா அல்லது இதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை.

அடுத்து இன்னொரு விஷயத்தையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தப் பிரச்சனையில் கொஞ்சம் ஐடியாலாஜிகல், தத்துவார்த்த ரீதியாக பார்த்தால் கூட இப்படிக் கண்டுபிடிப்பது சரியான ஒரு ஏற்பாடு அல்ல. இது எந்த அளவிற்கு மனிதனைக் கெடுக்கிறது என்ற முறையில் உள்ள ஒரு பிரச்சாரம் நடத்தப் பட்டால்தான், அவர்களுடைய தத்துவார்த்த ரீதியான அந்த நிலையினை உயர்த்தாமல் இன்று போலிசுனுடைய கெடுபிடியை வைத்துக்கொண்டு அல்லது மற்ற ஏற்பாடுகள் வழியாகவோ இந்தத் திட்டத்தை வெற்றி பெறச் செய்ய முடியாது. ஆகவே அந்த முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இன்றைக்கு பள்ளிக் கூடங்களுக்கு அருகாமையிலும், கோயில் களுக்கு அருகாமையிலும் பொது இடங்களுக்கு அருகாமையிலும் இந்தக் கடைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இது நிச்சயமாக தடை செய்யப்பட வேண்டும்.

அடுத்து காதியைப் பற்றி சொல்லக்கூடிய நேரத்திலே, அதிலே வேலை செய்யக்கூடிய ஊழியர்களைப் பொறுத்தவரையில், போதுமான அளவிற்கு நல்ல சர்வீஸ் கண்டிசன்ஸ் இன்றைக்கு இல்லை. அவர்களுக்குப் போதுமான ஊதியம் கொடுக்கப்பட வில்லை. இதை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இன்று இந்த பனைமரம் ஏறுகின்ற போது விபத்து காரணமாக இறந்து போன பலருக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. ஏதோ ஒரு காரணத்தால அந்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. இது சரியல்ல. எனவே இதிலே விபத்து ஏற்பட்டு இறக்கக்கூடியவர்களுக்கு நியாயமான நிவாரணம் கிடைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஏதோ ஒரு ஃபிலிம்சி ரீசனைச் சொல்லி அவர்களுடைய மனுக்களை ரிஜக்ட் செய்கிற நிலைமை இருக்கிறது. இது சரியல்ல. எனவே அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு கொடுத்து, தகுந்த நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களாலும் மாண்புமிகு கதர்த்துறை அமைச்சரவர்களாலும் கொண்டுவரப்பட்டு இருக்கக்கூடிய மாநில ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலை மற்றும் கதர்–கிராமத் தொழில் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது நான் சார்ந்துள்ள காந்தி–காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக் களைச் சொல்ல விழைகிறேன்.

நான் இங்கு சொல்வது அரசாங்கத்தினுடைய நிர்வாகத்திற்கு தகுந்ததாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் சொல்கிறேன். தமிழக மக்களின் நலன் கருதி, நடைபெறும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசு தமிழகத்தில் உடனடியாக மது வகைகளை அகற்ற வேண்டும். காரணம் என்னவென்றால், இன்று வடி சாராயம் டெப்போக்கள் மூலம் பல இடங்களில் காய்ச்சப்படுகிறது. அப்பேர்ப்பட்டவர்கள், கிராமங்களில் தாங்கள் நினைப்பது எல்லாம் நடைபெற வேண்டும் என்ற எண்ணம் கொண்டு பெரிய கேடுகளைச் செய்து வருகிறார்கள். அதன் பலனாக சாராய விற்பனையை அரசே செய்வது என்பது ஒழுக்கக்கேடுகளை அரசே உற்பத்தி செய்வதற்கு ஒப்பாகும். சமுதாயம் நல்லதாக இருந்தால் தான் அரசும் நல்லதாக அமையும். மக்கள் ஒழுக்கமானவர் களாக இருந்தால்தான் நல்ல அரசு அமையும், வள்ளுவர் அவர்கள் அழகாக, 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்' என்று சொன்னார்கள்.

சாராயம் ஒரு சர்வ சக்தி வாய்ந்த டானிக் அல்ல. மக்களை வறுமைக் கோட்டுக்குக் கீழே கொண்டு செல்வது சாராயமே. மருத்துவமனைகளுக்கு அதிகமாக குடித்துவிட்டு செல்பவர்கள் இருக்கிறார்கள். குடிக்கின்றவர்களுக்கு அதிகமாக மருத்துவ மனைகளில் மருத்துவம் செய்யப்படுகிறது. வட்டிக் கடைக்காரர் களிடம் வாடிக்கையாளர்களாக இருககிறார்கள் இவர்கள். கோமணத்தை அடகு வைத்து குடிக்கிறவன், குடிக்காதபோது திருடுகிறான், கொள்ளைக்காரனாகவும் மாறுகிறான். இதன் தொடர்பாக மனிதன் பல குற்றங்களைச் செய்து பழிக்கு ஆளா கிறான். அழகுக்காக சிலர் அளவாகக் குடிக்கிறார்கள், நட்புக் காக சிலரும், நாகரீகத்திற்காக சிலரும், நாகரீகம் இல்லாமல் சிலரும் குடிக்கிறார்கள். இதனால் சமுதாயச் சீர்கேடுகள் வந்து விடுகின்றன. தீபாவளிக்குக் கூட புதிய துணி வாங்க முடியாத ஏழைகள், அழுக்கை ஆடையாக ஆக்கி, அவலமாக அலை கிறார்கள். அன்றாடம் காய்ச்சிகளின் அவலத்தை எண்ணிப் பாருங்கள்.

(மாலை 4 50)

சாக்கடை ஓரத்திலும் சாலை ஓரத்திலும் வாழ்வை ஒப்படைத்து விட்டு விதி என்று வாழ்கின்ற மக்களில் இன்று 99 சதம் மக்கள் இருக்கின்றார்கள். மதுவை அகற்றவேண்டி ஆயிரக்கணக்கான தென்னை மரங்களையும், வெட்டி எடுத்த தந்தை பெரியாரின் வழிகாட்டியாக இருக்கின்ற இந்த அரசு உடனடியாக இந்தத் தீமையிலிருந்து மக்களை விட்டு நீக்க வேண்டும். நல்ல ஒழுக்கம் உள்ள சமுதாயம் உருவாக மதுவிலக்கு அவசியமானது. முள்ளை வைத்து முல்லை மலர்களை எதிர்பார்க்க முடியாது. எனவே இந்த அரசு மது விலக்குக் கொள்கையில் இன்னும் தீவிரமாக இருக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.





கதர்த்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு சில விஷயங்களைக் கொண்டுவர நான் விரும்புகிறேன். கைத்தறி ஒரு துணி அல்ல. அது ஒழுக்கத்தின் உயர்ந்த அடையாளமாகக் கருதப் பட்டது. விடுதலை வேள்விக் காலத்தில் அது ஒரு ஆயுதம்— ஆங்கிலேயர்களை விரட்ட மகாத்மா காந்தியால் கண்டுபிடிக்கப் பட்ட உயர்ந்த ஆயுதம். துப்பாக்கிகளும், பீரங்கிகளும் சாதிக்க முடியாத ஒன்றை கைராட்டையும், காவியும் சாதித்துவிட்டது என்று உலகம் ஒப்புக்கொண்டிருக்கிறது. ஏழை மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திய உயர்ந்த பொருளாதாரத் தத்துவம் கதர். மனிதனை, அவனுடைய ஆன்மாவை கதர் மேம் படுத்துவதாக காந்தியடிகள் கூறியிருக்கிறார். நல்லொழுக்கம், தியாகம் இரண்டின் நினைவுச் சின்னமாக இருக்கிறது. கதர், மோசமான காலகட்டத்தில் வித்தியாசமாக விமர்சிக்கத்தக்க அளவு உள்ளது. வெறும் தள்ளுபடியாலே கதர் விற்பனை என்பது மோசம் தருவதாக அமையும் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்களுக்கும், விவசாயிகளுக்கும், நெசவாளர்களுக்கும் வேலைவாய்ப்பும் பொருளாதார வசதியையும் தருகிற கதரை கண்துடைப்பாக கையாள்வது வருத்தமளிக்கிறது. இந்தத்துறை இன்னும்சிறப்பாக பணியாற்றவேண்டுமென்று எதிர்பார்க்கிறேன். கொள்முதல் விலை எதுவும் இல்லாமலேயே சில சங்கங்கள் தள்ளுபடிகளுக்காக மட்டும் கணக்கில்லாமல் பல்லாயிரக் கணக்கான ரூபாய்களை கொள்ளையடித்துக்கொண்டு வரு கின்றன. தள்ளுபடி தருவதற்காகவே புதிய திட்டங்கள், புதிய வகையான திருட்டுத்தனங்கள் கள்ளக்கணக்குகளெல்லாம் தயா ரிக்கப்படுவதால் அரசாங்கம் ஏமாற்றப்படுகிறது; ஏழைமக்களின் வரிப்பணமும் ஏமாற்றப்படுகிறது. வியாபாரம் ஆக்கப்படுகிறது. தள்ளுபடியின் நோக்கம் வாங்கும் சுமையைக் குறைப்பதும், விற்பனையைப் பெருக்குவதும் ஆகும். ஆனால் இந்த நோக்கம் இங்கே நிறைவேற்றப்படுவதில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கதரைப் பொறுத்தவரை, அதன் வகைப்படுத்தப்பட்ட நூலின் மூலம் துணியின் தரம் பிரிக்கப்பட்டு 10 கால் முதல் 28 கால் வரை துணியின் தரம் மாறுபடுகிறது. எனவே தள்ளுபடி தருவதற்கு பதிலாக ஒரு விலை நிர்ணயக் குழுவை நியமித்து அரசே விலையை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அல்லது கதர் தள்ளுபடி விற்பனையில் மோசடியைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் கூப்பன்களை அச்சிட்டு அதனை துணி வாங்குகிறவர்களுக்கு கொடுப்பதன் மூலமாகத் தள்ளுபடி விற்பனையை ஊக்குவிக்க வேண்டுகிறேன். கதர் கடைகளில் அந்தக் கூப்பன்களைக் கொடுத்தால் அவைகளை துணிகளுக்காக வாங்கிக்கொள்ள வசதி செய்து தந்தால் தள்ளுபடியில் தில்லு முல்லுகள் செய்ய முடியாது என்பதனைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கைத்தறி துணிக்குத் தரப்படும் தள்ளுபடிக் கான தொகை நெசவாளர்களுக்கு போய்ச்சேரவில்லை. அதுவும் சுரண்டப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களில் தரக்கூடிய போனஸ் கொடுக்காத கோபத்தை வெளியே காட்டமுடியாத நெச

வாளர்கள் பழிவாங்கப்படுவதிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள நூலை மாற்றி நெய்கிறார்கள். கொடுக்கப்படுகின்ற நூலுக்குப் பதிலாக வேறு நூலைப் போட்டு நெய்கிறார்கள். ஆகவே ஒரு பக்கம் அரசும் மறுபக்கம் மக்களும் சுரண்டப்படு கிறார்கள். இதுபோன்றவைகளை இந்தக் கதர்த்துறையினுடைய அமைச்சர் அவர்கள் உடனடியாகப்போக்க வேண்டுமென்று கூறி இவ்வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

*மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, கதர்த் தொழில் கிராம மானிய கோரிக்கையின் மீது பேரவையின் சார்பாக இங்கு 15 உறுப்பினர்கள் கலந்துகொண்டு அதில் தங்களுடைய அறிவுரை களையும், கதர்த்துறையினுடைய முன்னேற்றத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும், தங்களுடைய கருத்துக்களையும் அந்தத் துறையிலுள்ள குறைகளையும். நிறைகளையும், நிறைவு செய்ய வேண்டுமென்பதனையும், தங்களுடைய கருத்துக்களையெல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறி இருக் கிறார்கள். அவர்கள் எடுத்துக்கூறி இருக்கின்ற கருத்துக்களை ஏற்று அரசு அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை முதலில் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த கதர் கிராமத் தொழில் வாரியம் 1-4-196?—ல் ஆரம் பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட பின்னால் நம்முடைய அண்ணல் காந்தியடிகளுடைய அறிவுரைகளின்படியும் பாராட்டுதலுடனும் நல் ஆசியுடனும் மிக சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வந்தன.

அந்த வகையில் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றதற்குப் பின்னாலும், 1977 ஆம் ஆண்டு நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றதற்குப் பின்னாலும் அந்த கதர் கிராமத் தொழில் வாரியத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற் கும் அவர்கள் எந்த அளவுக்கு அறிவுரையையும், ஆக்கத்தையும், ஊக்கத்தையும் காட்ட வேண்டுமோ அந்த வகையில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அளித்து வருகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்பதற்கு முன்னால் இந்த கதர் கிராமத் தொழில் வாரியத்தில் 3 லட்சம் பேர்கள் வேலை ாய்ப்பை அடைந்து இருந்தார்கள். ஆனால் நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் 1977 அம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் இன்று வரை இந்த கதர் கிராமத் தொழில் வாரியத்தில் 7 லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்



அந்த அளவுக்கு தமிழ்நாட்டில் உள்ள கிராம வாழ் மக்கள் மீதும், பெண்கள் மீதும் மற்றும் வேலை அற்ற இளை ஞர்கள் மீதும் படித்த இளைஞர்கள் மீதும் பற்றும் பாசமும் வைத்து இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்ற அளவுக்கு இந்த வேலைவாய்ப்பு இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த 1986-87 ஆம் ஆண்டுக்கு மட்டும் வேலைவாய்ப்பு கொடுக்கின்ற வகையில் 67 ஆயிரம் பேர்களுக்கு புதிதாக வேலை வாய்ப்பு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் அளிக்கப்படும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கு முன்பு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் பொருட்கள் உற்பத்தி நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னால் 24 கோடி ரூபாயாக இருந்தது. ஆனால் இப்போது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பினை ஏற்றதற்கு பின்னால் இன்றையதினம் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பொருள் உற்பத்தி 121 கோடியாக உயர்ந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாளுக்கு நாள் நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான் கதர்கிராமத் தொழில் முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் அடைந்து இருக் கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பனைத் தொழில் நம்முடைய தமிழ்நாட்டில் மிகவும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாட்டில்தான் இந்த பனைத் தொழிலின் உற்பத்தி 76 சதவீதம் செய்யக்கூடிய அளவுக்கு இருக் கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று பனைத் தொழிலில் 30 முதல் 35 வகையான பொருட்களை நாம் உற்பத்தி செய்து கொண்டு இருக்கிறோம். இந்த கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் உற்பத்திச் செய்யக்கூடிய பொருட்களை நாம் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து கொண்டு இருக்கிறோம். அந்த வகையில் பனைத் தொழிலில் உற்பத்தியான பொருட்கள் மட்டும் 33 கோடி ரூபாய் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள் கிறேன். தமிழ்நாட்டிலிருந்து நாம் பனைப்பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அந்த வகையில் தமிழ்நாட்டில் இருந்து பனைப்பொருட்கள் 75 லட்சம் ரூபாய்க்கு ஏற்றுமதி செய்து கொண்டு இருக்கிறோம் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

மேலும் காலணி செய்யும் தொழிலாளர்களைப் பற்றி எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஏற்கனவே இதே சட்டமன்றத் திலே 1985–86 ஆம் ஆண்டு நடந்த விவாதத்தில் மாண்புமிகு

உறுப்பினர்கள் எல்லாம் காலணி தைக்கும் தொழிலாளர்கள் மீது அக்கறைக் கொண்டு அரசு கொடுக்கக்கூடிய காலணி தைக்கும் பெட்டிகளை மேலும் அதிகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பினார்கள்.

(மாலை 5-00)

அவர்களுடைய கோரிக்கையினை நிறைவேற்றுகின்ற வகையில் நம்முடைய புரட்சித் தலைவர் அரசு இன்றையதினம் 750 காலணி தைக்கும் பெட்டிக்கூடங்கள் இந்த ஆண்டு வழங்க இருக்கின்றது என்பதனையும், சென்ற ஆண்டு காலணி தைக்கும் தொழிலாளர்களுக்கு ஆன பெட்டிகளின் விலை ரூ. 7,500லிருந்து இப்போது ரூ. 8,500ஆக வழங்கப்பட்டிருக்கிறது என்பதனையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் நம்முடைய கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் இன்னும் பல்வேறு கிராமத் தொழில்கள் எல்லாம் செயல்பட்டு வருகிறது. அந்தக் கிராமத் தொழில்கள் இன்று அந்தந்த கிராம வாழ் மக்களுக்கு அந்தந்தப் பகுதியில் கிடைக்கக் கூடிய மூலப்பொருட்களைக் கொண்டு, அங்கங்கே பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களையும் ஏற்படுத்தி, தனி நபர்களுக்கு கடன் கொடுத்தும், வாரியம் பல்வேறு வகைகளில் உதவி செய்து வருகிறது. அதுமட்டுமல்ல, பல்வேறு தொழில்களை ஆரம்பித்திருக்கிறது என்றால் அத்தனை தொழில்களையும் இங்கு எடுத்துக் கூற நேரம் போதாது. இருப்பினும் எத்தனை வகையான தொழில்கள் செய்யப்படுகிறது என்பதனைப் பற்றி ஒரு சிலவற்றைப் பற்றி எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கதர்க் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக பனைத் தொழில், எண்ணைத் தொழில், தேன் தொழில், சோப்புத் தொழில், தச்சு மற்றும் கொல்லுத் தொழில், மண்பாண்டம் தயாரித்தல், கையால் செய்யப்படும் காகிதத் தொழில், ரொட்டித் தொழில், பழம் பக்குவப்படுத்தி பாதுகாக்கும் தொழில், பாய் முடையும் தொழில், பிரம்பு மற்றும் மூங்கில் தொழில், அகர்பத்தித்தொழில், நீலகிரித் தைலம், லெமன் கிராஸ் தைலம் தயாரிக்கும் தொழில் ஆகியவை அந்தந்த கிராமங்களில் மக்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு இது போன்ற கிராமத் தொழில்களை நாம் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் சிறப்பான முறையில் செயல்படுத்தி, அந்தந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்து வருகிறோம் என்பதனை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையில் இங்கு பேசுகின்ற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் வேங்கடரமணன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். கதர்த்துறையின் மூலம் விளம்பரங்கள் அதிகம் இல்லை என்று எடுத்துக் கூறினார்கள். அவர்களுக்கு நான் கூறிக் கொள்கிறேன். கதர்கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக அங்கங்கே நடக்கக் கூடிய பொருட்காட்சிகளில், கதர்க் கிராமத் தொழில் வாரியத்தில் தயாரிக்கப்பட்ட பொருட்களை



எல்லாம், கதர்க் கிராமத் தொழில் வாரியத்தின் தொழில் அரங்குகளாக ஏற்படுத்தி, அங்கு பொருள்களை வைத்திருக்கிறோம். அது போன்று பத்திரிகைகளிலும், வானொலியிலும், தொலைக் காட்சியிலும் விளம்பரத்தைக் கொடுத்துவருகிறோம். நிதிநிலை இருக்கக் கூடிய அளவிற்குத் தான் நாங்கள் விளம்பரத்தைக் கொடுத்துக் கொண்டு வருகிறோம். பணப் பற்றாக்குறையினால் அதிக விளம்பரம் கொடுக்கமுடியவில்லை. முடிந்த அளவிற்கு கதர்கிராமத் தொழில் வாரியம் விளம்பரத்தைக் கொடுத்து வருகிறது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் கிராம நூற்பாலை நிலையத்தில் மேற்பார்வையாளர்கள் என்ற பணியாளர்களை நீக்கி, அங்கு பணி புரியக் கூடிய நூற்பு பெண்களுக்கு அந்த சம்பளத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று அவர் பேசிய நேரத்தில் எடுத்துக் கூறினார். எதற்காக இன்று கதர் கிராமத் தொழில் வாரியத்தில், மேற்பார்வையாளர்களின் பதவிகளை உருவாக்கி இருக்கிறோம் என்றால், அவர்கள் மூலம் இன்று உற்பத்தி செய்யப் படக்கூடிய சிட்டங்களும், மற்றும் பஞ்சு ராட்டைகளும் இலட்சக்கணக்கில் இருக்கிறது. அவற்றையெல்லாம் கண்காணிக்கும் பொறுப்பில் இந்த மேற்பார்வையாளர்கள் இருக்கிறார்கள்.

அதேபோன்று இருப்பில் இருக்கும் சொத்துக்களுக்கான பொறுப்பினையும், ராட்டைகள் பழுதடைந்தால், பழுதுபார்க்கக் கூடிய பொறுப்பினையும் அந்த மேற்பார்வையாளர்கள் ஏற்றிருக்கிறார்கள். அதனால் அவர்களை நீக்கிவிட்டு அவர்களுடைய சம்பளத்தை கிராமிய நூற்பாலையிலுள்ள பெண்களுக்கு நாம் கொடுக்க முடியாது என்பதனையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்பார்வையாளர்கள் இருந்தால் தான் கிராமிய நூற்பு மையம் நல்லமுறையில் இயங்கமுடியும். அந்தந்த பகுதியிலுள்ள மக்களுக்கு இந்தக் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக வேலை வாய்ப்பினை அளிக்கமுடியும் என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் மின் விசை செக் பிரச்சனை பற்றி இங்கே எடுத்துக் கூறினார்கள். மின் விசை செக் கதர் கிராமத்தொழில் வாரியத்தின் மூலமாக அளித்து வருகிறோம். அவர்கள் இவ்வளவு நாட்களாக ஒரு யூனிட்டிற்கு 15 பைசா மின் கட்டணத்தைச் செலுத்தி வந்தார்கள். ஆனால் அவற்றை இப்போது 55 பைசாவாக உயர்த்தியிருக்கிறார்கள். அதனை நிர்ணயக் கமிட்டி உயர்த்தியிருக்கின்றது.

மாண்புமிகு உறுப்பினர்களும், மின் விசை செக்கைச் சேர்ந்த அசோசியேஷனைச் சேர்ந்தவர்களும் கட்டணத்தைக் குறைக்க அதை எல்லாம் வலியுறுத்தி இருக்கிறார்கள். அதை நம்முடைய அரசு பரிசீலனை செய்து அந்தக் குறைபாடுகளுக்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க ஆலோசிக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனி அவர்கள் பேசுகிற நேரத்தில் கூடை முடைவோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அதிகமாக அளிக்கவேண்டும் என்று இங்கே எடுத்துக்கூறி இருக்கிறார்கள். அதே நேரத்தில், மின் விசைச் செக்கைப் பயன்படுத்துபவர்களுக்கு மின் கட்டணத்தைக் குறைக்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்களுக்குக் கூறிய பதிலையே அவருக்கும் கூறி, இந்தக் கூடை முடைவோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்கனவே நம்முடைய கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம், அரசு பல கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக் கொடுத்து இருக்கிறது. அதன்மூலமாக நிதியும் அளித்து வருகிறது. அவ்வாறு தமிழகத்தில் 29 கூடை முடைவோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருகின்றன. அதன்மூலம், 6,878 நபர்கள் பயன் அடைந்து வருகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய நிதி உதவியை வைத்து ஏற்கனவே கூடை முடையும் தொழில் செய்யக்கூடியவர்களும் நல்லமுறையில், சிறப்பான முறையில் அந்தத் தொழிலைச் செய்து கொண்டிருக் கிறார்கள் என்பதையும், அவருக்கு இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையின் மீது பல்வேறு உறுப்பினர்கள் கலந்து கொண்டாலும், குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் மிக ஆர்வமாக இந்த மானியக் கோரிக்கையில் கலந்து கொண்டு அவர் பேசுகிற நேரத்தில் இந்த கதர் வாரியத்தைப் பற்றி பல்வேறு கருத்துக்களைக் கூறி, குறை களையும், நிறைகளையும் கூறி இருக்கிறார்கள். அவருக்கு நான் என்னுடைய பதிலை எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கின்றேன்.

அவர் பேசுகிற நேரத்தில் கதர் கிராமத் தொழில் வாரியம் வெள்ளி விழா நிகழ்ச்சி நடத்துகிற நேரத்தில் மிக ஆடம்பரமாக அந்த விழாவை எடுத்திருக்கிறது என்று கூறினார். அவருக்கு நான் கூறிக்கொள்ள விரும்புவது, ஏற்கனவே இதே சபையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் வேங்கடரமணன் அவர்கள் இந்தக் கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு விளம்பரமே இல்லை. அதனால் அதிகமான விளம்பரம் தேவைப்படுகிறது என்று கூறினார். இதே சபையில் பேசியிருக்கிற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள், வெள்ளி விழா எடுத்தது ஆடம்பர விழா என்று எடுத்துக் கூறி இருக்கிறார். நான் அவருக்குச் சொல்வது, இந்த வெள்ளி விழா எடுத்ததன் காரணமாக இன்றையதினம் கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு நல்ல விளம்பரம் கிடைத் திருக்கிறது. பொருட்களும் நல்ல வகையில் மக்கள் மத்தியிலே இன்றையதினம் விளம்பரப்படுத்தப்பட்டு, அதிகமான உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.





மேலும், அவர் பேசும்போது, கதர் கிராமத் தொழில் வாரியத்தில் இன்றையதினம் பதவிகள் எல்லாம் அதிகமாக நிரப்பப்பட்டு இருக்கின்றன என்று எடுத்துக் கூறினார். இன்றைய தினம் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமும், பம்பாய் கதர் ஆணைக் குழுவின் மூலமும், தமிழக அரசின் மூலமும், பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். நாளுக்கு நாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கூறிய கருத்தினை ஏற்று பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்.

Rural textile centre (RTC) (கிராமிய நூற்பு நிலையம்) புதிதாக போட்டு வருகிறோம். உற்பத்தி அதிகமாக நிறை வேற்றுகின்ற நேரத்தில் நமக்கு முக்கியமான பதவிகளையும் நிரப்ப வேண்டிய சூழ்நிலைகள் இருக்கின்றன. அதனால் தான் இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்றுகின்ற வகையில் அங்கு பதவிகளையும் நிரப்ப வேண்டியிருக்கிறது. மேலே இருக்கிற பதவிகளை மட்டும் நாம் நிரப்பவில்லை. கீழ் அளவிலும் சுமார் 200-க்கு மேற்பட்ட நபர்களை நியமித்துள்ளோம் என்பதையும் எடுத்துக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் நம்முடைய மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் 'கார்டிங் மெஷின்கள் எத்தனை செயல்படுகின்றன, எத்தனை செயல்படாமல் இருக்கின்றன என்பதை கேட்டார்கள். மொத்தம் 101 கார்டிங் மெஷின்கள் வாங்கப்பட்டன. அதில் 84 மெஷின்கள் இயங்கிக் கொண்டிருக் கின்றன. மீதி 17 மெஷின்கள் பழுது பார்க்கவேண்டிய நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன. அவைகள் விரைவாக பழுதுபார்க்கப் பட்டு, இயங்கக்கூடிய அளவில் இந்த கதர் கிராமத் தொழில் வாரியம் நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கார்டிங் மெஷின்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பின அவர்கள் எடுத்துக் கூறுகின்ற நேரத்தில், இந்த மெஷின்கள் திண்டுக்கல்லிலுள்ள பழனிச்சாமி என்பவரிடம் வாங்கப்பட்டுள்ளன என்று கூறினார். நான் இந்த நேரத்தில் அவருக்குக் கூறிக் கொள்வது, அந்த பஞ்சடைக்கும் கார்டிங் மெஷின்கள் திண்டுக் கல்லிலுள்ள பழனிச்சாமியிடம் வாங்கப்படவில்லை என்பதுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபோன்ற தவறான செய்திகளை இங்கு எடுத்துக் கூறக்கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(மாலை 5-10)

மேலும் இங்கு நம்முடைய மாண்புமிகு சுப்பராயன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், கதர் வாரியத்தில், வேலைவாய்ப்பு அலுவல கத்தின் மூலம் அறிவித்து அந்த கண்காணிப்பாளர் பதவிகளை நிரப்புகின்ற நேரத்தில் அங்கு தவறு நடந்திருக்கிறது, அப்பாயின்ட் மெண்ட் கமிட்டியின் மூலம் தேர்ந்தெடுத்த நேரத்தில் என்று

எடுத்துக் கூறியிருக்கிறார்கள். விதிகளின்படிதான் அவர்களுக்குப் பதவி அளிக்கப்பட்டிருக்கிறது. விதிமுறைகளின்படி நடக்காமல் தவறுகள் ஏதேனும் நேர்ந்திருந்தால் நிச்சயமாகத் தமிழக அரசில் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் இதுபோன்ற தவறுகள் நடந்திருந்தால் நிச்சயம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும், என்பதையும் நிச்சயமாக எடுப்பதற்குப் புரட்சித் தலைவரவர்களின் அரசு தயக்கம் காட்டாது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வெளி மநிலங்காளில் பஞ்சை கொள்முதல் செய்வது பற்றியும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் இங்கு கூறினார்கள். நம்முடைய தேவைகளுக்கு ஏற்ப நம்முடைய நாட்டில் தயாரிக்கும் பஞ்சுகள் போக, மீதி அவர்களுக்கு அதிகமாகத் தேவைப்பட்டால் நாம் வெளிநாடுகளிலேயிருந்தோ, வெளி மாநிலங்களிலேயிருந்தோ பஞ்சை வாங்கி உற்பத்தியைச் செய்து கொண்டிருக்கிறோம். அதுவும், பம்பாய் கதர் ஆணைக் குழுதான் இதைக் கொள்முதல் செய்து நமக்குக் கொடுத்து வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்சொள்கிறேன். பம்பாய் கதர் ஆணைக் குழு, காட்டன் கார்ப்பரேஷனிடமிருந்துதான் வாங்கிக் கொடுக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் சுப்பராயன் அவர்கள், கிராமிய நூற்பு மையங்களில் நூற்கப்படும் சிட்டங்கள் அதிகமாகத் தேக்கத்தில் இருக்கின்றன; அதைப்போல் சோப்பைப் பொறுத்தவரையிலும்கூட அதிகத் தேக்கம் இருக்கிறது என்று கூறினார்கள். இன்றைய தினம் கிராமிய நூற்பு நிலையங்களில் நூற்கப்படும் சிட்டங்கள் அதிகமாக இருக்கின்றன என்று சொன்னால், அதற்குக் காரணம், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் அந்தந்தத் தொகுதிகளில், அவர்களுக்குத் தேவையான கிராமங்களில் ஆங்காங்கு கிராமிய நூற்பு மையத்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறார்கள். அதற்கேற்ப தமிழக அரசும் சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை நிறைவேற்றி வைக்கின்ற வகையில் ஆங்காங்கு கிராமீய நூற்பு மையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்டதால் அதிகமான சிட்டங்கள் நூற்கப்பட்டு இன்றைக்குத் தேங்கியிருக்கின்றன. அவ்வாறு தேங்கியிருக்கும் சிட்டங்களை வைத்து பெட்ஷிட் தயாரிப்பது போன்ற நடவடிக்கைகளை கதர்—கிராமத் தொழில் வாரியம் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்று, சோப்பு தேக்கம் இருக்கிறது என்பதைப் பற்றிக் கூறினார்கள். இன்றையதினம் சோப்பை நாம் ஏஜன்சி மூலம் கேரளாவிற்கும், கதர்—கிராமத் தொழில் வாரியத்தில் மூலம் அனுப்புகிறோம். அதிகமாகத் தேக்கம் இல்லை. அப்படித் தேக்கம்இருந்தாலும் விரைவாக விற்க வேண்டிய நடவடிக்கைகளை நம்முடைய கதர்—கிராமத் தொழில் வாரியம் மூலம் தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.





தமிழ்நாடு கதர்—கிராமத் தொழில் வாரியம் மூலம் எத்தனை கூட்டுறவுச் சங்கங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. செயலற்றவை எவ்வளவு என்று கேட்டிருந்தார்கள். இப்பொழுது தமிழ்நாட்டில் உள்ள மொத்த கூட்டுறவுச் சங்கங்கள் 2,966 இருக்கின்றன. இவைகளில் 1,274 கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. செயலற்றவை 797 ம், மீதி சங்கங்கள் — நல்லமுறையில் செயல்படாத சங்கங்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன. 895 சங்கங்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

797 சங்கங்கள் செயலற்றவையாக இருக்கின்றன என்று கூறினேன் அவற்றையும் செயல்படுத்த, நல்லமுறையில், சிறப்பான முறையில் செயல்படுத்த உரிய நடவடிக்கைகளை இப்பொழுது எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் இங்கே ஒரு கருத்தைக் கூறினார்கள். கதர்—கிராமத் தொழில் வாரியத்தின் மூலம்—கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு மூலம் 1982–83 ஆம் ஆண்டில் ஒப்புக்கொள்ளப்பட்டு, சேலம் மாவட்டம் வீரகனூர் பகுதியில் 2.73 இலட்சம் ரூபாய் செலவில் கைமுறை காகித அலகு துவக்கப்பட அனுமதிக்கப்பட்டுள்ளது. அதை வீரபாண்டி கிராமத்திற்கு அரசு மாற்றிச் சென்று விட்டது என்று எடுத்துக் கூறினார்கள். நான் இந்த நேரத்தில் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வீரகரையில் சர்வே எண் 439/1 முதலில் இடம் பார்க்கப்பட்டது. அந்த இடத்தில் போதிய தண்ணீர் வசதி இல்லாததால், அது அரசால் நிறுத்தி வைக்சப்பட்டிருக்கிறது. வேறு எந்த ஊருக்கும் மாற்றவில்லையென்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அது மேற்கொண்டும் அரசின் பரிசீலனையிலே இருக்கிறது என்பதனையும் அதை வீரபாண்டிக்கு மாற்றவில்லையென்பதையும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜாங்கம் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், திருப்பனந்தாளில் பனைத் தொழில் ஆய்வு மையம் ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டிருந்தார்கள். ஏற்கனவே தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம் காமராஜர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் பனைமர ஆராய்ச்சி நிலையத்தை நிறுவ ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருக்கிறது. எனவே, திருப்பனந்தாளில் ஆராய்ச்சி நிலையம் நிறுவ அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை. ஸ்ரீவில்லிபுத்தூரில் பனைமர ஆராய்ச்சி நிலையத்தைப் பயனுள்ளதாக ஆக்கும்பொழுது, திருப்பனந்தாளில் உள்ள பனைத் தொழிலாளர்கள் பயன்பெறுகின்ற வகையில் அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்யப்படும் என்பதையும் கதிராமங்கலம், திருநாகேஸ்வரம் ஆகிய பகுதிகளில் பாலியஸ்டர் நெசவு மையம்

கேட்டார்கள். அந்த இரண்டு ஊர்களிலும் இரண்டு கதர் உற்பத்தி அலகுகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், பனைத்தொழில் ஆய்வுக் குழு ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஏற்கனவே, ஸ்டேட் அளவில் பனைபொருள் சம்மேளனம் இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டசம்மேளனமும் பனை தொழில் வளர்ச்சிக்காக அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது போக, இன்றையதினம் தமிழ்நாடு முழுவதும் எந்த வகையில் பனைத் தொழில் சிறப்பான வகையில் செயலாற்றி வருகிறது என்பதை அறிய இந்த அரசின் சார்பாக ஒரு ஆய்வுக் குழு அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வுக் குழு ஒவ்வொரு மாவட்டமாக சென்று, இந்தப் பனைத் தொழில் எந்த அளவுக்கு செயல்படுகிறது என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அந்தக் குழு ஆராய்ந்து அறிக்கையினை அளித்த பின்னால் எந்த அளவுக்குப் பனைத் தொழிலுக்கு நடவடிக்கை எடுக்க முடியுமோ, அந்த அளவுக்குத் தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் பேசுகின்ற நேரத்தில், பனைத் தொழிலாளர்களை இ.எஸ்.ஐ. திட்டத்தில் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று எடுத்துக் கூறினார்கள். பனைத் தொழிலாளர்கள் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் இருப்பதனால் அவர்களை இ. எஸ். ஐ. திட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பனைத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்கள் விபத்தில் இறந்தால் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய நிவாரண நிதி விரைவாகக் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்பதையும் இங்கே பல்வேறு உறுப்பினர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு.பாலச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்களும் இதுபோன்ற கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறினார்கள். ஏற்கனவே விபத்தில் இறந்த பலபேர் குடும்பங்களுக்கு நிவாரண நிதி கிடைக்கவில்லையென்பதைப் பொதுவாக எடுத்துக்கூறினார்கள். அவர்கள், இன்னார்க்குக் கிடைக்கவில்லை என்ற தகவலை எனக்குக் கொடுத்தால், அதன் மீது அரசு தக்க நடவடிக்கை எடுத்து, அந்த குடும்பத்திற்கு மிக விரைவாக நிவாரண நிதி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் 18 வயது முதல் 50 வயதானவர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படவில்லை என்று எடுத்துக் கூறினார்கள்.





அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன், பனைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் 18 முதல் 50 வயது வரை உள்ளவர்களே உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுகிறார்கள். அவ்வாறு எந்த கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்று கூறினால் நான் அது பற்றி விசாரித்து, உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாலை 5-20)

மேலும் அதங்கோடு பனைபொருள் மையம் ஆரம்பிப்பதுபற்றி சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் அதங்கோடு என்ற இடத்தில் 1.459 நபர்கள் பயன்படுகின்ற வகையில் ஒரு பனை பொருள் மையம் தொடங்குவது பற்றிய செயற்குறிப்பு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பரிசீலிக்கப்பட்டது. 38.42 இலட்சம் ரூபாய் அதற்கு மானியம் கோரப்பட்டது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் கிடைக்கக்கூடிய நிதி, வங்கிக் கடன், மாவட்ட சம்மேளன உதவி, மாநில சம்மேளன உதவிகளுடன் சிறப்புத் திட்டத்தின் கீழ் பனைபொருள் மையம் தொடங்கும் திட்டம் பரிசீலிக்கப்பட்டது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் இதைச் செயல்படுத்த முடியாத காரணத்தால் சிறப்புத் திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற்று பயனடைகின்ற அனைவரும் ஆதிதிராவிட மக்களாக இருக்க வேண்டும். இத்திட்டத்தை எந்த எந்த நிறுவனத்திடமிருந்து நிதி உதவி பெற்று அங்கே என்னென்ன பணிகளைத் தொடங்கலாம் என்பது பற்றி இணை இயக்குநர், சிறப்பு அலுவலர், மாநில சம்மேளனத்துடன் விவாதித்து அதற்கேற்ப திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் வெள்ளி விழா நிகழ்ச்சி நடைபெற்ற நேரத்தில் எவ்வளவு செலவானது என்று கேட்டார்கள். கதர் வாரியத்தின் மூலம் இந்த வெள்ளி விழா நிகழ்ச்சிக்கு 2,31,142 ரூபாயும், கதர் கிராமத் தொழில் வாரிய குழுவிடமிருந்து மானியமாக 3 இலட்சம் ரூபாயும், விளம்பரத்திற்காக கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும் மற்ற நிறுவனங்களிடமிருந்தும் 1,45,500 ரூபாயும் ஆக மொத்தம் 6,76,642 ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நரசிம்ம பல்லவன் அவர்கள் பேசும்போது தமிழக அரசு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பித்து அந்தந்த கிராம வாழ் மக்களுக்கு அதிகமான வேலைவாய்ப்பு அளித்து வருகிறோம்; அதைப்போன்று படித்தவர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

இன்றைய தினம் கதர்கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் படித்தவர்களுக்கும் படித்த பெண்களுக்கும் மற்றவர்களுக்கும் வேலை வாய்ப்பு அளித்து வருகிறோம், இந்த வகையில் படித்தவர்கள் மின்விசைச் செக்கு மூலம் தொழில் நடத்த அவர்களுக்கு கடன் உதவி அளித்து, அதன் மூலம் சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்துகின்ற வகையில் நாம் கடன் கொடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, செங்கல் சூளை வைக்க கொடுக்கின்ற நிதி உதவியை அதிகப்படுத்த வேண்டுமென்று கூறினார்கள். இது வரையில் கதர்கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் செங்கல் சூளை வைக்க நபருக்கு 10,000 ரூபாய் வழங்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்று, இந்தத் தொகையை அதிகப்படுத்த கதர் வாரிய ஆணைக் குழுவிடம் தமிழக அரசு பரிந்துரை செய்து, இப்போது 15,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நரசிம்ம பல்லவன் தொகுதியில் பனை பொருள் தொழில் மையம் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அவர்களுடைய தொகுதியில் மானாம்பதி, வளையாம்பதி ஆகிய இரண்டு இடங்களில் பனை பொருள் தொழில் மையம் அமைக்க வேண்டுமென்று கேட்டார்கள். அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 12 இலட்சம் ரூபாய் செலவில் 430 பேர்கள் பயனடையக்கூடிய வகையில் ஒரு திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அவர்களுடைய தொகுதியில் அமைப்பது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலாஜி அவர்கள் இன்றைய தினம் காலணி தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பணிக்கூட பெட்டிகளை விரைந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். ஏற்கெனவே தமிழக அரசு ஆண்டுக்கு 500 பெட்டிகள் என்ற வகையில் 1,000 பெட்டிகளை வழங்கியிருக்கிறது. மாவட்டந் தோறும் ஒவ்வொரு இடத்திலும் உள்ள காலணி தொழிலாளர்களுக்கு இந்த பெட்டிக் கடைகளை வழங்கியிருக்கிறோம்.

சென்னையில் மட்டும் இன்னும் காலணிப் பெட்டிகள் அந்தத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். சென்னை மாநகராட்சியில் ரோடுகளை எல்லாம் அகலப் படுத்துவதன் காரணத்தால் இன்னும் கொடுக்கப்படவில்லை. ஏனென்றால் ரோடுகளின் ஓரங்களில் கடைகளை வைத்து அவர்கள் தொழில் நடத்துகிறார்கள். ரோடுகளை அகலப்படுத்துவதன் காரணத்தால் அந்த கடைகளை எல்லாம் எடுக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. அதனால்தான் அவர்களுக்குத் தொழில் தொடங்கக்கூடிய இடத்தை ஏற்பாடு செய்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுத்து அதன்பின்னர் அவர்களுக்குக் காலணிப் பெட்டிகள் வழங்கப்படும் என்பதை இந்த



நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற மாவட்டங்களில் அனைத்து இடங்களிலும் நாம் காலணி தொழிலாளர்களுக்கு இந்தப் பெட்டிகள் வழங்கப்பட்டுவிட்டன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இன்றைய தினம் தமிழ்நாட்டில் சிறப்பான முறையில் கதர்கிராமத் தொழில் வாரியம் இயங்கி வருகிறது என்பதைப்பற்றி ஏற்கெனவே ஒரிஸ்ஸா மாநிலத்தின் முன்னாள் தலைமைச் செயலாளரும் ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை கவர்னருமான திரு. ராமகிருஷ்ணய்யா அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு குழு தமிழ்நாட்டுக்கு வந்தது. அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று கதர் கிராமத் தொழில் வாரியம் எந்த அளவுக்குச் செயல்பட்டு வருகிறது என்பதை நேரில் சென்று அந்தக் குழு பார்த்தது. அந்தக் குழு திரும்பிச் சென்றதற்குப் பின்னால் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பான முறையில் கதர் கிராமத் தொழில் வாரியம் செயலாற்றிக் கொண்டு இருக்கிறது என்று அவர்கள் தபால் மூலம் நமக்கு எழுதி அனுப்பி இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் நம்முடைய மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. என். டி. திவாரி அவர்களும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். நம்முடைய கதர் கிராமத்தொழில் வாரியம் தமிழகத்தில் மிகச் சிறப்பான முறையில் செயல்படுகிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 923 எண்ணுள்ள ஜி.ஓ.-வை அதாவது ஆணையைப் பிறப்பித்து நம்முடைய தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு அலுவலகங்களும், மற்றும் பணிபுரியக்கூடிய அரசு அலுவலர்களும் கதர் கிராமத் தொழில் வாரியத்தில் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை எல்லாம் வாங்கவேண்டும் என்று கூறினார்கள். அந்த ஆணைகளுக்கேற்ப இன்றையதினம் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த அலுவலர்களும், மருத்துவமனைகளும், இராணுவத்தினரும் மற்றும் பல்வேறு துறையைச் சார்ந்த அரசு அலுவலர்களும் கதர் கிராமத் தொழிலில் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களைத்தான் வாங்குகிறார்கள். அதைப்பாராட்டித்தான் நம்முடைய மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. என். டி. திவாரி அவர்கள் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதி இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அளவுக்குச் சிறப்பான முறையில் கதர் கிராமத் தொழில் வாரியம் செயல்படுவதால் இந்தியாவிலேயே கதர் கிராமத் தொழில் வாரியத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு முதலிடத்தை வகிக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும் அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகிறார்கள். மத்திய அரசின் சார்பாகவும் பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறார்கள். அதேபோல் இந்தப் பேரவையிலுள்ள மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும் இந்த கதர்த் துறைக்கு

அவர்களால் முடிந்த அளவுக்கு உதவி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் எல்லாம் கதர் கிராமத் தொழிலில் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை எல்லாம் வாங்கிப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பொருட்களை எல்லாம் நீங்கள் வாங்கி இந்தத் துறையின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் உதவி செய்யவேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் பல மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய பல்வேறு கருத்துக்களைப் பொறுத்தவரையில் நான் பதில் சொல்லியிருக்கிறேன். இதிலே ஒருசில உறுப்பினர்களுக்கு நான் பதில் கூறாமல் இருந்தாலும்' அதாவது விட்டுப்போய் இருந்தாலும் அதற்குரிய வகையில் நடவடிக்கைகள் எடுப்பது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொண்டு இந்த கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மீதான மானியக் கோரிக்கைக்கு கொடுக்கப்பட்டு இருக்கும் வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

(மாலை 5-30)

**திரு. கு. சுப்பராயன்:** சார், ஒரு பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் கேட்க வேண்டும் அனுமதிக்க கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசியில் கேட்கலாம். இப்போது, இன்னொரு அமைச்சரும் பதில் சொல்லிவிடட்டும்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை 2-ன் மீது ஆளுகின்ற தரப்பிலிருந்தும் எதிர்க்கட்சி தரப்பிலிருந்தும் மாண்புமிகு உறுப்பினர்கள், ஆயத் தீர்வை இலாக்கா எப்படி நடக்கிறது என்பதைப் பற்றி தங்கள் மேலான கருத்துக்களை விமர்சனத்தின் போது கூறினார்கள்.

விவாதத்தை துவக்கி வைத்த அருமை நண்பர் ஒரு புதிய திருக்குறளை மதுவிலக்குக்கு ஆதாரமாகக் காட்டினார். நல்ல வேளையாக திருவள்ளுவர் கூட மதுவிலக்கை பொருட் பாலில் தான் வைத்தாரே தவிர, அறத்துப் பாலில் வைக்கவில்லை. ஆகவே அதில் பொருளும் சம்பந்தப்பட்டிருக்கிறது.

அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை-என்ற பொருளில் அறத்துப் பாலில் திருவள்ளுவர் வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆகவே மதுவிலக்கைப் பற்றி பேசுகிறவர்கள், அந்த மாநிலத்தின் வருவாயைப் பற்றியும் சிந்திக்க வேண்டும் என்று தான் நான் கேட்டுக் கொள்கிறேன்.



இந்தியாவிலுள்ள 22 மாநிலங்களில், கிட்டத்தட்ட 7 அல்லது 9 யூனியன் பிரதேசங்களையும் சேர்த்துப் பார்க்கும் போது குஜராத் மாநிலத்தை தவிர வேறு எந்த மாநிலத்திலும் மதுவிலக்கு இல்லை. ஆனால் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் வருகிற 1-1-1987 முதல் மது விலக்கை—கள், சாராயம் ஆகிய 2 வகைகளைப் பொறுத்த வரையில்-- மதுவிலக்கை கொண்டு வரப் போவதாக அறிவித்திருக்கிறார்கள்.

1984–85ஆம் ஆண்டு ஆயத் தீர்வை மூலம் நமக்கு கிடைத்த வருவாய் 200 கோடி ரூபாய் ஆகும். 1985–86ஆம் ஆண்டுக்கு கிடைத்த வருமானம் 230 கோடியாகும். 1986–87க்கு எதிர் பார்த்த வருமானம்—மதிப்பீடு வருமானம்—260 கோடியாகும். 1–1–87 முதல் கள், சாராயம் இரண்டையும் எடுப்பதனால் மேற்பட்ட இரண்டு இனங்களில் இருந்தும் மாதாமாதம் வரக் கூடிய சராசரி வருமானம் 20 கோடி. ஆகவே ஜனவரி, பிப்ரவரி, மார்ச் என்ற 3 மாதத்தைக் கணக்கிட்டு, 60 கோடியைக் குறைத்து, 200 கோடி நட்டம் வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நம்முடைய திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் பேசுகிற போது மதுவிலக்கு கொள்கையைப் பற்றியே அடிக்கடி விமர்சித்தார்கள். அவர்கள் ஆண்ட போதும் மதுவிலக்கை தளர்த்தினார்கள் அல்லது ஒத்திவைத்தார்கள். இந்த மதுவிலக்கை எப்படி பார்த்தாலும், தளர்த்தி வைத்தாலும் ஒத்தி வைத்தாலும் அதை ஒரு பிசினஸ்ஸாகத்தான், டிரேட் என்ற முறையில்தான் நடத்தப்படுகிறது. யார் காலத்தில் அதனால் அரசாங்கத்திற்கு அதிக வருமானம் வந்திருக்கிறது என்று பார்த்தால், புரட்சித்தலைவர் அவர்கள் காலத்தில் தான் அரசுக்கு அதிகமான வருமானம் இதில் வந்திருக்கிறது. அது சாராயக் கடைகள் திறப்பதானாலும் சரி, கள்ளுக் கடைகளை திறப்பதானாலும் சரி, அயல்நாட்டு மது வகைகளை திறப்பதானாலும் சரி, மதுக்கடைகளை ஒப்படைக்கிற வகையில் உண்மையில் அண்ணா தி.மு.க. அரசுக்கே அதிக வருமானம் வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக்கழக காலத்தில் 3 ஆண்டுகளில் வந்த வருமானம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக காலத்தில் ஒரு ஆண்டில் வந்திருக்கிறது. ஆகவே அப்படித்தான் இதை பார்க்க வேண்டுமே தவிர, அந்தக் கொள்கையை எப்படிக் கொண்டு வந்தார்கள் என்று பார்ப்பதிலே பொருள் இல்லை.

9 கலவை ஆலைகள் இருக்கின்றன. ஆலைகள் மூலம் சுமார் 30, 40 கோடி ரூபாய் லாபம் வரும். அது எங்கே போகிறதோ தெரியவில்லை என்ற பிரச்னையைக் கிளப்பினார்கள். அந்தக் கலவை ஆலைகளைப் பொறுத்தவரையில், அதனால் லாபம் ஏற்பட்டு, அந்த லாபத்தில் அரசில் உள்ளவர்களுக்கு யாருக்காவது பங்கு இருக்குமா என்ற பிரச்னையைத்தான் ராமபிரசா கமிஷனில் மிக விரிவாக ஆராயப்பட்டு, அவர் (ராமபிரசாத்ராவ்)

அதன் மூலம் யாருக்கும் எந்தவிதப் பயனும் இல்லை. எந்தவித தொடர்பும் யாருக்கும் இல்லை, யார் மீதும் எந்தக் குற்றமும் நிரூபிக்கப்படவில்லை என்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள்.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழக காலத்தில் சாராயத்தை மாவட்டம் பூராவும் மொத்தமாக வியாபாரம் செய்வதற்கு ஆட்களை நியமித்ததிலே, அயல் நாட்டு மதுபான வகைகளை சென்னையிலும் திருச்சியிலும் மதுரையிலும் தனிப்பட்டவர்களுக்கு ஆயத்தீர்வை செலுத்தப்படாமலேயே அவர்களுடைய கிடங்குகளில் வைப்பதற்கு, அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் ஆட்சியில் சாராய மொத்த வியாபாரத்தையும், சில்லரை வியாபாரத்தையும், அயல்நாட்டு மதுபான வகைகளையும் டாஸ்மக் என்ற அரசு நிறுவனம் நடத்துவதை அவர்கள் விமர்சிப்பது பொருத்தமானதல்ல. டாஸ்மக் நிறுவனம் கம்பெனி அக்ட்டின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். இந்த நிறுவனத்தின் மூலம் நடத்தப்படுவதால் அரசுக்கு ஆண்டுதோறும் 30 கோடி ரூபாய் அதிக வருமானம் வருகிறது. இந்த டாஸ்மக் நிறுவனம் எப்படி கம்பெனி ஆக்ட்டின் கீழ் நடக்கிறது என்பதை ஆண்டு அறிக்கையில் இந்தச் சட்டசபைக்கு வைக்கிறார்கள். ஆகவே அக்கவுண்டபிலிட்டி இருக்கிறது. இந்தச் சட்டபேரவைக்கு டாஸ்மக் நிறுவனம் எப்படி நிறுவனத்தை நடத்துகிறது, அது இலாபத்தில் நடக்கிறதா அல்லது நஷ்டத்தில் நடக்கிறதா என்று சொல்லக்கூடிய கட்டாயத்தில் இருக்கிறது. இந்த ஆட்சியில் மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருக்கிறது. என்றால் துரதிர்ஷ்டவசமாக பொது மக்களின் பிரஷர் அல்லது புரட்சித்தலைவருக்கு தாங்க முடியாத தன்மை வந்ததால் இந்தநிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றையதினம் கூட எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையில் மதுவிலக்கு அமுலிலுள்ள குஜராத் மாநிலத்தில்நடக்கும் வன்முறைகளைப்பற்றி மிகத் தெளிவாக ஒரு செய்தி வந்திருக்கிறது. தாய்மார்களுக்கு ஏற்படுகிற பல பெரிய கொடுமைகளுக்கு காரணம் இந்த மதுவிலக்கு தானோ என்று ஐயுறுகிற வகையில் பெரிய அறிக்கையாக அது வெளி வந்திருக்கிறது.

மதுவிலக்குக் கொள்கையில் நம்முடைய சர்க்காரைப் பொறுத்தவரையில் 1.1.1987 முதல் அமல்படுத்தப்படுமென்று மிகத் தீவிரமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு இன்னும் மூன்று மாதங்கள் தான் இருக்கின்றது. ஜூலை மாதம் 15-ஆம் தேதியுடன் இந்த டாஸ்மக் முகவர்களுடைய உரிம காலம் முடிவடைந்து விடும். டாஸ்மக் நிறுவனம் நியமித்த முகவர்களைப் பற்றி விமர்சித்தார்கள். அதுபற்றி இரண்டு நீதிமன்றங்களில்—உயர்நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களில்—வழக்குகள் இருப்பதால் அதுபற்றி விமர்சிக்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டேன். ஆனால் அந்த கடைகளைக் கொடுப்பதில் பல்வேறு இடங்களில் ஆட்சேபணைகள் இருப்பதாக சில உறுப்பினர்கள் சொன்னார்கள். இந்த மாநிலத்தில் டாஸ்மக்கால் 7256 கடைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது. அவைகளில் ஆட்சேபனைகள் வந்தவை 272 கடைகள் ஆகும்.



இந்த இடத்தில் வைக்கக் கூடாது, அந்த இடத்தில் வைக்கக் கூடாது, பள்ளிக்கூடம் இருக்கிறது, மருத்துவமனை இருக்கிறது என்று சொல்லப்பட்டு ஆட்சேபனை மனுக்கள் ஆணையருக்கு வந்தன. அதிலே வேறு இடங்களுக்கு மாற்ற ஆணையிடப்பட்டவை 74 கடைகள். பொதுமக்களுடைய வேண்டுகோளிற்கு இணங்க 74 கடைகள் வேறு இடத்திற்கு மாற்றியிருக்கிறார்கள். மாறுதல் தேவையில்லை சட்டப்படி தான் இருக்கிறதென்று கருதப்பட்டு 133 கடைகளுக்கு செய்த ஆட்சேபனைகள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பரிசீலனையில் இருப்பது 66 மனுக்கள் ஆகும். ஆகவே 7256 கடைகளில் ஆட்சேபனை உள்ளவை என்று சொல்லப்பட்டது மிகக் குறைவான கடைகளாகும். மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னும் சில இடங்களில் இப்படி இருக்கின்றன என்று சொல்வார்களானால் அதுகுறித்தும் நடவடிக்கையெடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

அடுத்து ஒரு கடைக்கு உரிமம் வாங்கிவிட்டு வரிசையாக கிளைக் கடைகளை வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். சட்டப்படி ஒரு கடை தான் வைக்கலாம். அதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. அப்படி கிளைக் கடைகள் ஏற்படுத்தப்படுமானால் சம்பந்தப்பட்ட மதுவிலக்கு அமல்படுத்தும் அதிகாரிகள் மற்றும் போலிசாரிடம் புகார் சொல்லப்பட்டு அவர்கள் அதில் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அப்படி நடவடிக்கையெடுக்கப்படவில்லை என்று சொன்னால், எங்காவது நடவடிக்கையெடுக்கப்படவில்லை என்று சொன்னால், எழுத்துமூலம் கொடுப்பார்களானால், உரிய நடவடிக்கையெடுக்கப்படும். அது சம்பந்தப்பட்டவர்கள் காவல்துறை அதிகாரியாக இருந்தாலும் அவர்மீது நடவடிக்கையெடுக்க நாங்கள் தயங்க மாட்டோம். இந்த மதுவிலக்கைப் பொறுத்தவரையில் கோயம்புத்தூரில் ஐஸ் கிரீமில் ஏதோ பிரவுன் ஷுகர் என்று சொல்லப்படுகிற போதை தரும் வஸ்து தடவப்பட்டிருந்ததாக புகார் சொன்னார்கள். அந்தப் புகாரின் மீது மதுவிலக்கு அமல்படுத்தும் போலிசார் நான்கு வழக்குகளும், கோவையில் உள்ள உள்ளூர் போலிசார் எட்டு வழக்குகளும் ஆக மொத்தம் 12 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அதிலே நான்கு வழக்குகளில் இன்றையதினம் மாலை கிடைத்த தகவல் பிரகாரம் அந்த ஐஸ் கிரீமில் எந்தவிதமான பிரவுன் ஷுகர் என்று சொல்லப்படும் போதை தரும் வஸ்து தடவப்படவில்லை என்று தகவல் வந்திருக்கிறது. மற்ற எஞ்சியிருக்கும் எட்டு வழக்குகளில் ஒருசில பரிசோதனை முடிவுகள் இன்னும் தெரிவிக்கப்படவில்லை. அவை தெரிவிக்கப்பட்டவுடன் உண்மையில் போதை தரும் பொருள் தடவப்பட்டிருந்தால் நடவடிக்கையெடுக்கப்படும்.

(மாலை 5-40)

அடுத்து இங்கே ஜின்ஜர் பெரிஸ் பற்றிச் சொன்னார்கள். இதிலே தூத்துக்குடிதான் அதிகப் புகழ் பெற்றதாக இருக்கிறது. ஜின்ஜர் பெரிஸ்-ஐ நாம் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு முறை

களில் நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறோம். எனவே தூத்துக்குடியிலே சிலர் மீது வழக்கு தொடர்ந்து இருக்கிறோம், மதுரையில் சில பேர்கள் மீது வழக்கு தொடர்ந்து இருக்கிறோம். இந்தக் கொள்கைக் குறிப்பில் கூட கொள்கை விளக்க ஆணைப்பில் (அனைக்சர்) என்ற பகுதியில் எத்தனை வழக்குகள் போடப்பட்டு இருக்கின்றன. எத்தனை பேர்கள் பிடிக்கப்பட்டு இருக்கிறார்கள், எத்தனை லிட்டர் கள்ளச் சாராயம் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. ஜின்ஜர் பெரிஸ் எவ்வளவு பிடிக்கப்பட்டு இருக்கிறது. மதுக் கஷாயம் எவ்வளவு பிடிக்கப்பட்டு இருக்கிறது, எத்தனை பேர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டு இருக்கின்றன என்ற விவரங்கள் எல்லாம் இதிலே இருக்கின்றன. ஆகவே கள்ளச் சாராயம் அல்லது வேறு மது, அல்லது வேறு போதை தரும் பொருட்களை யாராவது விற்றால் அல்லது எடுத்துக் கொண்டு போனால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம். அதைப் பற்றி யார் புகார் கொடுத்தாலும் அது கவனிக்கப்படும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கள் அல்லது சாராயம் இரண்டையும் எடுத்தாலும், மது விலக்கை அமுல்படுத்துகிற போலீஸ் இலாக்கா தொடர்ந்து இருப்பதோடு, அதனுடைய வேலைப் பளு மேலும் அதிகமாகிறது. மதுவை எடுத்தால் கள்ளச் சாராயத்திலே ஏற்கனவே உள்ளவர்கள் அதிகமாக புழங்க ஆரம்பிப்பார்கள் என்பதால், இதை நாம் மிகவும் கடுமைப்படுத்த வேண்டியிருக்கிறது. அதனால் பல்வேறு புதிய பதவிகளையும் பல்வேறு சாதனங்களையும் மற்றும் வசதிகளையும் இந்த அரசு கொடுக்கத் தயாராக இருக்கிறது. அந்த முறையில் மதுவிலக்குக் குற்றங்களை அதிக அளவில் கண்டு பிடிக்கவும் திடீர் சோதனைகளை அடிக்கடி நடத்தவும், நீதி மன்றங்களில் நிலுவையில் உள்ள மதுவிலக்கு வழக்குகள் சம்பந்தப்பட்ட பணிகளை கவனிக்கவும், கள்ளச் சாராயம் மது வகைகளைக் கள்ளக் கடத்தல் செய்தல் ஆகியவை பற்றிய செய்திகளை அறியவும், பணிகளை கவனிக்கவும், இந்த நிதி ஆண்டில் மது விலக்கு அமல் பிரிவு ஒன்றைக் கூடுதலாக ஏற்படுத்தவும், காவல் துறை டெபுடி சூப்பிரன்டென்டென்ட் நியமிக்கப்படாத மதுவிலக்கு அமுல் பிரிவுகளுக்கு 3 காவல்துறை டெபுட்டி சூப்பிரன்டென்டென்ட் பதவிகள், மற்றும் 6 அலுவலக உதவியாளர்கள் பதவிகளை ஏற்படுத்தவும், 30 மதுவிலக்கு அமல் பிரிவுகளுக்குச் சொந்தமாக தொலைபேசி வைத்துக் கொள்ளும் திட்டத்தின் கீழ் 30 தொலைபேசி கருவிகளை நிறுவவும், காவல் துறை டெபுட்டி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அலுவலகத்திற்கு ஜெராக்ஸ் நகல் எடுக்கும் இயந்திரம் வழங்கவும் அனுமதி அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

கைத்தறி இலாக்காவைப் பொறுத்தவரையில் மானியக் கோரிக்கை எண் 26 பற்றி, மாண்புமிகு உறுப்பினர்கள் ஆளும் கட்சித்தரப்பிலும், எதிர்க்கட்சித் தரப்பிலும் அவர்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கைத்தறித் தொழில் மிகப் புராதனமான தொழில் என்பதும்



'ஹரப்பா, மொகஞ்சதாரோ' நாகரீக காலத்தில் இருந்து, 21 ஆம் நூற்றாண்டின் நாகரீகச் சின்னம் அல்லது அடையாளம் என்று கருதப்படுகிற கம்ப்யூட்டர் வரையில், இரண்டையும் இணைத்து, தமிழகத்தில் உள்ள கைத்தறி இலாக்கா, கைத்தறித் துணியின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், கைத்தறித் துணியை உற்பத்தி செய்பவர்களுக்கு, அவர்கள் நாகரீகமான உடைகளை தயாரிப்பதற்கான ஆர்வத்தை ஏற்படுத்தவும், அவர்கள் தயாரிக்கிற வழக்கமான, 'டிரெடில் பேப்ரிக்ஸ்' என்ற அந்தத் துணிகளை மாற்றி, புதிதாக அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய ரகங்களை உற்பத்தி செய்வதற்கும், தறிகளை அபிவிருத்தி செய்யவும், அறிவுரைகளைச் செய்து கொண்டு வந்து இருக்கிறது. துணி எப்படி உற்பத்தியாகி இருக்கிறது, எப்படி கைத்தறிகள் அதிகரித்து இருக்கின்றன என்பதைப் பற்றிய விவரங்கள் கொள்கைக் குறிப்பிலே கொடுக்கப்பட்டு இருக்கின்றன.

இந்தக் கைத்தறித் துணி தேங்குவதற்குக் காரணம், உள் நாட்டில் மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னதைப் போல - அதை வாங்குவதற்கு அதிகமாக தேவையில்லாமல் இருப்பதுதான். ஆகவே கைத்தறித் துணியின் வளர்ச்சியினை நாம் ஆதரிக்க வேண்டுமானால், அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை நாம் முக்கியமாக கடைப்பிடித்தாக வேண்டும். அயல் நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு, பருத்தி நூலினாலான துணியையும், பாலியஸ்டர் நூலினாலான துணியையும், பாலியஸ்டர்-காட்டன், இரண்டையும் சேர்த்து தயாரிக்கின்ற துணியை நெய்ய வேண்டும். 1986-87 ஆம் ஆண்டை கைத்தறியை நவீனப்படுத்தும் ஆண்டாக பிரகடனப்படுத்தியிருப்பதை இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறோம். இதேமாதிரி 1985-86 ஆம் ஆண்டு 21 லட்சம் ரூபாயை கைத்தறியை நவீனப்படுத்துவதற்காக செலவழித்திருக்கிறோம். 1986-87 ஆம் ஆண்டும், அதேபோல் 21 லட்சம் ரூபாயை செலவு செய்து, சாதாரண கைத்தறியை, அது பிட்லூமாக இருந்தாலும், அதை நவீனப்படுத்தி, அதிகமாக துணியை உற்பத்தி செய்வதற்கு நாம் தயாராக இருக்கிறோம். கைத்தறித் துறையிலே ஈடுபட்டவர்கள் இதுமாதிரி புதிய ரகத் துணிகளை, ஏற்கனவே உள்ள கைத்தறியை நவீனப்படுத்தி நெய்வதற்கு முன்வர வேண்டும். கைத்தறி துணியினுடைய ஏற்றுமதிக்கு உலகத்தில் நல்ல மார்க்கெட் இருக்கிறது. உலகத்தில் சுமார் 10 ஆயிரம் கோடிக்கு ஏற்றுமதி செய்கிற அளவுக்கு மார்க்கட் இருக்கிறது, ஆனால் இந்தியாவில் ஏற்றுமதி செய்கிற அளவு இப்போது ஒரு சதம் தான். அதைப்போல திருப்பூரில் பனியன்கள் மறைமுகமாகவும், நேர்முகமாகவும் ஏற்றுமதி செய்கிற துணியினுடைய மதிப்பு 60 கோடியாகும். அதேபோல் உலகத்தில் விற்கப்படும் துணி வகைகளில் (krit wear) பனியன்கள் மூலம் தயாரிக்கப்படுகிற ஆடை வகைகள் 50%- அந்த சதவீதத்தில் 2 சதவீதம் தான் நாம் இந்தியாவில் தயார் செய்கிறோம். ஆனால் பனியன் வகை துணிகள் நாம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்வது 1 சதவீதம் தான்.

ஆகவே ஏற்றுமதிக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. அது ஜப்பான் நாடாக இருந்தாலும், ஐரோப்பாவானாலும், இங்கிலாந்தானாலும், அமெரிக்காவானாலும் நல்ல கிராக்கி இருக்கிறது. ஆகவே நாம் புது ரகத் துணிகளை தயாரிப்பதற்கு சம்பந்தப்பட்ட கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு ஆணைகள் பிறப்பித்திருக்கிறோம். கைத்தறித் துணி தேங்கிவிடுகிறது. கொள் முதல் செய்த கோ-ஆப்டெக்ஸ்-லிருந்து பணம் வரவில்லை என்று சொல்கிறார்கள். கோ-ஆப்டெக்ஸ்-க்கு அரசிடமிருந்து வருகின்ற பணம் வரவில்லை. அதனால்தான் கோ-ஆப்டெக்ஸ் பிரதம கூட்டுறவு நெசவாளர் சங்கத்துக்கு பணம் கொடுக்க முடியவில்லை. இதை எப்படியாவது பொருளாதார நிபுணர்கள் ஆய்ந்து ஒரு போதுமான நிதியை கோ-ஆப்டெக்ஸ்-க்கு கொடுத்தால் அதிக ஆண்டுகள் தேக்கமில்லாமல், ஒரு மாதம் கூட தாமதம் இல்லாமல், அது கொள்முதலானாலும் ரிபேட்டானாலும் கொடுக்க முடியுமென்றும் அதற்காகத்தான் நிரந்தரச் சுழல் நிதி என்ற ஒரு Revolving Fund ஏற்படுத்தவேண்டுமென்றும் அதற்கு 50 சதம் மாநில சர்க்காரும் 50 சதம் மைய அரசும் முதலீடு செய்ய முன்வரவேண்டுமென்றுகூட ஒரு கடிதம் எழுதியிருக்கிறோம். இந்த நேரத்தில் மைய அரசு ஏற்கனவே இருந்த 13 ரகக் கைத்தறித் துணி வகைகளின் எண்ணிக்கையை 21, 22 ரகத் துணிகளாக உயர்த்தியதோடு ஏற்கனவே பருத்தி நூலாலான துணிகளுக்கு மாத்திரம் இந்த ரிசர்வேஷன் - ஒதுக்கீடு இருந்தது. இப்போது புதிதாக உல்லன், சில்க் - கம்பளி, பட்டு துணி வகைகளுக்கும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அத்துடன் அமல் படுத்துகிற பிரிவை கோவையில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதற்காக நாம் மைய அரசிற்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். அதைப்போல் ஜரிகைக்கு எக்ஸைஸ் டியூட்டி போட்டார்கள், அப்படிப் போடவேண்டாம் என்று எழுதியதை ஏற்று ஜரிகைக்கு எக்ஸைஸ் டியூட்டி போட்டதை நிறுத்தி விட்டார்கள். அதற்கும் மைய அரசுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அவர்கள் இந்த ரிபேட்டை ஏற்கனவே ஆண்டொன்றுக்கு 60 நாட்களாக இருந்ததை, இப்போது 30 நாட்களாகக் குறைத்து விட்டார்கள். 30 நாட்களாகக் குறைத்ததோடு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள்ளேயே இந்த ரிபேட்டை ஒரு நாள்கூட கொடுக்கக் கூடாது என்பதே எங்கள் கொள்கை என்று எழுதி விட்டார்கள். மாற்றுத் திட்டம் ஏதாவது கண்டுபிடிக்கிற வரையில் 60 நாட்களுக்கு ரிபேட் கொடுக்கிற பழக்கத்தை மாற்றக் கூடாது என்று வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த ரிபேட் இருந்தால்தான் கைத்தறித் துணி தேக்கத்தைப் போக்க முடியும். அந்த ரிபேட் காலத்தில்தான் இந்தக் கைத்தறித் துணிகள் விற்கப்படுகின்றன. மில் துணிகளுக்கும், பவர்லூம் துணிகளுக்கும் அவர்கள் ரிபேட் என்று சொல்லாமல், விலையைத் தள்ளுபடி செய்கிறோம் என்று சொல்லி 20 முதல் 30, 40 பர்சென்ட் வரையில் பாம்பே டையிங் போன்றவர்கள்கூட தள்ளுபடி செய்கிறார்கள். ஆகவே அதிகமாகக் கூலியைக்



கொடுக்கிற இந்தக் கைத்தறித் தொழிலாக்காவில் சர்க்கார் ரிபேட் கொடுக்காவிட்டால் இந்தத் தொழில் தொடர்ந்து நீடித்து இருக்க முடியாது. இந்த சட்டத்தைப்பற்றி அதிகாரிகள் 1981 ஆம் ஆண்டு ஹேண்ட் லூம் ரிசர்வேஷன்ஸ் ஆக்ட் என்று தனியார் துறையிலே பணிபுரிகிற நெசவாளர்களுடைய பணியை வரைப்படுத்துகிற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தோம். ஆனால் 82 ஆம் ஆண்டு சுமார் 192 பேர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து அதை அமுல் செய்ய முடியாமல் தடுத்து விட்டார்கள். 84—வது ஆண்டில் அந்தத் தடை நீக்கப்பட்டு இப்போது அந்தச் சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1983 ஆம் ஆண்டு குறைந்த பட்ச சம்பளச் சட்டத்தை கூட சென்னை ஹைகோர்ட்டில் சில முதலாளிகள் மதுரையிலிருந்து வழக்கு போட்டு ஸ்டே வாங்கி இருந்தார்கள். அந்த ஸ்டே தள்ளுபடியாகி வழக்கும் தள்ளுபடியானவுடன், இப்போது மேல் முறையீட்டில் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார்கள். அந்த மேல்முறையீட்டில் ஸ்டே இருக்கிறது. அந்த குறைந்த பட்ச சம்பளத்தை கொடுக்க முடியாமல் சென்னை உயர்நீதி மன்றத்திலே தடை விதித்ததால் அந்தச் சட்டத்தையும் அமல் படுத்த முடியவில்லை.

(மாலை 5—50)

ஆனால் வேறு பல நல்ல திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். ஓய்வு பெறும்போது மாதம் 10 ரூபாய் கட்டினால் போதும் 58 வயது முடிகிற போது 33,500 ரூபாய் பெறவும், வேலை செய்கிறபோது இறந்தால் 10 ஆயிரம் ரூபாய் பெறவும் நல்ல பல திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோ-ஆப்டெக்ஸ் பொன்விழாவின்போது சொல்லியிருக்கிறார்கள். ஆக நல்ல பல திட்டங்களை இந்தியாவுக்கு ஒரு எடுத்துக் காட்டாக இந்த மாநிலம் கைத்தறித் துறையில் விளங்குகிறது என்பதை அண்மையில் மத்திய அரசிலிருந்து வந்த ஜவுளி அமைச்சர் மாண்புமிகு திரு. ஆலம் கான் அவர்கள் 'This is a model state for Handloom Development' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையில் நம்முடைய தமிழகம் கைத்தறித் துணியை மிக அதிகமாக உற்பத்திச் செய்கிறது. அதுவும் இந்தியாவில் இருந்து வெளிநாட்டுக்கு எற்றுமதி செய்கிற துணிகளில் 3-ல் 2 பங்கு தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுகிறது. இந்தியாவில் தயாரிக்கப்படுகிற மொத்தத் துணியில் 3-ல் 1 பங்கு இங்குதான் தமிழ்நாட்டில் தயாராகிறது. அதேபோல் தமிழ் நாட்டில் துணி தேவையில் 50 சதவீதத்தை கைத்தறி பூர்த்திச் செய்கிறது. இந்தியாவில் மொத்தம் உறபத்தி செய்கிற துணியிலே 35 சதவீதம் கைத்தறி தான் உற்பத்தி செய்கிறது. விசைத்தறி 35 சதவீதம் உற்பத்தி செய்கிறது. ஆலைகள் 30 சதவீதம் தான் உற்பத்திச் செய்கின்றன. ஆகவே மிகவும் புரதானமான தொழிலை காப்பாற்றுவதற்கு மத்திய அரசு மேலும் மேலும் உதவி செய்ய வேண்டும். ரிபேட்டை தொடர்ந்து கொடுக்க வேண்டும். அந்த முறையில் நம்முடைய அரசு மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு கைத்தறி துணிகளை ஏற்றுமதி செய்வதற்கு சில சங்கடங்கள் இருக்கின்றன. சென்னை விமான நிலையத்திலும் கோயம்புத்தூர் விமான நிலையத்திலும் சில சங்கடங்கள் இருக்கின்றன. சென்னையில் முதல்தரமான International Airport என்று சொன்னாலும் அங்கே பெரிய சரக்குகளை ஏற்றுகின்ற ஆகாயவிமான கப்பல்களை கொண்டு வருவது இல்லை. ஏர் இந்தியா கொண்டு வரமுடியவில்லை என்றால் வேறு நிறுவனங்கள் ஆகாயவிமானங்களை விடுகிற நிறுவனங்கள்வேறு நாட்டைச்சேர்ந்தவர்கள் விடுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அவர்களை விடமாட்டேன் என்று சொல்லுகிறார்கள். ஒன்று ஏர் இந்தியா விடவேண்டும். ஏர் இந்தியா விடவில்லை என்றால் வேறு ஏர் லைன்ஸ் விடுவதற்கு அவர்கள் முன்வரவேண்டும். இங்கே போதுமான அளவுக்கு ஓட்டல் வசதிகள் இருக்கிறன. மற்றும் எல்லா வசதிகளும் இருக்கின்றன. Noselo ders என்று சொல்லப்படுகிற அந்த கருவியை சென்னை விமான நிலையத்தில் இங்கே வைக்காமல் இருக்கிறார்கள். ஆகவே அதையும் வலியுறுத்தி பெரிய சரக்குகளை ஏற்றுகின்ற ஆகாயவிமான கப்பல்களை கொண்டு வரவேண்டும்.

நேரடியாக சென்னையிலிருந்து ஏற்கனவே சிதம்பரம் என்ற கப்பல் சிங்கப்பூர், பினாங்கு நாட்டுச்கு போய் வந்தது. இப்போது போகவில்லை. அதைப் போல சிங்கப்பூர், பினாங்கு போவதற்கு கடல் மார்க்கமாகக் கப்பலும் அதைப்போல தென்ஆப்ரிக்கா, தென் அமெரிக்கா பக்கம் போவதற்கும் கப்பலும் விடவேண்டும் என்று நாம் வலியுறுத்தி வருகிறோம். இது இல்லாததால் ஏற்றுமதி தடைப்படுகிறது.

ஏற்றுமதி செய்ய வேண்டியவர்கள் சென்னையிலிருந்து பம்பாய் வரை பல கோடி ரூபாய் பெறுமான துணிகளை இப்போது டிரக்கில் ஏற்றி செல்லுகிறார்கள். ஆகவே ஏற்றுமதிக்கு உதவுவதற்கு இந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். Real Madras Handkerchief என்று ஒன்று இருக்கிறது. அதற்கு Real Madras Handkerchief என்று பெயர் வந்ததற்குக் காரணமே ஜப்பான் நாட்டாரும், கொரியா நாட்டாரும், தைவான் நாட்டாரும்அதைப்போல செய்துபார்த்து அவர்களால் முடியவில்லை என்பதால் அதற்கு Real Madras Handkerchief என்று பெயர் வந்தது. 1982 ஆம் ஆண்டு 42 கோடி ரூபாய் துணிகள் இங்கே தயாரிக்கப்பட்டன. அந்தத் துணி நைஜீரியா நாட்டு மக்களால் தங்களுடைய தேசிய ஆடையாக (நேஷனல் டிரஸ்) ஆக கருதி அதை வாங்கி வந்தார்கள். ஆகவே அந்தத் துணியை இப்போது அங்கே ராணுவ ஆட்சி இருப்பதனால் அங்கே போகாமல் இருக்கிறது. அரபு நாடுகளுக்கும், நைஜீரியா போன்ற ஆப்ரிக்கா நாடுகளுக்கும் மத்திய அரசு தொடர்பு கொண்டு அவர்களுக்கு இங்கிருந்து ஏற்றுமதி செய்வதற்கு ஒப்பந்தம் செய்து கொடுத்து துணியை அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கிறோம்.





அண்ட்டார்டிகாவுக்கும் அட்லாண்டிக்கும் போய் இருந்தவர்கள் கூட தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்ட துணியை அங்கு உபயோகம் செய்து அது மிகவும் நன்றாக இருந்தது என்று சொல்லி இருக்கிறார்கள். மேல் நாட்டில் இப்போது நாகரீகமாக இருப்பவர்கள் சம்மர் காலத்தில் சம்மர் உல்லன் என்றும் விண்டர் காலத்தில் விண்டர் காட்டன் என்றும் பல அடுக்குகள் கொண்டு துணிகளை ஒன்றின் மேல் ஒன்றாக வைத்து தைத்து அதை நாகரீகமாக அணிந்து வருகிறாாகள். அந்த முறையில் புதுரக துணிகளை நாம் புகுத்த வேண்டும் என்று சொல்லி வருகிறோம். இந்த தொழிலை யாரும் அழிக்க முடியாது. ஆனால் அந்த தொழிலுக்குமைய அரசும் மாநிலத்தினுடைய பேட்ரனேஜ்– பாதுகாப்பு தரவேண்டுமென்ற முறையில், மைய அரசும், மாநில அரசும் தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் கவனத்தில் கொண்டு, அவற்றின்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்து இருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கதர்த்துறை அமைச்சரின் விளக்க உரையில் சில விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக மூன்று விஷயங்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஒன்று, அப்பாய்ண்ட்மெண்ட் கமிட்டி நடவடிக்கைகள் குறித்து ஊழல் நடந்திருக்கிறது என்று சொல்லவில்லை. முறைகேடு நடந்திருக்கிறது என்று சொன்னேன். அப்பாய்ண்ட்மெண்ட் கமிட்டியில் டெக்னிகல் பர்சன்ஸ் இல்லை. எனவே டெக்னிகல் பர்சன்ஸ் உள்ளடங்கிய அப்பாய்ண்ட்மெண்ட் கமிட்டி எதிர்காலத்தில் திருத்தியமைக்கப்படுமா என்பது ஒன்று. இரண்டாவது ஃபீல்டு ஓர்க் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் ஃபீல்டு ஓர்க், அதாவது ஊழியர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டு, நிரப்பப்படுமா என்பது இரண்டாவது. மூன்றாவது, அமைச்சரவர்கள் விளக்கம் அளித்தபோது சொல்லப்படாத விஷயம். உத்தரப்பிரதேசத்தில் பெட்ஷீட்டுகள் இன்றைய வரைக்கும் பர்சேஸ் செய்யப்படுகிறது. அந்த பர்சேஸ் செய்யப்படாமல் தமிழ்நாட்டில் தயாரிப்பதற்கான நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுமா என்றும் அமைச்சர் அவர்களிடமிருந்து விளக்கம் பெற விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதில் சொல்கின்ற நேரத்தில் கூறினேன். நம் நாட்டில் இங்கு உற்பத்தியாகக் கூடிய பஞ்சுகளை வைத்து, நாம் உத்தரப்பிரதேசத்திற்கு அனுப்பி, அங்கிருந்து கோராக்களை தயார் செய்து, அச்சடிக்கப்பட்டு பெட்ஷீட்டுகளை நாம் வாங்கி வந்தோம். இப்போது அந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்கேற்ப,

[திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி] [1986 ஏப்ரல் 4

நாம் பவானிசாகரில் நாம் அச்சுஅலகுகளை ஆரம்பித்திருக்கிறோம். அந்த அலகுகளின் மூலம் அங்கு அனுப்பக்கூடிய கோராக்களை யெல்லாம் இங்கு அச்சு அலகுகளிலேயே நாம் கோராக் களைப் பயன்படுத்தி நாம் பெட்ஷீட்டுகளைத் தயாரிக்கின்ற நிலைமையினை இப்போது ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதனால் நாம் மிக மிக அதிகமாக அச்சு அலகுகளைப் பிரிண்ட் செய்து நம்முடைய தேவைகளை நாம் பூர்த்தி செய்வோம். அதனால் மேற்கொண்டு நம் தேவைக்கு அதிகமாக இருக்கின்ற அவற்றை வெளி மாநிலங்களுக்கு அனுப்பி நாம் பெட்ஷீட்டு களைச் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கும் என்றும் அவ்வாறு தேவைப்படாமல் போனால், நம் அச்சு அலகுகளிலேயே நாம் தயார் செய்து கொள்ளலாம் என்றும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்த அப்பாய்ண்ட்மெண்ட் கமிட்டியிலே கண்காணிப் பாளர் பதவிகளை நிரப்புவதில் அங்கு தவறு நடந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் கூறினார்கள். ஆனால் நான் பேசுகின்ற நேரத்தில் ஊழல் நடந்திருக்கிறது என்று கூறினேன். அது தவறுதான். ஊழல் என்ற வார்த்தையை அவைக் குறிப்பி லிருந்து எடுத்துவிட வேண்டும் என்றும், அதற்குப் பதிலாக தவறு நடந்திருக்கிறது என்று திருத்திக் கொள்ளலாம் என்பதனை கேட்டுக் கொள்கிறேன். தவறு நடந்திருந்தால் நான் ஏற்கனவே கூறியதைப் போல் நம்முடைய தமிழக அரசு மூலம் தாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்பதனையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அந்த அப்பாய்ண்ட்மெண்ட் கமிட்டியில் டெக்னிகல் பர்சன்ஸ் போடவில்லை என்று கூறினார்கள். ஏற்கனவே கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் நியமிக்கப்படுகின்ற காதி போர்டு உறுப்பினர்கள், கமிட்டியிலே சேர்மனாகவும், உறுப்பினர் களாகவும் நியமிக்கப்பட்டு அவர்களே இன்றையதினம் அந்த அப்பாய்ண்ட்மெண்ட் கமிட்டியை நடத்திக் கொண்டு வருகிறார் கள். அதில் ஏதாவது குற்றங் குறைகள் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறியதைப்போல் அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதனையும் கூறிக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் பல விஷயங் களைப் பற்றி விளக்கமாகச் சொன்னார்கள். விஷயம். அந்தக் கைத்தறி நெசவாளர் தொழிலாளர்களுக்கு ஒரு வரவேற்கத்தக்க முக்கியமான சட்டத்தை இந்த அவையில் நாம் நிறைவேற்றுகின்ற போது, தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நலச் சட்டத்திலுள்ள நல்ல பல சட்டங்களை முக்கியமான மூல அம்சங்களையெல்லாம் எடுத்துச் சேர்த்து நாம் எல்லோரும் அதை ஒத்துக்கொண்டு நிறைவேற்றினோம். குறைந்தபட்சக் கூலி நிர்ணயத்தை அமுலாக்குவதைப் பொறுத்தவரையில், அதை எதிர்த்து ஹை கோர்ட்டில் ஒரு தடை இருக்கிற



1986 ஏப்ரல் 4] [திரு கு. ரமணி]

(மாலை 6-00)

ஆனால், பாக்கியுள்ள சட்டத்தை நிறைவேற்றுவதில் எந்த விதமான தடையும் இல்லை. ஹேண்ட்லூம் டைரக்டர் மூலமாக அந்தச் சட்டம் நிறைவேற்றுவதற்கு வழியில்லை. அதற்கான சக்தி, அரேஞ்ச்மென்ட், மெஷினரி, செட் அப் இல்லாமல் இருக் கின்றன. மேலும் தொழிலாளர் பிரச்னை அங்கிருக்கிறது. தொழிலாளர் துறை மூலமாக அமுலாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வந்து நடவடிக்கை எடுத்தால், அதை எல்லோரும் வரவேற்பார்கள். அதை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு இதுபற்றி சம்பந்தப் பட்ட சட்டத்தின் கீழ் துணி இயக்குநர் அவர்கள் இந்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக் கிறார்கள். அது அரசு எடுக்கவேண்டிய கொள்கை முடிவு. 82-லே எடுத்திருக்கிறார்கள்.

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் கைத்தறித் துணிக்காக 60 நாள் கழிவு மானியம் வழங்கப்படுவது 30 நாளாகக் குறைத்து, அதை முழுமையாக எடுத்து விடுவார் களோ என்று அச்சப்படுகிறார்கள். கடந்த ஆண்டு நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் அரிசிக்காக மத்திய அரசை உணர்த்து வதற்கு ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருந்தார்கள். அதைப்போல, நெசவாளர்களுக்கு மத்திய அரசு கழிவு மானியம் 60 நாள் கொடுக்க வேண்டுமென்று ஏதாவது காரியங்களைச் செய்வார்களா?

அடுத்து, செங்கற்பட்டு மாவட்டத்திற்கு தலைநகராகக் கொண்டிருக்கும் காஞ்சிமா நகரில் பல தொழில்கள் தொடங்கப் படாமல், தொழிலில் பின்தங்கியப் பகுதியாக இருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் பெருமூச்சு வெட்டுவானம் ஆகிய இடங் களில் விசைத்தறிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த ஆண்டிலாவது காஞ்சிபுரத்தில் விசைத் தறிக் கூடங்களை ஆரம்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ஜவுளி கொள்கைப்படி விசைத் தறிகளை யார் வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம். ஜவுளிக் கொள்கையில் இது ஒரு பெரிய பாதகமாகும். யார் வேண்டு மானாலும் விசைத் தறிகளை ஆரம்பிக்கலாம்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானிய கோரிக்கைமீது பதிலளிக் கின்ற நேரத்தில், கதர் கிராம கைத்தொழில் வாரியத்தின் புதிய திட்டங்களைத் துவக்குவது பற்றி நான் எடுத்துக் கூறாமல் விட்டு விட்டேன். இப்போது கூறுகின்ற கருத்துக்களை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1986–87 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் இரண்டாம் பகுதி திட்டங்களின் கீழ் புதிய திட்டங்களை தமிழக அரசு அனுமதித்துள்ளது.

(1) தர்மபுரி மாவட்டம், தேன்கனிக் கோட்டையில் ஒரு அகர் பத்தி அலகு ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

(2) இராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் ஒரு வாசனை சோப்பு அலகு ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

(3) 500 கதர் நெசவாளர்களுக்கு அச்சு விழுதுகள் வழங்கப்பட இருக்கிறது.

(4) சோப்பு மற்றும் எண்ணெய் பரிசோதனைக் கூடத்திற்கு மேலும் சில உள்ளமைப்புகள் அமைப்பதற்கு அரசு அனுமதித்துள்ளது.

(5) திருச்சி மாவட்டம், கரூரில் பாய்முடைவோர் கூட்டுறவு சம்மேளனம் அமைப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

(6) வடாற்காடு மாவட்டத்தில் பிரம்பு மற்றும் மூங்கில் தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு கிடங்கு அமைப்பதற்கு அரசு அனுமதி கொடுத்திருக்கிறது.

மேலும், கதர் கிராமத் தொழில் வாரியம் மாவட்ட அளவில் சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற பொருட்காட்சியில் அமைக்கப்பட்ட அரங்கிற்கு முதற் பரிசு பெற்றிருக்கிறது. சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் நூற்றாண்டு விழாவில் கதர் கிராமத் தொழில் வாரிய அரங்கிற்கு முதற் பரிசு கிடைத்திருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஐ. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கதர் தொழில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில், காலணி செய்யும் தொழிலாளர்களுடைய பங்குகள் சாலைகளை அகலப்படுத்துவதன் காரணமாக சென்னை மாநகராட்சி, பொதுப் பணித் துறை, போலீஸ் அனுமதித்த பங்குகளையெல்லாம் எடுத்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில், சாலைகளை அகலப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்கள். ஆனால், எல்லா இடங்களிலும் இப்படிப்பட்ட பங்குகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அவர்களுடைய குடும்பங்கள் இன்றையதினம் வேதனை அடைந்திருக்கின்றது. எனவே, பாதிக்கப்பட்ட அந்தத் தொழிலாளர்களுக்கு அந்த பங்குகளை வைப்பதற்கு உடனடியாக ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் காலணி தொழிலாளர்களுக்கு பெட்டிக் கடைகள் வழங்கப்பட்டிருக்கின்றன; ஆனால், அவர்கள் தொழில் பாதிக்கக்கூடிய வகையில் அந்தப் பெட்டிக் கடைகள் எல்லாம் அகற்றப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள்.

நான் பல்வேறு பகுதிகளில் பார்த்து இருக்கிறேன். இப்போதும் அவர்கள் ரோடு ஓரங்களில் எல்லாம் பஸ் போக்குவரத்துக்கு, மக்களுக்கு எல்லாம் இடைஞ்சல் இல்லாத அளவுக்கு வைத்துக் கொண்டு தொழில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, எந்தெந்தப் பகுதிகளில் அவ்வாறு காலணி தைக்கும் தொழிலாளர்களுடைய பெட்டிக் கடைகளை அகற்றி இருக்கிறார்கள் என்பதை என்னிடம் எழுதிக் கொடுத்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், அவர்கள் தொழில் தொடங்குவதற்குரிய இடங்களையும் ஏற்படுத்தி அவர்களுக்கு உதவி செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் இலாகாவில் கொடுக்கப்படுகின்ற கடன்கள் சொத்து மதிப்பின் பேரில் தரப்படும் என்று சொல்லப்படுகிறது. இதன்மூலம் ஏழை எளிய மக்கள் கதர் இலாகாவினுடைய கடன்களைப் பெறமுடிவதில்லை. எனவே அவர்கள் ஆரம்பிக்கின்ற தொழிலுக்கு விசை செக்கு போன்றவைகள் மீது கடன் வழங்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தினை, சமீபத்தில் பம்பாயில் நடைபெற்ற கதர் ஆணைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டபோது, அதே கருத்தினை பரிந்துரையாகச் செய்தேன். அதன் பேரில் இன்றையதினம் கதர் ஆணைக்குழு, 5 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கடன் உதவி பெற்றால் அதற்கு சொத்து ஜாமீன் எல்லாம் வாங்கிக் கொடுக்க வேண்டாம் என்றும், தனியார் ஜாமீன்இருந்தால்போதும் என்றும் அறிவித்து இருக்கிறது. மேலும், மின்விசைச் செக்கு கடன் 14,500 ரூபாய் வழங்கி இருக்கிறோம். அந்தக் கடன் தொகையை 5 ஆண்டுகளில் கட்டவேண்டும் என்று ஏற்கனவே நாம் அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறோம். அந்த மின் விசைச் செக்கு பெற்று தொழில் நடத்தக்கூடியவர்கள் அந்தக் கடனை 5 ஆண்டுகளில் கட்டமுடியவில்லை என்ற கோரிக்கையினை எல்லாம் எடுத்து வைத்தார்கள். அவர்களுடைய கோரிக்கையினை நிறைவேற்றுகின்ற வகையில், இன்றையதினம் தமிழக அரசின் பரிந்துரையுடன், கதர் ஆணைக் குழு, 10 ஆண்டுகளில் அவர்கள் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தலாம் என்று ஆணை பிறப்பித்து இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும் போது, காதி திட்டங்களுடைய தேக்கத்திற்குக் காரணம் சட்டமன்ற உறுபபினர்கள்தான் என்பது போல் சொன்னார்கள். ஏனென்றால், அவர்கள் தொகுதிகளிலே அந்த திட்டங்கள் பெறுகின்ற நிலையங்கள் வரவேண்டும் என்று சொல்லி, அதிகமாக கொடுத்ததால்தான் இந்த நிலை வந்தது என்று அவர்கள் சொன்னார்கள். அவரிடம் மீண்டும் நான் அறிய விரும்புவது அந்தத் தேக்கத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும்தான் காரணமா என்பதுதான்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள்தான் காரணம் என்று நான் கூறவில்லை. அவர்கள், அவரவர்கள் தொகுதிகளில் கிராமிய நூற்பு மையங்கள் ஆரம்பிக்கவேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அதன் பேரில், கிராமிய நூற்பு மையம் ஆரம்பிக்கப்பட்டதால், ஆங்காங்கே பெண்களுக்கு வேலை வாய்ப்பினை அதிகப்படுத்தி இருக்கிறோம். உற்பத்தியும் அதிகமாகி இருக்கிறது. அதனால் தான் சிட்டம் ஸ்டாக் அதிகமாக இருக்கிறது என்று தான் கூறினேன். சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் காரணம் என்று சொல்லவில்லை. உற்பத்தியும் அதிகமாகி, அதனால் தான் அதிகமாகத் தேங்கி இருக்கிறது என்று கூறினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை.

திருவாளர்கள் கு. சுப்பராயன், மு. இராசாங்கம் மற்றும் எஸ். என். இராமசாமி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: "மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ், ரூ. 5,26,43,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும்.

திருவாளர்கள் மா. சுந்தரதாஸ் மற்றும் எஸ். என். இராமசாமி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாக கருதப்பெற்றன.

திருவாளர்கள் கு. சுப்பராயன் மற்றும் சு. பாலன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ், ரூ. 19,36,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 27—கதர்த் தொழில்.

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

திருவாளர்கள் டி. ஆர். வேங்கடரமணன், எஸ். என். இராமசாமி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாக கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி.

"மானியக் கோரிக்கை எண் 27—கதர்த்தொழில் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,30,71,000-க்கு மேற்படாத் தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (5-4-1986) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை மாலை 6-10 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

64. அயல்நாட்டு வேலை-வாய்ப்பு நிறுவனத்தின் 1984–85 ஆம் ஆண்டிற்கான ஏழாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

62. கோரிக்கை எண் 2—மாநில ஆயத்தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

63. கோரிக்கை எண் 26—கைத்தறி மற்றும் நெசவாலை ஆகியவற்றின் கொள்கையும் திட்டங்களும் பற்றிய குறிப்பு 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

64. கோரிக்கை எண் 27—தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கொள்கைகளும் திட்டங்களும் பற்றிய குறிப்பு 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

65. 1986–87 ஆம் ஆண்டு கைத்தறி மற்றும் நெசவாலைகள் பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

66. பாசனத் துறை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் முதலாவது (எட்டாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை (தமிழ்).

67. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் இரண்டாவது (எட்டாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கை (தமிழ்).

## இணைப்பு 1.

(46-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறை.

மானியக் கோரிக்கை எண் 2.

மாநில ஆயத்தீர்வை.

1986—87

கொள்கை விளக்கக் குறிப்பு.

மதுவிலக்குத் திருத்தச் சட்டத்தைக் கடந்த ஐந்து ஆண்டு
களாக அரசு செயற்படுத்தி வருகிறது. சில நிபந்தனைகளுக்
குட்பட்டு கள், சாராயம் அல்லது மதுவை அருந்த இந்தச்
சட்டம் அனுமதிக்கிறது. கள்ளச் சாராயம் தயாரிப்போர்



விற்பனை செய்வோர் ஆகியோர் பிடியில் குடிப்பழக்கம்
உள்ளோர் சிக்கித் தமது உடல் நலத்தைக் கெடுத்துக்கொள்வதை
தவிர்ப்பது இத்திட்டத்தின் நோக்கம். மேலும், சமூக விரோத
சக்திகளிடம் செல்லும் பணத்தை மக்களுக்கு நலம் பயக்கும்
திட்டங்களுக்காக பயன்படுத்துவதே அரசின் நோக்கும் ஆகும்.
அதே சமயத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுவோரையும் விற்பனை
செய்வோரையும் கண்டுபிடித்து, மாநிலத்திலிருந்து கள்ளச்
சாராயத்தை அறவே ஒழித்துவிடுவது அரசின் நோக்கமாகும்.
1983-ம் ஆண்டு ஜூன் திங்கள 1-ம் நாள் முதல் குறிப்பிடத்
தக்க மாறுதல் ஒன்று இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது.
சாராயத்தையும். இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு
மதுவகைகளையும் மொத்த விற்பனைமூலம் வழங்கும் பணி
தனியார் வசமிருந்து பொதுத் துறைக்கு எடுத்துக்கொள்ளப்
பட்டது. இந்த மாறுதலுக்கிணங்க, தமிழ்நாடு அரசுக்கு
முற்றிலும் சொந்தமானதும் அதன் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ்
உள்ளதுமான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (TASMAC)
கம்பெனிகள் சட்டதின்கீழ் சட்டப்படி நிறுவப்பட்டு, அக்கழக
கத்திடம் 1983–ம் ஆண்டு ஜூலைத் திங்கள் கடைசி வாரத்தி
லிருந்து சாராயம் மற்றும் இந்தியாவல் தயாரிக்கப்படும் அயல்
நாட்டு மதுவகைகள் ஆகியவற்றை மொத்த விற்பனை மூலம்
வழங்கும் பணி ஒப்படைக்கப்பட்டது. தமிழ்நாடு 1937 ஆம்
ஆண்டு மதுவிலக்குச் சட்டம் திருத்தம் செய்யப்பட்டு சில்லறை
விற்பனை மூலம் சாராயத்தை விற்கும் சிறப்புரிமை 16-7-85
லிருந்து தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திடம் மட்டுமே
ஒப்படைக்கப்பட்டுள்ளது. 16–11–1985 முதல் தமிழ்நாடு
வாணிபக் கழகம் முகவர்கள் மூலமாக சாராயச் சில்லறை
விற்பனையைத் தொடங்கியது. இந்த வாணிபக் கழகம் திருப்தி
தரும் வகையில் இயங்கி வருகிறது. எனவே, அரசின் வருவாய்
கணிசமான அளவு அதிகரிக்க இது உதவும் என்று எதிர்பார்க்கப்
படுகிறது.

கள் :

2. சில்லறையில் கள் விற்பனை செய்யும் உரிமை, பொது
ஏலத்தின் மூலமும், ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதன் மூலமும்,
தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள்-சாராயக்கடை (ஏல விற்பனை)
விதித்துறைகளின்படி விற்பனை செய்யப்படுகுறது. ஓர் ஆண்டில்
அக்டோபர் முதல் நாள் தொடங்கி அடுத்த ஆண்டு செப்டம்பர்
30 ஆம் நாளுடன் முடிவடையும் ஓர் ஆயத்தீர்வை ஆண்டுக்கு
இந்த முறையில் உரிமம் வழங்கப்படுகிறது. ஏலத்திலோ, ஒப்பந்த
புள்ளியிலோ எவர் அதிக விலைக்குக் கேட்டிருந்து அந்த விலை
போதுமானது என சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அறிந்த
பின்னர் அவருக்கு விற்பனை உரிமை வழங்கப்படுகிறது.

3. 1984–85 ஆம் ஆயத்தீர்வையாண்டில் 9,124 கள்ளுக்
கடைகள் அறிவிக்கப்பட்டன. அவற்றுள், 8,772 கள்ளுக்
கடைகளுக்கு உரிமங்கள் வழங்கபபட்டன. அறிவிக்கப்பட்ட சில

கடைகளுக்கு, ஏலம் கேட்பவர் இல்லாதது அல்லது ஏனைய காரணங்களினால் உரிமம் வழங்க இயலவில்லை. சிலஇடங்களில் கள்ளுக் கடைகள் விற்பனையகாததற்கு வறட்சியினால் புயலால் கள் உற்பத்தி குறைந்தது முக்கிய காரணமாகும். 1985-86ஆம் ஆயத்தீர்வை ஆண்டில் 31-12–1985இல் உள்ளபடி அறிவிக்கப்பட்ட 9,033 கள்ளுக் கடைகளுள் 6,678 கள்ளுக் கடைகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. இக்கள்ளுக் கடைகளிலிருந்து ஆண்டுக்குக் கிட்டத்தட்ட ரூ. 28.00 கோடி குத்தகைத் தொகை கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

4. 1983–84, 1984-85 ஆம் ஆண்டுகளில் கள்ளுக் கடைகளிலிருந்து கிடைத்த குத்தகைத் தொகை வருமாறு.—

(ரூ. கோடியில்)

| | |
|---|---|
| 1983–84 | 23.51 |
| 1984–85 | 24.32 |
| 1985–86 | 17.82 |

(1985 நவம்பர் வரை)

5. கள் இறக்கப்படும் மரங்கள் மீது மரவரி விதிப்பதில் ஏற்படும் நிருவாக இடையூறுகளைக் கருத்திற்கொண்டும், வருவாய் இழப்பு ஏற்படும் சாத்தியக்கூறினைத் தடுக்கும் பொருட்டும், 1982-83 ஆம் ஆயத்தீர்வை ஆண்டிலிருந்து மரவரி விதிப்புதை அரசு நிறுத்தி விட்டது.

சாராயம்:

(i) சாராயச் சில்லறை விற்பனை:

6. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள்-சாராயக் கடைகள் (ஏல விற்பனை) விதிகளைச் சேர்ந்த விதித்துறைகளின்படி, சாராயத்தைச் சில்லறையாக விற்பனை செய்யும் உரிமை, பொது ஏலத்திலும், ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதன் மூலமாகவும் விற்கப்படுகிறது. ஒவ்வோராண்டும், ஜூலைத் திங்கள் 16 ஆம் நாள் தொடங்கி அடுத்த ஆண்டின் ஜூலைத் திங்கள் 15 ஆம் நாள் முடிய உள்ள ஆயத்தீர்வை ஆண்டுக்கு, உரிமை விற்பனை செய்வது இம்முறையில் அனுமதிக்கப்படுகிறது. விற்பனை செய்தல், உறுதிப்படுத்துதல், உரிமம் வழங்குதல் முதலியவை குறித்த விதிகள், கள்-சாராயக் கடைக்குப் பொதுவானவையாகும். 1984-85 ஆம் ஆண்டு வரையில் சாராயச் சில்லறை விற்பனைக்கான சிறப்புரிமையும் உரிமமும் ஒவ்வொரு கடைக்கும் மாத கிஸ்திக்காக பொது ஏல-ஒப்பந்தப்புள்ளி முறையில் வழங்கப்பட்டன.



7. ஆனால், மேற்சொன்ன முறை செயல்படுத்தப்பட்டபோது, ஏல சமயத்தில் ஏலம் கேட்போர் ஒருங்கிணைந்து சதி செய்ததால், ஏலத்தொகை குறைவாகக் கேட்கப்பட்டதுடன் அரசுக்கு ஆயத்தீர்வை வருவாயில் பெரும் இழப்பு ஏற்பட்டது. சில இனங்களில், உயர்வரம்பு விலையைவிட ஏலத்தொகை குறைவாக இருந்ததால், கடைகளைப் பலமுறை மீண்டும் ஏலத்தில் விடவேண்டியிருந்தது. அதன் காரணமாக கடைகள் திறப்பதில் தாமதமும் அதனால் அரசுக்கு வருவாய் இழப்பும் ஏற்பட்டது. எனவே, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்துக்கு அதனுடைய பணியாளர்கள் மூலம் நேரடியாகவோ அல்லது முகவர்கள் மூலமாகவோ அல்லது மேலே கூறப்பட்டுள்ள இரு முறைகளிலுமோ சாராயத்தை சில்லறையில் விற்பதற்கான தனித்த சிறப்புரிமையை முன்னே குறிப்பிட்டது போல் 1985-86 ஆயத்தீர்வை ஆண்டிலிருந்து அரசு ஒப்படைத்தது.

8. கடந்த 4 ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட, உரிமம் வழங்கப்பட்ட சாராயக் கடைகளின் எண்ணிக்கை வருமாறு ;-

| | அறிவிக்கப் பட்டவை. | உரிமம் வழங்கப்பட்டவை. |
|---|---|---|
| 1981–82 | 5,282 | 5,067 |
| 1982–83 | 5,164 | 5,081 |
| 1983–84 | 6,698 | 6,592 |
| 1984–85 | 6,772 | 6,414 |
| 1985–86* | 7,356 | 7,217 |

(1986 பிப்ரவரி வரை)

* (புதிய முறையின் கீழ்)

கடந்த நான்காண்டுகளில் சாராய சில்லரைக் கடைகளிலிருந்து கிடைத்த குத்தகை வருமானம் வருமாறு:—

(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| 1981–82 | 49.84 |
| 1982–83 | 66.31 |
| 1983–84 | 89.09 |
| 1984–85 | 85.69 |
| 1985–86 | 70.81 |

(1985 நவம்பர் வரை)

9. இம்மாநிலத்தின் பல பகுதிகளில், கள்ளத்தனமாக சாராயத்தை வடித்தெடுத்து அதனை விற்பனை செய்வதைத் தடுக்க தொடர்ந்து முனைப்புடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாலும், புட்டிகள் மீது ஆயத்தீர்வைச் சீட்டுகளை ஒட்டுதலாலும் மாதாந்திர சாராய விற்பனை இவ்வாண்டில் கணிசமான அளவுக்கு உயர்ந்தது.

(ii) சாராய மொத்த விற்பனை :

10. சாராயக் கலவை ஆலைகளிலிருந்து புட்டிகளில் நிரப்பப்பட்ட சாராயம் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்குக் கொடுக்கப்படுகிறது. மாநிலம் முழுவதும் சாராயத்தை மொத்தமாக விற்பனை செய்ய அதற்கு 28-7-1983 முதல் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

(iii) சாராயம் தயாரித்தல்:

11. தமிழ்நாட்டில் ஒன்பது இடங்களில் சாராயக் கலவை ஆலைகள் உள்ளன. அவை சென்னை, கடலூர், தஞ்சாவூர், குடியாத்தம், திருச்சிராப்பள்ளி, மதுரை (ஆயுதம்பட்டி), திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ளன. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பு) விதித்துறைகளினால் இந்தக் கலவை ஆலைகள் முறைப்படுத்தப் படுகின்றன.

12. சாராயக் கலவை ஆலைகளில் உரிமக்காலம் அந்த ஆண்டின் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து, அடுத்த ஆண்டு மார்ச் 31-ந் தேதிவரை உள்ள காலத்திற்கு வழங்கப்படுகிறது. உரிமத்தைப் புதுப்பிக்க, விண்ணப்பதாரரிடமிருந்து விண்ணப்பக் கட்டணமாக ரூ. 500-ம், உரிமக் கட்டணமாக ரூ. 2,000-ம், உரிமைக் கட்டணமாக ரூ. 1,00,000-ம் வசூலிக்கப்படுகிறது. உரிமம் வழங்கப்படும் சமயத்தில் உரிமதாரர், பிணைய வைப்புத் தொகையாக ரூ. 2 இலட்சம் செலுத்த வேண்டும். சாராயம், கலவை ஆலைகளில் கலக்கப்பட்டு, புட்டியில் அடைக்கப்பட்டு, சாராயத்தின் தன்மையும், தரமும் மாவட்டத் தடய அறிவியல் ஆய்வுக்கூடங்களில் பரிசோதிக்கப்பட்ட பின்னரே சாராய மொத்த விற்பனையாளரான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திடம் (TASMAC) வழங்கப்படுகிறது. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்குச் சாராயம் அனுப்பப்படுவதற்கு முன்னர் லிட்டருக்கு ரூ. 6 என்ற வீதத்தில் ஆயத்தீர்வை வசூலிக்கப் படுகிறது. ஆயத்தீர்வை, விற்பனை வரி ஏய்ப்பைத் தடுக்கும் பொருட்டும், வழங்கப்படும் சாராயத்தின் தரத்தை உறுதி செய்வதற்கும், உற்பத்தி செய்யப்பட்ட ஒவ்வொரு சாராய புட்டியின் மீதும் 1—11—1982—லிருந்து ஆயத்தீர்வை வில்லைகள் ஒட்டப் படுகின்றன. ஆயத்தீர்வை வில்லைகளுக்கான செலவு, சாராயக் கலவை ஆலை உரிமைதாரர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. 1983-84ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மூலம் விற்பனை செய்வதற்கு எல்லா கலவை ஆலைகளிலிருந்தும் 12.68 கோடி லிட்டர் சாராயம் வழங்கப்பட்டது. 1984-85ஆம் ஆண்டில் 11.46 கோடி லிட்டர் சாராயமும், 1985-86-ல் (1986 பிப்ரவரி வரை) 10.65 கோடி லிட்டர் சாராயமும் வழங்கப்பட்டது.



இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் (.IM.F.S.)

(i) இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் தயாரிப்பு:

13. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் (தயாரித்தல்) விதிகள், இம்மதுவகைகளைத் தயாரிப்பதற்கு உரிமம் வழங்குவதை முறைப்படுத்துகின்றன. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளைத் தயாரிக்க இதுவரை ஐந்து நிறுவனங்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஐந்து நிறுவனங்களும் தாங்கள் உற்பத்தி செய்யும் மதுவகைகளை இம்மாநிலத்தின் மொத்த விற்பனையாளரான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு விற்பனை செய்கின்றன.

14. இம்மாநிலத்தில் தயாரிக்கப்படும் மதுபுட்டிகள் மீது 1—11—1982-லிருந்து ஆயத்தீர்வை வில்லைகள் ஒட்டப்பட்டு வருகின்றன. இந்த ஐந்து நிறுவனங்களிலும், இந்தப் பணியினை மேற்பார்வையிட, மாவட்டத் துணை ஆட்சியர் பதவித் தரத்தில் ஆயத்தீர்வை மேற்பார்வை அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். பணியாளர் மற்றும் ஆயத்தீர்வை வில்லைகளுக்காகும் செலவு உரிமதாரர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

(ii) பீர் தயாரித்தல்:

15. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு புருவரி விதிகள், பீர் தயாரிப்பதற்கு உரிமம் வழங்குவதை முறைப்படுத்துகின்றன. தமிழ்நாட்டில் பீர் தயாரிக்க ஒரு நிறுவனத்திற்கு உரிமம் வழங்கப்பட்டு புருவரி செயல்படுகிறது.

(iii) 'மாஸ்' ஒயின் தயாரித்தல்:

16. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு 'மாஸ்' ஒயின் விதிகள் 'மாஸ்' ஒயின் தயாரிப்பதற்கு உரிமம் வழங்குவதை முறைப் படுத்துகின்றன. தமிழ்நாட்டில் 'மாஸ்' ஒயின் தயாரிக்க இரண்டு நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

(iv) இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் மொத்த விற்பனை:

17. தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் (மொத்த விற்பனைக்கு வழங்குதல்) விதிகளின் விதித்துறைகளின்படி 28—7—1983 முதல் இந்தப் பணியினை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஏற்று நடத்திக் கொண்டு வருகின்றது.

18. விதிகளின்படி ஆயத்தீர்வை வில்லைகள் ஒட்டப்படாத மது அடைக்கப்பட்ட பாட்டில் அல்லது கொள்கலங்களை மொத்த விற்பனைக் கிடங்குகளில் வைத்திருக்கவோ அல்லது மொத்த விற்பனைக் கிடங்குகளிலிருந்து விற்பனை செய்யவோ

கூடாது. முன்பு, வட்ட ஆயத் தீர்வை அலுவலரின் மாதிரிக் கையொப்பம் உள்ள முத்திரை, மது அடைக்கப்பட்ட புட்டிகளின் மீது பதிக்கப்பட்டு வந்தது. 1–11–1982-லிருந்து மது விலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறையால் வழங்கப்படும் ஆயத்தீர்வை வில்லைகளை மற்ற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மது அடைக்கப்பட்ட புட்டிகள் அல்லது கொள்கலன்கள் மீது ஒட்ட வேண்டுமென்று மொத்த வியாபாரிகள் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர். ஆயத்தீர்வை வில்லைகளை புட்டிகளின் மீது பதிப்பதற்கும் இது சம்பந்தப்பட்ட பணியினை மேற்பார்வை செய்வதற்கும் வட்டாட்சியர் தரத்தில் உள்ள ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்கள் மொத்த விற்பனைக் கிடங்குகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். பணியாளர், ஆயத்தீர்வை வில்லைகளுக்கு ஆகும் செலவு, உரிமதாரரிடமிருந்து (அதாவது தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திடமிருந்து) வசூலிக்கப்படுகிறது.

### (v) இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் சில்லறை விற்பனை;

*19.* தமிழ்நாடு *1981* ஆம் ஆண்டு மது (உரிமம்—அனுமதி விதிகளின்படி, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகளைச் சில்லறை விற்பனை செய்ய உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. உரிமம் வழங்குவதால் உள்ளூரின் தேவை பூர்த்தி செய்யப்படும் என்றும், உரிமம் வழங்குவதனால் பொது நலன் பாதிக்கப்படாது என்றும், வழங்கப்படும் உரிமம் முறைகேடாகப் பயன்படுத்தப்படமாட்டாது என்றும், மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையர் திருப்தி அடைந்தால், புட்டியில் அடைக்கப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் அல்லது அயல்நாட்டு மதுவகைகள் சில்லறையாக விற்பதற்கான உரிமத்தை விண்ணப்பம் அளிக்கப்படுவதன் பேரில் வழங்குகிறார்.

*20.* *1981–82*-ல் *1,213* உரிமங்கள் வழங்கப்பட்டன *1985–86* ஆம் ஆண்டில் *958* உரிமங்கள் மட்டுமே புதுப்பிக்கப் பட்டன.

### மதுவை எடுத்துச் செல்லுதல்;

*21.* தமிழ்நாடு *1937* ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் படி உரிமம் அல்லது அனுமதி பெறாமல் மதுவை இறக்குமதி, ஏற்றுமதி செய்வதை, கொண்டு செல்வதை அல்லது இம்மாநிலம் வழியாக எடுத்துச் செல்லுவதை தடுக்கும் பொருட்டு *1982*-ல் *13* ஆம் எண் அவசரச் சட்டத்தை அரசு பிறப்பித்தது. பின்னர் இந்த அவசரச் சட்டம் தமிழ்நாடு *2/1983* ஆம் சட்டமாக இயற்றப்பட்டது. தமிழ்நாட்டிற்கு வெளியேயுள்ள ஓரிடத்தி லிருந்து தமிழ்நாடு வழியாகத் தமிழ்நாடு மாநிலத்திற்கு





வெளியேயுள்ள மற்றோரிடத்திற்கு மதுவை எடுத்துச் செல்வதற் கான அனுமதி வழங்கத் தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு மது (எடுத்துச் செல்லுதல்) விதிகள் வகை செய்கின்றன. மதுவை எடுத்துச் செல்வதற்கு காவல் துறைபாதுகாப்பு அளிக்கப்படுகிறது. ஆனால் உரிமதாரர் காவலர் பாதுகாப்புக்கான செலவை முன்ன தாகச் செலுத்தி விடவேண்டும்.

*22.* *1982*-ல் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டம் அமுல் படுத்தப்பட்ட *1982* டிசம்பர் *1* ஆம் நாளிலிருந்து *1985* டிசம்பர் மாதம் *31* ஆம் நாள் வரை வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டுகளின் எண்ணிக்கை *19,866* ஆகும். பின்னர், தமிழ்நாடு *1983* ஆம் ஆண்டு *2* ஆம் சட்டமாக இயற்றப்பட்ட இந்த அவசரச் சட்டத்தை எதிர்த்து. பாண்டிச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகளின் மொத்த வியாபாரிகள் சிலர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்தனர். இந்த வழக்குகளில் சென்னை உயர் நீதிமன்றம் கீழ்க்கண்ட இடைக்கால ஆணைகளைப் பிறப்பித் துள்ளது:—

"வழக்கு முடியும் வரை, சரக்கை எடுத்துச் செல்ல அனுமதிச் சீட்டுப் பெற வேண்டும் என மனுதாரர்களைக் கட்டாயப் படுத்தக் கூடாது. சரக்கு எல்லையைக் கடக்கும் வரை, மாநில அரசு, காவல் பாதுகாப்பு அளிக்கலாம். சரக்கு மாநிலத்திற்குள் நுழையும்போது லாரி அல்லது டிரக்கு வண்டியினை காவல் பணி யாளர் உள்ள காரணத்தால் மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் அவை நிறுத்தப்படக் கூடாது என சான்றிதழ் அளிக்க வேண்டும். இச்சட்டத்தின் 32–A விதியின்படி சரக்கு மாநிலத்தில் நுழையும் போதும் வெளியேறும் போதும் சோதனை செய்ய சோதனைச் சாவடிகள், சாலைத் தடங்கல் ஆகியவற்றை மாநில அரசு நிறுவலாம். சரக்கு, பாண்டிச்சேரி மாநிலத்திற்குள் நுழை யும் போது குறிப்பிட்ட சோதனைச் சாவடி மூலம்தான் செல்ல வேண்டும் என்று முன் கூட்டியே மனுதாரர்கள் சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும்.

### கருப்பஞ்சாற்றுக் கசண்டு.

*23.* கருப்பஞ்சாற்றுக் கசண்டு சர்க்கரை ஆலைகளில் சர்க்கரை தயாரிப்பதிலிருந்து கிடைக்கும் துணைப் பொருளாகும் இது எரிசாராயம் தயாரிப்பதற்குரிய அடிப்படை மூலப்பொரு ளாகும். மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையர், கருப்பஞ்சாற்றுக் கசண்டு மாநில கட்டுப்பாட்டாளர் ஆவார். ஆலைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட கருப்பஞ்சாற்றுக் கசண்டைச் சேமித்து வைத்தல், கொண்டு செல்லுதல், பயன்படுத்துதல் ஆகியவற்றை இவர் கட்டுப்படுத்துகிறார்.

இம்மாநிலத்தில் *23* சர்க்கரை ஆலைகள் உள்ளன. மேலும் *2* சர்க்கரை ஆலைகள் *1985–86* ஆம் ஆண்டிலிருந்து சர்க்கரை உற்பத்தியைத் தொடங்கும் எனத் தோன்றுகிறது. முந்தைய

ஆண்டுகளில் வறட்சி நிலை நிலவியதால் 1983-84 ஆண்டில், சர்க்கரை கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தி குறைந்தது. எனவே கருப்பஞ்சாற்றுக் கசண்டை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் மிகவும் பாதிக்கப்பட்டன. எனவே எரிசாராய உற்பத்தியும் பாதிக்கப்பட்டது, உள்ளூர்த் தேவைகளை நிறைவு செய்வதற்காக உத்திரப்பிரதேசத்திலிருந்து சுமார் 3,000 டன் அளவு கருப்பஞ்சாற்றுக் கசண்டு இறக்குமதி செய்யப்பட்டது. கடந்த சர்க்கரை ஆண்டான 1984—85 ஆம் ஆண்டில், கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தி 2.65 இலட்சம் டன்னாக இருந்தது.

24. 1985—86 நடப்பு ஆண்டில் ஆல்கஹால் மொத்தம் தேவையான 4.79 இலட்சம டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டுக்கு எதிராக 2.70 இலட்சம் டன் மட்டுமே உற்பத்தி செய்யப்படும் என்று மதிப்பிடப்பட்டது. எனவே சுமார் 2.09 இலட்சம் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு பற்றாக்குறையாக உள்ளது. இக்குறைவு பற்றி மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உற்பத்திக் குறைவு காரணமாக ஆல்கஹால் ஆண்டு தொடக்கத்திலிருந்தே கருப்பஞ்சாறறுக் கசண்டைப் பயன்படுத்துவோர் அனைவருக்கும் அவர்களுக்கு வழங்கப்படும் அளவு குறைக்கப்பட்டுள்ளது. சாராயத்தையும் ஏனைய குடிக்கத்தக்கச் சாராய வகைகள் பலவற்றையும் கள்ளத்தனமாக வடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் முக்கிய மூலப் பொருள்களில் ஒன்றான கருப்பஞ்சாற்றுக் கசண்டு கள்ளச் சந்தைக்குச் செல்வதைத் தடுக்கும் வகையில் அதன் ஒதுக்கீடு கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், முந்தைய ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டனவற்றைப் பயன்படுத்தியதற்கான சான்றிதழ்கள் மாவட்ட அலுவலர்களிடம் பெற்ற பின்னரே எம். எல். 4 உரிமங்கள் (கருப்பஞ்சாற்றுக் கசண்டை வைத்திருக்கவும், பயன்படுத்துவதற்குமான உரிமம்) வைத்திருப்பவர்களுக்குக் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. வடிச்சாலைகள், கால்நடைத் தீவனம், கோழித் தீவனம் தயாரிப்பாளர்கள், நல்லெண்ணெய் தயாரிப்பவர்கள், போன்ற பயன்பாட்டாளர்களுக்கு மட்டுமே உரிமங்கள் வழங்கப்படுகின்றன. முறைகேடுகளைத் தடுப்பதற்கு சர்க்கரை ஆலைகளையும, வடிசாலைகளையும், ஏனைய உரிமதாரர்களின் வளாகங்களையும் திடீரென்று சோதனையிடுமாறு மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

எரிசாராயம் (Rectified spirit)

25. சாராயம் தயாரிப்பதற்கு எரிசாராயம் அடிப்படை மூலப்பொருளாகும். இது தொழிற்சாலைப் பயனுக்காகவும், மருந்து தயாரித்தல் முதலிய பல்வேறு நோக்கங்களுக்குத் தேவைப்படுகிறது. எரிசாராயம், வீரியமற்ற சாராவி Silent Spirit முதலியவற்றைத் தயாரிப்பதற்காக தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளின்கீழ் இம்மாநிலத்தில் எட்டு வடிசாலைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. ஆல்கஹால் தயாரிப்பதற்குத்





தேவையான கருப்பஞ்சாற்றுக் கசண்டு தேவைப்பட்ட அளவு கிடைக்காததால், தற்போது நம் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் ஆல்கஹால் கணிசமான அளவு குறைந்துவிட்டது.

26. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளின் கீழ் புதிதாக வடிசாலை உரிமம் வழங்குவதற்கும் உரிமத்தைப் புதுப்பிப்பதற்கும் விண்ணப்பக் கட்டணம் ரூ. 200-ம் ஆண்டொன்றுக்கு உரிமக் கட்டணம் ரூ. 2,000-ம் உரிமைக் கட்டணம் ரூ. 1,00,000-ம் வசூலிக்கப்பட்டு வருகிறது. உரிம நிபந்தனையை உரியவாறு பின்பற்றுவதற்காக ஒவ்வொரு வடிசாலையின் உரிமதாரரும் ரூ. 1,00,000 பிணை வைப்புத் தொகை செலுத்த வேண்டும்.

27. மத்திய அரசின் இரசாயனப் பொருள்—இரசாயன உர அமைச்சகம் அமைத்துள்ள கருப்பஞ்சாற்றுக் கசண்டு மத்தியக் குழு ஒவ்வொரு மாநிலத்திலும் கிடைக்கும், தேவைப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு, ஆல்கஹால் அளவை மதிப்பிடவும், இவை உபரியாக உள்ள மாநிலங்களிலிருந்து பற்றாக்குறையுள்ள மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் பொருட்டும் ஆல்கஹால் ஆண்டின் தொடக்கத்தில் கூடுகிறது. 1984—85 ஆல்கஹால் ஆண்டில் (1984 டிசம்பர் முதல் 1985 நவம்பர் வரை) கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தியில் குறைவு ஏற்பட்டது. எனவே, எரிசாராய உற்பத்தியும் குறைந்தது. உபரியாக உள்ள மாநிலங்களிலிருந்து எரிசாராயத்தைப் பெறுவதற்கு நாம் எடுத்துக் கொண்ட முயற்சியும் வீணாகிவிட்டது. எனவே அருந்தத்தக்க மது தயாரிக்கும் தொழிற்சாலை உட்பட ஆல்கஹாலை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகள் மிகவும் பாதிக்கப்பட்டன. எனினும், இராசாயனத் தொழிற்சாலைக்கு ஆதரவாக இந்திய அரசு இறக்குமதிக் கொள்கையினை வரையறுத்ததன் காரணமாக திருச்சி வடிசாலை வெளிநாட்டிலிருந்து வீரியம் குறைந்த சாராவியினை இறக்குமதி செய்ய முடிந்தது. 1984—85 நடப்பு ஆல்கஹால் ஆண்டிலும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு போதிய அளவு வழங்கப்படாததால், எரிசாராய உற்பத்தியில் பெரும் அளவுக்கு குறைவு ஏற்பட்டது. கிடைத்துள்ள ஆல்கஹால் சம அளவில் தொழிற்சாலைகள், சாராயக் கலவை ஆலைகள், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளைத் தயாரிப்பவர்கள் முதலியோருக்கும் ஒதுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு முழுவதும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு, ஆல்கஹால் பற்றாக்குறை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வீரியம் குறைந்த சாராவி (Denatured Spirit)

28. (1) வீரியம் குறைந்த சாராவி, வார்னிஷ் போன்றவற்றைப் பயன்படுத்தவும், விற்பனை செய்யவும்;

(2) வீரியம் குறைந்த சாராவியை அடிப்படையாகக் கொண்ட பொருள்களைத் தயாரிக்கவும், விற்பனை செய்யவும் டி.எல். வகை உரிமங்கள் கொடுக்கப்படுகின்றன.

29. சாராவியை அடிப்படையாகக் கொண்ட பொருள்களை அதாவது, வார்னிஷ், பிரெஞ்ச் பாலிஷ் போன்றவற்றைத் தயாரியப்பதற்கு ஏராளமான உரிமதாரர்களுக்கு முன்னர் ஒதுக்கப் பட்ட வீரியம் குறைந்த சாராவி கள்ளச் சாராயம் விற்பதற்கு முக்கிய ஆதாரமாக அமைந்துவிட்டது. 20—சி என்ற புதிய பிரிவைச் சேர்த்துக்கொள்ளும் வகையில், தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டத்தைத் திருத்தம் செய்ததையடுத்து, வீரியம் குறைந்த சாராவி, வார்னிஷ் போன்றவற்றில் மொத்த விற்பனையும், சில்லறை விற்பனையும் 1–10–1978 ஆம் நாள் முதல் கூட்டுறவுச் சங்கங்களிடமும், அரசுத் துறைத் தொழில் பிரிவுகளிடமும், அரசு நிறுவனங்களிடமும் கொடுக்கப்பட்டன. அவற்றிற்குக் கொடுக்கப்பட்ட வீரியம் குறைந்த சாராவியை வேறு வகையில் பயன்படுத்தியதாகப் புகார் எதுவும் வரவில்லை. இம்முறை நன்கு செயல்படுகிறது.

30. மருந்துவர்கள் போன்ற உண்மையான பயனீட்டாளர் களுக்கு வீரியம் குறைந்த சாராவியையும், வார்னிஷையும் கால தாமதமின்றிப் போதிய அளவு வழங்க உத்தரவுகள் பிறப்பிக்க பட்டுள்ளன.

31. ஒவ்வொரு கம்பெனிக்கும் அல்லது கம்பெனிகள் தொகுதிக்கும் ஆண்டு பங்கீட்டு அளவு 50,000 லிட்டர்களுக்கு அதிகமாக இருக்கும்போது, அவற்றிற்குத் தனியாக ஆயக்கண் காணிப்பு அதிகாரியை நியமித்து அவருடைய விழிப்பான மேற் பார்வையில் சாராவியை அடிப்படையாகக் கொண்ட பொருள்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. 50,000 லிட்டர்களுக்குக் குறைவாக ஆண்டு பங்கீட்டளவு இருக்கும் ஏனைய இனங்களில், உரிமம் பெற்றவர்களின் கணக்குகளைக் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை சரி பார்க்கும்படி வட்ட ஆயத்துறை அலுவலருக்கும் ஆயத்துறை உதவி ஆணையருக்கும் தக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், சாராவியை அடிப்படையாகக் கொண்ட பொருள்களைத் தயாரிப்பதற்கு சாராவி பயன்படுத்தப்படுகிறதா என்பதை உறுதிப் படுத்த இயன்ற இடங்களில் நிபந்தனைகளும் வரையறுக்கப் பட்டுள்ளன. பொருள்களைச் செய்துமுடிப்பதற்குப் பயன்படுத்தும் சாராவியின் வீதாச்சாரத்தைக் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை மறு ஆய்வும் செய்யப்படுகின்றது.

மருந்து ஒப்பனை பொருள் தயாரிப்பு:

32. மருந்துப்பொருள்கள்—ஒப்பனைப் பொருள்கள் தயாரிப் பதற்கும் விற்பனை செய்வதற்கும் 'எல்' தொடர் உரிமங்கள் வழங்கப்படுகின்றன.

33. மத்திய அரசின் சட்டமான 1955 ஆம் ஆண்டு மருந்துப் பொருள்கள்—ஒப்பனைப் பொருள்கள் தயாரிப்புச் சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி சாராவி வழங்கப் பட்டுள்ள உரிமதாரர்களின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்



வருகின்றன, டிஞ்சர், ஜிஞ்சர்பெரிஸ் போன்றவற்றைக் கள்ளத் தனமாக இறக்குமதி செய்வதைத் தடுப்பதற்கு மாநில எல்லை யோரங்களில் விழிப்புடன் கண்காணிப்புப் பணிகள் நடைபெறு கின்றன. இது தொடர்பாகத் தனியாக குற்ற வழக்குகள் எவையுமில்லை.

34. அசவம், அரிஷ்டம், கஷாயம் என்ற பெயரில் கள்ளச் சாராயம் விநியோகப்படுவதாக அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. இவ்வாறு செய்வோர் மீது தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் அல்லது 1940 ஆம் ஆண்டு மருந்துப் பொருள்கள்-ஒப்பனைப் பொருள்கள் சட்டத்தின்படி அல்லது இவ்விரு சட்டத்தின்படியும் நேர்விற்கேற்றப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அசவம், அரிஷ்டம், கஷாயம் தயாரிப்பதற்கு எல்-2 உரிமம் பெற்றவர்களின் நடவடிக்கைகளைக் கண் காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1940-ஆம் ஆண்டு மருந்துப் பொருள்கள்-ஒப்பனைப் பொருள்கள் சட்டத்தின் IV-A அத்தியாயத்தின் விதித்துறைகளைச் செயற்படுத்தியதன் விளை வாக அசவம், அரிஷ்டம் போன்றவற்றைத் தயாரிப்பதில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்படுவதால், இத்தகைய மருந்து ஒப்பனைப் பொருள்களை உண்மையாகவே தயாரிபபவர்கள் மட்டுமே பெறமுடிகிறது. இவ்வகையில் குற்ற வழக்குகள் தனியாக ஏதுமில்லை.

35, உள்துறையின் 1-11-1958 ஆம் நாளிட்ட 3031 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைக்குப் பதிலாக, தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு சாராவி தயாரிப்பு (கட்டுப்பாடு) விதிகளை அரசு இயற்றியுள்ளது. அசவம், அரிஷ்டம் முதலிய வற்றைத் தயாரிபபதையும் விற்பதையும் திறம்பட கண் காணிப்பதற்காக இவ்விதிகள் இயற்றப்பட்டன.

36. குளோரல் ஹைட்ரேட் என்பது ஊறு விளைவிக்கும் ஒரு வேதயற் பொருளாகும். இதனைத் தயாரிக்கத் தமிழ்நாட்டில் முழுமையாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இப்பொருளை பயன் படுத்துவது தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு குளோரல் ஹைட்ரேட் விதிகளுக்கு பதிலாக தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு குளோரல் ஹைட்ரேட் விதிகள் என்ற தனி விதிகளின்கீழ் முறைப்படுத்தப்படுகிறது. நாட்டின் பிற பகுதிகளிலிருந்து இம்மாநிலத்திற்குக் குளோரல் ஹைட்ரேட் கள்ளத்தனமாகக் கொண்டுவருவதைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

37. தமிழ்நாடு குற்றப் புலனாய்வுத் துறை குற்றப்பிரிவின் போதைப் பொருள் குற்றத்தகவல் சேகரிப்புப் பிரிவு 1985 ஆம் ஆண்டில், அபின் சட்டத்தின்படி. சுமார் ரூ. 1,12,900 மதிப்புடைய 56.450 கிலோ கிராம் அபினைக் கைப்பற்றியது தொடர்பாக 5 வழக்குகளையும் ரூ. 7,84,400/- மதிப்புடை

980.500 கிலோ கிராம் கஞ்சாவைக் கைப்பற்றியது தொடர்பாக 67 வழக்குகளையும் ரூ. 6,72,160 மதிப்புள்ள 8.402 கிலோ கிராம் ஹெராயின் என்னும் போதை மருந்துகள் கைப்பற்றியது தொடர்பாக 27 வழக்குகளையும் பதிவு செய்தது.

38. 1878 ஆம் ஆண்டு அபின் சட்டம், 1930 ஆம் ஆண்டு அபாயகரமான போதை மருந்துகள் சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள் நீத்தறவு செய்யப்பட்டு 1985 ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கம் அளிக்கும் பொருட்கள் சட்டம் (மத்திய சட்டம் 61/85) 14-11-85 முதல் நடைமுறைக்கு வந்தது. தயாரிக்கப்பட்ட போதை மருந்துகளை (அபின் மூலத்திலிருந்து பெறப்படுபவைகள்) வைத்திருத்தல், எடுத்துச் செல்லுதல், உபயோகப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவைகளை ஒழுங்குப்படுத்தவும் 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு போதை மருந்துகள் விதிகள் 14–11–85 முதல் நடைமுறைக்கு வருமாறு வெளியிடப்பட்டது.

39. சென்னை குறறப் புலனாய்வுத்துறை, குற்றப் பிரிவின் போதைப் பொருள் குற்றத் தகவல் சேகரிப்புப் பிரிவு, போதைப் பொருள்கள், மற்ற மாநிலங்களிலிருந்து சென்னை வழியாக, தமிழ்நாட்டிலுள்ள மற்ற இடங்களுக்குக் கடத்தப்படுவதைத் தடுக்க தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் நடவடிக்கைகள்:**

**அமைப்பு:**

40. மாநில அரசுக்கு முழுமையும் சொந்தமானதும் அதன் கட்டுப்பாட்டுக்குள் உள்ளதுமான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் 23-5-1983-ல் பதிவு செய்யப்பட்டது. 1-6-1983-லிருந்து 2 மாதங்களுக்குள் செயல்பட ஆரம்பித்தது. அவசரச் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ், பின்னர் மாற்றியமைக்கப்பட்ட 1983–ம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 33/1983) ஆல் தமிழ்நாடு மாநில முழுமைக்கான சாராயம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகளின் மொத்த விற்பனைக்கான முழு உரிமை அக்கழகத்திற்கு வழங்கப்பட்டது. அக்கழகம் 25-7-1983 முதல் அதனுடைய அலுவலைத் தொடங்கியது.

**நிர்வாக அமைப்பு:**

41. இக்கழகத்தின் தலைமை அலுவலகம், சென்னையில் அமைந்துள்ளது. மாநிலம் முழுவதும், சாராயம் மற்றும் இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகளின் மொத்தக் கொள்முதல் மற்றும் விநியோகம் ஆகிய பணிகளை இத்தலைமை அலுவலகம் கண்காணித்து வருகிறது. கீழே குறிப்பிட்டுள்ள அலுவலர்களைக் கொண்ட நிருவாகக் குழு இக்கழகத்தின், பணிகளை நிருவகித்து முறைப்படுத்துகிறது:—

(1) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்.



(2) ஆணையர் மற்றும் அரசு செயலாளர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை.

(3) ஆணையர் மற்றும் அரசு செயலாளர், நிதித்துறை.

(4) அரசு இணைச் செயலாளர், மதுவிலக்கு—ஆயத்தீர்வைத்துறை.

தலைமை அலுவலகத்தில், தலைவர்–நிர்வாக இயக்குநர் பணிகளை நிர்வகிப்பதில் அவருக்கு பொது மேலாளர் ஒருவர், முதுநிலை மேலாளர் வாணிபம் (ஒருவர்), முதுநிலை மேலாளர் (சாராயம்-சில்லறை விற்பனை) ஒருவர், நிதி ஆலோசகர் மற்றும் தலைமைக் கணக்கு அலுவலர், கம்பெனி செயலாளர்-நிருவாக அலுவலர் ஒருவர் ஆகியோர் உதவுகின்றனர். மாவட்டத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் 16 மண்டல அலுவலகங்கள் உள்ளன. சென்னை, கோயம்புத்தூர், திருச்சி போன்ற பெரிய மாவட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர்கள் பதவித் தரத்தில் வட்டார முதுநிலை மேலாளர்கள் உள்ளனர். ஏனைய மாவட்டங்களில் மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள் மண்டல மேலாளர்களாகப் பணிபுரிகின்றனர். இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், அண்ணா ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை மொத்த விற்பனைக் கிடங்கு ஒன்று உள்ளது. இவை அந்தந்த மாவட்டங்களிலுள்ள சில்லறை விற்பனை உரிமதாரர்களுக்கு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளை வழங்குகின்றன. இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களுக்கு விருதுநகரிலுள்ள கிடங்குகளிலிருந்து சாராயம் வழங்கப்படுகின்றது. அண்ணா மாவட்டத்திற்கு மதுரையிலிருந்து வழங்கப்படுகிறது. சாராயம் வழங்குவதற்காக, இவ்வாரியம் மாநிலம் முழுவதும் மொத்த விற்பனை சாராயக் கிடங்குகள் 66-ஐ நிறுவியுள்ளது. அந்தச் சாராயக் கிடங்குகளின் பற்று வரவுகளுக்கேற்ப, அவற்றை வட்டாட்சியர்களும், துணை வட்டாட்சியர்களும் நிருவகித்து வருகின்றனர்.

**நிதி அமைப்பு:**

42. (1) ஒவ்வொன்றும் ரூ. 1,000 மதிப்புள்ள 50,000 சம உரிமைப் பங்குகள் கொண்ட ரூ. 5 கோடி அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் பதிவு செய்யப்பட்டது. இது அரசுக்குச் சொந்தமான நிறுவனமாகையால், மாநில அரசே இதற்கு நிதி வழங்கும் முக்கிய ஆதாரமாகவுள்ளது, மாநில அரசே இக்கழகத்திடமிருந்து ரூ. 1,000 மதிப்புள்ள 10,000 பங்குகளைப் பெற்று ரூ. 1 கோடி அளித்துள்ளது. இது மட்டுமல்லாமல், வழிவகை முன் பணமாக ரூ. 2.00 கோடி வழங்கியுள்ளது. இந்த முன் பணம் ஆண்டொன்றுக்கு 12.5 சதவீதம் வட்டியுடன் திருப்பிச் செலுத்தத்தக்கதாகும். இந்த முன்பணம் பின்னர் அரசுக்கு திரும்பச் செலுத்தப்பட்டது.

(2) அரசு வழங்கிய மொத்த தொகை ரூ. 3.00 கோடி (அதாவது, பங்கு மூலதன உதவித் தொகை ரூ. 1 கோடி மற்றும் வழிவகை முன்பணம் ரூ. 2.00 கோடி) கழகத்தின் வாணிப நடவடிக்கைகளைத் தொடங்குவதற்குப் பெரிதும் உறுதுணையாக இருந்தது. இக்கழகத்தின் தொடக்கச் செலவுகளுக்காகவும் மாநில அரசு ரூ. 2 இலட்சம் முன்பணமாக வழங்கியது. ''வழி வகை முன்பணம்'' என்பதின் கீழ் பெறப்பட்ட முன்பணத் தொகை முழுவதும் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது. உபரி நிதி, அரசின் வைப்பீட்டுக் கணக்கில் வைப்பிடு செய்யப் பட்டுள்ளது. வணிகப் பணிகள் சென்னையிலுள்ள இந்திய ஸ்டேட் வங்கி (வணிகக் கிளை) மூலமாகவும், மாவட்ட, கோட்டத் தலைமையிடங்களில் இந்திய ஸ்டேட் வங்கிக் கிளைகள் மூலமாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்திய ஸ்டேட் வங்கியின் வணிகக் கிளை ரூ. 2.75 கோடிக்கு ரொக்கக் கடனுதவி வழங்கியுள்ளது. இக்கழகம் இக்கடன் வசதியை மிகவும் அளவோடு பயன்படுத்துகிறது.

**வாணிப நடவடிக்கைகள் :**

43. இம் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்ற ஒன்பது சாராயக் கலவை ஆலையிலிருந்து, அந்தந்த வட்டார மேலாளர்கள் சாராயத்தைத் கொள்முதல் செய்கின்றனர். இக் கழகம், நடப்பாண்டில் 1986 பிப்ரவரி வரையில் 1,073 இலட்சம் லிட்டர் சாராயத்தைத் கொள்முதல் செய்து 1,065 இலட்சம் லிட்டர் சாராயத்தைச் சில்லறை விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்துள்ளது. இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு மதுவகைகளைத் தலைமை அலுவலகம், இம்மாநிலத்திலுள்ள உற்பத்தியாளர்களிடமிருந்தும், பிற மாநிலங்களிலுள்ள உற்பத்தி யாளர்களிடமிருந்தும் கொள்முதல் செய்து, வட்டாரக் கிடங்கு களுக்கு வழங்குகின்றது. 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் 1986 ஆம் ஆண்டு பிப்ரவரி 28-ம் நாள் வரை, இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு மதுவகைகள் மொத்தம் ரூ. 96.11 கோடிக்கு விற்பனையானது.

44. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்துக்கு தமிழ்நாடு முழுவதற்கும் சாராயத்தை சில்லறையில் விற்பதற்கான தனித்த சிறப்புரிமை 16-7-1985-லிருந்து ஒப்படைக்கப்பட்டது. வாணிபக் கழகம் அதனுடைய பணியாளர்கள் மூலம் நேரடியாகவோ அல்லது வாணிபக் கழகம் நிர்ணயிக்கும் வரையறைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டு நியமிக்கும் முகவர்கள் மூல மாகவோ அல்லது மேலே கூறப்பட்டுள்ள இருமுறைகளிலுமோ சாராய சில்லறை விற்பனையை வாணிபக் கழகம் நடத்த வேண்டும். இக்கழகம் தேவைக்கு ஏற்ப திறனுடன் சில்லறை விற்பனையை நடத்திட தேவையான கடைகளை நிர்ணயிக்க வும், அக்கடைகளுக்கான இடத்தை உறுதி செய்யவும், திறக்கவும் இக்கழகத்திற்கு இயலும் வகையில், நான்கு மாதகாலம் வழங்கப்



பட்டது. இந்த நான்கு மாத கால அளவில் 15-7-1985 அன்று இருந்த உரிமதாரர்கள் அவர்களது விருப்பத்துக்குட்பட்டு தொடர்ந்து கடைகளை நடத்த அனுமதி வழங்கப்பட்டது. தொடர்ந்து நடத்த அவர்களுக்குவிருப்பம் இல்லாவிடில் அப்பகுதிகளில்கடைகளைத் திறக்க தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்துக்கு அறிவுரை வழங்கப் பட்டது. 1985 ஆம் ஆண்டு சாராய சில்லறை விற்பனை முகவர்கள் ஒழுங்குமுறை விதிகள் என்கிற ஒழுங்குமுறை விதிகளை இக்கழகம் இயற்றியது. மாநிலம் முழுவதும் 7,356 கடைகளை நிர்ணயிக்கவும். அக்கடைகளுக்கான இடத்தை உறுதி செய்யவும், திறக்கவும் இக்கழகம் முடிவு செய்தது. 1985-86 ஆயத்தீர்வை ஆண்டில் (1986 பிப்ரவரி வரை) சாராய சில்லறை விற்பனைக் கடைகளை நடத்து வதற்காக அதன் சார்பாக முகவர்களை நியமனம் செய்ய விண்ணப்பங்களை இக்கழகம் வரவேற்று, 7,217 முகவர்களை நியமனம் செய்தது. இடைக்கால அளவில், முன்னாள் உரிம தாரர்களால் கைவிடப்பட்ட 993 கடைகளில் 696 கடைகளுக்கு முகவர்களை நியமனம் செய்தது.

45. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் அதனுடைய அலு வலை தொடங்கியதிலிருந்து சாராயம் மற்றும் இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு மதுவகை பொருட்களின் விற்பனையும், வருமானமும் மாதா மாதம் அதிகரித்து வந்துள்ளது. அதன் விளைவாக மாநிலத்தின் வருவாயும் ஒரே சீராக உயர்ந்துள்ளது. கீழே காணப்படும் விபரங்கள் இக்கழகத்தின் செயல்களை விளக்கு வதாக உள்ளது. 1983-84 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள், சாராய மொத்த விற்பனை ஆகியவைகளில் ஆயத் தீர்வை, விற்பனைக் கட்டணம், கூடுதல் விற்பனை கட்டணம் மற்றும் விற்பனை வரி மூலம் ரூ. 32.37 கோடி செலுத்தியுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை, விற்பனைக் கட்டணம், கூடுதல் விற்பனைக் கட்டணம் மற்றும் விற்பனை வரி ஆகிய இனங்களில் ரூ 57.53 கோடி இக்கழகம் செலுத்தியுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் (அதாவது 1986 பிப்ரவரி வரை) சாராய சில்லறை விற்பனை மீது விற்பனைக் கட்டணம் உட்பட ஆயத்தீர்வை, விற்பனைக் கட்டணம், கூடுதல் கட்டணம் உட்பட ஆயத்தீர்வை, விற்பனைக் கட்டணம், கூடுதல் விற்பனைக் கட்டணமாக ரூ. 81.15 கோடி வாணிபக் கழகம் செலுத்தியுள்ளது.

46, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் சாராய சில்லறை விற்பனையை தொடங்கியதற்கு பிறகு இக்கழகம் 28-2-87 வரை விற்பனை வரியைத் தவிர ரூ.38.24 கோடி விற்பனைக் கட்டண மாகச் செலுத்தியுள்ளது.

**மதுவிலக்கைச் செயற்படுத்துதல்:**

47. தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் தொடர் விதித்துறைகள், இச்சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட புடைய விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவற்றைச் செயற்

படுத்தும் பொறுப்பு மாநிலத்திலுள்ள மதுவிலக்கைச் செயற்
படுத்தும் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்பிரிவு, 1980-ம்
ஆண்டு செப்டம்பர் திங்கள் 1-ம் நாள் முதல் இப்பணியைக்
கவனித்து வருகிறது. கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கள்ளச்
சாராயத்தைக் கடத்தி விற்பனை செய்தல், கள்ளத்தனமாக கள்
இறக்கி விற்பனை செய்தல், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்
நாட்டு மதுவகைகள் என்ற பெயரில் போலி மதுவகைகளைத்
தயாரித்தல், பக்கத்து மாநிலங்களிலிருந்து இந்தியாவில் தயாரிக்
கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகளைக் கடத்திக் கொண்டுவருதல்
போன்றவற்றிற்கெதிராக எல்லா மாவட்டங்களிலும் தீவிர
நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. மாநிலத்தில் மதுவிலக்குக்
குற்றங்கள் இழைக்கப்படும் அளவையொட்டி ஒவ்வொருமாவட்ட
மும் வகைப்படுத்தப்பட்டு; ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உரிய
தீவிரக் கண்காணிப்புப் பணி நடவடிக்கைக்குத் திட்டமிடப்
பட்டது; மதுவிலக்குக் குற்றங்கள் நடைபெறுவதாக தெரியவந்த
கறுப்புப்புள்ளிபட்டியலில் இடம்பெற்ற கிராமங்கள் அனைத்திலும்
தீவிரக் கண்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. முறையாகத் திட்ட
மிட்டபடி தொடர்ந்து இக்கண்காணிப்பு ஊக்கமளிப்பதாக
இருந்தது. இத்தகைய நடவடிக்கைகளினால் தமிழ்நாடு மாநில
வாணிபக் கழகம் தமிழ்நாடு முழுவதும் உள்ள உரிமம் பெற்ற
சாராயக் கடைகளுக்கு விற்பனை செய்த சாராயத்தின் அளவு
கணிசமாக உயர்ந்துள்ளது. அதாவது தமிழ்நாடு முழுவதும்
1984 டிசம்பரில் 33,82,716 லிட்டராக இருந்த விற்பனை அளவு
1985 டிசம்பரில் 1,00,31,676 லிட்டராக உயர்ந்துள்ளது.
தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தீவிர கண்காணிப்பு பணிகளின்
விளைவை பின்வரும் தகவலும் நமக்குத் தெளிவாகக் காட்டும்.
அதாவது, 1982-ல் 76,735 மதுவிலக்குக் குற்றங்களில் துப்பு
துலக்கப்பட்டிருக்க, 1983-ல் 93,645 மதுவிலக்குக் குற்றங்களில்
துப்பு துலக்கப்பட்டது. இவ்வாறாக, 1984—ல் கண்டுபிடிக்கப்
பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 71,260 ஆகக்குறைந்துவிட்டது.
அன்றையச் சூழ்நிலையில் இப்படி நடந்திருக்கக்கூடியது இயல்பே
என்பது புரியும். அப்போது எரிசாராவி மிகக் குறைந்த அளவிலேயே
கிடைத்தது; இதனால் உரிமம் பெற்ற சாராயக் கடைகளில்
கிடைக்கும் சாராயத்திற்கு பற்றாக்குறை ஏற்பட்டது ஆகவே
1984-ல் கடைசி மூன்று மாதங்களும் 1985-ல் முதலிரண்டு
மாதங்களும் மதுவிலக்கைச் செயற்படுத்துவதில் கடினமான கால
கட்டங்களாகின. அத்தகைய நிலையில் இயல்பாகவே, கள்ளச்
சாராயக்காரர்கள் ஓரளவு தங்கள் கைவரிசையைக் காட்டினர்.
கள்ளச்சாராயம் காய்ச்சுவோருக்கும் கள்ளச் சாராயக்காரர்களின்
மதுபானக் கடத்தல் செயலுக்கும் ஏனைய அபாயகரமான செயல்
களுக்கும் எதிராக மதுவிலக்குச் செயற்பாட்டுப் பிரிவு தொடர்ந்து
விழிப்புடன் அயராமல் மேற்கொண்ட முனைப்பு நடவடிக்கையின்
விளைவாக நிலைமை பெரிதும் கட்டுக்குள் அடங்கியது சாராயம்
மற்றும் எரிசாராவி ஆகியவற்றைக் கடத்தமோட்டார் வண்டிகள்
அடிக்கடி பயன்படுத்தப்பட்டன. ஒரு நிகழ்வில் பெட்ரோலியப்
பொருட்களைக் கொண்டு செல்லப் பயன்படும் லாரி டாங்கர்





தமிழ்நாட்டிற்குள் 6,000லிட்டர் சாராயத்தைக் கடத்திக்கொண்டு
வர பயன்படுத்தப்பட்டது. மற்றொரு நிகழ்வில், எரி சாராவி
பீப்பாய்கள் 75-ஐக்கள்ளத்தனமாக 2லாரிகளில் கொண்டுசென்றது
கண்டுபிடிக்கப்பட்டது. இவ்விரு நிகழ்வுகளிலும் தமிழ்நாட்டிற்கு
வெளியே இருந்து தமிழ்நாட்டுக்குள் சாராயக் கடத்தல் நடை
பெற்றது- கருப்பஞ்சாற்றுக் கசண்டு போதிய அளவு கிடைக்கத்
தொடங்கியதும், உரிமம் பெற்ற சாராயக் கடைகளில் சாராய
விற்பனையும் பெருகியது. கள்ளத்தனமாகச் சாராயத்தைக்
கடத்துவது, வடிப்பது ஆகியவற்றைக் கட்டுப்படுத்த மதுவிலக்குச்
செயற்பாட்டுப் பிரிவின் பணி தீவிர மேற்பார்வைக்குட்படுத்தப்
பட்டது. இந்தியவில் தயாராகும் அந்நிய மது வகைகளின்
விற்பனை, 1984 டிசம்பரில் 757.39 இலட்சமாக இருந்தது. இது
படிப்படியாக உயர்ந்து 1986 ஜனவரி மாதத்தில் ஒரு மாதத்திற்கு
சுமார் ரூ.9 கோடி என்ற அளவை எட்டியதிலிருந்து மதுவிலக்குச்
சட்டம் எந்த அளவுக்குச் செவ்விய முறையில் செயற்படுத்தப்
பட்டது என்பது விளங்கும். இந்தியாவில் தயாரான மதுவகை
களின் விற்பனை, இம்மாநிலத்தில், 1985 நவம்பரில் 983.54
இலட்சம் ரூபாயாக இருந்தது.

48. சென்னை மாநகரைச் சுற்றியுள்ள புறகநர்ப் பகுதிகளில்
கள்ளச் சாராயம் காய்ச்சுமிடங்கள், மதுவிலக்கு-தகவல் சேகரிப்பு
தலைமையகம், மாநகர் திடீர்ச் சோதனைப் பிரிவுகள்,
செங்கற்பட்டு (கிழக்கு) மதுவிலக்குச் செயற்படுத்தும் பிரிவு
ஆகியவற்றால் அடிக்கடி திடீர் சோதனையிடப்பட்டன.
முறையாகத் தவறாது மேற்கொண்ட இத்திடீர்சோதனைகளால்
இப்பகுதிகளில் கள்ளச்சாராயம் காய்ச்சுவோர் நடவடிக்கை
பெருமளவு குறைந்துள்ளது. மாநிலத்தின் இதர பகுதிகளில்
உள்ள கள்ளச்சாராயம் காய்ச்சுவதற்குப் பெயர்பெற்ற இடங்களில்
இது போன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அண்டை
மாநிலங்களிலிருந்து சாராயமும் இந்தியாவில் தயாரிக்கப்படும்
அயல்நாட்டு மதுவகைகளும் தமிழ்நாட்டுக்குள் கடத்தும்
நடவடிக்கைகளை விழிப்புடன் கண்காணித்ததன் விளைவாக,
1985-ல் கடத்தலில் ஈடுபட்ட 105 வாகனங்கள் பிடிபட்டன.
இவ்வாறு பிடிபட்ட வாகனங்களின் எண்ணிக்கை 1984-ல் 104;
1983—ல் இந்த எண்ணிக்கை 64 ஆக இருந்தது.

49. சாராயத்திற்கு மாற்றுப் பொருளாக பெருமளவு
ஆல்கஹால் கொண்ட போதையூட்டக்கூடியதும் நச்சுத்தன்மை
வாய்ந்ததுமான குளோரல் ஹைடிரேட் என்ற இரசாயனப்
பொருள் கலப்புள்ள மதுக்கஷாயம், அசவம், அரிஷ்டம் முதலான
போலி ஆயுர்வேத மருந்துகள் தயாரிப்பு மற்றும் விற்பனை
1984-ஆம் ஆண்டின் கடைசிக் காலாண்டிலும் 1985-ஆம் ஆண்டின்
முதல் அரையாண்டிலும் கவனத்திற்கு வந்தது. அத்தகைய
முறைகேடான நிகழ்வுகளைக் கண்டுபிடித்துத் தடுக்க மதுவிலக்குச்
செயற்பாட்டுப் பிரிவு உடனடி நடவடிக்கை மேற்கொண்டது.

**50.** குளோரல் ஹைடிரேட் கலப்புள்ள போலி மதுக்கஷாயம் அரிஷ்டம் முதலான பொருள்களை 4 நபர்கள் தயாரித்து விற்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரக் குற்றவாளிகள், குடிசைப்பகுதி ஆக்கிரமிப்பாளர் ஆகியோரின் கொடிய நடவடிக்கைகளைத் தடுக்கும்தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். அவர்கள் மீது உரிய சட்டத்தின்கீழ் வழக்கும் தொடரப் பட்டுள்ளது.

**51.** அதே போன்று, டிஞ்சர், ஜிஞ்சர், பெரிஸ், எனப்படும் ஆங்கில மருந்தும் சாராயத்திற்கு மாற்றாகப் பயன்படுத்தப் பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. மதுவிலக்குச் செயற்பாட்டுப்பிரிவு தீவிர நடவடிக்கை மேற்கொண்டதன் காரணமாக, ஏராளமான அத்தகைய நிகழ்வுகளில் (1984—ல் 279 நிகழ்வுகளிலும் 1985—ல் 420 நிகழ்வுகளிலும்) துப்புதுலக்கப்பட்டது. 1986 இல் (1986 பிப்ரவரி வரை) 30 நிகழ்வுகளில் துப்பு துலக்கப்பட்டது. இந்த மருந்துத் தயாரிப்பு அடங்கிய சிப்பங்களில் உள்ள மருந்துகளின் உண்மைப் பெயர்களை அறிவிக்காமல் வேண்டுமென்றே வேறு பெயர்களை அறிவித்து அவை வழக்கமான சரக்குப் போக்கு வரத்து வண்டி மூலமாக வெளியூருக்கு அனுப்பப்பட்டு எடுத்து வரும் சரக்குகள் போல் ஹைதராபாத்திலிருந்து கடத்திக் கொண்டு வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மதுரை, திருநெல்வேலி மாவட்டங் களில் இத்தகைய நிகழ்வுகள் கண்டுபிடிக்கப்பட்டு, மதுவிலக்குச் செயற்பாட்டுப் பிரிவினால் துப்புதுலக்கப்பட்டு வருகின்றன.

**52.** கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களின் நடவடிக்கையை ஒடுக்க தொடர்ந்து முனைப்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் விளைவாக, கள்ளுக் கடைகளுக்கான குத்தகை வருமானம் 1984—85-ல் இருந்ததைவிட 1985-86 ஆம் ஆண்டில் மிகவும் அதிகரிப்பதற்கு சாதகமான நிலைமை ஏற்பட்டது.

**53.** கள்ளச்சாராயம் காய்ச்சுதல், மதுவகைகளைக் கடத்து தல், ஏனைய மதுவிலக்குக் குற்றங்கள் ஆகியவற்றை அறவே ஒழிப்பதற்கான மிகப்பெரிய பணியைச் செய்து முடிக்குமளவிற்கு மதுவிலக்குச் செயற்பாட்டுப் பிரிவில் பணியாளர்களும், போக்குவரத்து வாகனங்களும் போதிய அளவிற்கு இல்லாமல் இருந்தது. அதே சமயம் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் சட்டத்தை மீறுவதற்கு புதிய முறைகளை எப்போதும் வகுத்த வண்ணம் உள்ளனர். இதனால் அரசு, மதுவிலக்கு அமல் பிரிவில் கூடுதலாக காவல் பணியாளர்களை நியமிக்க 1985 ஆகஸ்ட்டில் அனுமதியளித்தது. அவர்கள், காவல்துறை துணை சூப்பிரண் டெண்டுகள் 2 பேர், இன்ஸ்பெக்டர்கள் 5 பேர், சப்-இன்ஸ்பெக்டர்கள் 12 பேர், தலைமைக் காவலர்கள் 10 பேர், நிலை—1 காவலர்கள் 2 பேர், நிலை-2 காவலர்கள் 71 பேர், அலுவலக உதவி யாளர்கள் (B.G.S.) 9 பேர் ஆவர். பின்னர் புதிய மாவட்டமான



பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் உருவாக்கப்பட்டதன் பேரில், புதிதாக நியமனம் செய்ய அரசு அனுமதியளித்த காவல் பணியாளர் பற்றிய விவரம் வருமாறு: இன்ஸ்பெக்டர்கள் 6 பேர், சப்-இன்ஸ்பெக்டர்கள் 10 பேர், தலைமைக் காவலர்கள் 12 பேர், நிலை—1 காவலர்கள் 4 பேர், நிலை—2 காவலர்கள் 84 பேர், ஓட்டுநராகவுள்ள காவலர்கள் 14 பேர், இளநிலை உதவி யாளர் (முகாம்) 1, அலுவலக உதவியாளர்கள் (B.G.S.) 8 பேர். மேலும் ஜீப்பு ஒன்றும், ஆட்களை ஏற்றிச் செல்லும் வேன்கள் ஐந்தும் வாங்கப்பட்டன. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் மதுவிலக்கு—செயற்பாட்டுப் பிரிவிற்கு காவல் துறை கூடுதல் சூப்பிரெண்டெண்டு பதவி ஒன்று ஏற்படுத்தவும் அரசு அனுமதியளித்தது. இதைப் போன்றே மற்றொரு காவல் துறை கூடுதல் சூப்பிரெண்டெண்டு பதவி ஒன்றுக்கும் அனுமதிக்கப் பட்டது. புதிதாக உருவாக்கப்பட்ட அண்ணா மாவட்டத்திற்கு, மதுவிலக்கு செயற்பாட்டுப் பிரிவு ஒன்று புதிதாக அமைக்கப் பட்டது (3 மதுவிலக்கு ஆயத்தீர்வை பிரிவுகளுடன்) இதற்கு, இன்ஸ்பெக்டர்கள் 6 பேர், சப் இன்ஸ்பெக்டர்கள் 10 பேர், தலைமைக் காவலர்கள் 12 பேர், நிலை—1 காவலர்கள் 4 பேர், நிலை—2 காவலர்கள் 84 பேர், ஓட்டுநராக உள்ள காவலர்கள் 14 பேர், இளநிலை உதவியாளர் (முகாம்) 1, அலுவலக உதவி யாளர்கள் (B.G.S.) 8 பேர் ஆகியோருக்கும் இவற்றுடன் ஜீப்பு ஒன்று, ஆட்களை ஏற்றிச் செல்லும் வேன்கள் ஐந்து ஆகிய வற்றுக்கும் 1986 ஜனவரியில் அனுமதி அளிக்கப்பட்டது. இத்தகைய மதுவிலக்கு-செயற்பாட்டுப் பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் தொலைபேசி இணைப்பு வழங்கவும் அனுமதிக்கப்பட்டது.

**54.** இந்த நிதியாண்டில், தற்போதுள்ள மதுவிலக்கு செயற் பாட்டுப் பிரிவுகளுக்கு 35 தொலைபேசி இணைப்பு தரவும் அரசு அனுமதியளித்துள்ளது. எஞ்சியுள்ள மதுவிலக்கு செயற்பாட்டு பிரிவுகளுக்கு தொலைபேசி இணைப்பு தருவதற்கான செயற் குறிப்பு அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது. மதுவிலக்கு செயற்பாட்டுப் பிரிவுகளுக்கு பணியாளர் எண்ணிக்கையை வலுப் படுத்துதல், வாகன வசதிகளைப் பெருக்குதல், தகவல் தொடர்பு வசதிகள் செய்து தருதல் ஆகியவற்றின் மூலம் தமிழ்நாடு மது விலக்குச் சட்டத்தையும் அது தொடர்பான சட்டங்களையும் மேலும் திறமையாகச் செயல்படுத்த இயலும்.

55. 1982, 1983, 1984, 1985 மற்றும் 1986 ஆம் ஆண்டுகளில் கண்டறியப்பட்ட மதுவிலக்குக் குற்றங்கள், கைப்பற்றப்பட்ட வண்டிகளின் எண்ணிக்கை, கைப்பற்றப்பட்ட கள்ளக்கடத்தல் பொருட்களின் அளவு ஆகியவற்றின் விவரங்கள் வருமாறு:—

| தொடர் எண். | விவரங்கள். | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 (28-2-1988 வரை) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| (அ) | கண்டுபிடிக்கப் பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை .. | 76,735 | 93,645 | 71,260 | 87,801 | 10,989 |
| (ஆ) | கைப்பற்றப் பட்ட கள்ளச் சாராயத்தின் அளவு (லிட்டரில்) .. | 6,10,507 | 3,90,700 | 5,44,058 | 5,55,814 | 64,775 |
| (இ) | விணடிக்கப் பட்ட புளிக்க வைத்த வாஷின் அளவு (லிட்டர்களில்) .. | 91,88,518 | 83,83,429 | 83,43,458 | 85,05,050 | .. |
| (ஈ) | கைப்பற்றப் பட்ட இந்தியாவில் தயாரிக்கப் பட்ட அயல் நாட்டு மது வகைகளின் அளவு (புட்டிகளில்) | 36,083 | 6,652 | 3,485 | 3,939 | 90 |

(கைப்பட்டைகள்)



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| | | 16,840 | 9,052 | 1,258 | 1,044 | 354 |
| | | | (அரைப்புட்டிகள்) | | | |
| | | 48,866 | 14,971 | 4,980 | 9,609 | 1,376 |
| | | | (கால் புட்டிகள்) | | | |
| (உ) | கைப்பற்றப் பட்ட வண்டிகள் | | | | | |
| | கார் .. | 98 | 26 | 51 | 38 | 2 |
| | ஜீப்பு | 4 | 1 | 1 | 9 | 1 |
| | வேன் .. | 6 | 7 | 26 | 11 | 3 |
| | ஆட்டோரிக்ஷா | 11 | 21 | 14 | 30 | 4 |
| | லாரி .. | 9 | 2 | 4 | 14 | .. |
| | மோட்டார் சைக்கிள் .. | 7 | 6 | 7 | 9 | .. |
| | ஸ்கூட்டர் .. | 2 | 1 | 1 | 1 | .. |
| | படகு .. | 1 | .. | .. | .. | .. |
| | கூடுதல் | 138 | 64 | 104 | 109 | 14 |

86. 28—2—1986 வரை மதுவிலக்குச் செயல்முறை பிரிவு கண்டறிந்த வழக்குகளின் விவரங்கள் பின்வருமாறு:—

| தொடர் எண். (1) | விவரங்கள். (2) | 1980 (1-9-80 முதல் 31-12-80 வரை.) (3) | 1981 (4) | 1982 (5) | 1983 (6) | 1984 (7) | 1985 (8) | 1986 (1-1-86 முதல் 28-2-86 வரை) (9) | மொத்தம் (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | 20,845 | 59,293 | 76,735 | 93,645 | 71,260 | 87,801 | 10,989 | 4,20,568 |
| 2. | குற்றம் சாட்டப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை. | 18,376 | 43,385 | 41,990 | 25,789 | 35,349 | 16,522 | 455 | 1,81,866 |
| 3. | தண்டனை அளிக்கப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | 1,538 | 2,543 | 2,673 | 2,987 | 1,974 | 1,115 | 82 | 12,912 |
| 4. | விடுதலை அளிக்கப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | 3,332 | 5,574 | 5,588 | 3,797 | 1,751 | 245 | .. | 20,287 |
| 5. | திரும்பப் பெறப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | 11,277 | 27,967 | 17,285 | 8,080 | 295 | .. | .. | 64,904 |
| 6. | நீதிமன்ற விசாரணையிலுள்ள வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | 2,229 | 7,301 | 16,444 | 10,925 | 31,329 | 15,162 | 373 | 83,763 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7. | யூ.என். என்று கருதப்பட்டு, கைவிடப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | 2,469 | 14,901 | 33,260 | 64,614 | 14,877 | 17,539 | 1,448 | 1,49,108 |
| 8. | புலன் விசாரணையின் கீழ் உள்ள வழக்குகளின் மொத்த எண்ணிக்கை (1-3-86 நிலவரப்படி) | ... | 1,007 | 1,485 | 3,242 | 21,034 | 53,740 | 9,086 | 89,594 |

57. மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்களால் எடுத்துக் கொள்ளப்பட்ட அரசு சாராயத்தின் மொத்த அளவு (லிட்டர்களில்):—

| திங்கள் | எடுத்துக் கொள்ளப்பட்ட சாராயம் (லிட்டர்களில்). | | |
|---|---|---|---|
| | 1984. | 1985. | 1986. |
| ஜனவரி | 1,19,52,567 | 66,76,174 | 1,00,68,666 |
| பிப்ரவரி | 1,16,43,915 | 78,41,219 | 98,63,782 |
| மார்ச் | 1,22,60,433 | 95,49,936 | |
| ஏப்ரல் | 1,13,70,804 | 81,34,011 | |
| மே | 1,19,87,949 | 1,06,27,026 | |
| ஜூன் | 1,32,90,744 | 1,03,47,357 | |
| ஜூலை | 1,34,40,412 | 1,00,57,986 | |
| ஆகஸ்டு | 1,35,37,410 | 93,63,582 | |
| செப்டம்பர் | 1,30,27,287 | 95,48,253 | |
| அக்டோபர் | 67.54,697 | 1,03,38,553 | |
| நவம்பர் | 36,89,652 | 93,36,077 | |
| டிசம்பர் | 33,82,716 | 1,00,31,676 | |

58. 1984, 1985 மற்றும் 1986 ஆம் ஆண்டுகளில் மா நிலத்தில் விற்பனை செய்யப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளி நாட்டு மதுவகைகள்:—

| திங்கள். | 1984. | 1985. | 1986. |
|---|---|---|---|
| | (விற்பனை ரூபாய் இலட்சத்தில்.) | | |
| ஜனவரி | 541.05 | 869.77 | 941.17 |
| பிப்ரவரி | 505.52 | 776.51 | 707.61 |
| மார்ச் | 633.70 | 854.39 | |
| ஏப்ரல் | 618.49 | 894.34 | |
| மே | 624.40 | 988.70 | |
| ஜூன் | 632.36 | 872.78 | |
| ஜூலை | 703.56 | 881.41 | |
| ஆகஸ்டு | 678.97 | 887.82 | |
| செப்டம்பர் | 709.70 | 859.28 | |
| அக்டோபர் | 939.47 | 902.61 | |
| நவம்பர் | 1008.41 | 983.54 | |
| டிசம்பர் | 757.39 | 732.82 | |



59. மதுக்கஷாயம், ஜின்ஜர் பெரீஸ் ஆகியவை கைப்பற்றப்பட்டது குறித்த விவரங்கள்:—

| ஆண்டு | கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை. | | கைப்பற்றப்பட்டதன் அளவு. | |
|---|---|---|---|---|
| | மதுக்கஷாயம் | ஜின்ஜர் பெரீஸ் | மதுக்கஷாயம் | ஜின்ஜர் பெரீஸ் |
| 1984 | 334 வழக்குகள் | 279 வழக்குகள் | 10321 லிட்டர்கள் | 10969 லிட்டர்கள் |
| 1985 | 534 வழக்குகள் | 420 வழக்குகள் | 8233 லிட்டர்கள் | 1344 லிட்டர்கள் |
| 1986 (28–2–86 வரை) | 59 வழக்குகள் | 30 வழக்குகள் | 1116 லிட்டர்கள் | 66 லிட்டர்கள் |

60. 1984–85, 1985–86 ஆம் ஆண்டுகளில் (28–2–86 ம் நாள் வரை) கண்டுபிடிக்கப்பட்ட மதுவிலக்குக் குற்றங்கள் பற்றிய விவரங்கள்;—

| விவரங்கள் | 1–4–1984 முதல் 31–3–1985 வரை. | 1–4–1985 முதல் 31–12–1985 வரை. | 1–1–1986 முதல் 28–2–1986 வரை. |
|---|---|---|---|
| 1. ஏனைய மாநிலங்களிலிருந்து கடத்தப்பட்ட மதுவகைகள் | 1231 | 925 | 151 |
| 2. மாவட்டத்திலிருந்து மாவட்டத்திற்கு கடத்தப்பட்ட மது வகைகள் | 40 | 33 | .. |

| | விவரங்கள். | 1-4-1984 முதல் 31-3-1985 வரை. | 1-4-1985 முதல் 31-12-1985 வரை. | 1-1-1986 முதல் 28-2-1986 வரை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 3. | கள்ளச்சாராயம் காய்ச்சியது | 7,423 | 10,790 | 1,750 |
| 4. | எரிசாராயம் அல்லது கள்ள சாராயம் வைத்திருத்தல் | 12,245 | 8,084 | 1,114 |
| 5. | கள்ளச்சாராயம் அல்லது எரிசாராயம் விற்பனை செய்தல் | 14,980 | 11,722 | 2,078 |
| 6. | உரிமம் வைத்திராமல் கள் புளிக்க வைத்தல் | 2,978 | 3,670 | 950 |
| 7. | உரிமம் வைத்திராமல் பதநீரைப் புளிக்க வைத்தல் | — | — | ... |
| 8. | உரிமம் வைத்திராமல் பதநீர் இறக்குதல் | 18 | 1 | ... |
| 9. | கள்ளத்தனமாக மதுவை எடுத்துச் செல்லுதல் | 14,522 | 12,867 | 1,838 |
| 10. | உரிமம் இல்லாமல் மதுவை விற்பனை செய்தல் | 1,486 | 934 | 283 |
| 11. | உரிமம் இல்லாமல் மதுவை வைத்திருத்தல் | 2,837 | 2,442 | 687 |
| 12. | கஞ்சா போதை மருந்துச் செடிகளைப் பயிரிடுதல் | 5 | 3 | .. |
| 13. | மாவட்டத்திலிருந்து மாவட்டத்திற்கு போதை மருந்துப் பொருள்களை | | | |



| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 14. | போதை மருந்துப் பொருள்களைத் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லுதல் | 175 | 56 | .. |
| 15. | உரிமம் இல்லாமல் போதை மருந்துப் பொருள்களை விற்பனை செய்தல் | 33 | 23 | 4 |
| 16. | உரிமம் இல்லாமல் போதை மருந்துப் பொருள்களை வைத்திருத்தல் | 1,217 | 897 | 201 |
| 17. | பல்வகை குடிபோதை மதுவகைகள் | 327 | 272 | 8 |
| 18. | வீரியம் குறைக்கப்பட்ட சாராவியை அருந்தத் தகுந்ததாக்குதல் | 149 | 162 | 38 |
| 19. | அபினைக் கடத்துதல் | 18 | 3 | .. |
| 20. | அபினை எடுத்துச் செல்லுதல் | .. | .. | .. |
| 21. | அபினை வைத்திருத்தல் | 5 | 6 | 1 |
| 22. | அபினை விற்பனை செய்தல் | 1 | .. | .. |
| 23. | அபாயகரமான மருந்துப் பொருள்கள் சட்டத்தின் கீழ் குற்றங்கள் | 156 | .. | .. |
| 24. | ஏனைய இனங்கள் (பல்வகை) | 13,638 | 12,670 | 37 |
| | மொத்தம் .. | 73,484 | 65,560 | 9,140 |

61. கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், ஏனைய மதுவிலக்குக் குற்றவாளிகள் ஆகியோரின் நடவடிக்கைகளைத் திறமையாகத் தடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுவோர், மருந்துக் குற்றவாளிகள், குண்டர்கள், விபசாரக் குற்றவாளிகள், குடிசைப்பகுதி ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் கொடிய நடவடிக்கைகளை தடுக்க தடுப்புக்காவல் சட்டத்தை அரசு இயற்றியது. இச்சட்டத்தின் விதிமுறைகள் 5-2-82 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டு தீவிரமாக செயல்படுத்தியதன் விளைவாக 1982-ல் 62 நபர்கள், 1983-ல் 45 நபர்கள், 1984-ல் 87 நபர்கள், 1985-ல் 100 நபர்கள் மற்றும் 1986-ல் (28-2-1986 வரை) 12 நபர்களும் இச்சட்டத்தின்கீழ் கள்ளச்சாராய குற்றவாளிகளாக தடுப்புக்காவலில் வைக்கப் பட்டனர். இதனால் கள்ளச்சாராய தயாரிப்பு மற்றும் பிற மாநிலங்களிலிருந்து கள்ள மதுவகைகளை கடத்துதல் ஆகிய குற்றங்களை திறம்பட கட்டுப்படுத்த முடிந்தது.

இச்சட்டத்தின்கீழ் 28-2-86 வரை கைது செய்யப்பட்டு பல்வேறு குற்றங்களுக்காக தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட நபர்களின் விவரம் பின்வருமாறு:—

| | |
|---|---|
| கள்ளச்சாராயக்காரர்கள் | 306 |
| மருந்துச் சரக்கு குற்றவாளிகள் | 10 |
| குண்டர்கள் | 1,139 |
| விபசாரத் தொழில் குற்றம் புரிந்தவர்கள் | 5 |
| குடிசைப்பகுதி ஆக்கிரமிப்பாளர்கள் | 1 |



ஆயத் தீர்வை விகிதம்.

62. பல்வேறு வகையான மதுவகைகளின்மீது தற்போது நடைமுறையில் உள்ள ஆயத்தீர்வை விற்பனைக் கட்டண வீதங்கள் பற்றிய விவரம் வருமாறு:—

ஆயத் தீர்வை வீதங்களைக் காட்டும் விவர அட்டவணை:—

| தொடர் எண்ணும் விவரங்களும். | ஆயத்தீர்வை ரூ.பை. | விற்பனைக் கட்டணம். ரூ.பை. |
|---|---|---|
| 1. எரிசாராயம்: | | |
| (அ) சாதாரண விலை வீதம் | 8.00 (வரையறுத்த அளவிலான லிட்டர் ஒன்றுக்கு) | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ஆ) எரிசாராயத்தைப் பயன் படுத்தி உற்பத்தி செய்யப் பட்ட பொருட்கள் (சாராவி இல்லாமலிருந்தால்) | 0.10 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 0.25 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| 2. வீரியம் குறைந்த சாராவி: | | |
| (அ) சாதாரண விலை வீதம் | இல்லை. | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ஆ) வீரியம் குறைந்த சாராவி யைப் பயன்படுத்தி உற் பத்தி செய்யப்பட்ட பொருட்கள் (சாராவி குணம் இல்லாமலிருந்தால்) | இல்லை. | 0.25 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |

3. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் :

| | | |
|---|---|---|
| (அ) மாநிலத்திற்குள்ளேயே தயாரித்து விற்பனை செய்தல் :— | | |
| (i) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது வகைகள் | 25.50 (வரையறுத்த அளவிலான லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ii) பீர் | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 0.35 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ஆ) மொத்த விற்பனை உரிமதாரரின் இறக்குமதி மற்றும் விற்பனைக்கு:— | | |
| (i) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது வகைகள் | 25.00 (வரையறுத்த அளவிலான லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ii) பீர் | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 0.35 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (இ) கேன்டீன் ஸ்டோர் துறையின் இறக்குமதிக்காக :— | | |
| (i) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது வகைகள் | 25.00 (ப்ரூப் லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ii) ரம் | 2.75 (வரையறுத்த அளவிலான லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (iii) பீர் | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 0.35 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |



| | | |
|---|---|---|
| (ஈ) சென்னை, ஒருங்கிணைந்த உணவு சோதனைக் கூடத்தால் (ஏ.எஸ்.சி.) இறக்குமதி செய்து கொள்வதற்காக:— | | |
| ரம் மட்டும் | 6.00 (வரையறுத்த அளவிலான லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (உ) மொத்த விற்பனையாளர் செலுத்த வேண்டிய கூடுதல் விற்பனைக் கட்டணம்— | | |
| (i) ஆணையாளரால் வகைப்படுத்தப்பட்ட சாராவி, மதுவகை, திராட்சை மதுவகை 42 சதவீதம் புரூப் சாராவி அடங்கிய ஏனைய மதுவகைகள் | — | 5.50 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ii) ஏனைய எல்லா வகை ஒயின் | — | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (iii) பீர், சிடர் மற்றும் ஏனைய புளிக்க வைக்கப்பட்ட மதுவகைகள் | — | 2.10 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ஊ) வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஆயத்தீர்வை வீதம்— | | |
| (i) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது வகைகள் (ஒயின் உட்பட) | 0.45 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ii) பீர் | 0.10 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 0.05 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |

4. சாராயம் :

| | | |
|---|---|---|
| சாராயக் கலவை ஆலைகள் விற்பனை செய்யும் சாராயம். | 6.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு.) | .. |
| சில்லறை விற்பனையாளர்கள் செய்யும் விற்பனை. | .. | 11.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு.) |



63. 'ஆயத்தீர்வை வருவாய்' என்ற தலைப்பின்கீழ் கடந்த மூன்றாண்டுகளில், கிடைத்த வருவாய் வரவு பற்றிய விவரங்கள் கீழ்க்கண்ட விவர அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன :—

| வருவாய்த் தலைப்பு. (1) | 1983–84. (2) | 1984–85. (3) | 1985–86. (ஜனவரி 1986 வரை) (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. நாட்டுச்சாராவி (சாராயம்). | 14,640.37 | 13,494.88 | 12,339.29 |
| 2. புளிக்க வைக்கப்பட்ட நாட்டு மது (கள்) .. | 2,351.09 | 2,435.27 | 2,769.81 |
| 3. மால்ட் மது (பீர்) .. .. .. | 153.05 | 250.32 | 447.20 |
| 4. அயல்நாட்டு மதுவும் சாராவியும் .. .. | 2,014.29 | 3,273.82 | 3,202.13 |
| 5. வணிக மற்றும் வீரியம் குறைந்த சாராவி மற்றும் மருந்து கலந்த திராட்சை ரசங்கள் .. | 110.75 | 106.89 | 48.23 |
| 6. அபின், சாராவி முதலியவை அடங்கிய மருந்து மற்றும் ஒப்பனைத் தயாரிப்புப் பொருள்கள். | 215.22 | 195.59 | 178.16 |
| 7. அபின் மருந்து செடியும் ஏனைய மருந்துகளும் | 0.35 | 1.18 | 0.72 |
| 8. அபராதத் தொகைகள் மற்றும் பறிமுதல்கள் ... | 11.36 | 35.18 | 30.62 |
| 9. ஏனைய வருவாய்கள் ... .. ... | 2,632.44 | 403.79 | 163.97 |
| 10. பணியும், பணிக்கட்டணங்களும் .. .. | 1.11 | 16.87 | 1.16 |
| மொத்த வருவாய் வரவு .. | 22,129.93 | 20,213.79 | 19,181.29 |
| 1. திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகை (கழிக்கவும்) | 142.57 | 160.81 | 71.90 |
| 2. மொத்த விற்பனை வியாபாரத் தொகையினைக் கழிக்கவும் | 2,506.69 | 125.61 | .. |
| நிகர வருவாய் வரவு .. | 19,480.67 | 19,927.37 | 19,109.39 |

நிருவாக அமைப்பு:

64. மாநில மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறைத் தலைவரான மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை ஆணையாளர், தமிழ்நாடு 1937-ம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின்படியும், அதன்கீழ் இயற்றப்பட்ட பலவிதிகளின் படியும், அவற்றின் கீழ் வெளியிடப் பட்ட அறிவிக்கைகளின் படியும் அவரிடம் நிலைபெற்றுள்ள பல்வேறு அதிகாரங்களைச் செலுத்துகிறார்.

65. மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையாளரின், நிருவாக அலுவல்களில் தலைமையிடத்தில் நான்கு இணை ஆணை யாளர்கள் பணியாற்றுகின்றனர். அவர்களுக்கு இம்மாநிலம் முழு வதும் அதிகார வரம்பு உள்ளது. கணக்குப்பிரிவில், நிதித்துறை, அரசுத்துணைச் செயலர் பதவித் தரத்தில் நிதிக்கட்டுப்பாடு அதிகாரி ஒருவரும் உள்ளார். இணை ஆணையாளர்கள் இருவர் இந்திய ஆட்சிப்பணியைச் சேர்ந்தவராவர். ஏனையோர் மாவட்ட வருவாய் அதிகாரிகளின் பதவித் தரத்தைச் சேர்ந்த வர்களாவர். அவர்கள் வடிசாலைகள், சாராயக்கலவை ஆலைகள், சாராய மொத்த விற்பனை நிலையங்கள், ஆயத்தீர்வைக்குட் பட்ட பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்பிரிவுகள், இந்தியா வில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் மொத்த விற்பனை நிலையங்கள் ஆகியவற்றை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்கின்றனர்.

66. மாவட்ட அளவில், மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறையின் நிருவாகம், மாவட்ட ஆட்சித்தலைவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. மாவட்டங்களில் ஆயத்தீர்வை உதவி ஆணையாளர்கள் 29பேர் உள்ளனர். அதாவது 19 மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொருவரும், சென்னை, வடாற்காடு, தென்னாற்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, சேலம், பெரியார் ஆகிய 10 மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் கூடுதலாக ஓர் உதவி ஆணையாளரும் உள்ளனர். அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர்களின் கட்டுப் பாட்டின் கீழ் உள்ளனர். அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலமாக மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை ஆணையாளருக்குக் கட்டுப்பட்டவர்களாவர்.

67. வட்ட அளவில், வட்டாட்சியர் பதவித் தரத்தில் வட்ட ஆயத்தீர்வை அதிகாரி ஒருவரும், ஆயத்தீர்வை ஆய்வாளர்கள் இருவரும் துணைப் பணியாளர்களும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் பணிகளைச் செய்து வருகின்றனர்.

68. கள்ளத்தனமாக மதுவகைகளை கொண்டு செல்லும் நடைமுறையைத் தடுக்கும் பொருட்டு பிரிவுகள் ஒவ்வொன்றிலும் மாவட்ட துணை ஆட்சித் தலைவர் ஒருவர், இரு வட்டாட்சி யர்கள், இரு இளநிலை உதவியாளர்கள், வேன் ஓட்டுநர் ஒருவர் ஆகிய பணியாளர்களைக் கொண்டு இயங்கி வந்த எட்டு



பறக்கும் படைப் பிரிவுகள் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறையில் பொதுவான மேற்பார்வை நிருவாக பணிக்காக 1-10-1984 முதற் கொண்டு சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். உரிமதாரர்களை அடிக்கடி மேற்பார்வையிடவும், கட்டுப்பாட்டின்கீழ் வைக்கும் நோக்குடனும் இவர்கள் அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

69. இணை ஆணையாளர்களுக்கு, அவர்களுடைய பணிகளில் வடிசாலை அதிகாரிகளும், கலவை தொழிற்பிரிவுகளைச் சேர்ந்த அதிகாரிகளும், ஆயத்தீர்வைக்குட்பட்ட பொருட்களைத் தயாரிக் கும் தொழிற்பிரிவுகளின் அதிகாரிகளும், ஆயத்தீர்வை மேற் பார்வை அதிகாரிகளும், வடிசாலை அதிகாரிகளும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் தயாரிக்கும் நிலையங் களின் ஆயத்தீர்வை மேற்பார்வை அதிகாரிகளும் உதவி புரிகின்றனர். இவர்கள் மாவட்டத் துணை ஆட்சித்தலைவர் பதவித் தரத்திலுள்ள அதிகாரிகளாவர். வருவாய் ஆய்வாளர் களின் பதவித் தரத்திலுள்ள ஆயத்தீர்வை போக்குவரத்து ஆய்வாளர்கள், காவலர் ஒருவர் ஆகியோரின் துணையோடு கலவை ஆலைகளுக்கு எரிசாரயம் எடுத்துச் செல்லப்படுகிறது,

## இணைப்பு II

(46-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

**கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் 1986–87-க்கான கொள்கையும் திட்டங்களும்.**

தொடக்கவுரை:

கைத்தறி தொழிலானது மிகவும் தொன்மை வாய்ந்ததும், தொழிலாளர்கள் பலர் ஈடுபட்டுள்ளதும், வேலை வாய்ப்பு அளிப்பதில் வேளாண்மைக்கு அடுத்த படியான இடத்தை வகித்து வருகிறது. இருப்பினும் இத்தொழிலானது பஞ்சாலைகள், விசைத் தறிகள் ஆகியவற்றுடன் போட்டி போட்டுக்கொண்டு இயங்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளது. இம்மூன்று பிரிவுகள் (அதாவது கைத்தறி, பஞ்சாலை மற்றும் விசைத்தறி) ஒன்றுடன் ஒன்று இணைந்து ஒன்றின் தேவையைப் பிறிதொன்று பூர்த்தி செய்யும் வகையில் செயல்படுவதற்கும் தேவையற்ற போட்டியைத் தவிர்ப் பதற்கும் இம்மூன்று துறைகளின் நடவடிக்கைகளையும் வகைப் படுத்த அரசு முயற்சி எடுத்து வருகிறது.

2. கைத்தறி தயாரிப்பு பொருள்களுக்கு இலட்சக்கணக் கான வாடிக்கையாளர்கள் உள்ளனர். உண்மையைக் கூறின் நம் நாட்டில் மட்டும் அல்லாது வெளிநாட்டிலும் கூட கையினால் தயாரிக்கப்பட்ட பருத்தி, நூலிழை, பட்டு ஆகியவற்றாலான கைத்தறித் தயாரிப்புப் பொருட்களின் தேவை உயர்ந்துள்ளது.

3. நம் மாநிலத்தில் குறிப்பாக ஊரக பகுதிகளில் இத் தொழில் நன்கு வளர்ச்சியடைந்து உள்ளது. கைத்தறி தொழில் இயங்குவதற்கு தேவையான அளவு இயல்பான ஆதரவையும், விற்பனை வசதியினையும் கொண்டுள்ளது. இருப்பினும் பஞ்சாலை விசைத்தறி துறைகளின் தேவையற்ற போட்டியிலிருந்தும் அவற்றின் ஆதிக்கத்திலிருந்தும் அதனை காப்பாற்றுவதற்கு இன்னும் இந்திய அரசின் ஆதரவும், தமிழ்நாடு அரசின் ஆதரவும் அவசியமாகிறது.

4. அடிப்படை வசதி, மூலப் பொருட்கள் வழங்கல், உற்பத்தி விற்பனை ஆகிய வசதிகள் அடங்கிய ஒருங்கிணைந்த அணுகுமுறை ஒன்றை புதிய இருபது அம்சத் திட்டம் கைத்தறித் துறையின் வளர்ச்சிக்கு வகை செய்கிறது.

5. இம்மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்குதல் உறுதியான வருமானம் கிடைக்கச் செய்தல் ஆகிய இரண்டு முக்கிய நோக்கங்களுடன் கீழ்க்காணும் கைத்தறி வளர்ச்சித் திட்டங்களை அரசு செயல் படுத்தி வருகின்றது:—

(1) நெசவாளர்கள், தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பங்கேற்பதற்காக, அவர்களுக்கு நிதியுதவி வழங்கு வதன் மூலம் கூட்டுறவு அமைப்பின்கீழ் கைத்தறிகளை அதிக அளவுக்குக் கொண்டு வருதல்.



(2) தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை வளர்க்க அவற்றிற்கு விற்பனை வசதியுடன் நிதியுதவி வழங்குதல்.

(3) இம்மாநிலத்திலுள்ள தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தலைமை நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆகிய வற்றிற்கு போதிய விற்பனை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அவற்றின் பங்கு மூலதனத்தை வலுப்படுத்தல்.

(4) கூட்டுறவுத் துறையின்கீழ் வருகின்ற கைத்தறி நெசவாளர்களுக்கு நியாய விலைகளில் நூலிழை (கையினால் தயாரிக்கப்பட்ட நூலிழை உட்பட) பட்டு, நார்ப்பட்டு, பாலியஸ்டர், ஜரிகை, சாயம், இரசாயனப் பொருட்கள் போன்ற இன்றியமையா இடுபொருட்களை வழங்குதல்.

(5) உற்பத்தி மேம்பாடு தொழில் நுட்ப உத்திகளைத் தரம் உயர்த்துவதன் மூலம் அவற்றைப் பலமுறைப் படுத்துதல், வடிவமைப்பு நிலையங்கள் ஏற்படுத்துதல், நவீன முறையில் நெசவாளர்களுக்கு பயிற்சி அளித்தல் ஆகிய திட்டங்களைச் செயற்படுத்தல்.

(6) பருத்தி நூலிழைகளாலான துணிகளையும் செயற்கை நூலிழைகளாலான துணிகளையும் பதப்படுத்த வசதிகள் செய்து கொடுத்தல்.

(7) நம் நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொடுப்பதற்காக கைத்தறி துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைப் பெருக்குதல்.

(8) "கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு— காப்புறுதித் திட்டம்". "நெசவாளர்கள் வீட்டுவசதித் திட்டம்" போன்ற நலத் திட்டங்களைச் செயற்படுத்தல்.

இம்மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களின் நன்மைக்காக திட்டங்கள் வருமாறு:

**கூட்டுறவு அமைப்பின்கீழ் கைத்தறிகளை அதிக அளவு கொண்டு வருதல்**

6. கைத்தறி நெசவாளர்களைச் சுரண்டாமல் பாதுகாக்கத் தக்க நிருவாக அமைப்பை உருவாக்க வேண்டிய அவசியத்தை கைத்தறித் துறைக்கான வளர்ச்சித் திட்டங்கள் வலியுறுத்து கின்றன. கடந்த பத்தாண்டுகளிலும் அதற்கு மேற்பட்ட கால அளவிலும் நாம் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் கூட்டுறவு அமைப்பின்கீழ் கைத்தறிகளை அதிக அளவுக்குக் கொண்டு வருவது தான் அதற்கான தீர்வு என்பதை நாம் உணர்ந்துள்ளோம். (நம் மாநிலத்திலுள்ள 5.56 இலட்சம் கைத்தறிகளில் 31-12-1985 வரையில் 3.82 இலட்சம் கைத்தறிகள் 1,600 தொடக்க நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களாக அமைக்கப்பட்டுள்ளன.) 1985–86-ல் மொத்தம் 20,000 கைத்தறி நெசவாளர்களை கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவர திட்டமிட்டுள்ளது. தற்போதுள்ள தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்தவும் உத்தேசிக்கப்பட் டுள்ளது. இதற்காக 1986–87-ல் "நெசவாளர் கூட்டுறவுச்

சங்கங்களுக்கு அரசின் பங்கு மூலதன உதவி'' என்னும் திட்டத் திற்காக ரூ. 30·00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (1985–86-ல் உற்பத்தியை 175 மில்லியன் மீட்டர்களுக்கு உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.)

கைத்தறி நெசவாளர்களுக்குக் கடன் பிடியிலிருந்து விடுவிக்கும் திட்டம்.

7. நெசவாளர்கள், தாங்கள் ஏற்கெனவே பெற்ற கடன் தொகையை திருப்பிக் கொடுத்து மாஸ்டர் வீவர்களின் பிடியி லிருந்து விலகி தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சேருவதற்காக, தேசி யமயமாக்கப்பட்ட வங்கிகள் குறைந்த வட்டி வீதத் திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்கு நான்கு சதவீத வட்டியில் தேவையான நிதியுதவி வழங்கி வருகின்றன. இது வரையில், ரூ. 10.70 இலட்சம் அளவுக்குக் கடன் உதவி வழங்கி 1,433 கைத்தறி நெசவாளர்கள் கொத்தடிமை தளையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும் 7,199 கைத்தறி நெசவாளர் களை அவ்வாறு விடுவிக்க வேண்டி இத்திட்டத்தின் கீழ் ரூ. 40 இலட்சம் அளவுக்கு நிதியுதவி வழங்க வங்கிகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை அடிப்படையில் நிதி உதவி வழங்குதல்.

8. வங்கி வட்டி வீதத்தைக் காட்டிலும் 2½ சதவீதம் குறைவாக கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சலுகை அடிப்படையில் நிதியுதவி வழங்கும் தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கித் திட்டம் ''நபார்டு'' (NABARD) 1985–86 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது.

கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தலைமை கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றுக்கு இந்திய ரிசர்வ் வங்கி 1984–85, 1985–86 ஆம் ஆண்டுகளில் வழங்கிய மொத்தக் கடன் உதவி பற்றிய விவரங் களும் 1986–87-ம் ஆண்டிற்கு ,நபார்டு-க்கு பரிந்துரை செய்யப் பட்ட கடன் தொகை பற்றிய விவரங்களும் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

| | 1984–85 | 1985–86 | 1986–87 |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்.) | | |
| தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள். | 56.25 | 67.04 | 90.42 |
| | | | (நபார்டுக்கு பரிந்துரைக்கப்படுகிறது.) |
| தலைமை கூட்டுறவுச் சங்கம். | 50.00+ 20.00 | 50.00+ 20.00 | 60.00+ 20.00 |
| | | (பண்டிகை காலங்களில்) | |



சங்கங்களுக்கும்
9. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் தலைமைச் சங்கத்திற்கும் 7,5 சதவீத வட்டி வீதத்தில் 'நபார்டு' நிதியுதவி வழங்க வழக்கப்படி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு மூன்று சதவீத வட்டியினை வட்டி மானியமாகவும் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கிக்கு ஒரு சதவீத வட்டியை வட்டி மானியமாகவும் அரசு வழங்கும். 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 250 இலட்சம் செலவு செய்ய ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் 1986-87 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப் படும்.

10. மத்திய கூட்டுறவு வங்கிகள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கிய நடைமுறை மூலதனக் கடன் தொகையில் வசூல் ஆகாமல் நிலுவையிலுள்ள தொகைக்கு அரசு 90 சதவீத அளவிற்கு மானியம் வழங்குகிறது. மீதமுள்ள 10 சதவீத தொகையைச் சம்பந்தப்பட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளே ஏற்றுக்கொள்கின்றன. இதற்காக 1986-87-ல் ரூ. 1.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

II. கைத்தறி தொழில் நுட்பத்தினை மேம்படுத்தும் திட்டம்.

நுகர்வோர்
வேகமாக மாறிவரும் நாகரீகத்திற்கும், விருப்பங்களை ஒட்டியும் உள்நாடு மற்றும் வெளி நாட்டுச் சந்தைகளில் வேண்டப்படும் புதிய ரக கைத்தறி துணிகள் உற்பத்தி செய்வதற்கு கைத்தறி தொழிலில் நவீன யுக்திகள் கையாளப்பட வேண்டும். இது புதிய ஜவுளி கொள்கையில் மிகவும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

இதற்காக கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தங்களுடைய தறிகளைப் புதுப்பித்துக் கொள்ள நவீனபடுத்திக் கொள்ள அல்லது புதிய நவீன தறிகளைப் புதுப்பித்துக்கொள்ள/ நவீனப்படுத்திக்கொள்ள அல்லது புதிய தறிகளை வாங்கிக்கொள்ள ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. மேற்சொன்ன திட்டத்திற்காக 1985–86-ல் ரூ. 21 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 1986-87-ல் ரூ. 21 இலட்சம் செலவிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தவிர மத்திய உதவியாக தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) மாநில மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகளின் மூலமாக தறிகளை நவீனப்படுத்து வதற்காக, ஒவ்வொரு தறிக்கும், ரூ. 7,500 வரை நிதி உதவி செய்ய முன் வந்துள்ளது. மைய அரசு 1986-87–ம் ஆண்டை கைத்தறிகளை நவீனப்படுத்தும் ஆண்டாக அறிவித்துள்ளது. ஆகவே வருங்காலத்தில் இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

[1986 ஏப்ரல் 4

## சென்னையில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் துறை.

12. தமிழ்நாடு கைத்தறிகளின் கோட்டையாக விளங்குகிறது ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 170 கோடி மதிப்புள்ள கைத்தறி துணிகள் நம் மாநிலத்தில் உற்பத்தியாகிறது. மேலும் அவ்வப் போது கைத்தறி துணிகள் தேக்க நிலை ஏற்படுவது நம் மாநிலத்தில் விசித்திரமான ஒன்றாகும். எனவே விசைத்தறியில் சுலபமாகத் தயாரிக்க இயலாத புதிய வடிவமைப்புகள் கொண்ட ரகங்களை உற்பத்தி செய்ய புதிய கருவிகளை கண்டுபிடிப் பதற்கென, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித்துறை நிறுவ வேண்டியது அவசியமாகும்.

13. சென்னையிலுள்ள ரெனக்ஸ் எக்ஸ்போர்ட்டை சேர்ந்த வர்கள் கைத்தறியில், மேலே குறுகலானதும், மெலிதானதுமான நாலிழைகளைக் கொண்டதும் கீழ் பக்கத்தில் தடிமனான நூல் வேலைகளுடன் கூடிய பாவாடை தைக்கும் விதமாக ஒரு கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது ஒரு சிறந்த கண்டு பிடிப்பு என்றும் ஜப்பானியர்களும், அமெரிக்கர்களும் பாராட்டி யுள்ளனர். இதைப்போலவே பட்டுச் சேலைகளில் 'கோபுர பார்டர்கள்' போட வேண்டுமானால் அதற்கு மூன்று பேர் களுடைய உழைப்பு தேவைப்படும். தற்பொழுது இன்னொரு தமிழர் கைத்தறியில் ஒரு புதிய கருவியைக் கையாளுவதன் மூலம். ஒரு ஆணோ அல்லது ஒரு பெண்ணோ கோபுரப் பார்டர் போன்ற கடினமான பார்டர் இரகங்களை உடைய சேலையை தயாரிக்கலாம் என்று கண்டுபிடித்துள்ளார். இக்கண்டுபிடிப்பு களுக்கு எம்.ஜி.ஆர். கைத்தறி வளர்ச்சி மற்றும் நல்வாழ்வுக்கான அறக்கட்டளைச் சார்பாக கோப்பைகளும், கேடயங்களும் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள். ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் துறையை நிறுவுவதற்கு சென்னை தான் சரியான இடமென கருதப்படுகிறது. இது தொடர்பாக இந்திய அரசை வலியுறுத்தப் படும்.

## கைத்தறியில் உற்பத்தியாகும் (அசல்) சென்னை கைக்குட்டைகள் உற்பத்தி.

(அசல்) சென்னை கைக்குட்டை உற்பத்தி 100% ஏற்றுமதி இரக உற்பத்தியாகும். இது நைஜீரிய மக்களால் தேசிய உடையாக அணியப்படும் ஒன்றாகும். இந்த உற்பத்தி மத்திய அரசால் பாதுகாக்கப்படவேண்டிய ஒன்றாகும். இராணுவ ஆட்சியினால் விதிக்கப்பட்ட தடை காரணமாக மிக அரிதான இந்த கைத்தறி துணி உற்பத்தி கஷ்டத்திற்குள்ளாகி இருக்கிறது. பிரிஷிப்மென்ட் கிரடிட் மீதான அபராத நஷ்டத்தை தள்ளுபடி செய்யவும் கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்ய இதர சலுகைகளும் கொடுக்க இந்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தி வருகிறது.



1986 ஏப்ரல் 4]

## கைத்தறி வளர்ச்சித் திட்டங்கட்கு நிதிஉதவி அளித்தல்.

14. தமிழக அரசு மற்றும் மத்திய அரசின் நிதி உதவிகளைக் கொண்டு காஞ்சிபுரம், ஈரோடு, சேலம் மற்றும் மதுரை ஆகிய நான்கு இடங்களில் கைத்தறி கூட்டுறவு தீவிர வளர்ச்சித் திட்டங்களும், கரூர் மற்றும் குறிஞ்சிப்பாடி ஆகிய இரண்டு இடங்களில் கைத்தறி கூட்டுறவு ஏற்றுமதி உற்பத்தித் திட்டங் களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட திட்டங்கள் இது வரை மொத்தம் 18,350 தறிகளுடன் இயங்கிவருகிறது. இத் திட்டங்கள் 31–12-85 முடிய ரூ. 512 இலட்சம் மதிப்புள்ள 62.01 இலட்சம் மீட்டர் துணிகளை உற்பத்தி செய்து ரூ. 593.40 இலட்சம் மதிப்புள்ள துணிகளை விற்பனை செய்துள்ளது. இவ்வளர்ச்சித் திட்டங்கள் சில நலிந்த மற்றும் செயலிழந்த நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை எடுத்துக்கொண்டும் அதிலுள்ள நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பினையும் அளித்து வருகிறது.

## கச்சாப் பொருட்கள் வழங்குதல் கூட்டுறவு நூற்பாலைகள் :

15. தமிழ்நாட்டில் ''மிசேரியர் கூட்டுறவு நூற்பாலையும் சேர்த்து மொத்தம் 18 கூட்டுறவு நூற்பாலைகள் 4.50 இலட்சம் கதிர்களைக் கொண்டு தோராயமாக 16.5 இலட்சம கிலோ பருத்தி நூல்களை உற்பத்தி செய்கின்றன. இதில் மாத உற்பத்தி 10,000 முதல் 12,000 (பேல்கள்) வரை ''சிட்டா நூல்'' (Hank Yarn) மீதமுள்ள ''கோன்'' வகை நூல்களும் (Cone Y rn) ஆகும். மேற் கண்ட உற்பத்தியில் 4,500 முதல் 6,000 (பேல்கள்) வரை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பிரதிமாதமும் தேவைப் படுகிறது. கூட்டுறவின் கீழ் உள்ள நெசவாளர்களுக்கு தேவை யான நூல்களை விட அதிக அளவிற்கு கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்து வருகின்றன. பொதுவாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 50% மேலாக மோட்டா ரக நூல் (C rse Count Yarn) தேவைப்படுகிறது. கூட்டுறவு நூற்பாலைகள் தேவைக்கு அதிகமான நூல்களை உற்பத்தி செய்தும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவைக்கேற்ப மோட்டா ரக நூலை உற்பத்தி செய்ய முடியவில்லை. எனவே தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள எம்.ஜி.ஆர். தீவுக்கருகே உள்ள கிள்ளை என்ற இடத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண்டபம் என்ற இடத்திலும் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பாப்பாரப்பட்டி என்ற இடத்திலும் மூன்று கூட்டுறவு நூற்பாலைகள் நிறுவுவதற்கு கைத்தறி இயக்கத்திலிருந்து பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. இதனால் தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் மக்கள், இலங்கை அகதிகள் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினரும் பெண்கள் ஆகியோரும் வேலைவாய்ப்பு பெற்று பயனடைவார்கள். கூட்டுறவு நூற்பாலைகளை நிர்வகிப்பதில் மூலப்பொருள் வாங்குவது (பஞ்சு) முக்கியமான ஒன்றாகையால் எல்லா நூற்பாலைகட்கும் தேவையான பஞ்சு வாங்குவதற்கு ஒரு பொதுவான முகவரை நியமித்து உரிய காலத்தில் கூட்டுறவு நூற்பாலைகட்கு பஞ்சினை வழங்கவும் அதன் மூலம் பஞ்சின் விலையை நிலைப்படுத்தி தரமான பஞ்சை விநியோகிக்க அரசு பரிசீலனை செய்து வருகிறது.

16. இவ்வாண்டில் தனியார் பிரிவில் உள்ளீடுகள் விநியோகத்தை குறித்து பெரும் பிரச்சனைகள் ஏதும் எழவில்லை. இது குறித்து ஒரு குழு உள்ளீடு விநியோகத்தைக் கண்காணித்து வருகிறது.

**கைத்தறி தொழிலுக்கு விற்பனை வசதியளித்தல்.**

17. கோ—ஆப்டெக்ஸ் என்ற புகழ்பெற்ற நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைச் சங்கம் அதனுடன் இணைக்கப் பட்டுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விற்பனை வசதியை அளித்து வருகிறது. தற்போது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் துணிகளில் 50% கொள்முதல் செய்துவருகிறது. கோ—ஆப்டெக்ஸ் 1985-86 ஆம் ஆண்டில் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து ரூ. 75 கோடி மதிப்புள்ள கைத்தறி துணிகளையும் 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 85 கோடி மதிப்புள்ள கைத்தறி துணிகளையும் கொள்முதல் செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டிற்கான கைத்தறி துணி விற்பனை ரூ. 102 கோடியாகும். 1986—87 ஆம் ஆண்டு கோ—ஆப்டெக்ஸின் கைத்தறி துணி விற்பனை ரூ. 110 கோடியாக இருக்கும். கோ—ஆப்டெக்ஸ் 570 கிளை விற்பனை நிலையங்களை நிர்வகித்து வருகிறது.

**ஜனதா துணித் திட்டம் :**

18. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் கட்டுப்பாடு துணிகள் உற்பத்தியினை கைத்தறி பிரிவிற்கு மாற்றுவது என்பது மத்திய அரசின் புதிய துணி நூல் கொள்கையின் (பாலிசி) ஒரு அம்சமாகும். இம்மாநிலத்தில் சுமார் 35,000 கைத்தறி தறிகள் மூலம் ஜனதா ரகத் துணிகளான கைத்தறி வேட்டிகள், லுங்கிகள் மற்றும் சேலைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 1985-86 மற்றும் 1986-87 ஆம் ஆண்டிற்கான ஜனதா துணிகள் உற்பத்திக்கான குறியீடு முறையே 45.00 மில்லியன் ஸ்கொயர் மீட்டர் மற்றும் 55.00 மில்லியன் ஸ்கொயர் மீட்டர் துணிகளாகும். ஜனதா துணி ரகங்களின் தரத்தை உயர்த்தவென நெசவாளர் சேவை மையத்தின் உதவியுடன் புதிய வடிவமைப்புக் கொண்ட கவர்ச்சிகரமான ரகங்களை உற்பத்தி செய்ய திட்டமிடப் பட்டுள்ளது. மேலும் அதிக விலையுள்ள கைத்தறி ரகங்களை உற்பத்தி செய்யும் கைத்தறிகளில் ஜனதா ரகத்தைப் புகுத்தாமல் செயலற்ற மற்றும் திறன் குறைவுள்ள கைத்தறிகளில் ஜனதா ரகங்களை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

19. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஜனதா ரகங்களுக்கு கொடுக்கப்படும் மான்யத் தொகையை இதர வகை கைத்தறி ரகங்களுக்கு மாற்றிக் கொடுக்கலாம். ஜனதா ரகம் மற்றும் கட்டுப் பாடு ரகங்களை உற்பத்தி செய்துதான் ஆகவேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்றாலும் ஜனதா ரகம் மற்றும் மூலப் பொருளான பருத்திநூல் ஆகியவற்றிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள





விலையின் காரணமாக ஜனதா ரகங்கள் நெய்வதற்கு கொடுக்கப் படும் கூலி அரசின் குறைந்த பட்ச கூலிச் சட்டத்தில் நிர்ணயிக்கப் பட்டுள்ள கூலியை விடக் குறைவாக உள்ளது. பண்டிகைக் கால விற்பனையைத் தவிர இதர காலங்களில் தொடர்ந்து ரூ. 84 கோடி மதிப்புள்ள ஆறு மாதத்திய உற்பத்தி பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் கோ—ஆப்டெக்ஸிலும் தேக்கமாவது வழக்கமான படியால் நூல் வாங்குவதற்கான பணம் கிடைப்பதில் சிரமம் ஏற்படுகிறது.

**கடன் விற்பனைத் திட்டம் :**

20. அரசு ஊழியர்கள் மற்றும் உள்ளாட்சித்துறை ஊழியர் களுக்கு கைத்தறி துணிகளை கடனில் வழங்கும் திட்டம் தொடர்ந்து கோ-ஆப்டெக்ஸினால் அமுல் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு மிகுந்த ஆதரவு கிடைத்து வருகிறது. 1985–86 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 26.55 கோத் மதிப்புள்ள கைத்தறி துணிகள் விற்பனை செய்யப்பட்டது. இத திட்டத்தை மத்திய அரசு ஊழியர்களுக்கும் விரிவுபடுத்த குறைந்தபட்சம் தமிழ்நாடு அளவிலாவது விரிவுபடுத்த வேண்டும் என்று இந்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது. அவ்வாறான கோரிக்கை ஏற்கப்பட்டால் உள்நாட்டில் கைத்தறி துணிகள் உபயோகிப் பவரின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**கோ—ஆப்டெக்ஸின் ஏற்றுமதி :**

21. கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல் என்ற தனி ஏற்றுமதி பிரிவை ஏற்படுத்தியதால் கைத்தறி துணிகளின் ஏற்றுமதி கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வருகிறது. 1985-86 ஆம் ஆண்டிற்கு கைத்தறி துணிகளின் ஏற்றுமதிக் குறியீடு ரூ. 2 கோடி என்பது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசில் பணிபுரியும் பாதுகாப்புத் துறை ஊழியர்களுக்குத் தேவைப்படும் துணி வகைகளில் 25 சதவீதம் முதல் 50 சதவீதமாவது நெசவாளர் கூட்டுறவு அமைப்பின் கீழ் உற்பத்தியாகும் கைத்தறி துணிகளை வாங்க வேண்டும் என்று இந்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி வருகிறது. மத்திய அரசு இக்கோரிக்கையை ஏற்குமானால் தமிழகத்தில் கைத்தறி துணி தேக்கம் என்ற பிரச்னை ஓரளவிற்கு குறையும்.

**கைத்தறி துணிகள் ஏற்றுமதி :**

22. தமிழகத்தில் அதிகமாக உற்பத்தியாகும் கைத்தறி துணி களாகவும் தயாரித்த ஆடைகளாகவும் ஏற்றுமதி செய்வதே அவற்றின் விற்பனையை வளப்படுத்த உதவும். 1984-85 ஆம் ஆண்டில் தனியார் ஏற்றுமதியாளர்கள் சுமார் ரூ. 78.68 கோடி மதிப்புள்ள துணிகளை கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் ஏற்றுமதி செய்துள்ளார்கள். கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியாளர்கள் மற்றும் முதன்மை ஏற்றுமதியாளர்களுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு

ஏற்படுத்தும் பொருட்டும், ஏற்றுமதியாளர்களின் தேவைக்கேற்ப நவீன வகைகளில் தரமுள்ள துணிகளை குறித்த காலத்தில் உற்பத்தியாளர்கள் வழங்கும் பொருட்டும் கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்திக் கழகத்தின் உதவியுடன் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்கள் 12-3-1986 அன்று முதன்முறையாக ஒரு கூட்டத்தைக் கூட்டினார்.

**ஜவுளி ஏற்றுமதி.**

23. நமது மாநிலத்திலுள்ள திருப்பூரில் மட்டும் சுமார் ரூ. 50 கோடி மதிப்புள்ள ஏற்றுமதி வகை பனியன் துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவ்வகை துணிகளின் உற்பத்தியை பெருக்குவதற்காகவும் ஊக்குவிப்பதற்காகவும் அரசு திட்டமிட்டு அதற்காகவே முதல் கட்டமாக கோவை, திருப்பூரில் தொழிலியல் பயிற்சி ஒன்றை ஏற்படுத்தவுள்ளது.

**ஏற்றுமதி மேம்பாட்டுக் கருத்துரு.**

24. சென்னையிலும் கோவையிலும் நேரடி விமான சரக்குப் போக்குவரத்து வசதிகள் கூடுதலாக்கப்படவேண்டும். சென்னை விமான நிலையம் பன்னாட்டு விமான நிலையமாகவும் தடையில்லா வாணிப மையத்தை இதனருகில் விரைவில் அமைக்கப்படும் நிலையிலிருந்தாலும், இங்கு அடிப்படை வசதிகளான பளுதூக்கி (NOSELOADERS) உயரும் போர்க் (HIGH LEVEL FORK) பெரிய சரக்கு ஏற்றும் கருவி போன்றவை இல்லை. மேலும் சென்னையிலிருந்து பாங்காக், ஜப்பான் மற்றும் அரபு நாடுகளுக்கு நேரடி விமானப் போக்குவரத்து வசதி இருக்க வேண்டும். சென்னையில் நுழைவு வாயில் வசதிகள். போக்குவரத்துக்கு ஏற்ற வசதிகள், நட்சத்திர ஓட்டல்கள் வசதிகள் உள்ளன. பம்பாய் மற்றும் சென்னைக்கிடையே உள்ள மண்டல வேறுபாடுகளைப் போக்க இந்திய அரசு தேவையான கவனம் செலுத்துவதன் மூலம் சென்னையிலிருந்து கைத்தறி துணிகள், ஆடைகள், பனியன்கள் போன்றவற்றின் ஏற்றுமதியை அதிகப் படுத்தமுடியும்.

**கோ-ஆப்டெக்ஸின் பங்கு மூலதனத்தை அதிகரித்தல்.**

25. கோ—ஆப்டெக்ஸின் பங்கு மூலதனம் ரூ. 17.5 கோடி. இதில் அரசின் பங்கு ரூ. 16 கோடி ஆகும். இதன் கடன் வாங்கும் திறனை அதிகரிக்கும் பொருட்டு மத்திய மாநில அரசுகள் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் ரூ. 2.5 கோடி அளவிற்கு இங்கு மூலதன உதவி 31-3-1986-க்குள் செய்ய இருக்கிறது. இதன் மூலம் கோ—ஆப்டெக்ஸ் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உற்பத்திக்கு அதிக விற்பனை வசதி செய்து கொடுக்க இயலும்.



கோ—ஆப்டெக்ஸ் நிதிப்பற்றாக்குறை காரணமாக, தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கொள் முதல் செய்த துணிகளுக்கு நிலுவை பாக்கியை கொடுக்க முடியாமையினால் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் நூல் வாங்க முடியாமலும் அவற்றின் உறுப்பினர்கட்கு தொடர்ந்து வேலை கொடுக்க முடியாமலும் உள்ளது. கூட்டுறவு நூற் பாலைகள் தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கடனில் நூல் கொடுக்க முன்வந்தாலும் நாபார்டு அவ்வித ''கடன் வியாபாரத்தை'' நடத்த அனுமதி தர மறுக்கிறது. இதற்கு நிவாரணம் காண இந்திய அரசிடம் 50:50 என்ற விகிதத்தில் ரூ. 25 முதல் 50 கோடி வரை கோ-ஆப்டெக்சுக்கு ஒரு ''சுழல் நிதியை'' ஏற்படுத்தி அதன் மூலம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்த துணிகளுக்கு 4 மாதங் களுக்குள் பணம் பட்டுவாடா செய்ய தமிழக அரசு முயற்சி செய்கிறது. நிதி வழங்கும் நிறுவனங்களிடம் கைத்தறியின் இக்கடுமையான நோய்க்கு உடனடி நிவாரணம் காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தலைமைச் சங்கத்திற்குப் புதிய விற்பனை நிலையங்கள் திறக்கவும் ஏற்கனவே இருக்கும் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தவும் நிதி வசதி அளித்தல்.**

26. மாநில தலைநகரங்களிலும் நாட்டின் முக்கிய நகரங் களிலும் புதிய விற்பனைக் கூடங்கள் தொடங்கவும் தற்பொழுது உள்ள விற்பனைக் கூடங்களை நவீனப்படுத்தவும் ஆன திட்டத்தை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்தும், நாபார்ட் வங்கியிடம் இருந்தும் நிதி உதவி பெற்று கோ-ஆப்டெக்ஸ் செயல் படுத்தி வருகிறது. 1984—85-ம் ஆண்டில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் இத்திட்டத்திற்கு ரூ. 68.50 இலட்சம் நிதி உதவி வழங்கி உள்ளது. இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ரூ. 67.50 இலட்சம் நிதி உதவி நாபார்ட் வங்கியிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

27. சென்னை, அண்ணா சாலையில் கதர் பவனத்திற்கு அருகே பல மாடிகளுடன் கூடிய கைத்தறி விற்பனை நிலையமும், அலுவலக கட்டிடமும் கட்டுவதற்காக மாண்புமிகு முதலமைச்சரால் 3—9—1985-ல் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. சென்னை பாந்தியன் சாலையில் உள்ள கோ-ஆப்டெக்ஸின் காலி மைதானத்தில் அயல்நாட்டுப் பயணிகளுக்கான ரெஸ்ட்டாரெண்டுடன் கூடிய பல மாடிகள் கொண்ட கைத்தறி கண்காட்சிக் கட்டிடம் ஒன்றுக்கு மேதகு ஆளுநரால் அடிக்கல் நாட்டப்பட்டது. இவை இரண்டும் கைத்தறி துறைக்கு புதிய சொத்துக்கள் எனக் கூறலாம்.

**28. கைத்தறி விற்பனைக் கூடங்கள்.**

கைத்தறி துணிகளின் விற்பனைக்கு அடிப்படையாகத் தேவைப்படும் வசதிகளைப் பெருக்க மாநிலத்தில் கைத் தறிகள் நிறைந்துள்ள பகுதிகளில் கைத்தறிக் கூடங்கள் கட்ட

திட்டமிடப்பட்டு உள்ளது. நடப்பாண்டில் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் பலரகத் துணிகளை ஒரே கூரையின் கீழ் உள்நாட்டவரும், வெளிநாட்டவரும் வாங்கும் வகையில் ஈரோடு, மதுரை மற்றும் சேலம் ஆகிய நகரங்களில் இத்திட்டத்தின்கீழ் கைத்தறிக் கூடங்கள கட்டத் திட்டமிடப் பட்டுள்ளது.

கோ-ஆப்டெக்ஸின் கம்ப்யூட்டர் உலகம்.

29. 21-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் எல்லாம் கம்ப்யூட்டர் மயமாக வேண்டும் என்ற கொள்கைப்படி கைத்தறித் துணிகள் உற்பத்தி, கொள்முதல், பணப் பட்டுவாடா போன்ற துறைகளில் சிறப்பாக பணியாற்றும் பெருட்டு கோஆப்-டெக்ஸில் கம்ப்யூட்டர் அமைக்கப்பட்டுள்ளது. மார்க்கெட் நிலவரங்கள், கைத்தறி ரகங்கள், விற்பனைக் கூடங்கள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், உற்பத்தி. பணப் பட்டுவாடா மற்றும் கைத்தறி தொழிலில் ஈடுபட்டுள்ளோர், வடிவமைப்புகள், வண்ணங்கள் மேலும் கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி சரக்கு இருப்பு கணக்கு, சங்கங் களுக்கு பணம் பட்டுவாடா செய்தல், கடன் விற்பனை வசூல் போன்றவற்றிலும் கம்ப்யூட்டரைப் புகுத்தியுள்ளது.

வடிவமைப்பு முன்னேற்றத்தில் கம்ப்யூட்டர்.

30. புதிய வடிவமைப்புகளை உருவாக்குவதில் கம்ப்யூட்டரை உபயோகிக்க கோ-ஆப்டெக்ஸ் திட்டமிட்டுள்ளது. புதிய வடி வமைப்புகள் புதிய வண்ணங்களை ஒருங்கிணைத்தல், வடிவமைப்புப் படிவங்கள், போன்றவற்றில் கம்ப்யூட்டர் புகுத்த திட்டமிடப் பட்டுள்ளது.

கமண்டல தரப்பரிசோதனை நிலையங்கள்.

31. நெசவாளர்கள் தரமான கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்றஎண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு பருத்தி, பட்டு மற்றும் செயற்கை இழை நெசவுத் துணிகள் தர மான வண்ணங்கள் போன்றவற்றை பரிசோதனை செய்ய ஒரு மண்டல தரப்பரிசோதனை நிலையத்தை நிறுவ மத்திய அரசுக்கு மாநில அரசு முறையீடு செய்துள்ளது.

கைத்தறி அருங்காட்சியகம்.

32. கடந்த ஆண்டில் கோ-ஆப்டெக்ஸின் பொன் விழாவினை யொட்டி கோ-ஆப்டெக்ஸ் ஒரு கைத்தறி நூலகத்தைத் திறந்துள் ளது. விசைத்தறிகளின் கடுமையான போட்டிக்கிடையே வெற்றி கரமாக இயங்கி வரும் கைத்தறித் தொழிலின் தொன்மையான கலாச்சாரத்தையும், தென்னிந்தியாவின் நாகரிக வளர்ச்சியையும் பிரதிபலிக்கும் வண்ணம் கைத்தறி அருங்காட்சியகம் ஒன்றினை சென்னையில் அமைக்க கோ-ஆப்டெக்ஸ் இந்திய அரசின் உதவியை கோரியுள்ளது.



33. தள்ளுபடித் திட்டம்.

கைத்தறித் துணி விற்பனையைப் பெருக்க அரசு மேற்கொண் டுள்ள பல்வேறு திட்டங்களுள் ஒன்று கைத்தறி துணி விற்பனைகள் மீது அளிக்கப்படும் தள்ளுபடிச் சலுகையாகும். இத்திட்டத்தின் கீழ் ஏற்படும் செலவினத்திற்கென அரசு 1984-85-ம் ஆண்டு ரூ. 16 கோடியும், 1985-86-ம் ஆண்டு ரூ. 17.60 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. கடந்த சில வருடங்களாக கூட்டுறவு அமைப்பின் கீழ் கைத்தறித் துணி உற்பத்தி அளவும், விற்பனையும் ஒரேசீராகப் பெருகியுள்ளது. இதன் பயனாக தள்ளுபடித் திட்டத் தின்கீழ் அரசுக்கு ஏற்படும் செலவினமும் அதிகரித்துள்ளது. ஆனால் இச்செலவினத்தை உணவு தானியங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் உரங்கள், மின்சாரம் ஆகியவற்றுக்கென விவசாயி களுக்கு அரசு மான்யமாக வழங்கும் தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இது மிகவும் குறைந்த அளவேயாகும். தற்போது ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பத்தில் தள்ளுபடி மான் யத் திட்டம் தொடர்ந்து அமுலில் இருப்பதா அல்லது அதனை மாற்றியமைப்பதா அல்லது அறவே ஒழித்துவிடுவதா போன்ற கருத்துக்கள் மத்திய மற்றும் மாநில அரசுகளின் தீவிர பரிசீல னைக்கு உள்ளாகியுள்ளது. மத்திய அரசு தள்ளுபடித் திட்டம் ஏழாவது ஐந்தாண்டு காலத்திற்குப் பிறகு அமுலில் இருக்காது என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளது. இதற்கு முன் நடவடிக் கையாக 1984-85-ல் 60 நாட்களாகவும், 1985-86-ல் 45 நாட் களாகவும் இருந்த தள்ளுபடி கால அளவை 1986-87-ல் 30 நாட்களாகக் குறைத்து மேலும் இதுகாறும் அளித்து வந்த மொத்த விற்பனைக்கான தள்ளுபடிச் சலுகையை 1986-87 முதல் அறவே நீக்கிவிட்டனர். ஆனால் தள்ளுபடித் திட்டத்திற்கு நிகரான மாற்றுத் திட்டத்தை அமுல்படுத்தும் வரை தள்ளுபடித் திட்டத்தை அறவே ஒழிப்பது நல்லதல்ல என்றும் இது தமிழ்நாட்டின் கைத்தறி வளர்ச்சியை அழித்து விடும் என்றும் மத்திய அரசுக்கு நாம் வலியுறுத்தியுள்ளோம். மாநில அரசும் அதற்கான மாற்றுத் திட்டங்களை ஆராய்ந்து வருகிறது.

34. செயற்கைப்பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பட்டு நெசவாளர்களுக்கு நிதி உதவி.

புதிய பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு பங்கு மூலதனம் தொழில் நுட்பக் கருவிகள் மற்றும் மேஜை நாற்காலி போன்றவை வாங்குவதற்கு நிதி உதவி அளிக்கப்பட்டு வருகின்றது. 1985-86 ஆம் ஆண்டில் புதிய பட்டு உற்பத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க ரூ. 3/- இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டிலும் இத் திட்டத்திற்கு தேவையான அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப் படும்.

35. நல்வாழ்வு திட்டங்கள்.

சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்.

கூட்டுறவுத் துறையின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு பயனளிக்கும் வகையில் ''சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்'' என்றொரு நலத் திட்டம் தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நெசவாளர்கள் அனைவரும் ஆயுட் காப்பீட்டுக் கழகத்தின் கீழ் இணைக்கப்படுகிறார்கள். இது வரை 1,12,000 கைத்தறி நெசவாளர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளார்கள். இத்திட்டத்தின்படி ஒவ்வொரு நெசவாளரும் தான் சம்பாதிக்கும் ஒவ்வொரு ரூபாயிலும் பைசாவைச் சந்தாத் தொகையாகக் கொடுக்கின்றனர். அந்த ஒரு ரூபாய்க்கு அரசு 3 பைசா கொடுக்கிறது. இத்திட்டத்தின் கீழ் சேர்ந்துள்ள நெசவாளர் இறந்து விட்டால், அவரது நியமனதாரர் அவருடைய சேமிப்புக் கணக்கில் உள்ள தொகையுடன் அரசு பங்குத் தொகை, வட்டி மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து ரூ. 3000/–ஐ பெறுவர். இதைத் தவிர தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு மாநிலச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) தனது பொன் விழா ஆண்டினை ஒட்டி இத் திட்டத்தின் கீழ் இறந்து போகும் நெசவாளர் உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ. 2,000/- தனது பங்காக அளிக்க முன் வந்துள்ளது. எனவே இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் தொகை 1-7-1984 முதல் அதிகபட்சம் ரூ. 5,000/- ஆக உயர்ந்திருக்கிறது.

36. ஒய்வு காப்பீட்டு நலத்திட்டம்.

தனியார் துறை நெசவாளர்களுக்கும் கூட்டுறவுத்துறை நெசவாளர்களுக்கும் காப்பீட்டு ஒய்வு நலத் திட்டத்தினை நீடித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

நமது அரசு, ஆணை எண். ஜி.ஓ.எம்.எஸ். 2084, தொழிலாளர் துறை, நாள் 25-9-1985-ன்படி, ஒய்வு காப்பீட்டு நலத்திட்டத்தினை கூட்டுறவுத் துறை மற்றும் தனியார் துறை நெசவாளர்களுக்கும் விஸ்தரித்து ஆணை பிறப்பித்து உள்ளது. இத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும் நெசவாளர் மாதம் ஒன்றுக்கு ரூ. 10/- வீதம் அவரது 58–வது வயது முடியும் வரை செலுத்த வேண்டும். அதன் பிறகு அவருக்கு அவரால் செலுத்தப்பட்ட சந்தாத் தொகையும் அதன் மீது குவிந்த வட்டியும் திருப்பித் தரப்படும். பதினெட்டு வயதில் இத்திட்டத்தில் சேரும் நெசவாளிக்கு 40 வருடங்கள் கழித்து அவரது 58–வது வயதில் ரூ. 33,500/- கிடைக்கிறது. நெசவாளி 58-வது வயது அடையும் முன்பே இறக்க நேரிட்டால் ஆயுள் காப்பீட்டுக் கழகம் காப்பீட்டுத் தொகையான ரூ. 5000/-த்துடன் இறக்கும் வரை அவர் செலுத்தியுள்ள சந்தாத் தொகை மற்றும் அதன் மீதான வட்டியும் சேர்த்து அளிக்கப்படுகிறது.



37. நெசவாளர்களுக்கான விபத்து நிவாரணத் திட்டம்.

அரசு ஆணை, ஜி.ஓ.எம்.எஸ். எண். 1916, தொழிலாளர் துறை, தேதி 17–9–1985-ல் தனியார் துறையில் உள்ள நெசவாளர்களுக்கு விபத்து நிவாரணத் திட்டம் ஒன்றினை செயல்படுதத ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வேலையில் ஈடுபட்டுள்ளபோது நெசவாளர் ஒருவர் விபத்து காரணமாக இறக்க நேரிட்டாலோ அல்லது உடல் உறுப்பினை இழக்க நேரிட்டாலோ அவருக்கு அதிகபட்சமாக ரூ. 10,000/– நஷ்ட ஈடாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு உறுப்பினர் சந்தாத் தொகை எதுவும் செலுத்த வேண்டியதில்லை. இத்திட்டம் கூட்டுறவுத்துறை நெசவாளர்களுக்கும் விஸ்தரிப்பது தொடர்பாக பிரேரணை அரசின் பரிசீலனையில் உள்ளது. மேற்படி இரு திட்டங்களும் தலைமைச்சங்கத்தின் பொன் விழாவையொட்டி நெசவாளர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டங்களாகும், இத்திட்டங்கள் தமிழ்நாட்டில் மட்டும் தான் முதன் முதலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

38. நெசவாளர்களுக்கு யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியின் திட்டம்.

யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி கூட்டுறவுத் துறையிலுள்ள நெசவாளர்களுக்கு ஒரு காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நெசவாளர் உறுப்பினரும் மேற்படி யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனிக்கு ஆண்டு சந்தாவாக ரூ. 14/40 செலுத்த வேண்டும். இத்தொகையில் உறுப்பினர் சார்ந்துள்ள சங்கம் ரூ. 9/60–ம் உறுப்பினர் ரூ. 4/80–ம் செலுத்தவேண்டும். எதிர் பாராத வகையில் பெருவெள்ளம், நெருப்பு, கொள்ளை, களவு, போன்ற இயற்கையின் இடர்பாடுகளால் நெசவாளர்களுக்கு தொழில் தொடர்பாக ஏற்படும் நஷ்டத்தை ஈடு கட்டும் வகையில் மேற்படி இன்சூரன்ஸ் கம்பெனியானது ரூ. 2,000/– வரையில் பலவிதமான இழப்புகளுக்கு நஷ்ட ஈடு அளிக்க முன் வந்துள்ளது.

39. நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம்.

1962 ஆம் ஆண்டுடன் நிறுத்தி வைக்கப்பட்ட நெசவாளர் வீட்டு வசதி திட்டம் மீண்டும் 1979–80 ஆம் ஆண்டில் இருந்து அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி தற்போது ஒரு வீடு கட்ட ஆகும் செலவு ரூ. 12,000/- ஆகும். இதில் மாநில அரசு ரூ. 1,000/-ஐ மான்யமாகவும், ஹட்கோ நிறுவனம் (வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம்) ரூ. 9700/-ம் மீதமுள்ள ரூ. 1,300/–ஐ பயனடையும் நெசவாளரும் செலுத்த வேண்டும். கூட்டுறவுத் துறையில் உள்ள நெசவாளர் பயனடையும் வகையில் 3219 வீடுகள் கட்ட எடுத்துக் கொள்ளப்பட்டத்தல்

டிசம்பர் 1985 வரையில் 3027 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 192 வீடுகள் பல கட்டுமான நிலையில் உள்ளன, 1985-86-ம் நிதி ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 10 இலட்சம் மான்யமாக அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

40. கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களுக்கு சில நல்வாழ்வுத் திட்டங்களை புதிய துணி நூல் கொள்கை அறிவித்து உள்ளது. இந்திய அரசால் கைத்தறி நெசவாளர்களுக்கு தமிழக அரசின் வீடு கட்டி கொடுக்கும் திட்டம் போல ஒரு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இக்கொள்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு ஹட்கோவின் நிதி உதவியுடன் கைத்தறி நெசவாளர்களுக்கு கீழ்க்கண்ட விவரப்படி வீடுகளைக் கட்டிக் கொடுக்க திட்டமிட்டுள்ளது.

| திட்டத்தின் பெயர். | நிர்ணயிக்கப் பட்டுள்ள தொகை. | வீட்டு வசதி நகர வளர்ச்சி கழகக் கடன். | மாநில அரசு மான்யம். | மைய அரசு மான்யம். | பயனடைவோர் சந்தா. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. நகர்ப்புற வீட்டு வசதி.— | | | | | |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| அ. வீடு | 12,000 | 9,700 | 1,000 | 1,000 | 300 |
| ஆ. வீடும் தொழிற் கூடமும் சேர்ந்தது. | 15,000 | 9,700 | 2,500 | 2,500 | 300 |
| 2. கிராமப்புற வீட்டு வசதி.— | | | | | |
| அ. வீடு கட்ட | 6,000 | 3,000 | 1,500 | 1,500 | .. |
| ஆ. வீடும் தொழிற் கூடமும் சேர்ந்தது. | 9,000 | 3,000 | 3,000 | 3,000 | .. |
| 3. ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகளுக்கு தொழிற் கூடம் கட்ட.— | | | | | |
| அ. ஏற்கனவே கட்டப் பட்ட வீடுகளுக்கு தொழிற் கூடம் கட்ட | 3,000 | .. | 1,500 | 1,500 | .. |



இத்திட்டங்கள் மாநில அரசின் பரிசீலனையில் உள்ளது.

41. வெள்ள நிவாரணம்—

கடந்த நவம்பர் 1985—ல் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் புயல் காரணமாக, 15,952 நெசவாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் பாதிக்கப்பட்ட தறிகளை பழுது பார்க்க மாநில அரசு ரூ. 27.51 இலட்சம் வெள்ள நிவாரண மானியமாக அளித்துள்ளது.

42. கைத்தறி நெசவாளர் வளர்ச்சி அறக்கட்டளை—

கோ-ஆப்டெக்ஸின் பொன் விழா கொண்டாட்டத்தின் போது கோ-ஆப்டெக்ஸின் பொன் விழா நினைவாகவும், முதலமைச்சரின் பெயரால் கூட்டுறவு துறையிலுள்ள நெசவாளர்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் ஒரு அறக்கட்டளை ஏற்படுத்த முடிவெடுக்கப்பட்டு அதன்படி "கைத்தறி நெசவாளர் வளர்ச்சி அறக்கட்டளை" ஒன்று கீழ்க்கண்ட நோக்கங்கட்காக ஏற்படுத்தப்பட உள்ளது.

1. உள்ளூர் வியாபாரத்திற்கான 3 புதிய ரகங்கள் கண்டுபிடிப்புக்கும், ஏற்றுமதிக்கு தகுதியான 3 புதிய ரகங்களுக்கும் ரூ. 1,000 வரை பரிசு வழங்குதல்.

2. நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளிலிருந்து அதிகமான மதிப்பெண் பெறுபவரை தேர்ந்தெடுத்து டாக்டர், பொறியாளர், வங்கி அலுவலர், இந்திய ஆட்சிப்பணி, இந்திய போலீஸ் பணி போன்றவற்றிற்கு ரூ. 1,500-லிருந்து ரூ. 2,000 வரை உதவித் தொகை வழங்குதல்.

3. கோ-ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களின் குழந்தைகளுக்கு தொழிற் கல்வி கொடுக்க, ஆண்டொன்றுக்கு ரூ. 1,500 வரை தகுதிக்கேற்ப உதவித் தொகை வழங்குதல்.

4. கைத்தறி மற்றும் துணி நூல் துறையிலுள்ள ஊழியர்களின் பிள்ளைகளுக்கு ரூ. 1,500 வரை தகுதிக்கேற்ப உதவித் தொகை வழங்குதல்.

5. மூன்று நல்ல நிலையிலுள்ள கைத்தறி விற்பனைக் கூடங்களுக்கு ரூ. 2,000-க்கு மேற்படாமல் கேடயங்கள் வழங்குதல்.

6. நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களின் குழந்தைகளில் பிளஸ்—2 வகுப்புகளில் அதிக மதிப்பெண் பெறும் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 உதவித் தொகை வழங்குதல்.

7. கைத்தறித் துறைக்கு சிறந்த சேவை புரிந்த சிறந்த தலைவர்களை கௌரவிக்கும் பொருட்டு சிலைகள் நிறுவுதல் மற்றும் நினைவு சிறப்பு சொற்பொழிவுகள் நடத்துதல்.

8. மேற்கூறிய சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும், கைத்தறி நெசவாளர்களின் மேம்பாட்டுக்குத் தேவையான நடப்பு திட்டங்களை நிறைவேற்றுதல்.

43. மற்ற வேலை வாய்ப்புகள்—

நெசவாளர்களும் அவர்களது வீட்டு பெண்களும் எம்பிராய்டரி பாவாடைகளை தைத்தல், ஜாக்கெட்டுகள் தைத்தல், குழந்தைகளுக்கான ஆடைகள் தயாரித்தல்; மாணவர்கட்கு சீருடை தைத்தல்; சேலையில் அச்சிடுதல்; பனியன்கள், சட்டைப் பாக்கெட்டுகள் (லேஸ்) குரோஸ் வேலைகள் செய்தல் போன்ற வேலைகளை செய்ய முன் வருவதன் மூலம் கூடுதல் வருவாயை பெற முடியும்.

44. இந்திய கைத்தறி தொழில் நுட்ப பயிற்சி நிறுவனம், சேலம்.

சேலத்திலுள்ள இந்திய கைத்தறித் தொழில் நுட்ப பயிற்சி நிறுவனம் தற்பொழுது மூன்றாண்டு கைத்தறி தொழில் நுட்ப பணியல் (டிப்ளமா) பட்டயப் படிப்பு கொடுத்து வருகிறது. கைத்தறி தொழில் நுட்பவியலில் பட்டப்படிப்பு ஒன்றினைத் தொடங்க இந்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. மேலும் இந்திய அரசிடமும் தமிழ்நாடு அரசிடமும் குறிப்பிட்ட அளவு மாணாக்கர்களுக்கு தொழில் பயிற்சி நிறுவனங்களில் தொழில் நுட்பவியல், ஜின்னிங், நெசவு, சாயம் போடுதல், பதனிடுதல் போன்றவற்றில் ஒரு டிப்ளமோ பட்டயப்படிப்பு ஆரம்பிக்க முறை யீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

45. விசைத்தறி—

தமிழ்நாட்டில் 31–3–1985 அன்று நிலவரப்படி 96,307 அனு மதிக்கப்பட்ட விசைத்தறிகளும், ஏறத்தாழ அதே அளவு அனு மதிக்கப்படாத விசைத்தறிகளும் உள்ளன. மத்திய அரசின் ஜவுளிக் கொள்கையின்படி நிறுவப்பட்டுள்ள எல்லா விசைத்தறி களும் துணிநூல் ஆணையரிடம் பதிவு செய்யப்பட வேண்டும். அதாவது 31–1–1986 அன்று உள்ள எல்லா பதிவு செய்யப்படாத விசைத்தறிகளுடன் புதிதாக நிறுவப்படும் தறிகளும் பதிவு செய்து கொள்ள வேண்டும். விசைத்தறி விஸ்தரிப்பு மீது தடை ஏதும் இல்லை. ஆகவே இந்நிலை கைத்தறிக்கு ஆபத்தாக உள்ளது. கைத்தறி துணி ஒதுக்கீடு ஆணையை திறம்பட செயல்படுத்தி, விசைத்தறிகளின் எண்ணிக்கையை ஓரளவில் நிறுத்தினாலொழிய கைத்தறித் தொழிலின் மேம்பாடு வெகுவாக பாதிப்புக்கு உள்ளாகும்.

46. 1985-ல் கைத்தறி ஒதுக்கீடு சட்டம் தனியாக மத்திய அரசினால் இயற்றப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின் கீழ் அமைக்கப் பட்ட ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளின் மேல் கைத்தறி களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய துணி வகைகள் பற்றி விரைவில்



மத்திய அரசு அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இச் சட்டத்தைக் கண்டிப்பான முறையில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டு, அச்சட்டத்தை நிறைவேற்றத் தேவையான பணியாளர்களுக்கான செலவை ஏற்குமாறு மத்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது. கைத்தறி ஒதுக்கீடு சட்டத்தை மீறும் வகை யில் துணிகளை விற்பனை செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வகை செய்யும் விதத்தில், இச்சட்டத்தைத் திருத்தி அமைக்குமாறு மாநில அரசு மத்திய அரசுக்கு ஆலோசனை கூறி யுள்ளது. மைய அரசினால் விசைத்தறித் தொழிலை சில தொழில் நிறுவனங்களாக வகைப்படுத்தவும் அவைகளை பதிவு செய்து ஒழுங்கு முறைப்படுத்தவும் மாநில அரசுக்குத் தேவையான அதி காரங்களை வழங்க முடியும்.

47. விசைத்தறி சம்பந்தப்பட்ட அதிகாரங்களை பன்முகப்படுத்துதல் :

கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், கைத்தறி தொழிலில் மேம்பாட்டிற்கும் பொறுப்பானவர். கைத்தறி தொழிலும் விசைத்தறி தொழிலும் ஒன்றுக்கொன்று இணையாக செயல் படுவதை சட்டப்படி செயல்படுத்தத் தேவையான அதிகாரங்கள் இருந்தால்தான். இதை (கைத்தறியின் மேம்பாட்டை) சாதிக்க முடியும். ஆகவே அதிகாரங்களை பன்முனைப்படுத்தி, புதிய கைத்தறி ஒதுக்கீடு சட்டத்தின் கீழ் அச்சட்டத்தை செயலாக்கத் தேவையான அதிகாரங்களை கைத்தறி துணிநூல் இயக்குநருக்கு வழங்குவது இன்றியமையாததாகும்.

48. விசைத்தறி மேம்பாட்டுக் கழகம் :

தமிழ்நாட்டில் ஏறத்தாழ இரண்டு இலட்சம் தறிகளுடன் இயங்கி வரும் விசைத்தறித் தொழில் நமது நாட்டில் இரண் டாவது இடத்தை வகிக்கிறது. இது நாள் வரை இத்தொழில் பண உதவிக்கோ அல்லது விற்பனைக்கோ அரசை சார்ந்திருக்க வில்லை. இது பெரிய அளவில் வேலை வாய்ப்பு உள்ளாற்ற லுடையது. ஆகவே, இத்தொழில் சீரான முறையில் வளர உதவப்பட வேண்டியுள்ளது. பண உதவி, உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு விற்பனை உதவி, பணி உதவிகள் முதலியன இத்தொழிலுக்கு அளிக்கப்பட வேண்டியுள்ளது. ஆகவே, இத் தொழிலின் நலன்களை கண்காணிக்க ஒரு விசைத்தறி மேம்பாட்டுக் கழகம் அமைக்கப்படுதல் அவசியமென கருதப்படுகிறது.

49. பதனிடுவதற்கான ஆயத்தங்களை செய்யும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு :

பெருவாரியான நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தேவையான நல்ல கஞ்சி பாவுகளை செய்ய போதுமான வசதிகள் இல்லை. அவைகள் (சங்கங்கள்) இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களையே முழுவதும் சார்ந்திருக்கின்றன. பெருவாரியான தனியார் வியாபாரிகள் செய்யும் ஒழுங்கீனங்களால் உண்மையான பலன்

அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு கிடைக்கப் பெறவில்லை. மேலும், தனியார் துறையில் கஞ்சி தோய்ப்பவர்கள் தரமில்லாத பொருள்களை கஞ்சி தோய்க்க உபயோகப்படுத்துகின்றனர். வெய்யில் மற்றும் மழைக் காலங்களில் பாவு ஓடுதல், கஞ்சி தோய்த்தல் வருடம் முழுவதும் தொடர்ந்து செய்வதில்லை. ஆகவே, நல்ல தரமான கஞ்சி பாவுகளை வழங்கவும், நெசவாளர்களுக்குத் தேவையான இதர கச்சாப் பொருள்கள் மற்றும் அடிப்படை துணைக்கருவிகளை பெற உதவி செய்யவும், கனமற்ற கூரையுடன் கூடிய பணிக் கூடங்கள் நிறுவவும் நெசவாளர்கள் பணிச் சங்கங்களை நிறுவும் கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

50. தமிழ்நாடு சரிகை ஆலைக்கு உதவி, காஞ்சிபுரம்:

தமிழ்நாடு சரிகை ஆலை மாதம் ஒன்றுக்கு ஆயிரம் மார்க்குகள் தங்க சரிகையை உற்பத்தி செய்து பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகித்து வருகிறது. 1985–86-ம் ஆண்டில் 8,206 மார்க்குகள் தங்க சரிகைகள் (31–12–1985 வரை உற்பத்தி செய்யப்பட்டு, ரூ. 134.52 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ள தடங்கல்களில் மத்திய கலால் வரி விதிப்பு முக்கியமான ஒன்றாகும். இக்கலால் வரியினால் சரிகையின் விலை அதிகமாகி விட்டபடியால் மார்க்கெட்டில் போட்டியிடும் தன்மையை இழந்துவிடக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. சூரத்தில் சரிகைத் தொழில் ஒரு குடிசைத் தொழிலாக நடத்தப்பட்டு வருகிறது. எனவே, கலால் வரியில் இருந்து வி[illegible]விலக்கு பெற மத்திய அரசுக்கு தமிழக அரசிடமிருந்து கோரிக்கை அனுப்பப்பட்டு ஏற்கப்பட்டுள்ளது. இந்திய அர வரியிலிருந்து விலக்கு அளித்ததற்கு நன்றி தெரிவிக்க இவ்வரசு கடமைப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக தமிழ்நாடு சரிகை ஆலை ஒரு நிலைத்து இருக்கக் கூடிய நிறுவனமாக அமைவதுடன் சந்தையில் போட்டியிடக் கூடிய அளவிற்கும் உயர்ந்துள்ளது.

51. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகத்திற்கு நிதியுதவி அளித்தல்.

கூட்டுறவின் கீழ் அல்லாத நெசவாளர்களின் வளர்ச்சிக்காக தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக்கழகம், 1964-ம் ஆண்டு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக அமைக்கப்பட்டுள்ளது. இக்கழகம் தனது நெசவாளர் அங்கத்தினர்களுக்கு நடைமுறை செலவினங்களுக்காக கடன் வழங்கி வருவதை அதிகரிக்க உத்தேசித்துள்ளது. 1985–86-ம் ஆண்டில் இக்கழகத்தால் மொத்தம் 31-1-1986முடிய அனுமதிக்கப்பட்ட கடன் தொகை ரூ. 268.88 இலட்சம். இது கடந்த ஆண்டில் ரூ. 287.75 இலட்சமாக இருந்தது.



52. கச்சாப் பொருள் வங்கி நிறுவுதல்:

நூல் வியாபாரத்தில் அடிக்கடி ஏற்படும் நெருக்கடியினால், கூட்டுறவு துறை அல்லாத தனியார் கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் விலை ஏற்றம் அடைவதையும், நூல் தட்டுப்பாடுகள் ஏற்படுவதை தடுக்கவும் நூல் விலையினை ஒரு நிலையில் நிர்ணயித்து ஒரே சீரான நிலையில் அவைகளை விநியோகிக்கவும், முக்கியமாக மோட்டா ரக நூல்கள் விநியோகிக்கவும், தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகம் நடப்பு நிதி ஆண்டில் ரூ. 100 இலட்சம் செலவில் கச்சா பொருள் வங்கி திட்டத்தை செயல்படுத்த உள்ளது. இதற்காக ரூ. 15 இலட்சம் அரசு பங்குத் தொகை மூலதனமாக கைத்தறி வளர்ச்சிக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

53. தமிழ்நாடு பஞ்சாலை கழகம், கோவை:

நலிவடைந்த ஆலைகளை புத்துயிர் ஊட்டும் பொருட்டு நிதியுதவி அளிப்பதற்காக இக்கழகம் நிறுவப்பட்டு உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கூட்டுறவு நூற்பு ஆலைகளின் பஞ்சு தேவையினை இக்கழகம் நிறைவு செய்து வருகிறது. பஞ்சு மற்றும் பருத்தி நூல்களை சோதனையிடும் பொருட்டு ரூ. 10.00 இலட்சம் செலவில் இக்கழகம் ஒரு சோதனைக் கூடத்தை நிறுவியுள்ளது. மேலும் இக்கழகம் 10 விசைத்தறிக் கூடங்களின் நிர்வாகப் பொறுப்பையும் ஏற்றுள்ளது.

இக்கூடங்கள் 1,400 தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்துள்ளது. இந்நிறுவனம் விசைத்தறி கூடங்கள் வைத்துள்ள கூட்டுறவு சங்கங்களிடமிருந்து துணிகளை கொள்முதல் செய்கிறது.

54. மூடப்பட்ட நெசவாலைகளைத் திறத்தல்;

1976–77-ல் பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்ட நெருக்கடியின் விளைவாக மூடப்பட்ட 9 தனியார் நெசவாலைகளை திறக்கும் பொருட்டு அரசு உத்தரவாத உதவி அளித்தது. திறக்கப்பட்ட எல்லா ஆலைகளும் இயல்நிலைக்கு வந்துவிட்ட நிலையில் கீழ்க்காணும் இரண்டு ஆலைகளுக்கு கொடுக்கப்பட்ட உத்தரவாதங்கள் இன்னும் வாபஸ் பெறப்படாமல் உள்ளன:—

அ. காவேரி ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், புதுக்கோட்டை.

ஆ. பின்னி மில்ஸ், சென்னை.

55. மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு ஆலைகளில், காவேரி ஸ்பின்னிங் மற்றும் வீவிங் மில்ஸ், தொழில்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்கு முறை) சட்டம் 1951-ன் கீழ் அதிகாரம் பெற்றவர் என்ற நிலையில் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தினால் எடுக்கப்பட்டுள்ளது.

56. கீழ்க்கண்டுள்ள ஆலைகளுக்கும் மாநில அரசு உத்தரவாத உதவி அளித்துள்ளது:—

அ. ஜோதி மில்ஸ், கோவை.

ஆ. ஜெயலெக்ஷ்மி மில்ஸ், கோவை.
இவ்வாலைகளின் செயல் திறன் திருப்திகரமாக ஆனவுடன் உத்தரவாதங்களை வாபஸ் பெறுவது அரசின் கொள்கை.

**57. முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி குழந்தைகளுக்கு இலவச சீருடை வழங்குதல் ;**

தற்போதைய முதல் அமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப் பட்ட சீருடை வழங்கும் திட்டத்திற்கு தேவைப்படும் துணிகளை கொள்முதல் செய்யும் பணி கைத்தறி மற்றும் துணிநூல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்துறை அதனை ஏற்று மிகச் சிறப்பாகப் பணியாற்றி, தேவைக்கேற்ப திட்டமிட்டு, ரூ. 12.11 கோடி மதிப்புள்ள 130.93 இலட்சம் மீட்டர்கள் துணிகளை தக்க நேரத்தில் கொள்முதல் செய்து வழங்கியுள்ளது. இப்பணியினை செவ்வனே முடித்தமை பாராட்டுக்குரியது.

**58. கைத்தறி கணக்கெடுப்பும் அடையாள அட்டை வழங்குதலும்:**

மைய அரசின் புதிய துணிக் கொள்கையின் ஒரு பகுதியாக இந்தியாவில் உள்ள அனைத்து கைத்தறிகளையும் கணக்கெடுக்க "தேசிய கணக்கெடுப்பு" ஒன்று நடத்த அறிவிக்கப்பட்டது. முழுமையான கணக்கெடுப்பு 1987-ம் ஆண்டில் மேற்கொள்ளப் படும். காலவரையுடன் கூடிய திட்டம் ஒன்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு உள்ளது. மாதிரி கணக்கெடுப்பு ஒன்று துவங்கப்பட்டு இதற்காக தேர்வு செய்யப்பட்ட மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டில் மூன்று மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் ஐந்து வட்டாரங்களில் இம்மாதிரி கணக்கெடுப்புகள் முடிவு பெற்றுள்ளது. இதற்காகும் மொத்த செலவையும் மைய அரசே ஏற்கிறது. ஏற்கனவே இத்தகைய கணக்கெடுப்பு 1973ல் எடுக்கப் பட்டுள்ளதால் தற்சமயம் மேற்கொள்ளப்படும் இக்கணக்கெடுப்பு முறையான திட்டம் மற்றும் மதிப்பீட்டிற்கு மிகத் தேவையான தகவல்களை அளிக்கும்.

59. சென்ற ஆண்டு கொள்கை அறிவிப்பில் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல் பற்றி குறிப்பிடப்பட்டது. அதன்படி கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள தறி வைத்துள்ள நெசவாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் பணி ஏற்கனவே முடிவடைந்து விட்டது.



**60. சரக அலுவலகங்களை திருத்தி அமைத்தல்.**

சென்ற ஆண்டு கொள்கைக் குறிப்பில் காஞ்சிபுரம் மற்றும் திருச்சி சரக அலுவலகங்களுடைய பரந்த அதிகார எல்லையை திருத்தி அமைப்பது பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. காஞ்சி புரம் சரகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு வட ஆற்காடு மாவட்டத் திற்காக வேலூரில் ஓர் அலுவலகத்தை அமைக்க அரசினால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அமைப்புப் பணி நடைபெற்று வருகிறது. அதே போல், திருச்சி சரகத்தையும் பிரித்து, தென்னாற்காடு மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களின் அதிகார எல்லையுடன் சிதம்பரத்தை தலைமையிடமாகக் கொண்ட ஒரு புதிய சரகம் அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரிக்கும் பொழுது, பசும்பொன் முத்துராமலிங்கம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களின் அதிகார எல்லையுடன் மானாமதுரையில் ஒரு சரக அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது ஆக கடந்த ஆண்டு இருந்த 9 சரகங்களுக்கு பதிலாக, தற்போது 12 சரக அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இந்த அடிப்படை நிலை அலுவலகங்களை திருத்தியமைத்தல், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகத்தினை செவ்வனே செயல்படுத்த உதவுவ துடன், சரக அலுவலகங்கள், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கைத்தறி தொழிலுக்கு மேலும் நல்ல முறையில் சேவை செய்ய உதவும். தற்போதுள்ள திருநெல்வேலி சரகத்தைப் பிரித்து, நாகர்கோவிலை தலைமையிடமாகக் கொண்ட ஒரு புதிய சரக அலுவலகத்தை தற்போதுள்ள உதவி இயக்குநர் (விடுப்பு) அலுவலகத்தை மாற்றியமைப்பதன் மூலம், கன்னியா குமரி மாவட்டத்தில் அமைப்பது தொடர்பான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

**செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள சிறப்பு கைத்தறி வளர்ச்சி திட்டங்கள்.**

**61. விலை குறைந்த கைத்தறி கலப்பிழை துணிகள் உற்பத்தி செய்ய வரியற்ற பாலியஸ்டர் நூல்கள்**

1986-87ம் ஆண்டிற்கான மத்திய வரவு-செலவு திட்டத்தில் குறைந்த விலையில் விற்பதற்கு ஏற்ப வரியற்ற பாலியஸ்டர் இழைகளைக் கொண்டு கைத்தறியில் விலை மலிந்த கலப்பிழைத் துணிகளை உற்பத்தி செய்ய மத்திய அரசு புதிய திட்டத்தை வெளியிட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப் படும் சட்டை மற்றும் சூட்டிங் துணி ரகங்கள் மீட்டர் ஒன்றுக்கு முறையே ரூ. 20/- மற்றும் ரூ. 40/-க்கு பொது மக்களுக்கு கிடைக்கும். ஏழாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில், தமிழ் நாட்டில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள0 501,0

தறிகளில் வரியற்ற பாலியஸ்டர் இழைகளைக் கொண்டு பாலியஸ்டர் துணிகள் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது.

62. சாஸ்மீராவுக்கு மண்டல அலுவலகம் ஏற்படுத்துதல்.

பட்டு மற்றும் செயற்கைப்பட்டு ஆலைத் தொழிலியல் ஆய்வுக் கழகத்திற்கு (சாஸ்மீரா) சேலத்தில் கைத்தறி கூடத்துடன் கூடிய மண்டல அலுவலகம் நடப்பு ஆண்டில் ஏற்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. பட்டு மற்றும் செயற்கைப் பட்டு நெசவில் தொழில் நுட்ப வளர்ச்சியை ஏற்படுத்த இது உதவும்.

63. சீனாவிலிருந்து கச்சா பட்டு இறக்குமதி செய்தல்.

கர்நாடகா மாநிலத்தில் 80 விழுக்காடு கச்சாப் பட்டு உற்பத்தி யாகிறது, பருவமழை பொய்ப்பதனாலோ அல்லது பூச்சிகளின் தொந்தரவினாலோ பயிருக்கு பாதிப்பு ஏற்படுவதைத் தொடர்ந்து கச்சாப் பட்டின் விலையில் உயர்வு ஏற்பட்டு நுகர்வோர்களின் வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது. இதனால் தமிழ் நாட்டிலுள்ள பட்டு கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப் பளிக்க இயலாமற் போகிறது. கர்நாடகா மாநிலம் தற்சமயம் வறட்சியினால் பாதிக்கப்பட்டு இருப்பதால் பட்டு உற்பத்தி குறைந்து, பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது. இதனால் கடந்த 3 மாதங்கள் 30-லிருந்து 40 விழுக்காடு வரை விலை உயர்ந் துள்ளது. இதே நிலை தொடருமானால், கச்சா பட்டின் விலை இன்னும் உயரக்கூடும். கச்சாப் பட்டு இறக்குமதி செய்வதுதான் இந்த பற்றாக்குறையை ஈடு செய்யவும், பட்டு நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பளிக்கவும் உதவும். கர்நாடகாவைத் தவிர, 20 விழுக்காடுகள் பட்டு உற்பத்தி செய்யும் இதர மாநிலங் களில் இந்த பற்றாக்குறையை ஈடு செய்ய இயலாது. எனவே தமிழ்நாடு அரசு இதே சூழ்நிலையில் 1981 ஆம் ஆண்டு மேற் கொண்டதைப்போல் அடுமத 6 மாதத் தேவைக்கென சீனாவி லிருந்து 100 டன்கள் கச்சாப் பட்டு இறக்குமதி செய்வது தொடர் பாக மத்திய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது.

64. இரண்டு புதிய சரிகை உற்பத்தி ஆலை அமைத்தல்.

காஞ்சீபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை நிறுவனம் மாதம் ஒன்றுக்கு 1,000 மார்க் சரிகை இழைகளை உற்பத்தி செய் கின்றது. இவை பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் 10 விழுக்காடு தேவையையே பூர்த்தி செய்கிறது. மீதமுள்ள 90 விழுக் காடு சரிகை சரிகை உற்பத்தி மையமான சூரத்தில் இருந்து பட்டு சங்கங்களால் கொள்முதல் செய்யப்படுகிறது.

பட்டு கூட்டுறவு *சங்கங்களின் தேவையை நிறைவேற்ற தமிழ் நாட்டில் 1986-87-ம் ஆண்டில் ஆரணி மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்களில் இரண்டு புதிய சரிகை ஆலை அமைக்கப்பட உள்ளது.



65. புதிய கூட்டுறவு நூற்பாலைகள் நிறுவுவது சம்பந்தமாக.

1985-ம் வருடம் ஜுன் மாதத்தில் மத்திய அரசு புதிய ஜவுளி கொள்கைத் திட்டத்தை அறிவித்திருந்தது. அதில் ஏற்கனவே இயங்கி வரும் நூற்பாலைகளில் கூடுதலாக கதிர்களை நிறுவவும், அல்லது புதிய கூட்டுறவு நூற்பாலைகளை நிறுவவும் அனுமதியளித் துள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் 4.50 இலட்சம் கதிர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. இந்த கூட்டுறவு நூற்பாலைகளில் 10நெ. முதல் 120நெ. வரை பலவகை நூல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் பெரும் பகுதி, கூட்டுறவு துறையின் கீழ் இயங்கும் கைத்தறி களுக்கு பயன்படுகிறது. அதிகப்படியான நூல்கள் வடமாநிலத் திலுள்ள மகாராஷ்டிரா போன்ற இடங்களில் விற்கப்படுகின்றன. கோன் நூல், தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷனிலுள்ள பவர்லூம் காம்ப்ளக்ஸுக்கும், தனியார் துறையிலுள்ள விசைத்தறி நெசவாளர்களுக்கும் விநியோகிக்கப்படுகின்றன. யோட்டா ரகநூல் களின் தேவையையும், கூட்டுறவுத் துறையில் மேலும் தறிகளை நிறுவுவது சம்பந்தமாகவும், நூல்களை ஏற்றுமதி செய்வது சம்பந்தமாகவும் கருத்தில் கொண்டு மத்திய அரசை அணுகி, ஏழாவது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் தமிழகத்தில் புதிய கூட்டுறவு நூற்பாலைகளை (ஐந்து கூட்டுறவு நூற்பாலைகளை) முறையே நெசவாளர்களுக்காகவும், பருத்தி பயிரிடுவோருக்காகவும் ஏற்றுமதி செய்வதற்காகவும், தாயகம் திரும்பியோர்களுக்காகவும், ஆதி திராவிடர்களுக்காகவும் அமைக்க அனுமதி வழங்கவும் மேலும் தேசிய கூட்டுறவு வளர்ச்சி கார்ப்பரேஷன் மற்றும் நிதி வழங்கும் நிறுவனங்கள் மூலம் பணம் வழங்க வேண்டுமாறும் கேட்டுக் கொள்ளவேண்டும். மத்திய அரசின் புதிய ஜவுளி கொள்கையை பயன்படுத்தி, அதன்மூலம் தமிழகம் பல தரப்பட்ட பருத்தி நூல்களை ஏற்றுமதி செய்ய வேண்டும்.

கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்துதல்.

66. சுமார் 4.50 இலட்சம் கதிர்களுடன் 18 கூட்டுறவு நூற் பாலைகள் தமிழகத்தில் இயங்கி வருகின்றன. இவைகளில் 12 கூட்டுறவு நூற்பாலைகள் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு நிறுவப்பட்டவை. உற்பத்தியின் அளவை அதிகப்படுத்தவும் உற்பத்தியாகும் நூலின் தரத்தை ஓரளவு உயர்த்தவும் ஆலை களில் நவீனப்படுத்தும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. முழு உற்பத்தி திறனைப் பெற சில கூட்டுறவு நூற்பாலைகளில் புளோரூமிலிருந்து கார்டிங் டிபார்மெண்ட் வரை நவீனப்படுத்த வேண்டியுள்ளது. இந்திய அரசினால் ஜுன், 85-ல் வெளியிடப்பட்ட புதிய ஜவுளி கொள்கை இவ்வகை நவீனப் படுத்தும் பணியை மேற்கொள்வது அவசியம் என வற்புறுத்தப் பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட காரணங்களை முன்னிட்டு தமிழ் நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளுக்கு நவீனப்படுத்தும்

திட்டங்களுக்கு எனவும் மின் ஆக்கிகள் மற்றும் டிரான்ஸ் பார்மர்கள் வாங்குவதற்கும் தளர்த்தப்பட்ட முறையில் சலுகை வட்டி விகிதத்தில் கடனுதவி செய்யும் நிறுவனங்கள் மூலம் மத்திய அரசு நிதியுதவி வழங்கக் கோரி அணுகலாம்.

**நலிநத மற்றும் மூடப்பட்ட நூற்பாலைகளை மேற்பார்வையிடும் குழு ஒன்றினை நிறுவுதல்.**

67. துணிநூல் உற்பத்தி தொழிலில் மந்தம், நிதி, மற்றும் தொழிலாளர் பிரச்னை ஆகிய அடிக்கடி நிகழும் பிரச்சினைகளால் நூற்பாலைகள் சிரம நிலையினை எதிர்நோக்கி மூடும் நிலையினை அடைகின்றன. இம்மாதிரியான நூற்பாலைகளை கண்டுபிடித்து நலிவடையும் காரணத்தினை அறிந்து அவற்றினை மேம்பாடு அடையச் செய்ய தேவையான வழிமுறைகளை தெரிவு செய்வதன் மூலம் அவற்றினை மீண்டும் நல்ல முறையில் இயங்கச் செய்யலாம். இதன் பொருட்டு துணிநூல் மேம்பாடு முகமை ஒன்றினை நிறுவுவது நல்லது என உணரப்படுகிறது. இம்முகமையில் துணிநூல் ஆலோசனையாளர் பட்டயகணக்ககாயர்கள், தொழிலாளர் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், மற்றும் நிதியுதவி வங்கிகளில் நியமனதாரர்கள் ஆகியோர் அடங்கியதாக இருக்கும். இம்முகமைக்கு தேவையான தகவல்களை தேவைப்பட்டவர்களிடமிருந்து கேட்டு பெற்று ஒரு முடிவிற்கு வரும் அதிகார வரம்பு அளிக்கவும் கருதப்பட்டுள்ளது. இம்முகமையின் பரிந்துரைகளின் அடிப்படையில் நலிவுற்ற மூடப்பட்ட நூற்பாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது மற்றும் அவைகளை பாதுகாப்பில் எடுத்துக் கொள்வது ஆகியவை மேற்கொள்ளப்படும்.

68. **துணிநூல் பதனிடும் வசதிகளை விரிவுபடுத்துதல்:—** கைத்தறி மற்றும் விசைத்தறி துணிகளை பதனிடுவதற்கான வசதிகள் இம் மாநிலத்தில் போதாமல் உள்ளது. இதர மாநிலங்களுக்கு பதனிடும் பொருட்டு பெரும்பான்மை சதவிகிதத்தில் துணிநூல்கள் அனுப்பப்படுகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையின் வருடாந்திர கொள்முதல் அளவு 30 இலட்சம் கிலோக்கள் ஆகும். ப்ளீச்சிங் மற்றும் சாயம் தோய்ப்பதிலும் 3 இலட்சம் கிலோக்கள் பாலியஸ்டர் ப்ளீச்சிங் மற்றும் சாயம் தோய்ப்பதில் 9 இலட்சம் மீட்டர்கள் அச்சடிப்பது என்ற வசதிகளைக் கொண்ட கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள ஒரு யூனிட் ஆகும். மேற்கூறிய காரணங்களில் துணிநூல் பதனிடுவதற்கான வசதிகளை விரிவாக்கும் பொருட்டு தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள புவனகிரியில், மிகவும் நவீனநூல் பதனிடும் ஆலையினை, 12 திங்களுக்குள் ஆரம்பிக்கும் நோக்கத்துடன் கூட்டுவுறத்துறையில் நிறுவுவதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

69. **கூட்டுறவு நூற்பாலைகளில் தணிக்கையின் திறன்.—** ஆண்டு தணிக்கை தவிர கூட்டுறவு நூற்பாலைகளில் நிதித் தணிக்கை, செயல் தணிக்கை மற்றும் விசைத் தணிக்கைகளை பட்டயக் கணக்கர்களிடமும் முதிர்வு நூற்பாலை ஆலோசர்களிடமும் ஒப்படைக்க ஏற்பாடாகியுள்ளது. கோவை





யிலுள்ள தென்னிந்திய நூற்பாலை ஆராய்ச்சிக் கழகமும். முதிர்ந்த நூற்பாலை நிபுணர்களும் அடிக்கடி கூட்டுறவு நூற்பாலைகளைப் பார்த்து அவைகளின் செயல் திறன் பற்றி அறிக்கைகளை அடிக்கடி பெற்று வருகின்றனர். அவர்கள் தொழில் மற்றும் நிதிநிலை அறிக்கைகளை பரிசீலனை செய்கிறார்கள். இந்த மாதிரி பரிசீலனை அந்த நூற்பாலைகளின் தொழில் மற்றும் நிதி நிலைமைகள் அபிவிருத்தியடைய ஏதுவாக இருக்கும்.

நிதித் தணிக்கைக்கும், விசைத்தணிக்கைக்கும் ஏற்பாடு செய்து நூல் உற்பத்தி செலவை குறைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த மாதிரியான ஏற்பாடுகளுக்குப்பின் கூட்டுறவு நூற்பாலைகள் தொழில் நுட்பத்திலும் நிதியிலும் நல்ல முன்னேற்றம் காட்டுகின்றன. நிதிநிலை (தோராயமான அறிக்கையின்படி) 1985 ஆம் ஆண்டில் தமிழகத்தில் 12 கூட்டுறவு நூற்பாலைகள் உத்தேசமாக மொத்தம் ரூ. 265.62 இலட்சம் ரூபாய் லாபம் பெற்றுள்ளது.

70 **நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு குறைந்த மாத வருமானம் —** மற்ற மாநிலங்களை ஒப்பிட்டு பார்க்கும் பொழுது தமிழ்நாட்டில் மாதத்தில் சராசரி 26 வேலை நாட்களில் குறைந்த ஊதியம் பெறும் மில் தொழிலாளி மற்ற மாநிலங்களில் வாங்குவதைவிட தமிழ்நாட்டில் உயர்ந்த பட்சக் கூலி பெறுகிறார்கள். (விவரப் பட்டியலுடன் கூடிய அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது). நெசவாலைகளில் கச்சாப் பொருள் களுக்கு ஆகும் செலவு தொகைக்கு அடுத்தபடியான செலவு, தொழிலாளர்களுக்கு கொடுக்கும் சம்பளமாகும். அவர்களுக்கு அகவிலைப்படி விலைவாசி உயர்வு புள்ளியின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது.

71. **பருத்தி பட்டுநெசவுத் தொழிலுக்கு குறைந்த பட்ச ஊதியத்தை மாற்றியமைத்தல் —** தமிழ்நாட்டில் 5.56 லட்சம் கைத்தறிகள் உள்ளன. இதன் மூலம் 13.34 லட்சம் நபர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். நம் நாட்டில் நம் அரசு தான் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கென 1983-ம் ஆண்டில் குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்துள்ளது.

தமிழ்நாடு அரசு பருத்தி/பட்டு நெசவுத் தொழிலுக்கான குறைந்த பட்ச ஊதியத்தை கீழ்க்கண்ட அரசாணையில் மாற்றி அமைத்துள்ளது.—

| | | |
|---|---|---|
| 1 | அரசு ஆணை பல்வகை எண், 1017, தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்: 19-4-1983. | பருத்தி கைத்தறி நெசவு. |
| 2 | அரசு ஆணை பல்வகை எண், 1569 தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 5-7-1983. | பட்டு நெச |

இந்த அறிவிப்புகள் முறையே 1-5-1983 மற்றும் 22-7-1983 லிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை பொருத்த மட்டில் பொதுவாக கைத்தறி நெசவாளர்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்த பட்ச ஊதியத்தை விட அதிகமான ஊதியத்தைதான் பெறுகின்றனர்.

72. மேற்கண்ட அறிவிப்பை எதிர்த்து குறிப்பாக மதுரைப் பகுதியில் உள்ள தறி முதலாளிகள் கழகம் உயர்நீதி மன்றத்தில் எண். 9396/1983-ல் நீதிப் பேராணை விண்ணப்பித்துள்ளது. இதனைத் தொடர்ந்து கைத்தறித்துறை, 14466/1983ல் இச்சட்டத்திற்கு தடை விதிப்பது முறையற்றது என்றும் பாதிக்கப்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட தொழிலாளர் நீதிமன்றத்திற்கு செல்ல தடை விதிக்கப்படவேண்டும் என்றும் எடுத்துரைத்தது. எனினும் நீதிப் பேராணையில் கூறப்பட்டுள்ள பல கருத்துகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நீதி மன்றங்கள் வழக்குகளை தொடர்ந்து விசாரிக்கலாம் என்றும் ஆனால் உயர்நீதி மன்றத்திலிருந்து மறு ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரை ஆணைகள் ஏதும் வழங்கலாகாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளன. இது இன்னும் உயர்நீதி மன்றத்தில் முடிவாகாத நிலையில் உள்ளது.

இச்சட்டம் தொழிலாளர் துறையால் அமுல்படுத்தப் பட உள்ளது.

73. தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர் (பணிமுறைகள் மற்றும் பலவகை விதிகள்) சட்டம் 1981 — தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர் (பணிமுறைகள் மற்றும் பலவகை விதிகள்) சட்டம், 1981-கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு நல்வாழ்வு திட்டங்களை அமுல்படுத்தவும், தொடர்ச்சியான வேலைவாய்ப்பு அளிக்கவும் பாதுகாப்பு அளிக்கவும் இயற்றப்பட்டுள்ளது.

74. இச்சட்டத்தை அமுல்படுத்த கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்களை தலைமை ஆய்வாளராகவும் சரகங்களிலுள்ள துணிநூல் கட்டுப்பாட்டலுவலர்கள் மற்றும் கைத்தறி ஆய்வாளர்கள் அவரவர் சரகங்களில் இச்சட்டத்தின் கீழ் நடவடிக்கைகளை முழுமையாகவோ அல்லது ஏதாவது முறையிலோ அமுல்படுத்தும் பணியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளது.

75. தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இச்சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

76. இச்சட்டத்தை அமுல்படுத்தினால் தனியார் துறையில் உள்ள 7.54 இலட்ச கைத்தறி தொழிலாளர்கள் பயனடைவார்கள். இச்சட்டத்தை எதிர்த்து தனியார் கைத்தறி துணி உற்பத்தியாளர்களால் சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல்



செய்யப்பட்ட வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டு 27—4—1984-ல், இச்சட்டத்தை அமுல்படுத்த உத்தரவும் அளிக்கப்பட்டது.

77. இச்சட்டத்தை அமுல்படுத்தத் தேவையான பணியாளர்களின் நியமனத்திற்காக அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆணை பெறப்பட்டதும் இச்சட்டம் விரைவில் அமுல்படுத்தப்படும்.

78. புதிய ஜவுளி கொள்கை.—சமீப காலத்தில் மத்திய அரசால் வெளியிடப்பட்ட ஜவுளிக் கொள்கைகளில் கைத்தறித் துறைக்குத் தேவையான சிபாரிசு செய்யப்படவில்லை. இத்துறையில் நவீனமாக்குதல் மட்டுமின்றி இத்துறைக்கு ஊக்கமளிக்கும் நிதியுதவியும் அளிப்பது மட்டுமின்றி நிதியுதவி செய்து வியாபார தகுதியையும் ஊக்கப்படுத்தினால் உற்பத்தி அதிகரிப்பை நிலைநிறுத்தி அதிகப்படியான வேலை வாய்ப்பை ஏற்படுத்தி இழப்பை நிவர்த்தி செய்ய முடியும். ஜவுளி கொள்கையைப் போல் தேசீய அளவில் கைத்தறித் துறைக்கும் ஒரு புதிய கைத்தறிக் கொள்கை ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

79. மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழு ஏற்படுத்துதல்.—இவ்வரசு திட்டங்கள் கைத்தறிகளின் செயல்திறன், நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் தரமுள்ள கச்சாப் பொருள்கள், வியாபாரம் போன்ற பிரச்சனைகளை விவாதிப்பதற்கு மாவட்ட ஆட்சித்தலைவரை தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான ஒரு ஆலோசனைக்குழு ஏற்படுத்த இவ்வரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

80. முடிவுரை.—சுருங்கக்கூறின், கைத்தறித் திட்டங்களின் நோக்கம் யாதெனில் இத்தொழிலுக்குப் புத்துயிரூட்டுதல், வேறு எந்த சார்புமின்றி தானே இயக்குமாறு செய்தல், உற்பத்தியை அதிகரித்தல், உள்நாட்டில் மட்டுமின்றி வெளி நாடுகட்கு ஏற்றுமதி செய்வதன்மூலம் அதற்கு விற்பனை வசதி செய்து கொடுத்தல், மேலும் விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிக மாணவர்கட்கு வேலை வாய்ப்பு கொடுக்கும் தொழில் என்பதுடன் புதிய வேலைவாய்ப்பினையும் உருவாக்கும் தொழில் என்ற அடிப்படையில் மேலே கூறப்பட்ட பல திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்துறையின் வளர்ச்சி விவரங்கள் தனியே இணைக்கப்பட்டுள்ளன.

பருத்தி நூல் ஆலை தொழிலாளியின் குறைந்த பட்ச மாத வருமானம் 26 நாட்களுக்கு (ரூபாயில்).

| ஆண்டு. (1) | பம்பாய். (2) | அகமதாபாத். (3) | இந்தூர். (4) | தமிழ்நாடு. (5) | மேற்கு வங்காளம். (6) | டெல்லி. (7) | பவநகர். (8) | கான்பூர். (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1982 சராசரி | 700.54 | 670.20 | 602.29 | 724.80 | 584.88 | 643.72 | 643.01 | 639.56 |
| 1983 சராசரி | 791.79 | 747.88 | 652.17 | 832.08 | 645.62 | 686.29 | 705.22 | 701.66 |
| 1984 சராசரி | 869.09 | 811.59 | 698.14 | 885.25 | 740.71 | 744.16 | 755.68 | 758.89 |
| 1985 சராசரி 1-7-85-ல் | 891.84* | 823.35 | 710.56 | 928.84** 1025.08 | 811.81 | 768.37 | 767.24 | 781.76 |

* ரூ. 70 செப்டம்பர் முதல் கூலி உயர்வு

** ரூ. 75 1-7-1985 முதல் கூலி உயர்வு

தமிழ்நாட்டில் ஜூலை மாத பட்டுவாடா : ரூ. 950.08
: ரூ. 75.00

1,025.08 (ரூ. 1,025.08)



கைத்தறி மற்றும் பஞ்சாலைத் துறை முன்னேற்றம்—ஒரு கண்ணோட்டம்.

| (1) | 1981-82 (2) | 1982-83 (3) | 1983-84 (4) | 1984-85 (5) | 1885-86 (31-12-1985). (6) |
|---|---|---|---|---|---|
| (1) தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் — | | | | | |
| 1. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை. | 1,312 | 1,468 | 1,556 | 1,590 | 1,600 |
| 2. தறிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 3.02 | 3.33 | 3.56 | 3.75 | 3.82 |
| 3. ஆண்டொன்றுக்கு உறபத்தி (ரூபாய் கோடியில்). | 86.77 | 115.24 | 139.97 | 157.36 | 140.09 |
| 4. ஆண்டொன்றுக்கு விற்பனை (ரூபாய் கோடியில்). | 96.26 | 112.28 | 117.74 | 155.29 | 152.18 |
| 5. நடைமுறை மூலதனம் (ரூபாய் கோடியில்) | 24.31 | 40.91 | 53.58 | 56.25 | 67.04 |
| (2) கோ-ஆப்டெக்ஸ் — | | | | | |
| 1. கொள்முதல் (ரூபாய் கோடியில்) .. | 62.56 | 70.46 | 72.12 | 55.00 | 75.00 |
| 2. விற்பனை (ரூபாய் கோடியில்) .. | 70.65 | 82.81 | 106.00 | 72.00 | 102.00 |
| 3. பயன்படுத்தப்பட்ட நடைமுறை மூலதனம் (ரூபாய் கோடியில்). .. | 22.00 | 40.00 | 40.00 | 50.00 | 50.00 |
| 4. விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை | 525 | 626 | 626 | 630 | 570 |
| (3) கூட்டுறவு நூற்பாலைகள்— | | | | | |
| 1. கதிர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 3.24 | 3.32 | 3.33 | 3.35 | 4.50 |
| 2. முதலீடு (ரூபாய் இலட்சத்தில்) .. | 2,868 | 3,210 | 3,210 | 3,210 | 5,214.36 |
| 3. உற்பத்தி (ரூபாய் இலட்சத்தில்) .. | 4,184 | 5,810.22 | 5,967.61 | 6,472.36 | 7,960.07 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 4. விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) | 4,773 | 6,003.99 | 5,844.07 | 6,366.21 | 7,862.86 |
| 5. நடைமுறை மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்) | 1,845 | 1,239.00 | 1,292.00 | 1,389.00 | 1,948.00 |
| (4) தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு: | | | | | |
| 1. துணிகளை வெளுத்தல், சாயமிடல் (இலட்சம் மீட்டரில்). | 45 | 41 | 35.00 | 36.00 | 32.00 |
| (5) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்: | | | | | |
| 1. அனுமதிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | 2,700 | 1,960 | 2,028 | 2,600 | 1,933 |
| 2. அனுமதிக்கப்பட்ட கடன் தொகை (ரூபாய் இலட்சத்தில்). | 305 | 166.78 | 196.55 | 250.00 | 245.24 |
| 6) தமிழ்நாடு சரிகை நிறுவனம், காஞ்சீபுரம் : | | | | | |
| 1. சரிகை உற்பத்தி (மார்க்குகளில்) | 4,500 | 10,561 | 8,330 | 5,114 | 8,206 |
| 2. விற்பனை மதிப்பு (ரூபாய் லட்சத்தில்) | 54.00 | 107.74 | 103.33 | 69.21 | 134.52 |



## இணைப்பு III.

(..46-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 27.

### தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

கதர் கிராமத் தொழில்களின் மேம்பாட்டையும் வளர்ச்சியையும் தீவிரப்படுத்துவதற்காக, 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஏற்படுத்தப்பட்டது. உள்ளூரில் கிடைக்கும் வளங்களையும், மனித சக்தியையும் பயன்படுத்தி வருமான வழிகளைப் பெருகச் செய்து, சுய வேலை வாய்ப்பை அளிப்பது வாரியத்தின் தலையாய குறிக்கோளாகும். இம்மாநிலத்தில் கதர் கிராமத் தொழில் பணிகள் வாரியத்தின் துறை அலகுகள் மற்றும் கூட்டுறவுகள், மற்றும் கிராமங்களில் தனி நபர் அலகுகளை ஊக்குவிப்பது ஆகியவை மூலம் விரிவுபடுத்தப்படுகின்றன. கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பை உருவாக்கவும், சமுதாயத்தின் நலிந்த பிரிவினரை முன்னேறச் செய்யவும், மாவட்ட கிராம அபிவிருத்தி நிறுவனம் மற்றும் 'தாட்கோ' போன்ற அமைப்புகளுடன் அண்மைக் காலத்தில் வாரியம் இணைந்து செயல்பட்டு வருகிறது.

இந்த குறிக்கோள்களை கவனத்தில் கொண்டு, தகுந்த திட்டங்களை வகுத்து, மாநில முழுமையும் செயல் படுத்துவது வாரியத்தின் தலையாய பணிகளாக அமைந்துள்ளது.

2–10–85 முதல் 6–10–85 வரையில் சென்னையில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் வெள்ளி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு கீழ்க் குறிப்பிட்ட புதிய திட்டங்களை அறிவித்துள்ளார்கள்:—

1. கதர் மற்றும் கிராமத் தொழில் பணிகள் மாவட்டமாக இராமநாதபுரம் மாவட்டத்தை ஏற்றுக் கொள்வது. இத்திட்டத்தின் கீழ் ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தின் அடுத்த நான்காண்டுகளில் பல்வேறு அமைப்புகளிலிருந்து நிதி உதவிகள் பெற்று கிராமத் தொழில் திட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலம் சுமார் 20,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்க திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

2. ஒவ்வொரு கிராமத்திலும் 200 பேர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாகும் வகையில் கதர் கிராமத் தொழில் திட்டங்களை தீவிரமாக செயல் படுத்துவதற்காக கீழ்க் குறிப்பிட்டுள்ள 26 கிராமங்களை ஏற்றுக் கொள்வது:—

(1) திருமங்கலம், (2). நாகவேடு (3) தேவிகாபுரம், (4) சிந்தாலூர்,(5) பாப்பாரப்பட்டி,(6) எஸ். பாலம், (7) ராயர்பாளையம்,(8) வடுகலூர், (9) சூளூர்க்கல்,

(10) காணை,(11) திருச்சிற்றம்பலம்,(12)பகடுப்பட்டு (13) களுகப்புளிக்காடு, (14) வெள்ளூர், (15) கீரமங்கலம், (16) வல்லத்தராக்கோட்டை, (17) வளநாடு,(18) நாச்சியார்புரம்-கம்பனூர்,(19) கமுதி. (20) ரெங்கப்ப நாயக்கன்பட்டி, (21) பொருளூர், (22) ஆண்டிப்பட்டி, (23) வடுகப்பட்டி, (24) டி. கள்ளிகுளம், (25) எட்டயபுரம், (26) கடயால்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இந்நாட்டில் கிராமத்தொழில் பொருட்கள் உற்பத்தியில் முதலிடமும் கதர் உற்பத்தியில் இரண்டாவது இடமும் வகிக்கிறது. அனைத்து இந்திய அளவில், தமிழ்நாட்டின் பங்கு கிரரமத் தொழில் உற்பத்தியில் 25 சதவீதமும், கதர் உற்பத்தியில் 16 சதவீதமும் ஆகும்.

வாரியம் 6.45 இலட்சம் நபர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளித்து வருகிறது. 1985-86 ஆம் ஆண்டு இறுதியில் வேலை வாய்ப்புப் பெறுவோர் எண்ணிக்கை 6.66 இலட்சமாக உயரும். 1986-87-ல் கூடுதலாக 67,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் கீழுள்ள தொழில்களில் கீழ்க்கண்ட தொழில்களின் வளர்ச்சியில் வாரியம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது:—

1. கதர்
2. பனைத் தொழில்
3. செக்கு எண்ணெய்
4. கைக்குத்தல் அரிசி மற்றும் தானியங்களையும் பருப்பு வகைகளையும் பதப்படுத்துதல்
5. தோல் தொழில்
6. மட்பாண்டம் (செங்கற்கள் மற்றும் ஓடுகள்)
7. சுண்ணாம்புக்கல் மற்றும் சுண்ணாம்புச் சூளை (காளவாய்)
8. தேனீ வளர்த்தல்
9. தச்சு கருமார் தொழில்
10. பழங்களைப் பதப்படுத்தலும் பாதுகாத்தலும்
11. கையால் செய்யப்பட்ட காகிதம்
12. வெல்லம் மற்றும் கந்தசாரி சர்க்கரை
13. சமையலுக்குப் பயன்படாத எண்ணெய் மற்றும் சோப்பு



14. நார்த் தொழில்
15. பிரம்பு, மூங்கில்
16. பாலிவஸ்திரா

தமிழ்நாடு அரசால் கிராமத் தொழில்கள் என அறிவிக்கப்பட்ட பின்வரும் தொழில்களையும் இவ்வாரியம் ஊக்குவித்து வளர்க்கியுறச் செய்கிறது.—

1. ஊதுபத்தி
2. நீலகிரி தைலம்/எலுமிச்சைப் புல் தைலம்

**கதர்**

இவ்வாரியம் கைராட்டை மற்றும் அம்பர் ராட்டை நூற்பாளர்களுக்கு பஞ்சை வழங்கி அவர்கள் உற்பத்தி செய்யும் நூலை கொள்முதல் செய்வதன் மூலம் அவர்களை தொடர்ந்து ஆதரித்து வருகிறது. வாரியம் 588 கிராமிய நூற்பு நிலையங்களை நடத்தி வருகிறது. இந்நிலையங்களில் 6 கதிர் அல்லது 12 கதிர் உள்ள ராட்டைகள் உள்ளன. இவற்றை பெரும்பாலும் பெண்களே இயக்கி வருகின்றனர். கொள்முதல் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட நூலை வாரியமே தனது 81 நிலையங்கள் மூலமாக துணியாக நெசவு செய்ய நெசவாளர்களுக்கு வழங்குகிறது.

நூற்புக் கூடங்களுக்குத் தேவையான பஞ்சினை வழங்கும் பொருட்டு பஞ்சு உடைக்கும் 3 அலகுகளும் பட்டை போட 87 இயந்திரங்களும் இயங்கி வருகின்றன.

**பட்டு உற்பத்தி நிலையங்கள்:**

வாரியத்தின் கீழ் 17 பட்டு உற்பத்தி நிலையங்களும் 6 பட்டு முறுக்கும் நிலையங்களும் உள்ளன. வாரியத்தின் கதர் பட்டு தயாரிப்புகள் அவைகளுக்கென ஒரு நற்பெயரை ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

**நூல் உற்பத்தி:**

1983-84 ஆம் ஆண்டில் வாரியத்தின் நூல் உற்பத்தி 412.67 இலட்சம் சிட்டங்களாக இருந்தது. 1984-85-ல் 421.59 இலட்சம் சிட்டங்களாக உயர்ந்துள்ளது. 1985-86-ல் 1985 டிசம்பர் முடிய 313.14 லட்சம் சிட்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1985-86ல் எதிர்பார்க்கப்படும் உற்பத்தி 433 லட்சம் சிட்டங்களாகும்

**கதர் உற்பத்தி:**

1983–84-ல் கதர் துணி உற்பத்தியின் மதிப்பு ரூ. 805.29 இலட்சமாக இருந்தது. இதன் உற்பத்தி 1984–85-ல் ரூ. 844.57 இலட்சம் மதிப்பாக உயர்ந்தது. 1985 டிசம்பர் வரை ரூ. 628.28 இலட்சம் மதிப்புள்ள துணி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1985–86-ல் கதர் உற்பத்தியின் மதிப்பு அளவு ரூ. 878 இலட்சமாக இருக்கும்.

**பட்டு உற்பத்தி:**

1983–84-ல் பட்டுத்துணி உற்பத்தி மதிப்பு ரூ. 270.76 இலட்சமாகும். 1984–85ல் இதன் உற்பத்தி மதிப்பு ரூ. 263.63 இலட்சமாகும். 1985–86-ல் 1985 டிசம்பர் முடிய ரூ. 248.99 இலட்சம் மதிப்புள்ள பட்டுத் துணி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1985-86ல் எதிர்பார்க்கப்படும் உற்பத்தி மதிப்பு அளவு ரூ. 298 இலட்சமாகும்.

**தள்ளுபடி:**

1983–84ஆம் ஆண்டிலிருந்து விழாக் காலங்களையொட்டி வருடத்தில் மாநில அரசு மொத்தம் 90 நாட்களுக்கு, கதர் மற்றும் பட்டு ரகங்கள் விற்பனையில் 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி வழங்கி வருகிறது. அவ்வாறே 1983–84லிருந்து, அரசு விழாக் காலங்களில் விற்கப்படும் பாலிஸ்டர் துணிக்கு வருடத்தில் 60 நாட்களுக்கு 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடியும் வழங்கி வருகிறது.

## கிராமத் தொழில்கள்.

கிராமப் புறங்களில் கிடைக்கின்ற மூலப் பொருட்களையும் மனித சக்தியையும், பயன்படுத்தி நுகர்ப் பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம், கிராமப்புற வறுமையை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டு கிராமத் தொழில்கள் ஊக்குவிக்கப் படுகின்றன. குறைந்த மூலதனத்தில் அதிகமான வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தரக்கூடிய வகையில் கிராமத் தொழில்கள் அமையப்பெற்றுள்ளன.

வாரியத்தின் கீழ் 31–12–1985ம் நாளன்று 256 துறை அலகுகளும், 2,966 தொழில் கூட்டுறவு சங்கங்களும் செயல் படுகின்றன. இதுவரையில் வாரியம் 1,75,630 கைவினைஞர் களுக்கு நிதியுதவி அளித்துள்ளது. 1983–84 ஆம் ஆண்டில் கிராமத் தொழில்கள் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ. 8,411.79 இலட்சமாகவும், ரூ. 9,000.56 இலட்சமாகவும் இருந்தன. 1984-85-ல் இவைகளின் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ. 9,774 இலட்சமாகவும் ரூ. 10,583 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. 1985-86-ம் ஆண்டு டிசம்பர் முடிய இவைகளின் உற்பத்தி மற்றும் விற்பனை மதிப்பு ரூ. 8,173 இலட்சமும் ரூ. 8,052 இலட்சமும் ஆகும்.



பின்வரும் கிராமத் தொழில்கள், அதிக வேலை வாய்ப்பு அளிக்கக்கூடியவை என்பதை கருத்திற் கொண்டு திட்ட காலத்தில் அவற்றினை நிறைவேற்றிட திட்டமிட்டு வாரியம் செயலாற்றி வருகிறது.

## பனைத் தொழில்கள்.

பனை மரங்களிலிருந்து கிடைக்கும் பொருட்களை இயன்ற அளவு பயன்படுத்த செங்கல்பட்டு மாவட்டத்தில் மாதவரம், தர்மபுரி மாவட்டத்தில் மத்தூர், தென் ஆற்காடு மாவட்டத்தில் மா. புடையூர், வட ஆற்காடு மாவட்டத்தில் மங்கலமாமண்டூர் மற்றும் புதுக்கோட்டை ம வட்டத்தில் கோவில்பட்டி ஆகிய இடங்களில் பனைப்பொருள் மையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. மேலும் இராமநாதபுர மாவட்டத்தில் மண்டபம் மற்றும் மாரியூரிலும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கே.பரமத்தி யிலும் அண்ணா மாவட்டத்தில் கோவிலூரிலும் திருநெல்வேலி மாவட்டத்தில் அந்தோனியார்புரம் மற்றும் இனாம் தப்தியிலும் செங்கை மாவட்டத்தில் வேடந்தாங்கலிலும் நிறுவ வாரியம் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

## கிராம எண்ணெய்த் தொழில்.

1985 டிசம்பர் வரை 3,593 மின் விசைச் செக்குகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. தற்போது கிண்டி பொறியியல் கல்லூரியின் மூலம் பெறப்பட்ட பிரத்தியேக முறையுடைய சிரமைக்கப்பட்ட மின்விசைச் செக்குகள் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள புதுப்பேட்டை எண்ணெய் உற்பத்தி கூட்டுறவு சங்கத்தின் மூலம் பரீட்சார்த்தமாக இயக்கப்பட்டு வருகின்றன.

## உண்ணா எண்ணெய் மற்றும் சோப்பு.

வாரியத்தின் கீழ் 40 எண்ணெய் வித்துக்கள் சேகரிக்கும் நிலையங்கள் உள்ளன. தற்போது வாரியத்தின் கண்காணிப்பின் கீழ் 37 சலவை சோப்பு அலகுகளும் ஒரு குளியல் சோப்பு அலகும் செயல்பட்டு வருகின்றன. தஞ்சை மண்டலத்திலுள்ள நாஞ்சிக் கோட்டையில் ஒரு குளியல் சோப்பு அலகினை ஆரம்பிக்க வாரியம் உத்தேசித்துள்ளது.

## தோல் தொழில்.

காலணி தயாரிப்பாளருக்கு "காலணிப் பெட்டிக் கூடங்கள்" வழங்கும் திட்டம் எல்லோரின் பாராட்டையும் பெற்றதாகும். (வாரியம் 1984-85 ஆம் ஆண்டில் 500 காலணிப் பெட்டிக் கூடங் களை வழங்கியுள்ளது.) 1986-87 ஆம் ஆண்டில் மேலும் 200 பெட்டிக் கூடங்கள் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு காலணி தயாரிப்பாளருக்கும் காலணி பெட்டி கூடங்களுடன் ஒரு தோல் தைக்கும் தையல் இயந்திரமும் இலவசமாக வழங்கப்

பட்டுள்ளது. வாரியத்தின்கீழ் 25 தோல் தொழில் துறை அலகுகள் செயல்பட்டு வருகின்றன. விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்துடன் பொதுமக்களின் ரசனைக்கேற்ப புதிய ரகக் காலணிகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.

### கைமுறைக் காகிதம்.

வாரியத்தின்கீழ் 11 கைமுறைக் காகித அலகுகள் உள்ளன. கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு சிறப்புக்கூட்டு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டங்களின் மூலம் கிடைக்கப்பெறும் நிதியுதவிகளைக் கொண்டு 22 புதிய கைமுறைக் காகித அலகுகள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### நார் மற்றும் பாய் முடைதல்.

தற்போது வாரியத்தின் கட்டுப்பாட்டில் 56 நார் மற்றும் பாய் முடைவோர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆரம்பச் சங்கங்களுக்கு இரு வழிகளில் உதவும் பொருட்டு மூலப் பொருட்களைப் பெற்றுத் தரவும் உற்பத்தியான பொருட்களுக்கு விற்பனை வசதிகள் அளிக்கவும் ஒரு மண்டல மூலப் பொருட் கிடங்கு ஏற்படுத்த வாரியம் திட்டமிட்டுள்ளது.

### பாலி வஸ்திரா.

1982-83 ஆம் ஆண்டு முதல் வாரியம் பாலிவஸ்திரா கதர் துணி உற்பத்தியை மேற்கொண்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 26.79 இலட்சம் மதிப்புள்ள பாலி வஸ்திரா துணி உற்பத்தி செய்யப்பட்டது. 1984-85 ஆம் ஆண்டில் இதன் உற்பத்தி ரூ. 55.72 இலட்சம் மதிப்புள்ளதாக உயர்ந்தது. 1985-86-ல் 1985 டிசம்பர் முடிய ரூ. 61.60 இலட்சம் மதிப்புள்ள துணிகள் உற்பத்தியாயின. 1985-86-ல் இதன் உற்பத்தி ரூ. 82 இலட்சம் மதிப்புள்ளதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சிறப்புத் திட்டங்கள்.

#### அ. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்.

வருமானம் தரக்கூடிய வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தந்து 3,003 பழங்குடியினர்களுக்கு உதவிட ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1985–90) மொத்தம் ரூ. 83 இலட்சம் செலவினத்தில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது, தேனீப் பெட்டிகளும், தச்சு கொல்லு தொழில் கருவிகளும் வாங்க அரசு உதவித் தொகை வழங்குவது மற்றும் பிரம்பு மற்றும் மூங்கில் தொழில் பழங்குடியினருக்கு பயிற்சி அளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இதுகாறும் இத்திட்டத்தின் கீழ் 2,783 நபர்களுக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் 1986-87 ஆம் ஆண்டிற்கு ரூ. 10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்படுகிறது.





#### ஆ. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அரசு 1,874 நபர்கள் பயன்பெறும் பொருட்டு நீலகிரி மாவட்டத்தில் தேனீப் பெட்டிகள் வழங்கவும். தைலம் காய்ச்சும் கருவிகள் வழங்கவும், எண்ணெய் மற்றும் ரொட்டி தயாரிக்கும் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்துவதற்காகவும், வாரியம் திட்டம் தயாரித்துள்ளது. இத் திட்டங்களைச் செயற்படுத்த 1986–87 ஆம் ஆண்டு திட்ட மதிப் பீட்டில் ரூ. 5,00 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப் படுகிறது.

### 1986–87 ஆம் ஆண்டு திட்டம் (புதிய திட்டங்கள்).

1986–87 ஆம் ஆண்டில் வாரியத்தால் கூடுதலாக கீழ்க்கண்ட திட்டங்களை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது:—

| | 1986–87 திட்ட மதிப்பீடு. (1) | பயனடைவோர் எண்ணிக்கை. (2) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1. தர்மபுரி மாவட்டத்தில் அகர் பத்தி பயிற்சி மற்றும் உற்பத்தி மையம் நிறுவுவது (தேன்களின் கோட்டை). | 1.90 | 25 |
| 2. இராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் ஒரு குளியல் சோப்பு உற்பத்தி அலகு ஆரம்பிப்பது. | 0.01 | 10 |
| 3. நெசவாளர்களுக்கு அச்சு மற்றும் விழுதுகள் 500 நெசவாளர்களுக்கு தலா ரூ. 200 வீதம் வழங்குவது. | 1.00 | 500 |
| 4. சென்னையில் எண்ணெய் மற்றும் சோப்பு பரிசோதனை ஆய்வுக் கூடத்தை விரிவுபடுத்துவது. | 0.99 | .. |
| 5. கரூரில் பாய் முடைவோர் கூட்டுறவு இணையம் அமைப்பது. | 1.00 | 2,500 |
| 6. வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் பிரம்பு மற்றும் மூங்கில் தொழிலாளர் கூட்டுறவு சங்கம் கிட்டங்கி கட்டுதல் | 0.02 | 100 |
| மொத்தம் .. | 4.92 | 3,135 |

## வாரியத்தின் நிதிநிலை.

கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனது நிதி உதவிக் கொள்கையின்படி வாரியத்திற்கு பல திட்டங்களை செயற்படுத்த தேவைப்படும கணிசமான நிதி உதவியை அளிக்கிறது. வணிகமுறை சாரா இனங்களில் வரவுக்கும் செலவுக்குமிடையே ஏற்படுகிற நிகர வித்தியாசத் தொகையினை தமிழ்நாடு அரசு ஈடு செய்கிறது.

1985-86-ம் ஆண்டின் ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு கீழ்க்கண்ட நிதிகளை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு ஒதுக்கியுள்ளது:—

| | ஆணைக்குழு நிதி உதவி. | | வங்கிகளிடமிருந்து நிதி உதவி. |
|---|---|---|---|
| | மானியம். | கடன். | கடன். |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. கதர் | 0.14 | 56.78 | 556.73 |
| 2. கிராமத் தொழில்கள். | 40.24 | 150.64 | .. |
| அ. வாரியத் திட்டங்கள் | .. | .. | 42.00 |
| ஆ. தீப்பெட்டி தொழில் (தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் கண்காணிப்பில் செயற்படுத்தப்படுவது). | .. | .. | 285.00 |
| மொத்தம் .. | 40.38 | 207.42 | 883.73 |



வாரியம் 1986-87-ம் ஆண்டிற்காக கீழ்க்கண்ட நிதி ஒதுக்கீடுகளை கோரியுள்ளது:—

| | ஆணைக்குழு நிதி உதவி. | | வங்கிகளிடமிருந்து நிதி உதவி. |
|---|---|---|---|
| | மானியம். | கடன். | கடன். |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. கதர் | 1.26 | 140.68 | .. |
| 2. கிராமத் தொழில்கள் | 56.36 | 207.79 | 6.00 |
| (அ) வாரியத் திட்டம் | .. | .. | 320.00 |
| (ஆ) குடிசைத் தொழில் (தீப்பெட்டி) | .. | .. | .. |
| மொத்தம் .. | 57.62 | 348.47 | 326.00 |

கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் நிதி உதவியைத் தவிர, தமிழ்நாடு அரசால் வாரியத்திடம் ஒப்படைக்கப்படும் சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த தமிழ்நாடு அரசிடமிருந்து நிதியுதவி இவ்வாரியத்திற்கு கிடைக்கிறது. தமிழ்நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி உதவி விவரங்கள் பின்வருமாறு:—

| | திருத்திய மதிப்பீடு. 1985–86. | திட்ட மதிப்பீடு. 1986–87. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. மாநில அரசிடமிருந்து கிடைக்கும் மானியங்கள்— | | |
| அ. கதர் நிதிக்கான நிகர செலவின மானியம் | 41.45 | 43.09 |
| ஆ. கிராமத் தொழில்கள் நிதிக்கான மான்யம் | 55.00 | 57.00 |
| இ. தணிக்கைக் கட்டணம் | 24.00 | 25.10 |
| ஈ. கதர் விற்பனையில் தள்ளுபடி | 145.00 | 175.00 |
| உ. மற்ற சிறப்பு திட்டங்களை செயல் படுத்த | 23.53 | 30.52 |
| மொத்தம் .. | 288.98 | 330.71 |
| 2. தமிழ்நாடு அரசிடமிருந்து கிடைக்கும் கடன்— | | |
| இதர சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த | 0.01 | 0.01 |
| மொத்தம் .. | 288.99 | 330.72 |

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore 1
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-11.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.



| (1) | (2) | (1) | (2) |
| --- | --- | --- | --- |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |